# நற்போதகம்.

க. . ஜனுவரிமீ. ௲௮௱௮௰ ௵.
1880

## உபாகமம்.

### 15. அதிகாரம்.

*விடுதலை வருஷத்தின் வரலாறு.* 1—11.
*எபிரேய சிறைகளின் மீட்சி.* 12—18.
*தலையீற்றுகளைக் குறித்தது.* 19—23. 12: 6. 14: 23.

1—11. விடுதலை வருஷமானது ஒய்வு வருஷத்தின் வக்கணையுள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை. யாத்தி. 23: 10. லேவி. 25: 2. இரண்டும் எளியவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.

"விடுதலை." யாத்தி. 23: 11-லிருந்து வந்தது. தேசம் ஒய்வு அடைவதுபோல, கடனும் ஒய்வு அடையவேணும். இந்த விடுதலை முடிவான விடுதலை அல்ல. ஒய்வு வருஷத்தில் மட்டும் விடுதலையாயிருக்கும். மேலும் இந்த விடுதலை வறுமைப்பட்டு கடன் வாங்கினவனுக்கு மட்டுமுள்ள விடுதலை. 2-வா. 4, 7.

2. "விடுதலையின் விபரம்." 19: 4. 1 இரா. 9: 15.

"பிறன்." தூரத்திலுள்ள இஸ்ரவேலன்.

3. "அந்நிய ஜாதியான்." ஒய்வு வருஷத்தின் சட்டதிட்டங்களினாலே கட்டப்பட்டவனுமல்ல. அதின் நன்மை தீமைகளுக்குச் சம்பந்தப்பட்டவனுமல்ல. மற்ற வருஷங்களில்போல ஒய்வு வருஷத்திலும் வரவாசிசெய்துகொள்ளுகிறவன். ஆகையால் அவன் கையிலே கடன் தண்டலாம்.

14. "தாராளமாய்." எபிரேயுவில், "அவனுடைய கழுத்திலே ஏற்று," "அவனுடைய கழுத்தை உன் நன்கொடையால் அலங்கரி" என்றிருக்கிறது. LXX-ல் இந்தச் சட்டத்தின் நோக்கத்தையும் தாற்பரியத்தையும் எடுத்துத் திருத்தியிருக்கிறார்கள். அதின்படி நம்முடைய வேதாகமம் திருத்தப்பட்டிருக்கிறது.

12—18. யாத்தி. 21: 2—6-ஐ மறுபடி கூறுகிறூர். அதில் யாத்திராகமத்தில் ஆண் அடிமையைக்குறித்து மட்டும் சொல்லியிருக்கிறது. இதில் (12-வா.) பெண் அடிமையைக் குறித்தும் சொல்லுகிறூர். யாத்திராகமத்தில் 6-(வரு) வேலைசெய்தபின் விடுதலைபாவதைப்பற்றி மட்டும் சொல்லுகிறூர். இதிலோ அவனுக்குக் கொடுத்தனுப்புவதையும் சொல்லுகிறூர். 13, 14. இதினுலே இரண்டு காரியத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

62400 (1) தேவன் எளியவர்களுக்காக எவ்வளவோ கவலைப்படுகிறூர். எளியவன் வருத்தப்படுவதைப் பார்க்க, உருக்க இரக்கமுள்ள அவருடைய மனதுக்குப் பொருது.

(2) எஜமான் (13-வா.) மனசுப்படி வேண்டியதைக் கொடுக்கும்படி கட்டளையிட்டிருப்பதினுலே, அடிமையானவன் வரப்போகிற பலனை எதிர்நோக்கி சுறுசுறுப்பாயும் உண்மையாயும் வேலைசெய்ய ஏவப்படுவான்.

17. "குத்துவாயாக." முழு அடிமைத்தனத்துக்கு அடையாளம்.

18. நீ நாள் கூலிக்காரனை வைத்து வேலைவாங்கியிருப்பாயானுல், உன் அடிமைக்குச் சென்ற செலவைப்பார்க்கிலும் இரட்டிப்பாய்ச் செலவழிந்திருக்குமே.

19—23. எகிப்தின் தலைச்சன்களை அழித்த தூதன் இஸ்ரவேலின் தலைச்சன்களைத் தப்பவிட்டதை நினைவுகூரும்படி, இஸ்ரவேலில் முதற்பேறுகளையெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கும்படி அவக்காத்திலேயே கட்டளையிடப்பட்டது. (யாத்தி. 13: 11-). அதை மறுபடி எடுத்துச் சொல்வதில்:

கர்த்தருக்கென்று பிரித்துவைக்கும் மிருகங்களை அவற்றின் உடையக்காரர் உலக நோக்கங்களுக்காக உபயோகப்படுத்தக்கூடாது என்ற கட்டளையை உபாகமத்தில் கூட்டிச்சொல்லுகிறூர். (எண். 18: 15=உபா. 15: 19).

முடம் குருடுமுதலான பழுதுள்ளவைகளை தேவனுக்குக் கொடுக்கிறதற்குப் பதிலாக அவைகளைப் புசிக்கும்படி உபாகமத்தில் உத்தரவு கொடுக்கிறூர். 21, 22. அவைகள் பரிசுத்த பண்டிகை நாட்களில் கர்த்தருடைய சந்நிதியில் புசிக்கப்படவேண்டும். 12: 6, 17. 14: 23.

ஒரு ஆட்சேபனை வருகிறது. எண். 18: 18-ல் தலையீற்றுகள் ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டிருக்க, உபா. 12: 6, 17. 14: 23. 15: 19-23. இந்த வாக்கியங்களில் அவற்றைச் செலுத்துகிறவனும் அவன் வீட்டாரும் கர்த்தருடைய சந்நிதியில் புசிக்கவேணுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறதே என்கிறூர்கள். இது பார்வைக்கு ஆட்சேபம்போல காணப்பட்டாலும் உள்ளபடி விகற்பமில்லை. அசைவாட்டும் மார்க்கண்

ட்டு
இ 6mm 211, M49
M45:32



டத்தைப்போலும் வலதுமுன்னந்தொடையைப்போலும் தலையீற்றுகளையும் ஆசாரியன் தன் மனதின்படி செய்யலாம் என்பது. எண். 18: 18-ன் கருத்தாம். இவைகளை உபயோகிக்கவேண்டிய விதத்தைக்குறித்து லேவி. 7: 15, 16-வாசி. அதாவது அவை செலுத்தப்பட்ட அன்றைத்தினம் அல்லது மறுநாளிலே ஆசரிப்புக்கூடாரத்தில் புசிக்கப்படவேண்டும். தலையீற்றுகள் விஷயத்தில் பலியின் மாம்சத்தையெல்லாம் ஆசாரியர் ஒருமிக்கப் புசித்துப்போடவேணும். பற்பல சமயங்களில் தலையீற்றுகள் அநேகம் செலுத்தப்படுமென்பதற்குச் சந்தேகமில்லையே. இப்படியாக ஆசாரியன் சாப்பிடுவதற்கு மிஞ்சி அதிகமாயிருக்கிற பட்சத்தில், பலிசெலுத்தினவர்களையும் அவன் பந்திக்குக் கூட வரவழைப்பது இயல்பாயும் அவன் கடமையாயுமிருக்கிறது. மேலும் மோசே இப்பொழுது ஆசாரியர், லேவியர், சனங்கள் ஆகிய எல்லாரையும் பார்த்துப் பொது நடையாய்ப் பேசுவதால் விகற்பமிருக்கக்கூடாதே.

## 16. அதிகாரம்.

இஸ்ரவேலர் கானானில் அநுசரிக்கவேண்டிய பக்திக்கடுத்த ஏற்பாடுகளைச் சொல்லிக்கொண்டுவருகிற வரிசையில், இந்த அதிகாரமும் அதற்குத் தொடர்ச்சியாயிருக்கிறது. முக்கிய ஏற்பாடுகளாகிய பஸ்கா, பெந்தெகோஸ்தே, கூடாரப்பண்டிகை ஆகிய பண்டிகைகளைக் குறித்துச் சட்டம் கற்பிக்கிறூர். இதற்கடுத்த சட்டங்கள் யாத்தி. 12-அதி. லேவி. 23-அதி. எண். 28-அதி. 29-அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருந்தது. தற்கால ஸ்திதிக்கடுத்ததாக அவைகளை மறுபடி கூறுகிறூர். இம்மூன்று பண்டிகைகளையும் அவரவர் குடியேறப்போகிற இடத்திலெல்லாம் கொண்டாடக்கூடாதென்பதை, முதல் 16-வசனங்களுக்குள் 6-தடவை சொல்லுகிறூர். (2, 6, 7, 11, 15, 16). இதைக்கொண்டு: பாவநிவிர்த்தியின் சிறந்த நாளையும், (லேவி. 23: 26—), எக்காளப் பண்டிகையையும் (லேவி. 23: 23—), ஏன் இங்கே சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதை அறிந்துகொள்ளலாம். ஏனென்றூல் மூந்தின மூன்று பண்டிகைகளிலும் ஆண்களெல்லாம் கர்த்தருடைய சந்நிதியில்போய்க் காணப்படவேண்டும். கடைசி இரண்டிலும் அப்படியல்ல.

1—8. "பஸ்கா." யாத்தி. 12: 1—27. எண். 9: 1—14. லேவி. 23: 1—8. இது ஏற்பட்டு 39-வருஷமாகிப்போனபடியினுலே இதை இப்பொழுது மறுபடி வற்புறுத்திச் சொல்லவேண்டிய அவசரம் நேரிட்டது; (யோசு. 5: 10). எண்ணுகமம் 9-அதிகாரத்திற் சொல்லிய ஒரே பஸ்காமட்டும் வனந்தரத்தில் கொண்டாடப்பட்டது. கானானில் பிரவேசித்தபிற்பாடு பஸ்காவைக் கிரமமாய்க் கொண்டாடவேண்டியது போல வனந்தரத்தில் அப்படிச் செய்யும்படியான நோக்கமாய்க் கட்

டளையிடப்படவில்லையென்று யூத வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். யாத்தி. 12: 25. 13: 5-பார். பெந்தெகோஸ்தே பண்டிகையைக் குறித்தும் இந்தக் கவனிப்பைச் சொல்லலாம். லேவி. 23: 10.

18—22. பிந்திய அதிகாரத்தோடு நெருங்கிய சம்பந்தமுள்ளது. 21-அதிகாரம் வரையும் ஞனகோவில் பாடமாக வாசிக்கப்படும். கானானில் நீதி நியாயம் நடந்தேறவேண்டிய முறையைக் காட்டுகிறது. நியா. 3: 7. இதுவரை தேவஉத்தரவு பெற்று மோசே அவர்களை ஆண்டு வந்தான். அவனுக்கு உதவிசெய்கிறவர்களுமிருந்தார்கள். (யாத்தி. 18: 13—). இதுவரை சனங்கள் சுருக்கமான இடத்தில் கூடாரங்களில் வசித்து வந்தார்கள். இப்பொழுதோ மோசே சனங்களைவிட்டு நீங்கிவிடப்போகிறார். சனங்கள் கானானிலெங்கும் சிதறடிக்கப்படப்போகிறார்கள். அதற்காக மோசே இவைகளைச் சொல்லுகிறார்.

21. “தோப்பு.” மரவிக்கிரகம் என்றர்த்தம். பெனிக்கிய தேவியாகிய அஸ்தரோத்தின் வடிவம் ஒரு மரத்தின் அடிக்கட்டைதான். கொப்பையெல்லாம் வெட்டிப்போட்டு அடிமரத்தில் தாறுமாறாகச் சித்திரம் கொத்தியிருக்கும்.

## 17. அதிகாரம்.

1. இந்த வாக்கியம் முந்தின அதிகாரத்தோடு சேரவேண்டியது. 15: 21.

“அவலட்சணம்.” லேவி. 22: 22—24.

8—13. மோசேயின் ஏற்பாடுகளில் அப்பீல் கோடுகள் நியமிக்கப்படவில்லை.

16. “குதிரைகளை” பூர்வீகத்தார் குதிரைகளை உழவுக்கும் பிரயாணத்துக்கும் உபயோகப்படுத்துகிறதில்லை. யுத்தத்துக்கு மட்டும் பழக்குவிப்பார்கள். இஸ்ரவேலின் இராஜன் குதிரைகளை நம்பாமல் தேவன் பேரில் நம்பிக்கையாயிருக்கும்படி கற்பிக்கிறார். ஓசியா 1: 7. கானான்தேசம், மலைத்தேசமானபடியால் குதிரை வளர்ப்புக்கு உதவாத இடம். எகிப்தில் மிகுதியாயுண்டு. 1 இரா. 10: 28; 29. பார்வோனுடைய பலம். யாத். 14: 5. 2 இரா. 7: 6. அசீரியர், 2 இரா. 18: 23. ஆபகூக். 1: 8. நாகூம். 3: 3.

14—17. சில சாஸ்திரிகள் உபாகமம் பிந்திய இராசாக்களின் காலத்தில் எழுதப்பட்டதென்று சாதிக்கிறார்கள். அதற்கு அத்தாட்சியாக இவ்வாக்கியங்களை முக்கிய ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்கள் பட்சத்து நியாயங்களாவன:—



(1) சவுலுக்கும் மோசேக்கும் இடையில் (300) வருஷம் சென்றது. அவ்வளவு காலத்துக்குப் பிந்தியுண்டான இராசாங்க முறைமை மோசேக்கு எப்படித் தெரியவந்தது ?

(2) சவுல் இராசாவாக ஏற்படுத்தப்பட்ட சரித்திரத்தில் உபாகமத்திற் சொல்லிய குறிப்புகள் யாதொன்றும் ஒத்துவாக்கியமாக எடுத்துக்காட்டப்படவில்லை. 1 சாமு. 8-அதி. முதல் 12-அதி வரைக்கும்.

(3) அதிகமான குதிரைகளையும், பெண்சாதிகளையும், பொக்கிஷங்களையும் சம்பாதிக்கக்கூடாதென்று மோசே சொல்வது, சாலொமோன் இராசா சரித்திரத்திலிருந்து எடுத்துக்கொண்டதுதான். 1 இரா. 10: 26—29. 11: 1—4.

(4) குதிரை வியாபாரத்துக்காக எகிப்துக்குப் போவதைக் குறித்துச் சொல்லிய விபரம், யூதாவின் பிந்திய இராசாக்களின் காலத்துக்கடுத்த விபரமாயிருக்கிறது. ஏசா. 2: 7. 36: 9. எரே. 2: 18, 36. 42: 15—19.

ஆகையால் இவ்வசனங்கள் மோசேக்கு வெகுகாலத்துக்குப்பின், சாலொமோன் நாட்களையும் தாண்டி, எரேமியாவின் காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று சாதிக்கிறார்கள்.

உத்தரவு:—

(1) இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்து நிலையாய்க் குடியேறினபின் நடக்கவேண்டிய காரியங்களைச் சட்டத்திட்டப்படுத்துவது இப்பொழுது மோசேயின் மனதிலிருந்த காரியம். ஸ்தாபகமான குடிகள் ஒரு இராசாவினால் ஆளப்படுகிற காரியத்தை முன் உத்தேசிப்பது மோசேயின் முதிர்ந்த அநுபவத்துக்கு மிஞ்சினதல்ல. மேலும் இஸ்ரவேலின் இராஜாக்களைக்குறித்து இந்த இடத்தில் மட்டுமல்ல, மற்றும் இடங்களிலும் சொல்லியிருக்கிறதே. ஆதி. 17: 16. 36: 31. 49: 10. யாத்தி. 22: 28. எண். 24: 17. உபா. 28: 36.

(2) பழையஏற்பாட்டை எழுதினவர்கள், முந்திய ஆகமங்களைக்குறித்து, தாங்கள் எழுதுகிற இன்னின்ன சங்கதி, தங்களுக்கு முந்தி எழுதப்பட்ட இன்னின்ன ஆகமத்திலிருக்கிறது என்று நேராய் ஒத்தவாக்கியம் எடுத்துக்காட்டுவது வழக்கமே இல்லை. இருந்தபோதிலும் சவுல் சங்கதியில் உபாகமத்திலுள்ள இவ்வாக்கியங்களின் சாடை வருகிறது. (1 சாமு. 8: 5=உபா. 17: 14). (1 சாமு. 10: 24=உபா. 17: 15). (1 சாமு. 12: 14=உபா. 1: 26, 43. 9: 7, 23).

(3) இந்த ஆட்சேபனைக்காரனிடத்தில் ஒரு கேள்வி கேட்கவேண்டும். உபாகமத்தை எழுதினவன், 1 இரா. 10: 26—29. 11: 1-5 ஐ தனக்கு முன் வைத்துக்கொண்டு எழுதினானா? அல்லது இராசாக்களின்

புஸ்தகத்தை எழுதினவன் உபாகமத்தை முன்னுக்கு வைத்துக்கொண்டு எழுதினானோ? இராசாக்களின் புஸ்தகத்தை எழுதினவன் உபா. 17-ம் அதிகாரத்தை மட்டுமல்ல, உபா. 7: 3, 4. யாத்தி. 34: 16-ஆகிய வாக்கியங்களையும் முன்னுக்கு வைத்துக்கொண்டு எழுதினானென்று லேசாய்க் கவனித்துக்கொள்ளலாம்.

(4) எகிப்துக்குத் திரும்புவதைப்பற்றி மோசே எச்சரிப்பது (17: 16) இயல்பாகவே இருக்கிறது. இஸ்ரவேலர் விட்டுவந்த எகிப்தைத் திரும்பத் திரும்ப நாடினதைக்குறித்து வாசிக்கிறோம். யாத்தி. 16: 3. எண். 11: 5. ஒரு சமயத்தில் எகிப்துக்குத் திரும்பிப்போக ஒரு தலைவனையும் ஏற்படுத்த யோசித்தார்களே. எண். 14: 4. ஆகையால் மோசே சொல்லக்கூடியதுதான்.

அல்லாமலும் பிற்காலத்தில் இராச வம்சவரிசைப்படியே பட்டம்பெற்று வந்தார்களே. இராச வம்சம் பட்டப்பகலைப்போலிருக்க உபாகமத்திற் காட்டிய வக்கணைப்படி ஒருவன் எழுதுவது புத்தியீனமாயிருக்குமே. மோசேயின் வக்கணை ஷை காலத்துக்கு முழு விரோதமாயிருக்கிறது. இதுபோக, பிற்காலத்துச் சரித்திரக்காரன் மோசேயின் பேரை வைத்து இதை ஏன் எழுதுவான். ஒரு முகாந்தரமும் தோன்றவில்லையே. ஆகையால் மேற்காட்டிய ஆட்சேபனைகளுக்கு ஆதாரமில்லை.

## 18. அதிகாரம்.

தேச அதிகாரிகளைக்குறித்துப் பேசிவருகிற சம்பந்தத்தில் அதை ஒட்டி, கானானில் சேர்ந்தபின் ஆசாரியர், லேவியர், தீர்க்கதரிசிகள் ஆகிய இவர்களுடைய சலாக்கியங்களும் இன்னபடி இருக்கவேண்டுமென்று காட்டுகிறார். தாம் முன் சொன்ன பிரமாணங்களோடு சிலவற்றைக் கூட்டிச் சொல்லுகிறார்.

ஆசாரியரைக் குறித்து. 3—5.
லேவியரைக் குறித்து. 6—8.
அஞ்ஞான குறிகாரரைக் குறித்து. 9—14.
தீர்க்கதரிசிகளைப் பற்றி. 15—22.

1. தலையீற்றுகள், தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகிய இவை தேவனுக்குரியவைகள். அவைகளைத் தேவன் ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்தார்.

1, 2-வாக்கியங்கள், எண். 18: 20-லிருந்து வந்தது, உபா. 10: 9. யோசு. 13; 14, 33-யும் பார். இவ்விடத்திற் சொல்லிய மூலாதாரப் பிரமாணத்திலிருந்து 1 கொ. 9; 13, 14. வந்தது.



“இளைப்பை” சிலிப்பிக்குடல் என்றிருக்கவேண்டும். இது முக்கியமான கொழுத்த பாகங்களில் ஒன்றாக எண்ணப்பட்டது. இதின் விபரங்களைப்பற்றி லேவி. 7: 31—34-பார். பலியிடப்படும் மிருகத்தில், தலை, கால், உடல் என மூன்று முக்கிய பாகங்களிருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு பாகத்திலும் கொஞ்சம் ஆசாரியனுக்குக் கொடுக்கப்படவேண்டும். இப்படியாக இது பலியடிக்கப்படும் மிருகம் முழுவதும் பிரதிஷ்டையாக்கப்படுவதைக் காட்டுகிறது, அல்லது சில பூர்வவியாக்கியானிகள் நினைத்தபடி பலியிட்டுத் தேவனைத் தொழுதுகொள்ள வருகிறவனுடைய வார்த்தைகள், கிரியைகள், ஆசாபாசங்களெல்லாம் பிரதிஷ்டையாக்கப்படுவதைக் காட்டுகிறதாயிருக்கிறது.

4. எண். 18: 12, 13-ஐ மறுபடி கூறுகிறார். ஆட்டுரோமத்தின் முதற்பலன் என்பது கூட்டப்பட்டிருக்கிறது.

5. ஆரோனும் அவன் குமாரரும் ஏற்பட்ட சங்கதியை ஒத்துவாக்கியமாக மனதில் வைத்து இதைச் சொல்லுகிறார்.

6—8. ஆசரிப்புக்கூடாரத்தில் லேவியரில் ஒரு வகுப்பார் மட்டும் வேலைசெய்வார்கள். மற்ற லேவியர் தங்களுக்காக கொடுக்கப்பட்ட கிராமங்களிலே (எண். 35: 2—) இருக்கும் தம்தம் சொந்த வீடுகளில் வசிப்பார்கள். இவர்களில் யாராவது திருப்பணிவிடையின்மேல் ஆசைகொண்டு அன்பினால் ஏவப்பட்டு ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்குப் போனால், அவ்விடத்தில் வேலைசெய்கிற லேவியருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தில் இவனும் பங்கடையவேணும்.

6. “தங்கின” லேவியர் தங்கள் வேலைக்காரியமாக தங்கள் கிராமங்களிலிருந்து மற்றும் கிராமங்களுக்கும் போய்த் தங்குவார்கள்.

7. “ஊழியம்.” எண். 3: 6.

8. “தங்கள் பிதாக்களுடைய ஆஸ்தியின் விலைக்கிரயம்.” இதைக்குறித்து பல வியாக்கியானங்களுண்டு. கூடியமட்டும் சரியான வியாக்கியானமாவது; லேவியருக்கு இஸ்ரவேலரோடு பங்கும், சுதந்தரமுமில்லாவிட்டாலும், தனித்தனியே சில சொத்துக்களை வைத்து அநுபவித்து வந்தார்கள். திருஷ். அபியத்தாருக்கு “நிலங்கள்” இருந்தது. (1 இரா. 2: 26). எரேமியா தன் பெரிய தகப்பனின் நிலத்தை வாங்கினான். (எரேமி. 32: 7—) பிற்காலத்தில், நடபடி 4: 36, 37-வாசி. லேவியருக்குப் பொதுவாயிருக்கப்பட்ட மேய்ச்சல் வெளி நிலங்களை விற்கப்படாதென்று நியாயப்பிரமாணம் (லேவி. 25: 33, 34) விலக்கினாலும், சொந்தமான சொத்துக்களை உடையக்காரன் மனசுப்படி விற்கலாம். அப்படியே ஆசரிப்புக்கூடாரத்தில் போய் நிலையாயிருந்து வேலைசெய்ய மனம்கொண்ட லேவியன், தன் வீட்டைவிட்டுப் புறப்படும்போது, தன் பங்குபாகங்களை விற்றுப்போடுவது இயல்புதானே.

"சமமான பாகத்தையும்" மேற்காட்டியபடி தான் விற்ற "ஆஸ்தியின் விலைக்கிரயத்தை அநுபவிக்கிறதுமல்லாமல்," ஆசரிப்புக் கூடாரத்தில் தனக்கு வரும் பாகத்தையும் பெற்றுக்கொள்வான். ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைசெய்யப்பட்டவர்களுக்கு முந்திய சட்டங்களில் சாப்பாட்டுக்கு வேண்டிய வழிவகைகள் அநேகம் கட்டளையிடப்பட்டிருந்தது.

9—14. தீர்க்கதரிசிகளைச் சொல்லுமுன் இவர்களை முந்தச் சொல்லிக்கொள்ளுகிறார்.

10. மோளேகுக்கு. லேவி. 18: 21. இது அம்மோனியரின் அருவருப்பு. செப்ராவாயீமர் இதை ஆதர்மெலேக் என்பார்கள். 1 இரா. 18: 31.

"குறி" எண். 23: 23. "நாள்." லேவி. 19: 26.

11. "மந்திரவாதி." பாம்பாட்டி. சங்கி. 58: 4, 5.

"சன்னதக்காரன்." லேவி. 19: 31. 20: 6.

15. தீர்க்கதரிசி." மேசியாவாகிய ஏசுநாதரைக் குறிக்கிறது. லூக். 24: 27. யோ. 1: 45. 5: 45—47. யோ. 1: 21, 45. நட. 3: 22. 7: 37.

மோசேயின் ஐந்தாகமங்களை மட்டும் ஒப்புக்கொண்ட சமாரியருங்கூட, 15—18-வாக்கியங்கள் மேசியாவைக்குறித்துச் சொல்லியதாக நம்பி வந்தார்கள். யோ. 4: 25.

நமது கர்த்தருடைய சாட்சி. யோ. 5:45-47. நமது கர்த்தர், மோசே "என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" என்று சொல்லும்போது, இந்த வாக்கியங்களை மனதில் வைத்துச் சொன்னாரே அல்லாது வேறே வாக்கியங்களைக் குறித்தாரென்று நினைக்க இடமில்லை.

பூர்வ பிதாக்களும், யூதரன் வியாக்கியானிகளும், ரோமான் குருக்களும் அங்கிலேய குருக்களும் இந்த வாக்கியம் யேசுக்கிறிஸ்துவைக் குறிக்குமென்று சொல்லுகிறார்கள். 9-ம் நூற்றாண்டுபோலிருந்த யூதரபிமார்: இந்த வாக்கியங்கள், தீர்க்கதரிசிகளை மொத்தமாய்க் குறிக்குமென்றும், மேசியாவை முக்கியமாய்ச் சுட்டிப்பேசுகிறதில்லையென்றும் சொன்னார்கள். லூக். 24: 27. யோவா. 1: 21, 54. இந்த வாக்கியங்களிலே உபா. 18: 15—18-ன் கருத்து நேராய்க் குறிக்கப்படவில்லையென்று வைத்துக்கொண்டாலும், அப். 3: 22. 7: 37. இந்த வாக்கியங்களில் நேராகவும் திட்டமாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவற்றைக் கவனிக்கும்போது, கிறிஸ்துமார்க்கம் ஆரம்பமான காலத்தில் ஷை வாக்கியங்கள் மேசியாவைக் குறிக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்றே விளங்கும். என்றாலும் இவ்வாக்கியங்கள் முதற் கருத்தாக தீர்க்கதரிசிகளைக் குறிக்கலாம், எப்படியென்றால்;

(1) கானானில் நடக்கப்போகிற லவுகீக வைதிக அதிகாரிகளைக்குறித்துச் சொல்லிவருகிற மத்தியில் 15—18-வாக்கியங்கள் வருகிறது.



(2) மாயவித்தைக்காரர் முதலானவர்களை (9—12) விலக்குகிற சம்பந்தத்தில் இது வருகிறது. ஆகையால் அப்படிப்பட்டவர்களை விலக்குங்கள்; நான் வேறே தீர்க்கதரிசிகளைக்கொண்டு காலாகாலத்தில் என்னை வெளிப்படுத்துவேன் என்பது கருத்தாகுமல்லவா.

(3) இவ்வாக்கியங்களுக்குப் பிந்திய சம்பந்தத்தில் கள்ள தீர்க்கதரிசிகளுடைய காரியத்தைச் சொல்லுகிறார்.

(4) மோசே தனக்குப் பிந்தியெழும்பப்போகிற தீர்க்கதரிசிகளைக்குறித்துச் சொல்லாமல் விட்டுவிடுவாரா?

ஆகையால் இப்படிப்பட்ட நியாயங்களினாலே இவ்வாக்கியங்கள் முதல் கருத்தாக சமீபத்தில் வந்த யோசுவா முதலான தீர்க்கதரிசிகளைக் குறித்தாலும், முக்கியமான சிறந்த கருத்துப்படி மேசியாவைக் குறிக்குமென்று மேலே காட்டிய நியாயங்களினாலே நிச்சயமாய் அறிந்துகொள்ளவேண்டியது.

"அவருக்குச் செவி." மத். 17: 5.

16. 9: 10. எண். 20: 19.

18. "உன்னைப்போல." எபி. 3: 2. மோசே மீட்பன், நியாயப்பிரமாணிக்கன், மத்தியஸ்தன், வழிகாட்டியாயிருந்ததுபோல.

"கற்பனைகை." யோ. 4: 25. 8: 28. 12: 49, 50.

19. "விசாரிப்பேன்." நடபடி 3: 23.

20. 13: 1—5. எரே. 28: 15—17.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௪-ம் அதிகாரம்.

விசுவாசம்.

வினா. விசுவாசமாவதென்ன?

விடை. பரிசுத்தாவியினால் ஒருவன் தன் பாவங்கள் தன்னாலே நீங்காதென்றும், தன் பாவங்களுக்காக மரித்த கிறிஸ்தேசுவினாலே நீங்குமென்றும் தெளிந்து, அவரை உறுதியாய்ப் பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறதே விசுவாசம்.

பரி. பவுல் சுருக்கமாய்ச் சொல்லுகிறதாவது;

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. எபி. 11: 1.

கிறிஸ்துவானவர், கிறிஸ்தவனுடைய விசுவாசத்திற்கும், நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கைக்குமுரிய பொருளாயிருக்கிறார். விசுவாசம் அறிவுக்குரியதாய் மாத்திரமிராமல், இருதயத்திற்குரியதாயிருக்கிறது. சாட்சிகளை நம்புவதும், மனுஷருடைய வாக்குத்தத்தங்களில் சாருவதும் இயல்பான காரியம். ஆனால் பரமகாரியங்களோ, நம்முடைய புத்திக்கெட்டாததாயும், தாழ்மையை உண்டாக்குகிறதாயும், நம்முடைய நித்திய இரட்சிப்புக்குரிய காரியங்களை நம்பாமலும் அவைகளில் பிரியப்பட்டு அவைகளில் நடவாமலும் போகப்பண்ணுகிற உலகக் காரியங்களுக்கு எதிரிடையானவைகளாயும் இருக்கின்றன. கிருபையினாலே இருதயம் மாற்றப்பட்டு, அன்பினாலே கிரியைசெய்கிறவனே யொழிய, மற்ற எவனும் மெய்விசுவாசியல்ல.

விசுவாசமானது வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி தேவனைப்பற்றியும், நம்முடைய கெட்டுப்போன நிலைமையைப் பற்றியுமுள்ள அறிவில் கட்டப்பட்டதாயிருக்கிறது. அது நாம் இந்த நிலைமையில் நிலைத்திராதபடி தீர்மானிக்க ஏவுகிறது. "நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று அறிக்கையிடச் செய்கிறது. உதவி கிடைக்கிறதாயிருந்தால் அது உணர்ச்சியை உண்டாக்குகிறது. அது தேவனிடத்திலிருந்து வரவேண்டும். அது "என்னைத் திருப்பும்." "எனக்காகச் செய்யும்." "எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்கமாட்டீரோ?" என்று கூப்பிடச்செய்கிறது. அது நம்மை மீட்பரண்டைக்குக் கொண்டுவந்து, நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தி, அவர் நம்மைச் சுயாதீனராக்கின வழியில் நடக்கும்படி செய்கிறது.

கிறிஸ்துவானவர் எப்படிப்பட்டவராக அழைக்கப்படுகிறாரென்றால்;

1. அடைக்கலம். (ஏசா. 25: 4.) தேவகோபத்துக்குத் தப்பிக்கொள்ள, விசுவாசம் நம்மை அவரண்டைக்கு ஓடும்படி நடத்துகிறது.

2. ஊற்று. (சகரி. 13: 1.) நம்முடைய அழுக்குகள் கழுவப்படுவதற்கு அவரண்டைக்கு வரும்படி, விசுவாசம் நம்மை ஏவுகிறது.

3. ஜீவஅப்பம். (யோவா. 6: 35.) நாம் ஞான ஆகாரத்தைப் பெற்றுப் போஷிப்பிக்கப்படும்படிக்கு, விசுவாசம் நம்மை அவரண்டைக்கு இழுக்கிறது.



4. ஜீவதண்ணீர். (யோவா. 7: 37.) நம்முடைய தாகம் தீரும்படி, விசுவாசம் நம்மை அவரிடத்துக்குக் கொண்டுவருகிறது.

5. மேய்ப்பன். (ஏசா. 40: 11.) விசுவாசம், நாம் அவரைப் பின்செல்லவும், அவருடைய சவரக்ஷணையையும், வழி நடத்துதலையும் தேடும்படி செய்கிறது.

6. வைத்தியன். (மத். 9: 12.) விசுவாசம், நாம் அவருடைய வல்லமையை நம்பச்செய்கிறது மாத்திரமல்ல, அவரண்டைக்குப் போய் சுகம் அடையச்செய்கிறது.

7. பிரதானஆசாரியன். (எபிரே. 4: 14.)

8. பரிந்துபேசுகிறவர். (1 யோவா. 2: 1.) விசுவாசம், நாம் பாவமன்னிப்பைப் பெற்று, அங்கிகரிக்கப்படும்படியாக, அவருடைய பிராயச்சித்தத்திலும் மத்தியஸ்தத்திலும் மாத்திரம் நம்பிக்கை வைக்கச் செய்கிறது.

9. தீர்க்கதரிசி. (லூக். 24: 19.) அவருடைய உதவியினாலே அவருடைய சித்தத்தின்படி செய்யக்கருதி, அவருடைய சித்தத்தை நமக்குப் போதிக்கும்படி அவரை நோக்கி வேண்டிக்கொள்ள விசுவாசமே நம்மை நடத்துகிறது.

10. இராஜா. (மத்தே. 21: 5.) விசுவாசம், நாம் எல்லாக் காரியங்களிலும் அவருடைய அதிகாரத்துக்குக் கீழடங்கும்படி நம்மை நடத்துகிறது.

இப்படிப்பட்ட விசுவாசமே மிகவும் வல்லமையுள்ளது.

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். மாற். 9: 23.

எல்லா மனிதருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசம் இல்லை. (2 தெச. 3: 2.) இந்த விசுவாசத்துக்கும், வேதத்தில் அடங்கியசரித்திரங்களை நம்பி, அதிலடங்கிய சில உபதேசங்களை ஒருவாறு ஒத்துக்கொள்ளுவதற்கும் பெரிய வித்தியாசமுண்டு. இப்படிப்பட்ட விசுவாசம் கெட்ட மனிதர்களுக்குமிருக்கலாமே. பரிசுத்தவான்கள் இப்படிப்பட்டவைகளை உறுதியாய் விசுவாசிப்பதுபோலவே பிசாசுகளும் அவைகளை நம்புகின்றனவே.

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. யாக். 2: 19.

சிறந்த விசுவாசிகளின் திருஷ்டாந்தங்களாவன;

ஆபிரகாம்.—தன் மகன் ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். ஆதி. 22: 10—16.

தாவீது.—கோலியாத்தை நோக்கி யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். 1 சாமு. 17: 45, 47.

யோபு.—அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்றான். யோபு 13: 15.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ.—தானி. 3: 18.

யோனா.—மச்சத்தின் வயிற்றிலிருந்து விண்ணப்பஞ்செய்தான். யோனா. 2: 4.

ஆபகூக்.—அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்வெளிகள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்; என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் என்றான். ஆபகூக். 3: 17, 18.

நூற்றுக்கு அதிபதி.—ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான், மத். 8: 8.

திமிர்வாதக்காரனுடைய சிநேகிதர்.—மத். 9: 2.

பெரும்பாடு வியாதியுள்ள ஸ்திரீ.—மத். 9: 22.

கானானிய ஸ்திரீ.—மத். 15: 28.

பர்திமேயு என்கிற குருடன்.—மாற். 10: 52.

பாவியாகிய ஸ்திரீ.—லூக். 7: 50

ஸ்தேவான்.—"விசுவாசம் நிறைந்தவன்." அப். 6: 5.

பவுல்.—எனக்குச் சொல்லப்பட்டபிரகாரமாகவே நடக்குமென்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றான். அப். 27: 25.

மேலும் எபி. 11-அதிகாரத்தில், ஆபேல், ஏனோக், நோவா, ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே முதலானவர்கள் விசுவாசிகளுக்கு மாதிரிகளாயிருந்தார்களென்று சொல்லியிருக்கிறது.

வினா. விசுவாசம் எல்லா மனுஷருக்கும் ஏன் அவசியம்?

விடை. 1. விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்தவும், அவருடைய வசனத்தினால் பிரயோசனம் அடையவும், பிசாசினுடைய தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்கவும், கிறிஸ்து நமது இருதயத்தில் வடிவுகொள்ளவும், நாம் மகிமையின் நம்பிக்கையுடையவர்களாயிருக்கவுங் கூடாது.

பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். எபே. 6: 16.

கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்



கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோசனப்படவில்லை. எபி. 4: 2.

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். எபி. 11: 6.

2. விசுவாசிக்கும்படி எல்லா மனுஷருக்கும் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். 2 நாளா. 20: 20.

என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். ஏசா. 45: 22.

இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள். மத். 17: 5. மாற். 9: 7.

தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். மாற். 11: 22.

அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது. யோவா. 6: 29.

அவர் உங்களுக்குச் சொல்லுகிற எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அப். 3: 22, 23. 7: 37.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப். 16: 31.

நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. 1 யோ. 3: 23.

---

## Honesty is the best policy.

## நேர்மையே உத்தம உபாயம்.

சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்துதேசத்தில் அமங்கிலியான ஒரு துரைசானியும் அவள் குமாரத்தியும் துறைமுகப் பட்டணங்கள் ஒன்றிலிருந்து லண்டன் நகரிக்குப் பயணம்போனார்கள். போகும் மார்க்கத்தில் அவர்கள் முதல்நாள் இரவில் தாமதிக்கக் குறித்திருந்த இடம் வந்து சேர்ந்தபொழுது, விலையேறப்பெற்ற சில நகை நட்டுக்களும் தாங்கள் பயணம்பண்ணின காரியத்துக்கடுத்த தஸ்தாவேசுகளுமிருந்த ஒரு கைப்பெட்டகம் காணாமற்போயிற்று. அது காணாமற்போன வயனமென்னவென்று வேலைக்காரரிடத்தில் விசாரித்ததிலும் ஒன்றும் துலங்கவில்லை. அதன்பேரில் அந்த துரைசானிகள் மிகுதியும் விசனமுற்று, காணாமற்போன பெட்டகத்தைக் கண்டுபிடிப்பதற்கு என்னவென்ன பிரயத்தனங்கள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் உடனே செய்தார்கள். மேற்படி விபரங் கண்ட பத்திரிகைகள் அச்சடிப்பித்து அந்தப் பட்டணமெங்கும் கொடுத்துப் பிரசித்தம்பண்ணினார்கள். மறுநாள் அந்தப் பட்டணத்திலே சந்தை கூடுகிற நாள்,

அன்று அதிகாலையில் ஒரு ஏழை மனிதன் சந்தைக்கு வந்தபொழுது, இந்தப் பத்திரிகையைக் கண்டு தனக்கு வாசிக்கத் தெரியாதபடியால், பக்கத்தில் நின்றவர்களிடத்தில் அதின் பொருளென்னவென்று விசாரித்தான். அதற்கு அவர்கள் இன்ன சாமான் காணாமற்போயிருக்கிறது, அதைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து கொடுக்கிறவனுக்கு இன்னின்ன வெகுமதி கிடைக்கும் என்றார்கள்.

இப்பொழுது முந்தின இரவில் நடந்த காரியத்தைக் கேளுங்கள். அந்த ஏழை மனிதன் பகல்முழுவதும் வேலைசெய்துவிட்டு பொழுது அடைந்தபின் வீடுவந்து சேர்ந்தவுடனே, வீட்டிலிருந்த இரண்டே துட்டை மாத்திரம் அவன் மனைவி எடுத்துக்கொண்டு வந்து அவனிடத்திற் கொடுத்து, நாளைக்கு உமக்கு வேண்டிய உடுப்பைச் சற்று பழுது பார்த்து வைக்கவேண்டியிருக்கிறது, நீர் ரஸ்தாவைத் தாண்டிப்போய் ஒரு மெழுகுவர்த்தி வாங்கிக்கொண்டு வாரும் என்று சொன்னாள். அவனோ பெண்சாதியைப் பார்த்து, வஸ்திரம் பழுதுபார்க்கிறது இருக்கட்டும், பிள்ளைகளுக்கு ஆகாரமில்லையே, ஆகையால் அதற்கு ரொட்டி வாங்கவேண்டும் என்று எவ்வளவோ தடுத்துச்சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதினாலே அந்த மனிதன் மனவருத்தத்தோடும் விசாரத்தோடும் அந்தத் துட்டையெடுத்துக்கொண்டு மெழுகுவர்த்தி வாங்கப் புறப்பட்டுப்போனான். ஆனாலும் தேவனுடைய பராமரிப்பின் செயலைப் பாருங்கள். அந்த மனிதன் ரஸ்தாவைக் கடக்கும்பொழுது ஏதோ ஒன்று வழியிற் கிடந்து அவன் காலிற் பட்டு இடறி விழுந்தான். காணாமற்போய் அந்தத் துரைசானிகளுக்கு அவ்வளவு விசனத்தையும் வியாகுலத்தையும் உண்டுபண்ணின பெட்டகமே அது. அந்த மனிதன் பெட்டகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வர்த்தியும் வாங்கிக்கொண்டு வீடு வந்துசேரவே, புருஷன் கையிலிருக்கிற பெட்டியை மனைவி கண்டு திடுக்கிட்டு அதிர்ந்து, புருஷன் வறுமையினாலே எந்தப் பிரயாணியிடத்திலாவது வழிப்பறிசெய்யத் துண்டிவிடப்பட்டிருப்பானோ என்று நினைத்து நடுங்கினாள். என்றாலும் நடந்த சங்கதிகளை அவன் விபரித்துச் சொன்னதின்பேரில், சந்தேகமோ பயமோ எல்லாந் தெளிந்து, மறுநாள் அதிகாலையில் சந்தை கூடுகிற அந்தப் பட்டணத்தில் அதைக் குறித்து விசாரிக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, உண்மையும் நேர்மையுமுள்ள அவ்விருவரும் முழங்காலில் நின்று தங்கள் கையில் அகப்பட்டிருக்கிற பொக்கிஷத்தைத் திருடி அபகரித்துக்கொள்ளாதபடி கிருபையருளவேண்டுமென்று கர்த்தரை நோக்கி ஆவலாய்ப் பிரார்த்தித்தபின்பு தங்கள் கேவலமான படுக்கையிற் படுத்து சமாதானத்தோடும் நல்மனச்சாட்சியோடும் நித்திரைசெய்து விழித்தார்கள்.

இதற்காகவே அந்த ஏழை மனிதன் மறுநாள் அதிகாலையில் சந்தைக்குப்போய் மேற்படி பத்திரிகையின் தாற்பரியத்தை விசாரித்து அறிந்துகொண்டவுடனே வீட்டுக்கு ஓடிப்போய் அந்தப் பெட்டகத்தை எடுத்துக்கொண்டு வந்து துரைசானி கையிற் கொடுத்து, அன்றிரவில் தன் வீட்டில் நடந்த காரியங்களையும் விபரித்துச் சொன்னான். காணாமற்போன பெட்டகம் அகப்பட்டுக்கொண்டதினிமித்தம் துரைசானிக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவென்றில்லை. வாக்குச்சொல்லியிருந்த வெகுமதியை மிகுந்த சந்தோஷமாய்க் கொடுத்ததின்பின், துரைசானி அம்மனிதனுடைய வீட்டுச்சீர் நிர்வாகங்களை விசாரித்தாள். விசாரித்து அவர்கள் வருத்தப்படுகிறவர்கள் என்று அறிந்தபொழுது, இரண்டு மைல் தூரத்திலிருந்த அவன் வீட்டுக்குப்போய் தன் பெண்சாதியை



யும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வரும்படி அனுப்பினாள். அவர்கள் அன்று பகல் முழுவதும் ஒன்றுஞ் சாப்பிடாமல், பட்டினியாயிருந்தவர்கள். அவ்விடம் வந்து சேர்ந்தவுடனே, துரைசானி உத்தரவுப்பிரகாரம் அவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருந்த நேர்த்தியான போசனபதார்த்தங்களைச் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தார்கள். அதன்பின் அவர்களெல்லாருக்கும் நல்ல வஸ்திரங்களும் அந்தத் துரைசானி வாங்கிக்கொடுத்து அந்தக் குடும்பத்தாரெல்லாரையும் சந்தோஷிப்பித்தாள். இவ்வாறு காணாமற்போன அந்தப் பெட்டகம் இந்த ஏழைச் சனங்களுக்கு எவ்வளவோ பெரிய ஆசீர்வாதமாயிற்று. இவர்கள் வறுமையையும் தரித்திரத்தையும் பார்க்க பாவத்துக்குப் பயப்பட்டவர்கள். பசியையும் பட்டினியையும் பார்க்க தேவனுடைய தயவே பெரிதென்று நினைத்து நடந்தவர்கள். இவர்கள் எவ்வளவு சந்தோஷமாயும் சமாதானத்தோடும் தங்கள் வீட்டுக்குத் திரும்பியிருப்பார்கள்! இந்தச் சரித்திரத்தை எத்தனை விசையோ தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் காண்பித்து, நேர்மையாயும் உண்மையாயும் நடந்து ஜீவனம்பண்ணவேண்டுமென்றும், முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடிக்கொண்டு, அப்புறம் அவர்கள் அன்றாடகம் வேண்டிய நன்மைகளுக்காக அவரை நம்பி நடக்கவேண்டுமென்றும் புத்திசொல்லி ஏவியிருப்பார்களென்றும் நினைக்கத்தக்கது.

இதை வாசிக்கிறவர்களே, நேர்மையே உத்தம உபாயம் என்பது மெய்யா பொய்யா, இப்பொழுது சொல்லுங்கள். நம்முடையவர்களுக்குள் ஒரு பெரிய தப்பிதமிருக்கிறது. அது என்னவென்றால் எங்கேயாவது ஒரு பொருளைக் கண்டெடுத்தால், அதைச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டியதில்லை, தாங்களே வைத்துக்கொள்வது நியாயமென்று நினைப்பதுதான். இது மகா கொடிய தவறு. பெரிய நீதிக்கேடு. நம்முடைய பொருள் ஒன்று காணாமற்போனதை இன்னொருவன் கண்டெடுத்தால், அதை நமக்குத் தந்துவிடாமல் அவன் தான் எடுத்துக் கொள்ளுகிறது நியாயமென்று நினைப்போமா? சொல்லுவோமா? நினைக்கவுமாட்டோம், சொல்லவுமாட்டோமே. ஆகையால் பிரியமானவர்களே, நாம் எங்கேயாவது எந்த அற்பப் பொருளையென்கிலும் கண்டெடுத்தால், அதை நமக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ளப் பார்க்காமல், சொந்தக்காரன் இன்னானென்று கரிசனையாய் விசாரித்து அவனிடத்திற் கொடுத்துவிட ஆயத்தமாயிருப்போமாக. எவ்விதத்திலும் நேர்மையே உத்தம உபாயம் என்பதை ஒருபொழுதும் மறந்துபோகாதிருப்போமாக.

## The Earth.

## பூகோளத்தைக் குறித்தது.

“அவர் பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்.” யோபு 26: 7.

(தொடர்ச்சி.)

சூரிய சந்திராதிகளாகிய வானுலகங்களெல்லாம் கிழக்கிலிருந்து மேற்காக நாடோறும் ஒவ்வொரு விசை பூமியைச் சுற்றிக்கொண்டு

வருவதுபோல தோன்றுகிற தோற்றம் யதார்த்தமல்லவென்றும், பூமி
தன் அச்சில் சுழன்றுகொள்வதினாலேயே மேற்படி தோற்றங்களெல்
லாம் உண்டாகின்றனவென்றும் காண்பிக்கத்தக்க பல எதிர்மறை நியா
யங்கள் முந்தின சங்கியையில் சொல்லப்பட்டன. இப்பொழுது அந்த
உண்மையை அதிக நிச்சயத்துக்கு இடமானதாய்க் காண்பிக்கத்தக்க
நேரான சில உதாரணங்களை எடுத்துச் சொல்லுவோம்.

முதலாவது. நமக்குத் தெரிந்திருக்கிறபடி சூரியன் பூமியைப்
பார்க்க எத்தனையோ மடங்கு பெரிதானது. பத்து லட்சம் பூமிகள்
சேர்ந்தாலும் ஒரு சூரியன் ஆகமாட்டாதென்று வானசாஸ்திரிகள்
கணித்திருக்கிறார்கள். மற்றும் பல நட்சத்திரங்களின் பரிமாணங்க
ளுக்கு சூரியனுடைய பரிமாணமும் மகா அற்பமானதாம். பென்னம்
பெரிய இந்த உலகங்களெல்லாம் அற்பமான இப்பூமியைச் சுற்றிக்
கொண்டுவருகின்றன என்று சொல்லுகிறதா, பூமி தன் அச்சில் சுழன்
றுகொண்டு சூரியனைச் சுற்றிவருகிறது என்று சொல்லுகிறதா, எது
எளிது, எது நியாயம், எது புத்திக்கும் இயற்கைப் பிரமாணத்துக்கும்
ஏற்றது! இவ்விரண்டில் எந்த முறையினாலும் நாம் பார்க்கிற தோற்றம்
உண்டாகலாமே.

இரண்டாவது. பூமி அசைவில்லாமலிருந்தால், சூரியனும் மற்
றும் வானுலகங்களனைத்தும் நாடோறும் ஒரு விசை பூமியைச் சுற்றி
வரவேண்டியதல்லாமலும், அவைகளின் ஓட்டங்கள் ஓயாமல் மாறிக்
கொண்டேயிருக்கவும் வேண்டும். சூரியன் தொடர்ச்சியாய் இரண்டு
நாளாவது ஒரே இடத்தில் உதயமாகி ஒரே இடத்தில் அஸ்தமிக்கிற
தாகக் காணப்படுகிறதில்லையே.

மூன்றாவது. பூமிக்கும் வானுலகங்களுக்குமுள்ள பற்பல அள
வான தூரங்களைக் கவனிக்குமிடத்தும், பூமியே அசைகிறதென்று தெ
ளிந்துகொள்ள இடமுண்டு. நட்சத்திரங்களிலெல்லாம் நமக்கு அதிகச்
சமீபமானது நமது சூரியன்தான். அதுவே தொளாயிரத்து ஐம்பது
லட்ச மைல் தூரத்திலிருப்பதாக வானசாஸ்திரிகள் கணித்திருக்கிறார்
கள். நட்சத்திரங்களென்று வழக்கமாய்ச் சொல்லப்படுகிற சில வா
னுலகங்களிருக்கிற எண்ணிறந்த தூரங்களோ மனதினாலும் கிரகிக்கக்
கூடாதவைகளாம். பூமி அசைவற்றிருக்க, பென்னம்பெரிய இவ்வுல
கங்களெல்லாம் இருபத்துநாலு மணி நேரத்துக்கு ஒரு விசை அதை
வட்டமிட்டுச் சுற்றிவரவேண்டுமாகில், புத்திக்கும் எட்டாத அதிவேக
மாய்ச் செல்லவேண்டுமே. பூமி தன் அச்சில் ஒரு விசை சுழல்வதினா
லே நாம் பார்க்கிற சகல தோற்றங்களும் உண்டாகக்கூடியதென்றால்,
இந்த அபூர்வ ஏற்பாடெல்லாம் என்னத்துக்கு? சுளுவான ஓர் முறை
யிருக்க, அதைவிட்டு சிக்குமுக்கும் சன்னல் பின்னலுமான முறைகள்
கையாளப்பட்டிருக்குமானால் சிருஷ்டி கர்த்தாவினது அளவில்லாத
ஞானத்துக்கு விகற்பமாகுமே.

நாலாவது. தேவன் சிருஷ்டித்திருக்கிற மற்றெந்தச் சிருஷ்டி
யைக் கவனிக்கையிலும், அற்பசொற்ப எத்தனங்களாலே மகத்தான
காரியங்கள் பலிக்கிறதைக் காண்கிறோமே. ஆகவே, பூமியானது தன்
அச்சில் சுழல்வதாகிய சுளுவான முறையினாலேயே வானத்தில் நாம்
பார்க்கிற தோற்றங்களெல்லாம் உண்டாகின்றனவென்று சொல்வது
தான் நியாயம். சிக்குமுக்கான மற்ற முறையினாலே உண்டாகிறதென்
று நினைப்பது புத்திக்கும் இயற்கைப் பிரமாணத்துக்கும் முற்றும்
விரோதமாயிருக்கும். மேலே எடுத்துரைத்திருக்கிற நியாயங்களோ
தவிர, புத்திசாலிகளுக்கும் வித்வான்களுக்கும் வேறு நியாயங்களும்



தோன்றும். ஆகிலும் நாம் சாதிக்கிற காரியம் நம்பக்கூடியதென்ப
தற்கு இவ்வளவும் சொல்லியிருக்கிற உதாரணங்களே போதுமானவை
யுள். இராப்பகலுண்டாவதற்குக் காரணமான பூமியின் நாளோட்டம்
நம்பத்தக்கதென்றால், காலபேதங்களுக்குக் காரணமான, சூரியனைச்
சுற்றிய பூமியின் வருஷாந்தர ஓட்டமும் நம்பப்படத்தக்கதேயென்று
எளிதில் தோன்றும். மற்றக் கிரகங்கள் ஒவ்வொன்றும் தன் தன் அச்
சில் சுழன்றுகொண்டு, குறித்த காலங்களில் சூரியனை வட்டமிட்டுச்
சுற்றிவருவது சாஸ்திரிகள் திட்டமாய் அவதானித்து அறிந்த சத்தியம்.
அப்படியானால் அதுபோலவே அவைகளிலொன்றாகிய பூமிக்கும் சூரி
யனைச் சுற்றியோடும் ஓட்டமும் உண்டென்று சந்தேகமறச் சொல்ல
லாமல்லவா? மேலும் பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்று ஒப்புக்
கொள்ளாத பட்சத்தில் எத்தனையோ தோற்றங்களுக்கு வகைசொல்ல
ஏதுவிருக்கமாட்டாது.

மூன்றாவதாக, பூமியின் ரூபத்தையும் அளவுதனையும் கவனிக்க
வேண்டும். பூர்வத்தாருக்குள் இரண்டொருவர் மாத்திரம் தான் பூமி
யின் ரூபத்தைக்குறித்து ஏகதேசம் சரியாய் அறிந்திருந்தவர்கள். மற்ற
வர்களெல்லாரும், பூமியானது மலைகளும் பள்ளத்தாக்குகளும் அமை
ந்த அகன்ற மைதானம் என்று தான் எண்ணியிருந்தார்கள். இந்த
அபிப்பிராயமுடையவர்கள் உலகத்தில் இன்னம் எண்ணிறந்த பேர்
களுண்டு. இந்த அறிவீனமுடையவர்கள் இந்துதேசத்திலுமில்லையோ?
பூமி கோள ரூபம்கொண்டது என்பதைப்பற்றி அறிவாளிகள் மனதில்
எவ்வளவும் சந்தேகமில்லை, அதினாலேயே பூகோளம் என்ற பதமும்
வழங்கிவருகிறது. பூமி கோள ரூபமுள்ளது என்பதற்கு அநேக நியா
யங்கள் சொல்லலாகும். ஆகிலும் மூன்று உதாரணங்கள் மாத்திரம்
இவ்விடத்தில் சொல்வது போதும்.-(1) சந்திர கிரணங்கள் நடக்கும்
வேளைகளில் பூமியானது சூரியனுக்கும் சந்திரனுக்கு இடையில் வந்து
சூரியனுடைய வெளிச்சம் சந்திரனிற படாதபடிக்கு மறைக்குமே. அவ்
வேளைகளில் சந்திரன் மீது விழும் பூமியின் நிழல், எக்காலத்திலோ
பூமியின் எப்பக்கத்திலோ கவனிக்கையிலும், எப்பொழுதும் வட்டமாக
வேயிருக்கிறது. கோளரூபமான பொருளேயன்றி வேறெந்தப் பொ
ருளும் எக்காலத்திலும் எந்நிலையிலும் வட்டநிழலிடமாட்டாது.—
(2) சமுத்திரத்தில் துறைமுகத்துக்கு நேரே வரும் ஒரு கப்பலைக் கவ
னிக்கையில் முதலாவது சிறிய பாகங்களாகிய பாய்மரங்களும் பாய்
களும் தென்படுகின்றன. கப்பல் கரைக்குச் சமீபிக்கச் சமீபிக்க மேற்
பாகமும் அடிக்கப்பலும் முறையே காணப்படுகின்றன. இந்தத் தோற்
றம் தூரத்தினாலுண்டாகிறதென்பீர்களாகில், மிகவும் பெரிய பாகமா
கிய அடிக்கப்பலல்லவா முதலாவது காணப்படவேண்டியது. அவ்வா
றே துறைபேர்ந்து பாய் விரித்தோடும் கப்பல் விஷயத்திலும், கப்பலி
லுள்ளவர்களுக்கு முதலாவது கடற்கரை வீடுகள் முதலிய தணிந்த
பொருட்கள் மறைகின்றன. அப்புறம் மரங்கள் கோபுரங்கள் முதலான
உயரமான பொருட்கள் படிப்படியாய் மறைந்துபோகிறது. இதெல்
லாம் தூரத்தினாலுண்டாகாமல் கப்பலுக்கும் மேற்படி பொருட்களுக்
கும் நடுவேயிருக்கப்பட்ட பூமியின்மேல் விலாச வளைவினாலேயே உண்
டாகிறதென்று நிதானிக்கத்தக்கது.-(3) ஒரு கப்பல் ஒரு துறைமுகம்
விட்டுப் பேர்ந்து கிழக்காய் அல்லது மேற்காய் அக்கம் பக்கம் வில
காமல் பாய் வலித்தோடிக்கொண்டேயிருந்தும், எதிர்திசையிலிருந்து,
விட்டுப்போன துறைமுகமே திரும்பவும் வந்து சேருகிறது. இவ்வாறு
முதல் முதல் பூகோளத்தைச் சுற்றி யாத்திரைபண்ணினவன் மகலன்

என்ற ஒருவன். தற்காலத்திலோ எண்ணிறந்த கப்பல்கள் நாடோறும் பூமியைச் சுற்றிக்கொண்டு வருகின்றன. பூமிகோள ரூபமானதென்றால் நமக்கு விஷயமாகாதிருப்பதேன் என்று கேட்டால், பூமியானது பென்னம்பெரிய கோளமாயிருப்பது தொட்டு அதின்மேல் விலாசம் லேசான வளைவாயிருப்பதினாலும் அதில் கொஞ்ச தூரத்தை மாத்திரம் நாம் ஒருமிக்க பார்க்கக் கூடியதாயிருப்பதினாலுமே அது நமக்கு விஷயமாகிறதில்லை.

ஒரு பூகோள உருண்டையில் ஒட்டிய மணலினாலோ, கிச்சிலிப் பழத்தின் தோலிலுள்ள கரடுமுரடுகளினாலோ அது அதின் விருத்தாகாரம் அற்றுப்போகிறதில்லையே, அதுபோலவே பூமியின் மீதுள்ள பர்வதங்களும் பள்ளத்தாக்குகளும் அதின் கோள ரூபத்தைக் கெடுக்கிறதில்லை. என்றாலும் இன்னொரு வகையில் பூகோளத்தைச் சரியான கோளமல்லவென்று தான் சொல்லவேண்டும். எப்படியென்றால சாஸ்திரிகள் பூகோளப் பரப்பில் பல பாகங்களைத் திட்டமாய் அளந்தும் மற்றும் பல பரீட்சைகள் செய்தும், பூமியானது கிச்சிலிப் பழத்துக்கொப்பாய் துருவங்களில் சற்று சப்பியும் சமரேகையண்டையில் சற்று புடைத்துமிருக்கிறதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதினாலே துருவத்துக்கும் துருவத்துக்குமுள்ள பூமியின் குறுக்களவு சமரேகைக்கும் சமரேகைக்குமுள்ள குறுக்களவைப் பார்க்கச் சற்று சிறிதென்றும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தச் சிறிய குறுக்களவாகிய அச்சிலேயே பூமி சுழல்கிறது. பூமியின் குறுக்களவுகளெல்லாம் ஒன்றுபோலிருக்கமாட்டாதென்று நியூற்றன் என்ற சாஸ்திரியார் கவர்ச்சிப் பிரமாணத்தைக்கொண்டு காண்பித்திருந்தார். அவருக்குப்பின் தோன்றின கல்விமான்கள் நானாவித ஆராய்ச்சிகளும் பரீட்சைகளுஞ் செய்து காரியம் அப்படியே இருக்கக் கண்டார்கள். அவ்வாறே துருவ விட்டம் சமரேகை விட்டத்தைப் பார்க்க இருபத்தாறு மைல் குறைந்ததாம். களிமண்ணினாலாவது இளக்கமான வேறெந்த வஸ்துவினாலாவது ஒரு உருண்டையைச்செய்து அதின் மையத்தை ஊடுருவ ஒரு இரும்புக் கம்பியைச் செலுத்தி மேற்படி உருண்டையை அதில் விசையாய்ச் சுழலச்செய்தால் நடுவில் சற்று புடைக்கவும் கம்பியின் முனைகளில் சற்று சப்பவும் காணலாம். பூமியின் யதார்த்தமான ரூபமும் இத்தன்மையுள்ளதுதான். இந்த முறையாய்த் தான் பூமிக்கு, இந்த ரூபம் உண்டாயிருக்கவேண்டுமென்று சிலர் சொல்லுவார்கள். அப்படியல்ல, பூமி முதலாவது இந்த ரூபமாய் உண்டுபண்ணப்பட்டு அப்புறம் தன் அச்சில் சுழலும்படி அமைக்கப்பட்டிருக்கிறதென்று சிலர் சாதிப்பார்கள். எப்படியும் பூமியைச் சிருஷ்டித்து மனுஷனுக்கு வசதியான வாசஸ்தலமாக்கின தேவனுடைய ஞானத்தையும் சாமர்த்தியத்தையும் இந்தக் காரியம் நன்றாய் விளக்கிக் காண்பிக்கின்றது.

பூமியின் சுற்றளவு சுமார் இருபத்தையாயிரம் மைலென்றும், அதின் மேற் பரப்பு இருபது கோடி சதுர மைலென்றும் பூகோள சாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள். பூகோள விலாசத்தில் ஜலம் இவ்வளவு, தரை இவ்வளவு என்று திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லாவிட்டாலும், மூன்றிலிரண்டு பங்குக்கு அதிகம் ஜலமும் மற்றது தரையுமென்று பொதுப்படச் சொல்லலாகும்.



## சமாசாரத்திரட்டு.

**லண்டன்.**—மாட்சிமைபொருந்திய நமது சக்கரவர்த்தினியவர்களுக்கு சற்று சுகவீனமுண்டாய் வரவா குணமாகிவருகிறது. ஜூலூயுத்தத்தில் அதிவீரங்காட்டிய ரணகெம்பீரர்கள் மகா சக்கரவர்த்தினியவர்களோடு சென்றமீ 11௳யில் விருந்து அனுபவிக்கிற மேன்மையைப் பெற்றார்களாம்.

**ருஷியா.**—சக்கரவர்த்தி ஓரிடத்துக்கு ரதத்தின்மேற்போகையில் எவனோ சண்டாளனொருவன் அவர்பேரில் குண்டுபிரயோகித்தான். அது வண்டியைச் சேதப்படுத்தினதே தவிர, அவருக்கு யாதொரு சேதமும் செய்யவில்லையாம். தன்னுயிர் தப்பியதற்காக சக்கரவர்த்தி கடவுளுக்கு நன்றியறிதலின் தோத்திரம் செலுத்தினார்.

**ஆப்கானிஸ்தான்.**—பிரிட்டிஷ் ஸ்தானாபதி முதலியபேரைச் சங்கரித்த துஷ்டரை அடக்கி ஒடுக்கும்படி துரைத்தனத்தார் செய்துவருகிற தின்னின்னவென்று முந்தினமாசம் தெரிவித்தோமே. அமீராகிய யாக்கூப்கானும் அந்தக் கலகத்துக்குக் காரணமாயிருந்திருக்கலாமென்ற சந்தேகத்தின்பேரில் பிரிட்டிஷ் சேனாபதியால் காவலில் வைக்கப்பட்டவர்போல் காபந்து செய்யப்பட்டிருக்கிறாரென்றும் அவருக்குச் செய்யவேண்டியது இன்னதென்று இனிமேல் தீர்மானிக்கப்படுமென்றும் தெரிவித்தோமே. கடைசியாய் வந்த சமாசாரத்தினால் ஆப்கானிய எல்லைக்குள் அவரை வையாமல் இந்தியாவுக்குக் கொண்டுவருவது யுக்தமென்று துரைத்தனத்தார் நினைத்து, இரண்டு சர்தார்களுடனும் இனத்தானொருவருடனும் அவரை இந்தியாவுக்குக் கொண்டுவர உத்தரவுசெய்தார்கள். அவ்வாறே அவர் சென்றமீ 8௳ பேஷ்வாருக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிறார். அங்கே அவரைக் காவல்செய்யும்படி 90 போர்வீரரும் மிலிட்டேரி உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கபூலரை தீர்ப்பாய் அடக்கவேண்டும் முயற்சி இன்னும் அங்கே நடக்கிறது.

## நோட்டீஸ்.

ஜனுவரிமீ 11௳-ல் பாளையங்கோட்டைச் சர்ச்சுமிஷியோன் கோவிலில் ஒரு பெரிய விசேஷம் நடக்கப்போகிறது என்று இதினாலே தெரிவிக்கப்படுகிறது. முன்பு டீக்கன் பட்டம் பெற்றிருந்த 13 போதகன்மார் அன்றையத்தினம் முழு குருப்பட்டம் பெறப்போகிறார்கள். இந்த நாட்டிலே திருச்சபை விர்த்திக்காகவும், நல்லொழுக்கத்துக்காகவும கவலைப்படுகிற யாவரும், அந்த நாளை மனதில் நினைவுகூர்ந்து, பரிசுத்த தேவ ஆவியானவருடைய நிறைவான வரப்பிரசாதம் பட்டம் பெறுகிறவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று செபம்பண்ணும்படி, ஏவப்படுவார்களென்று நம்புகிறோம். அப்பொழுது சங்கீதப் புஸ்தகத்தில் சொல்லியபடி "உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக."

ஜனுவரிமீ நாள் 31. மார்கழிமீ 19உ முதல், தைமீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௯ | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே பெலன். நெகே. 8:10. |
| வெ | 2 | ௨௰ | நீ கடினமுள்ளவனென்று அறிந்திருக்கிறேன். ஏசா. 48: 4. |
| ச | 3 | ௨௧ | உன்னை இரட்சிப்பாரில்லை. ஏசா. 47:15. |
| ஞா | 4 | ௨௨ | தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். 1 கொரி. 10: 13. |
| தி | 5 | ௨௩ | என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். |
| செ | 6 | ௨௪ | நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன். சகரி. 8: 8. (சகரி. 1:3. |
| பு | 7 | ௨௫ | என் நல் வார்த்தைகளை நிறைவேறப்பண்ணுவேன். எரேமி. 29:10. |
| வி | 8 | ௨௬ | என்னை நோக்கிக் கூப்பிடுகிறவன் ஒருவனும் இல்லை. ஓசி. 7: 7. |
| வெ | 9 | ௨௭ | தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். அப். 7: 41. |
| ச | 10 | ௨௮ | தேவனிடத்தில் பட்சபாதமில்லை. ரோமர். 2: 11. |
| ஞா | 11 | ௨௯ | நாம் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். கலாத். 4: 28. |
| தி | 12 | ௩௰ | மரண பரியந்தம் இடுக்கண்களில்லை. சங். 73: 4. |
| செ | 13 | ௧ | தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக் கடவன். 1 கொரி. 7: 24. |
| பு | 14 | ௨ | அவரே அதிசயங்களைச் செய்கிறவர். சங். 72: 18. |
| வி | 15 | ௩ | அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. எபே. 4: 7. |
| வெ | 16 | ௪ | பொல்லாத கிரியைகளை விட்டுத் திரும்புங்கள். சகரி. 1: 4. |
| ச | 17 | ௫ | அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன். எரே. 31: 20. |
| ஞா | 18 | ௬ | போக்குச் சொல்ல இடமில்லை. ரோமர். 1: 20. |
| தி | 19 | ௭ | காணப்படாதவைகள் நித்தியமானவைகள். 2 கொரி. 4: 18. |
| செ | 20 | ௮ | எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். எரே. 2: 4. |
| பு | 21 | ௯ | உன் ஆத்துமாவைத் தப்புவிப்பேன். எசேக். 3: 19. |
| வி | 22 | ௰ | முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய். தானி. 12 |
| வெ | 23 | ௧௧ | கிறிஸ்துவின் ரத்தத்தினாலே சமீபமானீர்கள். எபே. 2: 13. (13. |
| ச | 24 | ௧௨ | அவரே நம்முடைய சமாதான காரணர். எபே. 2: 14. |
| ஞா | 25 | ௧௩ | உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. ஏசா. 48: 17. |
| தி | 26 | ௧௪ | என் கற்பனைகளைக் கவனித்தால் நலமாயிருக்கும். ஏசா. 48: 18. |
| செ | 27 | ௧௫ | உன் காயங்களை ஆற்றுவேன். எரே. 30: 17. |
| பு | 28 | ௧௬ | உன்னைச் சோதித்து அறிந்தேன். சங். 81: 7. |
| வி | 29 | ௧௭ | சமாதான வழியை அறியாதிருக்கிறார்கள். ரோ. 3: 17. |
| வெ | 30 | ௧௮ | நெருக்கத்திலே கூப்பிட்டாய் உன்னைத் தப்புவித்தேன். சங். 81: |
| ச | 31 | ௧௯ | நான் கர்த்தரென்று அறிந்துகொள்வீர்கள். எசேக். 6: 7. (7.) |

## விசேஷ நாட்கள்.

1. விருத்தசேதனத் திருநாள்.
4. கிறிஸ்து ஜநந திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
6. பிரசன்னத் திருநாள்.
11. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
18. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
25. செப்துவகெசிமா ஞாயிறு.
பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.

# நற்போதகம்.



## உபாகமம்.

### 19. அதிகாரம்.

XIX, XX, XXI அதிகாரங்களில் மனுஷருடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்குரிய சட்டங்களைக் கற்பிக்கிறார்.

1—13. அடைக்கலப் பட்டணங்களைக்குறித்து. யாத்தி. 21: 13, எண். 25: 9—34. சில விஷயங்கள் கூட்டிச் சொல்லப்பட்டது.

1, 2. யோசு. 20: 1.

3. “வழியை உண்டுபண்ணக் கடவாய்.” வருஷந்தோறும் ஆதார் மாதத்தில், அடைக்கலப் பட்டணத்துக்குப் போகும் பெரும் பாதைகளைப் பழுதுபார்த்து யாதொரு தடைக்கல் இல்லாதபடி செப்பனிடவேண்டியது செனட் சங்கத்தாருடைய கடமை. திட்டுத்திடல் ஒன்றும் இருக்கப்படாது. ஆறுகள் குறுக்கிட்டால் அகத்தியம் பாலம் கட்டியிருக்கவேணும். ஷை பெரும்பாதைகள் குறைந்த பட்சம் (32) முழம் அகலமாயிருக்கவேண்டும். தலைதெறிக்க ஓடுகிற கைதி வழிபிசகிப்போகாதபடி குறுக்குமறுக்கான பாதைகளில் கைகாட்டித் தூண்கள் நடப்பட்டிருக்கும். அவற்றில், அடைக்கலம் அடைக்கலம் என்ற வார்த்தைகளை எழுதியிருக்கும். ஏசா. 40: 3-ல் சொல்லிய உபமானம், அடைக்கலப் பட்டணத்துக்குப் போகும் பாதையை ஆயத்தப்படுத்துகிறதிலிருந்து வந்தது.

8, 9. 2-ம் 7-ம் வாக்கியங்களில் சொல்லிய மூன்று பட்டணங்களும், 10-ம் வாக்கியத்திற் சொல்லிய மூன்று பட்டணங்களும் ஒன்றுதான் என்று சில சாஸ்திரிகள் சொல்வது தப்பிதம். தேவவாக்குப்படி எகிப்து நதிமுதல் ஐபிராத்வரையும் இஸ்ரவேலருடைய எல்லை விசாலமாகும்போது, 10-ம் வா-ல் சொல்லிய (3) பட்டணங்களை ஏற்

படுத்தவேண்டுமென்று சொல்லுகிறார். ஆதி. 15: 18. யாத்தி. 33: 31. ஷை வாக்குத்தத்தமானது இஸ்ரவேலருடைய பாவத்தினாலே சரியான காலத்தில், நிறைவேறுதலடையாமல், பிந்தியகாலத்தில் தாவீது இராசா பெலிஸ்தியரையும் சீரியரையும் ஜெயித்தபிற்பாடு நிறைவேறுதலடைந்தது. இதுவும் நிலைத்திருக்கவில்லை. ஏனென்றால் சாலொமோனுடைய இராஜ்யம் தமோதினபோது, ஜெயிக்கப்பட்ட சாதியாரில் அநேகர் மருளவிழுந்து சுயாதீனராகிப்போய்விட்டார்கள். அநேக சாதியார் கப்பம் கட்டினாலும் முழுவதுமாய் தங்கள் நாடுகளை இழக்கக் கொடுக்கவில்லை. இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களையெல்லாம் ஜெயித்து, தங்கள் பிதாக்களுக்கு கர்த்தர் உடன்படிக்கைசெய்தபடி அவர்களுடைய தேசங்களைக் கையாட்சிசெய்திருந்தார்களானால், மோசே சொல்லிய (9) பட்டணங்கள் எவ்விதமும் வேண்டியதிருக்கும். யூதரபிமார், ஆறு பட்டணங்கள் என்றல்ல, ஒன்பது என்று தான் சொல்லுகிறார்கள்.

11—13. எண். 35: 12, 24. யோசு. 20: 6. இந்த விஷயத்தில் சபையாரெல்லாருக்காகவும் மூப்பர் காரியங்களை நடத்தும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியாக ஷை வாக்கியங்களில்,

(1) அடைக்கலப் பட்டணத்துக்குப் போகும் பெரும்பாதைகளை ஆயத்தப்படுத்துவதற்குரிய சட்டங்களும்;

(2) இஸ்ரவேலருடைய எல்லை விசாலமாகுமானால் "இன்னும் மூன்று பட்டணங்களை ஏற்படுத்த" வேண்டுமென்பதும்,

(3) சபையாரெல்லாருக்கும் பதிலாக மூப்பர் தலையிட்டு ஒப்புக்கொடுக்கிற காரியமும். (11, 12.) உபாகமத்தில் மட்டும் கூட்டிச்சொல்லியிருக்கிறது.

எங்கே ஓடுவேன் ! பாதகனானேன் ! திமை என்னும் ... ... மும், ஆதரிக்க யாரால் கூடும்! ஏசு சுவாமி நீர்! என்னைக் கூப்பிட்டீர்! மத். 11: 28. 1 யோ. 1: 7.

14. மனுஷனுடைய ஜீவனைப்போலவே அவனுடைய ஜீவனத்துக்குமும் பரிசுத்தமாக எண்ணப்படவேண்டும். 27: 17. நீதி. 22: ... 0.

"முன்னோர்கள்." LXX-ல் "உன் பிதாக்கள்" என்றிருக்கிறது. தேசங்களை ஜெயித்தபின் இஸ்ரவேலருக்குப் பங்கிடுகிறவர்கள் குறிக்கும் எல்லையை மாற்றக்கூடாதென்று சட்டம் கட்டுகிறார்.

15. 17: 6-ல் கொலைக்குற்றத்துக்காகச் சொல்லிய சட்டத்தை இவ்விடத்தில் நியாயாசனத்துக்கு முன் நடக்கும் எவ்வகையான குற்றவிசாரணைக்கும் அதே பிரமாணமாகச் சொல்லுகிறார்.

16.—21. பொய்ச்சாட்சியைப்பற்றிச் சொல்லியது. யாத்தி. 23: 1. லேவி. 19: 16. (9)ம் கற்பனை. நியாயவிசாரணையிலே பொய்ச்சாட்



சிக்காரனென்று விளங்கினவனை சுப்றீம் கோர்ட்டுக்கு (Supreme Court) தெரியப்படுத்த வேண்டும். 17: 9. சிவில் கேசுகளில் (Civil Cases) ஏகசாட்சியினாலே ஒரு குற்றம் பாரிக்கப்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவன் பிரமாணத்தினாலே தன்னைக் கடத்திக்கொள்ளலாம், ஏகசாட்சி அம்மட்டுக்குத்தான் செல்லும் என்றும; கிரிமினல் கேசுகளிலோ (Criminal Cases) ஆதாரமற்ற ஏகசாட்சியைத் தள்ளிப்போடவேண்டியதுமல்லாமல், (15)ம் வாக்கியத்தின் கட்டளையை மீறினவனென்று தண்டிக்கப்படவும் வேண்டுமென்று யூதரபிமார் சொல்லுகிறார்கள்.

இத்தனை சாட்சி வேண்டுமென்று சாட்சிகளின் தொகையைப் ... வாக்கியங்கள் சட்டம் கற்பிக்காமல், பொய்ச்சாட்சியைக் ... சுகிறது.

"வழக்காடுகிற இருவரும்" அசல் வழக்கின் வாதியும் பிரதிவாதியுமாம். இவர்களில் ஒருவன், பொய்ச்சாட்சி கொண்டுவந்தவன். சுப்றீம் கோர்ட்டார் வாதியையும் பிரதிவாதியையும் வருத்தி, அவர்கள் சாட்சியத்தினாலும், மற்றும் சாட்சியங்களினாலும் பொய்ச்சாட்சியம் சொன்னது நிசம் அல்லது அபத்தமென்று தீர்ப்பார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில்...ஆசாரியர்களுககும் நியாயாதிபதிகளுக்குமுன்பாக அதாவது 17-அதி-ல் சொல்லியபடி சுப்றீம் கோர்டு ஆசரிப்புக்கூடாரத்தில் கூடியிருக்கும்போது என்றர்த்தம். நியாயாதிபதிகள் தேவனுக்குப் பதிலாக நின்றார்கள். அவர்களுக்கு விரோதமாகப் பொய்சொல்லுவது தேவனுக்கு விரோதமாய்ச் சொன்னதற்குச் சரி. தேவசந்நிதியிலும் நின்று பொய்சொன்னான். ஆகையால் அவன் விசாரிக்கப்படவேண்டியது நியாயம்.

---

## 20. அதிகாரம்.

1, கீழ்தேசத்தாருக்குள் குதிரைகளும் இரதங்களும் மிகுதியாயுண்டு. கானானியருக்குள்ளும் அதிகமாயிருந்தது. யோசு. 17: 16. நியா. 4: 3. 1 சாமு 18: 5. இவைகளுக்குச் சமமாக இஸ்ரவேலர் சேகரிக்கலாது. ஆனால் ஜெயங்கொடுக்கிற கர்த்தர் இவர்களோடிருந்தார். அவரே இவர்களுடைய பலம். ஆகையால் யுத்தத்துக்குப் போகும்போதெல்லாம் அவரிடத்திற் கேட்டுப்போவது நியாயமாயிருந்தது.

2. "ஆசாரியன்" பிரதான ஆசாரியனல்ல. இந்தக் காரியத்துக்காக ஒருவனை நியமித்திருந்தது. யூதரபிமார் சொல்லுகிறபடி அவனுக்கு, "யுத்தத்துக்கு அபிஷேகம்பண்ணப்பட்டவன்" என்று பேர். இதிலிருந்து ஒருவேளை எரேமி. 6: 4 சொல்லப்பட்டிருக்கும். அதில் "ஆயத்தம்பண்ண" என்பதற்கு மூலபாஷை வார்த்தை "அபிஷேகம்பண்ண" என்றிருக்கிறது. அப்படியே பினேகாஸ், எண். 31: 6. 1 சா. 4: 4, 11. 2 சா. 13: 12.

4. "கர்த்தர்." 1: 30. 3: 22. யோசு. 23: 10.

5. "அதிபதிகள்." யாத்தி. 5: 10.

"பிரதிஷ்டை" இச்சமயத்தில் பக்திக்கடுத்த அநேக சடங்குகளைச்செய்வது யூதருக்குள் வழக்கம். இந்த வாக்கியத்திலும் 7-லும சொல்லிய விடுதலை, யோசேபுஸ் சொல்லுகிறபடி ஒரு வருஷத்துக்குச் செல்லும். 24: 5.

6. "அனுபவி" எபிரேயு மூலவாக்கியத்தில், "பொதுவாக்காதவன்" என்றிருக்கிறது. புது மரத்தின் கனிகள் மூன்று வருஷம் பொதுவான அநுபவமில்லாமலிருக்கும். (லேவி. 19: 25—)

9. அதாவது அந்தந்தப் பவிஞ்சுக்கு என்றர்த்தம்.

10—20. முற்றிக்கையில் உயிரையும் சொத்துக்களையும் அழியாமல் தடுக்கும்படி சட்டம் கற்பிக்கிறார்.

10. 2 சாமு. 20: 18—20. ஒரு பட்டணத்தார் சமாதானமாய் ஒப்புக்கொடுத்துவிட்டால் அவர்களில் போர்வீரரை முதலாய் அழிக்கப்படாது என்று இவ்வாக்கியத்தால் காணப்படுகிறது. பலவந்தமாய்ப் பிடித்த பட்டணங்களிலும் ஆண்களைமட்டும் கொல்லவேணுமென்று பின்னான வாக்கியங்களினால் காணப்படுகிறது.

13. எண். 31: 7.

14. "கொள்ளைப்பொருள்." யோசு. 8: 2. 22: 8.

15. எப்படியும் தயவுதாட்சணியம் கானானியருக்குக் காட்டப்படாது. அவர்கள் முழுவதுமாய் நிர்மூலமாக்கப்படவேண்டிய சாதியார். 7: 1—4.

16. அதாவது மனுஷ சாதியையெல்லாம் கொல்லு என்றர்த்தம். இந்தக் கட்டளை மிருகங்களுக்குச் செல்லாது. யோசு. 11: 11, 14.

19. யுத்தங்களில் எகிப்தியர், கனிமரங்களையும் வெட்டி நாசம் பண்ணிப்போடுவார்கள்.

20. எரேமி. 6: 6.

---

# இரக்ஷண்ய மனோகரம்.

## தேவாரம்.

### போற்றித் திருவிருத்தங்கள்.

### பூர்வ சுருதி.

ஆதிமத் யாந்த ரஹித நிஷ்களங்க அநாதியங் கடவுளே போற்றி
ஜோதியாய் அகண்டா காரமாய் விளங்கும் தூயசை தன்யமே போற்றி



பேதியா நிலைநின்றுலகெலாந் தந்த பிரணவ தெய்வமே போற்றி
நீதியோ டிரக்க சமரச நெறியை நிறுவிய நிமலனே போற்றி. 1

முன்ன மோர் நரனால் விளைந்ததீ வினையை முனிந்திடும் முதல்வனே
(போற்றி
பின்னரவ் வினைதீர்ந் துலகெலா முய்யப் பேரருள் அளித்தவா போற்றி
நன்னெறி யிகந்தோர் பிரளயத் தமிழ நயந்திடும் நாதனே போற்றி
மன்னுநோ வாவோ டெண்மரைப் புரந்த மாபெருங் கருணையாய் போ
(ற்றி. 2

குழுமியோர் குலையப் பாஷைவே றாக்கிக் குழப்பிடுங் கொற்றவ போ
(ற்றி
வழிவழி சுருதி முறைமுறை யாக வகுத்தவே தாந்தனே போற்றி
விழியருள் பரப்பி ஆபிரகாமை விளித்தருள் விமலனே போற்றி
கிழமுதிர் பருவத் தொருமக வளித்த கேடிலாக் கிருபையாய் போற்றி. 3

தொண்டனை வலித்து நகர்ப்புறங் கொடுபோய்த் துரந்த பேரருளினாய்
(போற்றி
வண்டரூர் எரிவாய் மடுத்திட முனிந்த மாண்புறு நீதியாய் போற்றி
கொண்டொரு மகவைப் பலியிடத் துணிந்த கொற்றவன் தெய்வமே
(போற்றி
பசுமேபோல் மகவீந் த[illegible]குசல் லாசி பகர்ந்திடும் பகவனே போற்றி. 4

உத்தம தொழும்பற் குரைத்த வாக்கனைத்தும் உவந்துகாத் தளித்தவா
(போற்றி
பத்தனை யடர்க்கப் பலமிலா தொல்கிப் பரிவுறும் பரமனே போற்றி
சித்தம்வைத் தவனிற் பன்னிரு மரபு திகழ்ந்திடச் செய்தவா போற்றி
வித்தகன் யோசேப் பினைநனி யுயர்த்தும் விட்புல வேந்தனே போற்றி.

கருப்பினில் இஸ்ரேல் மக்களைக் காத்த கருணையங் கடவுளே போற்றி
விருப்பொ டங்கவரை வாரிதி மணற்போல மிகச்செயும் விந்தையாய்
(போற்றி
திருப்பரும் அடிமைத் தனத்தினால் அவரைத் திருத்திய தெய்வமே போ
(ற்றி
ஒருப்படூஇ யோலம் இடுமவர்க் குருகி உறுதுயர் களைந்தவா போற்றி.

அருளினாற் செங்கோல் அளித்து மோசேயை அனுப்பிய வமலனே போ
(ற்றி
இருளுறு மனத்தாரிடைப் பலபுதுமை யியற்றிய ஈசனே போற்றி
மருளுறு மிஸரேல் சிறைதவிர்ந் தேக வரந்தரும் வள்ளலே போற்றி
தெருளிலாப் பார்வோன் ஜனத்தொடு மடியச் செங்கடல் விடுத்தவா
(போற்றி. 7

மற்றவர் தமக்கு வழித்துணை யாகி வானமு தருளினாய் போற்றி.
வெற்றியங் கிரீமீ துலகெலாம் நடுங்க விளங்கிடும் விபுதனே போற்றி

நற்றவன் வழியே விதிவிலக் கருளி நடத்திடும் நம்பனே போற்றி
கொற்றமொ டிஸரேல் வளமிகு கானன் குடிபுக அருளினாய் போற்றி. 8
மன்னர சுரிமை முறைநிறீஇக் குடிமை வளந்தரு மகிபனே போற்றி
அன்னைபோற் கசிந்தும் தந்தைபோற் கடிந்தும் ஆம்பரி சுணர்த்தினாய் (போற்றி
நன்னெறி யிகந்த மன்னரைச் செகுத்து நலம்புனை நம்பனே போற்றி
செந்நெறிச் சென்றோர்க் குறுதுணையாய திரியேக தெய்வமே போற்றி.
கோலேந்தொரு செங்கோலிசாய் மகற்குக் கொடுத்தருள் கொற்றவ (போற்றி
சீலமாய் அவன்சொல் நயந்தசங் கீதம் செவிமடுத் துகந்தவா போற்றி
சாலமோன் தேவாலய முவந்தருளித் தரித்திடும் தற்பர போற்றி
மேலைநாள் யூதஜனஞ் சிறைப்படவும் மீளவும் அருளினாய் போற்றி 10
திருவுளக் குறிப்பைத் தீர்க்கரால் முன்னம் தெரித்திடும் தீர்த்தனே போ (ற்றி
வருவர் மேசியக்கென் றடியருக் கினிய வாக்கமு தூட்டினாய் போற்றி
பொருந்வரும் ஆன்ம ரக்ஷ மார்க்கத்தைப் புதுக்கிய புராதனா போற்றி
சருவலோ கமுமீ டேறவோர் மகவைத் தந்தருள் தந்தையே போற்றி.

உத்தர சுருதி.

ஆதிமெய்த் திருவாக் காய் அகிலகா ரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே போற்றி
மாதுவித் தாகி யிந்த மா நிலம் புரப்ப லென்று
தாதைபாற் பிரிந்து நின்ற தற்பரா போற்றி போற்றி. 12

பன்னரு மஹிமையோடு பண்ணவர் பரவியேத்த
உன்னரும் பரமாகாயத் துச்சி வீற்றிருந்தாய் போற்றி
புன்னரர் பொருட்டுப் பாவப் புலையுலகத்து மேவிக்
கன்னிபா லுதித்தாய் போற்றி கருணை வாரிதியே போற்றி. 13

வறிதுபுல் லணையிற் கந்தை வனைந்தொரு குழவி யாகி
அறிதுயில் அமர்ந்தாய் போற்றி அலகில்பல் லுயிரை யூட்டிச்
செறிதரு பசிக்காற்றாது தேம்பிநின் றழுதாய் போற்றி
வெறிதிகழ் அறவோராயர் சேர்ந்த நின்மலனே போற்றி. 14

ஈசனுர் உனைகொண்டேகி யெகிப்து நாடடைந்து மீண்டு
நாசரேத்தூர் வந்துற்ற நசரேய நம்பி போற்றி
ஆசற வளர்ந்து பெற்றோர்க் கமைந்திடும் ஐயபோற்றி
தேசிக ஞான தீக்ஷை செவ்விதின் அடைந்தாய் போற்றி. 15

அம்முறை விரதமேற் கொண்டாரணியத்து மேவிச்
செம்முறை திறம்பா வண்ணம் ஜெபதபம் புரிந்தாய் போற்றி
மும்முறை முனிந்து பேயை முடுக்கிய முனிவா போற்றி
எம்முறை பாட்டுக் குள்ளம் இரங்கிடும் எந்தாய் போற்றி. 16



வந்தது பரமராஜ்யம் மனந்திரும்புங்கள் என்று
நூதனப தேசஞ் செய்த முத்தி வித்தகனே போற்றி
சிறந்தன கசிந்தி ராறு சீஷரை யழைத்தாட் கொண்டு
விசுவாதயாய்ப் பரம ஞானம் விளம்பிய குருவே போற்றி. 17

நன்னூலொடு நூற்ற நரசமூ ஹங்கட் கெல்லாம்
விள்ளருங் கருணை யாலோர் வெற்பிடை விளங்கித் தோன்றி
எள்ளருஞ் சுவிசேஷத்தின் இருஞ்சுடர் விரித் தஞ்ஞான
நள்ளிருட் பிளம்பு சீத்த ஞான சூரியனே போற்றி. 18

மையுறு வஞ்ச நெஞ்ச மாயவல் லியற்கை முற்றும்
கையுறு நெல்லி போலக் காண்டலாற் கதிர்யக் கூட்டும்
மெய்யுறு தருமம் யாவும் விழுத்தக விளம்பி ஆங்கு
பொய்யறு சான்று நின்ற புண்ணிய மூர்த்தி போற்றி. 19

பாரிடம் வியக்கத் தீய பாரிடந் துரந்து சேர்ந்த
கோரவெம் பிணிகூன் மூகை குருடுவன் செவிடு பங்கு
தீரமெய்ந் நிமிரப் பேசத் தெரியக்கண் திறக்கச் செல்ல
ஆரருள் அளித்த திவ்ய அற்புத மூர்த்தி போற்றி. 20

அன்றொரு சிறுமி யேழை அமங்கலை சிறுவன் சேமத்
தொன்றிய தொழும்பன் இன்னோர் குருதிக்கண் கலுழி சிந்திப்
பொன்றிய வுயிர்வந் தெய்தப் புண்ணியம் புரிந்தாய் போற்றி
நன்றிலேன் சிறார்க்குஞ் ஜீவன் நல்கிய நம்பா போற்றி. 21

பாழியங் கிரிமீ தோற்காற் பரிதிபோற் பொலிந் தன்பர்க்கு
வாழிய வதனச் சேவை வழங்கிய தேவே போற்றி
ஆழிமீ துலவி யாழி யலையினை அடக்கி ஆங்கே
சூழிரும் புசலை நீத்த தொல்லை யெம்பரனே போற்றி. 22

விஞ்சிய அகங்காரத்தால் வினவு வேதியருண் ணுணி
அஞ்சி வாய் அடைபட் டேக அவிரிசழ் அலர்ந்தாய் போற்றி
நெஞ்சினால் மடியு மாறும் மறுத்துயிர்த் தெழும்பு மாறும்
செஞ்செவே யுரைத்த ஞான தேசிக மூர்த்தி போற்றி. 23

தொண்டரைத் தெருட்டி யாங்கோர் துறுமலர்ச் சோலை நண்ணி
அண்டர்நா யகன்வெஞ் சீற்றத் தாரழல் குளித்தாய் போற்றி
கொண்டொரு முத்தத் தாலே குறிப்பிடக் கட்டுண்டேகிக்
கண்டகர் முன்றில் நின்று கடுந்துயர் அடைந்தாய் போற்றி. 24

கைதவர் சினந்து தூய கமலவாண் முகத் துமிழ்ந்து
வைது முள் மௌலி வேய்ந்து வாரினால் அடிப்ப மாழ்கி
வெய்துயிர்த் திழிசெஞ் சோரி மெய்யெலாம் புதைப்ப யாங்கள்
உய்திறம் நாடி நின்ற உபசாந்த மூர்த்தி போற்றி. 25

முழுதுநான் அறியேன் என்று மும்முறை மறுத்த சீடன்
அழுதுளங் கசக்கச் செய்யும் அருள்நோக்கம் உடையாய் போற்றி
பழுதின்மை யறிந்தும் வேந்தன் படுகொலைத் தீர்ப்புக் கூற
இழுதையர் இகழ நின்ற யேசு நாயகனே போற்றி 26

எம்பவச் சும்மை தானே ஹீனமாங் குருசுந் தாங்கி
அம்பதம் பெயர்ப்ப மாழ்கி அணிமறு கணைந்து நின்ற
வம்பவிழ் கோதை மாதர் வாய்திறந் தரற்ற வாண்டோர் (27
வெம்பரம் பிறுத்தாய் போற்றி வினைத்தொடர் அறுத்தாய் போற்றி.

வேதனை குணிக்கற் பாற்றே வெங்குரு சறைந்து கொல்லும்
பாதகர்க் காய்மன் றுடிப் பரிந்து வாக்கருளிச் சோரற்
காதரம் புரிந்து ஜீவ அரும்பலி அமலற் காக்கிப்
பூதலம் உயச் சமாதி பொருந்திய தேவே போற்றி. 28

பொங்கு நீருலகுக் கெல்லாம் புண்ணியம் பொலியப் பாவ
சங்கடந் தொலைய நாளுந் தனியறந் தழைப்ப வேத
மங்கல ஓசை மல்க வானவர் மகிழ மீட்பும்
இங்குயிர்த் தெழுந் திரக்ஷை யீட்டிய எந்தாய் போற்றி. 29

துலங்கிய சீடரோடு வைகல் ஈரிருபான் வைகி
நலங்கிளர் வாக்குக் கூறி நயந்தொரு முகில் மீதேறி
இலங்கும் ஐங்காயங் காட்டி யெம்பிரான் திருமுன் என்றும்
வலங்கிளர் அணைமீதுற்ற மாறுவேல் அரசே போற்றி. 30

மூதுலகருக்கு ஜீவ முக்தி சாதன மூண்டாகக்
கோதறு புனிதவாவிக் கொழுங் கதிர்ப் பிளம்பை நல்கிக்
காதலுற் றடைந்தோர் தம்மைக் காப்பது கருதி யென்றும்
தாதைபாற் பரிந்து பேசும் தயாபரா போற்றி போற்றி. 31

பரிசுத்தாவியின் பரம்.

திரித்துவ பராபரத்தில் திகழுதி பரிசுத்தாத்ம
ஒருத்துவ அநாதி நித்ய உயர் மகத்துவமே போற்றி
விரித்த முந்நீர் முகத்து விந்தையாய் விளங்கி மேனாள்
திருத்தகு புவனம் பூத்த தெய்வமே போற்றி போற்றி. 32

மறைவழிப் படரா மாந்தர் வன்மனந் தனிற் போராடி
இறைவழிப் படுத்தும் தூய எம்பெருமானே போற்றி
சிறைவழிப் பட்டோர்க் குள்ளந் தெளிந்த நோவாலைக்கொண்டு
முறைவழிப் போதமீந்த முக்தி யாரணனே போற்றி. 33

சுத்தமெய் விசுவாசத்தைத் துரிசற விளக்கித் தூய
பத்தரும் ஆபிராமைப் பாதகாத் தளித்தாய் போற்றி
நித்திய ஜீவமார்க்க நெறிகடைப் பிடித்து நின்ற
உத்தமர்க் கியாண்டும் நீங்கா உறுதுணை யானாய் போற்றி. 34



வலிந்தெனை மருவுகென்று மருட்டிய வனிதைக்குள்ளம்
மெலிந்தழி யாது முன்னோர் விடலையைக் காத்தாய் போற்றி
மலிந்திடு ராஜபோகம் வனாந் தினத்தோடு மோசே
நலிந்துறு நிலைத நச்ச நயந்தருளளித்தாய் போற்றி. 35

கோட்டமற் றுளந்திருத்திக் குலவுமெய்ப் பத்தி வித்தி
நாட்டம் வைத் தருணீர் பாய்ச்சி நலிவெலாம் அகற்றி யாதும்
வாட்ட மின்றுக வோம்பி வரகதி விளைவித் தன்பர்
ஈட்டம் ஆர்ந்துயத் துய்ப்பிக்கும் இதய நாயகனே போற்றி. 36

போற்றித்திரு விருத்தங்கள்
முற்றிற்று.

---

## First Centenary of the Tinnelly Missions.

1880-ம் வருஷம் ஜனுவரி மீ 21உ பாளயங்கோட்டையில் நடந்த மிஷன் சதாப்த உற்சவத்தின்போது மகாகனம் பொருந்திய கால்டுவெல் அத்தியக்ஷரவர்கள் செய்த உபநியாசம்.

## சதாப்த உற்சவம்

அதாவது,

திருநெல்வேலி மிஷன் நூறு வருடக் கொண்டாட்டம்.

திருநெல்வேலி மிஷன் ஸ்தாபகமாகி இந்த வருஷத்தோடு நூறு வருஷமாகிறது. அதின் நூறும் வருஷ உற்சவத்தை இப்போது கொண்டாடுகிறோம். இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மிஷன்களிலெல்லாம் திருநெல்வேலி மிஷியோனே முதன்மையாயினும், அதின் ஆரம்பம் சொற்பமாயிருந்ததுமல்லாமல், வெகுகாலமாய் அதிக விர்த்திக்கிடமில்லாமலுமிருந்தது. 1780-ம் வருஷம் பாளையங்கோட்டையில் ஒரு சிறு சபையுண்டாயிற்று. அப்போது தான் மிஷியோன் உள்ளபடி ஸ்தாபகமாயிற்றென்று சொல்லலாம். திருநெல்வேலி மிஷனை ஸ்தாபித்தவர் சுவார்ச் (Swartz) ஐயர். தென் இந்திய மிஷியோன்களுக்குச் சம்பந்தப்பட்டவர்களில் இவரே அதிகப் பிரபல்மானவர். அவர் தரங்கம்பாடியில் சிலகாலம் உழைத்து பின்பு திருச்சிராப்பள்ளியைத் தமக்கு மிஷன் ஸ்தானமாக்கினார். அங்கிருக்கும்போதுதான் திருநெல்வேலி நாட்டைக்குறித்து அவருக்கு எண்ணமுண்டாயிற்று. சுவார்ச் ஐயர் 1771-ம் வருஷம் பாளையங்கோட்டையைக்குறித்துத் தாம் முதல்முதல் எழுதிய ஜர்னலில் அவ்விடத்தில் அநு

ஞானியாயிருந்த ஒரு வாலிபனை கணக்கனுக்குப் பக்திமானை ஒரு சோல்ஜர் ஞானஸ்நானம்கொடுத்ததாய்க் கண்டிருக்கிறார். இதுவே அந்தச் சபைக்கு ஆரம்பம். 1780-ம் வருஷத்திற்கு முன் பல தருணங்களிலும் சுவார்ச் ஐயர் பாளையங்கோட்டைக்கு வந்துபோயிருந்தார். அப்படிப் போன ஒரு சமயத்தில் ஒரு பிராமண விதவைக்கு குளோரிந்தாள் என்ற பேரால் ஞானஸ்நானம்கொடுத்தார். அவளால் பிந்தியகாலத்தில் கோட்டைக்குள்ளே ஒரு சிறு ஆலயம் கட்டப்பட்டது. திருநெல்வேலி மிஷியோனுக்குச் சம்பந்தப்பட்டதாய்க் கட்டப்பட்ட முதல் ஆலயம் இதுவே.

1780-ம் வருஷத்திற்குச் சம்பந்தப்பட்டதும் வாசிப்பவருக்கு விநோதமாய்த் தோன்றுவதுமான தஸ்தவேசு ஒன்று நாளதுமட்டும் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. அது திருநெல்வேலிச் சபையின் முதல் ஜாபிதாவே. அதில் பாளையங்கோட்டைச் சபையைச் சேர்ந்தவர்களுடைய நாமதேயங்களடங்கியிருக்கிறது. நான் இந்த ஜாபிதாவை அநேக வருஷங்களுக்கு முன்னே தஞ்சாவூரிலே கண்டுபிடித்தேன். பாளையங்கோட்டைச் சபை ஒன்றுதான் திருநெல்வேலி நாட்டில் அப்போதிருந்த சபை. அந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் தொகை 40. இன்னும் திருநெல்வேலி நாட்டில் விசேஷமாய் பிராமணர் வெள்ளாளர்முதலானவர்களுக்குள்ளே செய்யவேண்டிய வேலை அதிகமிருந்தாலும், இதுமட்டும் சபையைச் சேர்ந்திருக்கிற ஏராளமான் ஆத்துமாக்களுடைய தொகையைக் கவனிக்கும்போது நாம் தேவனை ஸ்தோத்திரிக்கிறதற்கும், தைரியங்கொள்ளுவதற்கும் போந்த நியாயமிருக்கிறதல்லவா? மேலே சொல்லிய ஜாபிதாவில் காட்டிய 40-பேரில் 18-பேருடையஜாதியும் நிலைமையும் இன்னபடியென்று தெரியாவிட்டாலும், மற்ற 22-பேரும் 13-வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களென்று தெரியவருகிறது. இதினால் அந்தக்காலத்தில் மிஷியோன் எவ்வளவோ பாலிய ஸ்திதியிலிருந்ததென்பது திருஷ்டாந்தப்படுகிறது. "ஊரில் ஒருவனும் வம்சத்தில் இரண்டு பேருமாக" நல்மேய்ப்பருடைய மந்தையில் அப்போது சேர்க்கப்பட்டு வந்தார்கள். அப்போது சேர்ந்திருந்தவர்களில் அநேகரைப்பற்றி அவர்களுடைய பெயரேயல்லாமல் வேறொன்றும் நமக்குத் தெரியாததினாலே அவர்கள் அநாத ஜனங்களும் காடோடிகளுமாயிருந்தார்கள் என்று நினைப்பது இயல்பு. ஆனால் அவர்களில் யாரைக்குறித்து இப்படிச்சொன்னாலும், 6-ஆத்துமாக்களடங்கிய ஒரு குடும்பத்தைக்குறித்து இப்படிச் சொல்ல இடமில்லை. அவர்கள் வெள்ளாளர். தகப்பன் பேர் தேவசகாயம். இவர் ஒரு கவிராயன். இவருடைய மக்களில் ஒருவருக்கு வேதநாயகம் என்று பெயர். இவர் தன் தகப்பனைப்பார்க்கிலும் கீர்த்திபெற்ற கவிஞனார். இவர்தான் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார். இவர் 12-பிராயத்தில் திருநெல்வேலியைவிட்டு தஞ்சைக்குப்போனார். அவர் நீடித்த வயசுக்கிருந்து, கிறிஸ்துமார்க்க சம்பந்தமான அநேகம் நல்ல பாடல்களை உண்டுபண்ணியிருக்கிறார். அவருடைய கீர்த்தனைகள் இந்நாள்மட்டும் ஆலயங்



களிலும், விசேஷமாய் பண்டிகை நாட்களிலும், அடிக்கடி கலியாணச் சந்திகளிலும், ஜெபக்கூட்டங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

1784-ம் வருஷம் சுவார்ச் ஐயர் பாளையங்கோட்டையில் கட்டப்பட்ட அந்த சிறு ஆலயத்தை தேவாராதனைக்கென்று பிரதிஷ்டைபண்ணினார். இதுமுதல் சபை படிப்படியாய் விர்த்தியடைந்தது. பிற்காலத்தில் சத்தியநாதன் நாட்டையர் என்று சொல்லப்பட்டவர் அந்தப் புதுஸ்தானத்துக்கு உபதேசியாராக நியமிக்கப்பட்டார். அவர் மகா திறமையுள்ளவர். அவரால் திருநெல்வேலி நாட்டிலுள்ள அநேக இடங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. கடைசியாக சுவார்ச்சையர் அங்கே ஐரோப்பிய மிஷனெரி ஒருவர் நியமிக்கப்படவேண்டியது அவசியமென்று கண்டார். அந்தப்படி 1791-ல் ஜெனிக் (Jaenicke) ஐயர் பாளையங்கோட்டையில் வந்து வாசம்பண்ணினார். கிறிஸ்துமார்க்க விர்த்திக்கு அப்போதுண்டாயிருந்த நானாவித அனுகூலங்களையும் அவர் கவனித்து "கிறிஸ்துமார்க்கம் திருநெல்வேலி நாட்டில் பிற்காலத்தில் அதிகமதிகமாய்ப் பரம்பும் என்கிற நம்பிக்கையிருக்கிறது" என்று தீர்க்கதரிசனம்போல் சொன்னார். அவர் மலைக்காய்ச்சலினாலே அதிகமாய் வருத்தப்பட்டதினால் பாளையங்கோட்டையில் நிலையாய் வாசம்பண்ணவில்லை. அவர் 1800-ம் வருஷம் தஞ்சாவூரில் மரணமடைந்தார். அவர் மரணத்துக்குமுன் 1797-ல் முதலூருக்குச் சமீபமான இடங்களில் சாண் ஜனங்களுக்குள்ளே கிறிஸ்துமார்க்கம் முதல் முதல் பிரபலமாகத் துவக்கி, அதுமுதல் வரவர நாடெங்கும் பரம்பி அதினால் அநேகம் நல்ல மாறுதல்கள் உண்டாயிருக்கிறது.

போன நூற்றாண்டின் துவக்கத்தில் திருநெல்வேலிக்கு ஜெரிக் (Gericke) ஐயர் வந்தார். இவர் சுவார்ச்சையருக்குப்பின் வந்தவர்களில் மிகவும் முக்கியமானவர். இவர் காலத்தில் கிறிஸ்துமார்க்கம் திருநெல்வேலி நாட்டின் தென்கீழ் பாகத்திலிருந்த சாண் ஜனங்களுக்குள்ளே அதிகமாய்ப் பரம்பிற்று. ஜெரிக் ஐயரால் ஞானஸ்நானம்பெற்றவர்கள் 1300-பேர். சத்தியநாதன் ஐயரால் 1802-ம் வருஷத்து முடிவுக்குமுன் ஞானஸ்நானம்பெற்றவர்கள் அதிலும் இரட்டிப்பு. 1803-ம் வருஷத்தில் கோலப் (Kohlhoffl) ஐயர் இந்த நாட்டுக்கு வந்தார். 1806-ம் வருஷமுதல் 1850-ம் வருஷமட்டும் லண்டன் மிஷன் சங்கத்தைச்சேர்ந்த ரிங்கில்டாப் (Ringeltaube) ஐயர் இந்த மிஷனைப் பார்த்து வந்தார். அவர் பொதுப்படை பாளையங்கோட்டையில் வாசம்பண்ணி திருவிதாங்கோட்டு மிஷனையும் ஸ்தாபித்தார்.

1811-ம் வருஷம் திருநெல்வேலிக்கும் திருநெல்வேலி மிஷனுக்கும் மிகவும் கெடுதலான வருஷமாயிருந்தது. காலந்தப்பி ஓயாமல் பெய்த பெருமழையினால் உண்டான கொள்ளைக்காய்ச்சல் அநேகரை வாரிக்கொண்டு போய்விட்டது. ஜெரிக் ஐயராலும் சத்தியநாதன் ஐயராலும் ஞானஸ்நானம் பெற்ற புதுக் கிறிஸ்தவர்கள் தகுந்த போதக விசாரணையில்லாமல் விடப்

பட்டதால், அவர்களில் மூன்றிலொரு பங்குப் பேர் பயத்தினாலே பின்
வாங்கித் தாங்கள் விட்டுவந்த பழைய பேய்களை ஆராதிக்க நேரிட்டது.

முதல் முதல் ஒரு அத்தியக்ஷர் திருநெல்வேலி நாட்டுக்கு வந்தது
1816-ம் வருஷம் மார்ச்சுமாசம். அப்படி பாளையங்கோட்டைக்கு வந்த
அத்தியக்ஷர் கல்குத்தாவின் முதல் அத்தியக்ஷராகிய மிடில்ற்றன் (Middleton)
என்பவர். அவர் பிரயாணப் பட்சிபோல் அதிதீவிரமாய் சென்னை பட்ட
ணத்தைவிட்டு கொச்சிவழியாய் பம்பாய்க்குப் போனார். திருநெல்வேலி
நாட்டில் அவர் தங்கினது மெத்த சொற்பகாலமாயிருந்தாலும் அது
மிஷன் சரித்திரத்தில் ஒரு காலாப்தமாக எண்ணப்படுகிறது. அவர் பாளை
யங்கோட்டை வந்து சேருமுன் மூன்று வகை ஆட்கள்போய் அவரைச்
சந்தித்தார்கள். ஒரு பட்சத்தார் சுதேசிகளான சர்க்கார் உத்தியோகஸ்தர்.
இன்னொரு பட்சத்தார் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலைச் சேர்ந்த
முப்பது நாற்பது பிராமணர். இவர்கள் சர்க்காரிலிருந்து தங்கள் கோவில்
செலவுக்காகக் கொடுக்கப்படுகிற படித்தரம் நிரம்பச் சொற்பமாயிருக்கிற
தென்றும், இதனால் தங்களுக்கும் தங்கள் மார்க்கத்துக்குங் குறைவு நேரிட
ஏதுவாயிருக்கிறதென்றும், அத்தியக்ஷர் தங்களுக்காக கவர்ன்மென்றில்
பரிந்துபேசி படித்தரத்தை உயர்த்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்
கள். அவர்கள் பேதமை, அத்தியக்ஷருக்கு ஆச்சரியமாயிருந்தது. மூன்றாவது
பட்சத்தார் கண்டுகொண்டது அத்தியக்ஷருக்கு நிரம்பச் சந்தோஷம். பா
ளையங்கோட்டையிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள சுதேச கிறிஸ்தவர்க
ளின் பிரதிகாரியஸ்தராய் சுதேச குருவானவரும் 30-பிரதான மனுஷரும்
அத்தியக்ஷரைப் போய்க் கண்டுகொண்டார்கள். அப்போது அத்தியக்ஷருக்
குத் துபாஷியாயிருந்தவர் அவருடைய ரைற்றோ. இந்த ரைற்றர் சத்திய
நாதன் ஐயருடைய மகன். அப்போதிருந்த கிறிஸ்தவர்களில் அநேகர் இவ
ருடைய தகப்பனாராலே சபையிற் சேர்க்கப்பட்டவர்கள். கிறிஸ்துமார்க்க
அபிவிர்த்தி சங்கத்தார் பிரசித்தம்பண்ணியிருந்த சத்தியநாதன் ஐயருடைய
பிரசங்கம் ஒன்றை அத்தியக்ஷர் இந்தியாவுக்கு வருமுன் வாசித்திருந்தார்.
அது அப்போது அவருடைய ஞாபகத்தில் வந்தது. பாளையங்கோட்டை
யில் அத்தியக்ஷர் கோட்டைக் கோவிலையும் பள்ளிக்கூடத்தையும் போய்ப்
பார்த்தார். கலெக்டருடைய வீட்டில் இங்கிலீஷ் ஆராதனை நடத்தினார்.
அப்புறம் சில நாட்களுக்குப்பின்பு ஆரல்வாய்மொழி வழியாய்ப் போகும்
போது திருவிதாங்கோட்டுக் கிறிஸ்தவர்கள் அவரைப் போய்க் கண்டு
கொண்டார்கள். இவர்கள் ரிங்கில்டாப் ஐயர் சபையைச் சேர்ந்தவர்கள்.
இவர்கள் தொகை அப்போது 800.

1816-ம் வருஷம் முடிவில் ஹூவ் (Hough) ஐயர் பாளையங்கோட்
டைக்கு வந்தார். இவர் அப்போது நூதனமாய் நியமிக்கப்பட்டிருந்த கவர்
ன்மென்று சாப்ளான். இவர், இந்துதேசத்தில் கிறிஸ்துமார்க்கம் பிரபல்லி
யமான சரித்திரம் எழுதினவர். இவர் காலத்திலும் இவர் உழைப்பினாலும்



சபையில் முக்கியமான விசேஷங்கள் நடந்தன. திருநெல்வேலி மிஷ
னுக்கு இவர் இரண்டாவது பிதாவென்று சொல்லலாம். இவர்தான் இந்தக்
கட்டடங்கள் இருக்கிற நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கினவர். சார்ஜென்ற்
அத்தியக்ஷர் இப்பொழுது வாசம்பண்ணுகிற மிஷன் வீடு முன் ஹூவ் ஐய
ருடையது. அதற்குப்பின் அவர் அந்த கிரகத்தையும் சுற்றியிருக்கிற நிலத்
தையும் கிரயத்துக்கு வாங்கி அதில் இங்கிலீஷ் பள்ளிக்கூடம் ஒன்றும்
தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றுமாக இரண்டு பள்ளிக்கூடங்கள் கட்டினார்.

கிறிஸ்தியன் நாலட்ஜ் சோசயற்றி என்று சொல்லப்பட்ட கிறிஸ்தவ
அறிவு அபிவிர்த்தி சங்கத்தாருடைய கேட்டுக்கொள்ளுதலின்பேரில் அவர்
1817-ம் வருஷம் நாட்டுபுறத்துச் சபைகளைப் போய்ச் சுற்றிப்பார்த்தார்.
அதைப்பற்றின விசேஷங்கள் அந்தக் கமிற்றிமார் ஓரோதரம் அச்சிட்ட
அந்த ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டு மிகவும் நேர்த்
தியானது. அதில் ஹூவ் ஐயர் எழுதினது அதிக நேர்த்தியான பாகம். இதை
வாசித்தவர்கள் மனதில் திருநெல்வேலி நாட்டைப்பற்றி அதிகக் கரிசனை
உண்டாயிற்று. இதனால் 1820-ம் வருஷம் ரீனியஸ் (Rhenius) ஐயரால்
சர்ச்சு மிஷன் ஸ்தாபகமாகவும், 1829-ம் வருஷம், சொல்லவேண்டுமா
னால், 1835-ம் வருஷம் ரோசன் (Rosen) ஐயரால் பழைய மிஷன் உயிர்
கொண்டெழும்பவும் இடமாயிற்று. ரோசன் ஐயர் ரீனியஸ் ஐயரைப்போல
லூத்ரன் சபை முறைப்படி பட்டம்பெற்றவர். ஹூவ் ஐயருக்கு உதவியாக
ரீனியஸ் ஐயர் துவக்கத்தில் வந்தார். ரீனியஸ் ஐயர் வந்த கொஞ்சக்காலத்
துக்குள், அந்த வருஷம் மார்ச்சுமாசத்தில் ஹூவ் ஐயர் போய்விட்டபடி
யால் அவருடைய வேலையை ரீனியஸ் ஐயர் ஒப்புக்கொண்டார்.

இரண்டு மிஷன்களும் ஹூவ் ஐயருடைய இரண்டு பிள்ளைகளென்றும்,
சுவார்ச் ஐயருடைய இரண்டு பேரப்பிள்ளைகளென்றும் சொல்லலாம். ஒன்
று மூத்தது. மற்றது இளையது. யாக்கோபு தன் பேரப்பிள்ளைகளை தன்
அந்தியகாலத்தில் ஆசீர்வதித்ததுபோல ஹூவ் ஐயரும் தன் வலது கையி
னால் இளைய மிஷனையும், தன் இடது கையினால் மூத்த மிஷனையும் ஆசீர்
வதித்ததுபோலிருந்தது. ஏனென்றால் இளைய மிஷன் மூத்த மிஷனுக்கு
முந்திக்கொண்டது. 1820-ம் வருஷமுதல் சர்ச்சுமிஷன் சபைகளுக்கு
ஐரோப்பிய குருமார் தப்பாமல் வந்துகொண்டேயிருந்தார்கள். எஸ். பி. ஜி.
மிஷனுக்கோ 1835-ம் வருஷம் முதல் தான் முறையாய் வந்தார்கள். அது
முதல் இரு சங்கத்தாருடைய வேலையும் பிரத்தியேகமாகவும் முறையாக
வும் நடந்துவந்திருக்கிறது. அவர்கள் உழைக்கும் ஸ்தானங்கள் வெவ்வே
றாயிருந்தாலும், தங்கள் வேலையை ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல்
ஒத்து நடத்திவருகிறார்கள். முன்னொரு காலம் மூத்த மிஷன் இளைய மிஷ
னுக்கு அதிகமாய்ப் பிந்தியிருந்ததுபோல இப்போது இருக்கவில்லையென்
று நம்ப இடமுண்டு. கொஞ்சக்காலத்துக்குமுன் திருநெல்வேலி நாட்டின்
கிறிஸ்தவர்களுடைய தொகையிலும் மிஷன் காரியஸ்தர்களுடைய தொ

கையிலும் இரு பங்கு சர்ச்சு மிஷனைச் சேர்ந்திருக்க, ஒரு பங்கு மாத்திரம் எஸ். பி. ஜி. மிஷனைச் சேர்ந்திருந்தது. இப்போதோ அந்த இரண்டு மிஷன்களுக்குமிருக்கிற வித்தியாசம் அத்தனை அதிகமில்லையென்று கணக்கினால் தெரியவரும். யாக்கோபின் இரண்டு பேரப்பிள்ளைகளையும் தேவன் பெரிய ஜாதியாகப் பெருகப்பண்ணினதுபோல இந்த இரு சங்கத்தாரையும் அவர் ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணுவாராக.

1879-ம் வருஷம் ஜுன்மீ 30-ம் உ முடிவுமட்டுமுள்ள இரு சங்கத்தாரின் கணக்கட்டவணை கீழே காட்டப்படுகிறது. எஸ். பி. ஜி. மிஷன் கணக்கில் இராமநாதபுரமும் சேர்ந்திருக்கிறது.

| மிஷன். | கிராமங்களின் தொகை. | சுதேச குருமார் தொகை. | ஞானஸ்நானம் பெற்றவர்கள். | ஞானஸ்நானம் பெறாதவர்கள். | ஞானஸ்நானம் பெற்றவர்கள் பெறாதவர்கள் மொத்தத்தொகை. | நற்கருணை சேருகிறவர்கள். | சபைகளில் சேர்க்கப்பட்ட காணிக்கை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச. மி. ச. C. M. S. | 875 | 59 | 34484 | 190 | 53586 | 8378 | 34493 | 8 | 5 |
| சு. பி. ச. S. P. G. | 631 | 31 | 24719 | 19350 | 44069 | 4837 | 18056 | 18 | 2 |
| தொகை. | 1506 | 89 | 59203 | 38402 | 97605 | 13265 | 37555 | 0 | 7 |

இப்படிப்பட்ட கூட்டம் இந்தநாளில் இந்த இடத்தில் கூடுமென்று 1780-ம் வருஷத்தில் யார்தான் முன்னறிவித்திருக்கக் கூடும். அப்போது சென்னைபட்டணத்தில் அத்தியக்ஷரோயில்லை. இருந்தார் என்று வைத்துக் கொண்டாலும், அவருடைய அத்தியக்ஷ ஆட்சிக்குட்பட்ட இங்கிலாந்து சபையைச்சேர்ந்த குருவானவர் போர்ட்டுசென்ற் ஜார்ஜ் சாப்ளன் ஒருவரே தவிர வேறொருவருமில்லை. அப்பொழுது இருந்த மிஷனெரிமார் லூத்தரன் சபை முறைப்படி மாத்திரம் பட்டம்பெற்றுக்கொண்டவர்கள். அப்பொழுது திருநெல்வேலியிலிருந்த 40-ஆத்துமாக்கள் மாத்திரம் அடங்கிய ஒரே சபையைக் கண்காணிக்க சார்ஜெஜன்ற் அத்தியக்ஷரைப்போலாவது என்னைப்போலாவது உதவி அத்தியக்ஷர்கள் திருநெல்வேலி நாட்டுக்கு இருக்கவேண்டிய அவசியம் இருந்ததில்லை. இரு சங்கத்தையும் சேர்ந்த ஐரோப்பியரான மிஷனெரிமாரும் அப்போது இருக்க இடமிருந்ததில்லை. ஏனென்றால் சர்ச்சு மிஷன் சங்கம் அப்போது ஸ்தாபகமாகவுமில்லை. எஸ். பி. ஜி. சங்கம் அப்போது ஸ்தாபகமாயிருந்தாலும் அந்த சங்கத்தாருடைய வேலை அப்போது இந்தியாமட்டும் வந்தெட்டவுமில்லை. சுவிசேஷ பிரபல்லியமுயற்சி இந்தியாவில் அப்பொழுது கிறிஸ்துமார்க்க அபிவிர்த்தி சங்கத்தாரால் மாத்திரம் நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்தில் இந்நாட்டில் சுதேச குரு ஒருவராகிலுமில்லை. உபதேசியார் ஒருவர் மாத்திரமிருந்திருக்கலாம்.



1980-ம் வருஷத்தில் திருநெல்வேலி நாட்டின் காரியம் இன்னபடி இருக்குமென்று யார்தான் இப்போது முன்னறிவிக்கக்கூடும். திருநெல்வேலி மிஷன் தோன்றி 100-வருஷத்துக்குள் 40-ஆத்துமாக்களிருந்த இடத்தில் ஞானஸ்நானம்பெற்றவர்கள் தொகை மாத்திரம் 59,203-ஆகப் பெருகுமானால், இன்னமும் 100-வருஷத்துக்குள் சுமார் திருநெல்வேலி நாடு முழுவதும் கிறிஸ்துநாதரைச் சேர்ந்துபோகுமென்று சொல்லலாமே. ஆகிலும் அவ்வளவு நீண்ட காலத்துக்குப்பின் இன்னது நடக்கும் நடவாது என்று முன்னறிவிக்கத் துணிவது காரியமல்ல. இனி வருங்காலம் கடவுளுடைய கரத்திலிருக்கிறது. சென்ற காலத்தின் காரியங்களே வருங்காலத்தின் காரியங்களுக்கு உற்பத்தியென்று கண்டிருக்கிறோம். மூக்காலங்களையும் ஆண்டு நடத்திக்கொண்டுவருகிற பரம அதிபதி ஒருவரே! வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரமும் துதிக்கப்படத்தக்க நம்முடைய இரட்சகருக்கே அளிக்கப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் தம்முடைய சீஷரை அனுப்புகிறவர் அவரே. உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் அவர்களுடனேகூட இருக்கிறேன் என்று அவரே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௩-ம் அதிகாரம்.

விசுவாசம்.

(தொடர்ச்சி.)

**வினா.** விசுவாசிக்கும்படி எல்லா மனுஷரும் அழைக்கப்பட்டிருக்கிறார்களா?

**விடை.** ஆம், எல்லாரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவன் (யோவான்) தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான். யோவா. 1: 7.

**வினா.** அவிசுவாசிகளுக்குண்டாகும் பலனென்ன?

**விடை.** விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. யோவா. 3: 18

சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேது வான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒரு வனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங் கள். எபி. 3: 12.

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர் களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்க டைவார்கள். வெளி. 21: 8.

வினா. விசுவாசம் எப்படி நமக்குண்டாகும் ?

விடை. விசுவாசத்திற்காக நாம் கேட்டுகொள்ளுவதினாலும், விசுவா சம் தேவனுடைய ஈவு என்று நினைத்து தேவநியமங்களைக் கைக்கொள்வதினால் ஜாக்கிரதையாய் அதைத் தேடுவதினாலு மே.

விசுவாசம் கேள்வியினாலே வரும். ரோமர் 10: 17.

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசம் அளிக்கப் படுகிறது. 1 கொரி. 12: 9.

ஆவியின் கனி, விசுவாசம். கலா. 5: 22.

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட் டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபே. 2: 8.

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக் கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். எபிரே. 12: 1.

விசுவாசமே கிறிஸ்தவனுடைய ஜீவன். எப்படியென்றால் அவனுக்கு ஒவ்வொரு ஆசீர்வாதமும் இயேசுக்கிறிஸ்துவினி டத்தில் விசுவாசத்தினாலே கேட்டுக்கொள்ளுவதினாலேயே கிடைக்கிறது.

நீங்களெல்லாரும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவா சத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. கலா. 3: 26.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். ஆபகூக். 2: 4. ரோ. 1: 17. எபி. 10: 38.

என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினா லே பிழைத்திருக்கிறேன். கலா. 2: 20.

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாச மாயிருக்கிறார். எபே. 3: 17.



உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. லூக். 7: 50.

நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய். ரோ. 11: 20.

விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே. 2 கொரி. 1: 24.

நாம் விசுவாசித்து நடக்கிறோம். 2 கொரி. 5: 6.

வினா. மெய்விசுவாசத்தின் குறிப்புகள் எவை?

விடை. 1. கிறிஸ்துவையும் அவருடைய ஜனங்களையும் நேசித்தல்.

விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. 1 பே. 2: 7.

2. பாவத்தை வெறுத்தல்.

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களா னால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறி வோம். 1 யோவா. 2: 3.

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்க ளே சோதித்தறியுங்கள். 2 கொரி. 13: 5.

உனக்கு விசுவாசமில்லையே என்று நீ பயப்படுவாயானால், தாமதியாமல் விசுவாசத்துக்காக விண்ணப்பம்செய். அது மறைக்கப்பட்ட பொக்கிஷமாக உனக்குத் தோன்றினால், அதைக் கண்டுபிடிக்கும்படியாக தோண்டி, ஆராய்ந்து பார். அது விலையுயர்ந்த முத்து என்று நீ கண்டால், அதைக் கொள் ளும்படி உனக்கு இருக்கிற எல்லாவற்றையும் விற்றுப்போடு. மத். 13: 44, 46. உனக்குள் கடுகு அளவு விசுவாசமாவது இருந் தால், அது அதிகரிக்கும்படி உன்னை தைரியப்படுத்தக்கடவது. இரட்சகருடைய சீஷருடன் சேர்ந்து "ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்." லூக்கா 17: 5) என்று செபம்செய்வாயாக. "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று (மாற். 9: 24 ) சொன்ன மனிதனைப் பின்பற்றுவாயாக. "கேளுங் கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 7: 7) என்று, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங் களை நினைவுகூருவாயாக. ஆனால் அவிசுவாசத்தினாலே, தேவன் தம்முடைய, வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லமையும் மனமுமுடையவராயிருப்பாரோ அல்லவோ என்று எண்ணு தபடி எச்சரிக்கையாயிரு. "விசுவாசியாதவன் அவரைப் பொய்யராக்குகிறான்." இந்தக் காரியம் உனக்குக் கிட்டா தென்றாவது, அதைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏதுக்கள் குறைச்சலாயிருக்கிறதென்றாவது சொல்லாதே. "விசுவாசி யாதவர்கள் இருளை விரும்புகிறபடியினாலே, ஜீவனை அடையும் படி ஒளியினிடத்துக்கு வரமாட்டார்கள்."

ஆவியின் ஒருமையிலும், சமாதானக் கட்டிலும், நீதியுள்ள

நடக்கையிலும் நிலைத்து, விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருக்கும்படியாக செபம்செய்வாயாக.

---

## ௫-ம் அதிகாரம்.

### ஞானஸ்நானத்தில் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள்.

**வினா.** உன் ஞானத்தாய்தகப்பன்மார் உன் ஞானஸ்நானத்தில் உனக்காகச் செய்தது என்ன?

**விடை.** அவர்கள் என் பேராலே மூன்று காரியங்களை வாக்குத்தத்தம் செய்து பிரதிக்கினைபண்ணினார்கள். முதலாவது.—நான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இந்தப் பொல்லாத லோகத்தின் ஆடம்பரத்தையும் வீண்பெருமையையும், பாவமான மாம்சஇச்சைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன் என்றும், இரண்டாவது.—நான் கிறிஸ்துமார்க்க சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிப்பேன் என்றும், மூன்றாவது.—நான் தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொண்டு, என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடப்பேன் என்றும் பிரதிக்கினைசெய்தார்கள்.

**வினா.** பிசாசு என்றால் யார் !

**விடை.** கெட்டுப்போன தூதர்களின் தலைவனாகிய தீயஆவியே. அவன் அதரிசனமானவனாயிருந்தாலும், முயற்சியும் வல்லமையுமுள்ளவன். அவன் மனுஷஜாதியாரனைவர்பேரிலும் விசேஷமாய் விசுவாசிகள்பேரிலும் தீராப்பகையுள்ளவன்.

அவன் விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும்படி ஒரு பொய்யினாலே ஏவாளை வஞ்சித்து, நம்முடைய ஆதித்தாய்தந்தையரைப் பாவத்தில் விழப்பண்ணினான். 2 கொரி. 11: 3. அவனுக்குக் கீழாக வேறு அநேகம் கெட்ட ஆவிகள் இருக்கிறார்கள். அவர்கள் மனுஷரைப் பாவச்சோதனைக்குட்படுத்த எப்போதும் சமீபத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கடைசியாக அவிசுவாசிகளாய் மரிக்கிறவர்களை வேதனைக்குள்ளாக்குவார்கள்.

(இன்னும் வரும்.)

---



## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—சீமையிலிருந்து நன்னம்பிக்கை முனைவரையும் கம்பித்தபால்போட்டு முடிந்தது. மஹாராணியவர்கள் அந்தப் பற்றி மிகவுஞ் சந்தோஷப்பட்டு, ஜன்ஜிபார்சுல்த்தானுக்கும், தென் ஆபிரிக்காவிலுள்ள மற்ற அதிகாரிகளுக்கும் மங்களசேதிகளை அனுப்பினார்களாம். எடின்பரோ பிரபுவும் அவர் பெருமாட்டியும், சுகவீனஸ்திதியிலிருக்கும் ருஷிய இராணியைப்பார்க்கும்பொருட்டு கானிஸ்ப்பட்டணத்துக்குப் பிரயாணமானார்கள். சென்ற டிசம்பர்மாசத்தில் ஸ்காட்லாந்துதேசத்தில் ரெயில்வே சம்பந்தமான பயங்கர இடையூறு ஒன்று நேரிட்டது. டேநதியில் 15லட்சம் ரூபாய் செலவுசெய்து போடப்பட்டிருந்த ரெயில்பாலமானது புசல்க்காற்றினால் சேதப்பட்டு உடைந்ததினால் அதன்மேல் ஓடின ரெயில்வண்டித்தொடர் முழுவதும் அவற்றிலிருந்த இருநூறுக்கு அதிகமான ஜனங்களுடன் நதியில்விழவே அவர்கள் எல்லாரும் மாண்டுபோனார்கள். மாண்டுபோனவர்களுடைய சுற்றத்தாருக்கு சகாயஞ்செய்வதற்கான பிரயத்தினம் நடக்கிறது.

**ருஷியா.**—ருஷியாவில் வரிவசூல் விஷயத்தையிட்டு மறுபடியும் கலகம்நேரிட்டது. ஆகிலும் கலகக்காரர் அடக்கப்பட்டுப் போனார்கள். நகரவிசாரணை ஒழுங்குகளை புதுப்பிக்கும்படி பிரயத்தனம் செய்யப்படுகிறது.

**இந்தியா.**—இத்தேசத்தின் பணவருமானத்தின் நிலை மிகவும் அதிகப்பட்டிருக்கிறதென்றும், இவ்வருஷ வருமானம் ஆப்கான் சண்டையினாலுண்டான செலவையும், புது எல்லையின் ரெயில்வேச் செலவையும் தாங்கத்தக்கதாகவிருக்கிறதென்றும் கவர்ண்மெந்து செக்ரத்தேறியானவர் சொல்லியிருக்கிறாராம்.

**ஆப்கானிஸ்தான்.**—பிரிட்டிஷ் அரைத்தன சேனாபதியாகிய ஜெனரல் ராபர்ட்ஸின்மூலமாய் சென்ற டிசம்பர்மாசம் 2உயன்று மன்னிப்பு விளம்பரம் ஒன்று பிரசித்தஞ் செய்யப்பட்டது. அதின்பேரில் சுதேசிகளான பிரதானிகள் பலரும் சேனாபதியின் கூடாரத்துக்குள் அத்தியந்தபணிவோடு வந்து, இராஜபக்திக்குரிய தாழ்மையைக்காட்டி உட்கார்ந்து மன்னிப்புப் பெற்றும் வெகுமதிகள் வாங்கிக்கொண்டும் வெளிப்பட்டார்கள். ஆரோகிகள் அநேகரும் மன்னிப்புப் பெற்றுக்கொண்டனர். கந்தகார் முதலிய இடங்களில் சிலர் கலகித்தும் அரைத்தன சேனையால் அடக்கப்பட்டுப்போனார்கள். சேனாபதியாகிய ஜெனரல் ராபர்ட்ஸ் ஜி. சி. எஸ். ஐ. என்கிற சிறந்த இந்திய நட்சத்திரப்பட்டம் பெற்றார்.

பெபுருவரியீ நாள் 29. தையீ 20உ முதல், மாசியீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | உ௰ | நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் |
| தி | 2 | உக | மேன்மைக்கு முன்னானது தாழ்மை. நீதி. 15: 12. (கலா. 3: 28· |
| செ | 3 | உஉ | கவனமாய் நடந்துகொள்ளப் பாருங்கள். எபே. 5: 15. |
| பு | 4 | உ௩ | எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது. சங். 87: 7. |
| வி | 5 | உ௪ | என் இளவயதின் பாவங்களை நினையாதிரும். சங். 25: 7. |
| வெ | 6 | உ௫ | ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் |
| ச | 7 | உ௬ | என் வாய் சத்தியத்தை விளம்பும். நீதி. 8· 7 (மாத். 13: 5 |
| ஞா | 8 | உ௭ | ஆண்டவரே கேளும்; ஆண்டவரே மன்னியும். தானி. 9: 19. |
| தி | 9 | உ௮ | அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு |
| செ | 10 | உ௯ | தாழ்ந்தோர் இரட்சிக்கப்படுவார்கள். யோபு. 22:29. (உள்ளது. லூ 1:50 |
| பு | 11 | க | உங்கள் பொல்லாதவழிகளை விட்டுத் திரும்புங்கள். சகரி. 1: 4. |
| வி | 12 | உ | நீர் அவரோடே பழகி சமாதானமாயிரும். யோபு. 22: 21. |
| வெ | 13 | ௩ | தீமையை வெறுத்துவிடுங்கள். ரோ. 12: 9. |
| ச | 14 | ௪ | நீர் என் பிதா என் தேவன். சங். 89. 26. |
| ஞா | 15 | ௫ | தேவன் உண்மையுள்ளவர். 1 கொ. 1: 9. |
| தி | 16 | ௬ | கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும். ஆப. 3: 2. |
| செ | 17 | ௭ | உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். மத். 5: 44. |
| பு | 18 | ௮ | எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிற |
| வி | 19 | ௯ | ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள். ரோ. 12: 10. (ஏ. ல. 59: 12 |
| வெ | 20 | க௰ | கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார். சங். 84. 11 |
| ச | 21 | கக | கர்த்தராகிய கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். ரோ. 13: 14 |
| ஞா | 22 | கஉ | உமது வழியை எனக்குப் போதியும். சங். 86: 11. |
| தி | 23 | க௩ | ஜீவஅப்பம் நானே. யோவா. 6. 35. |
| செ | 24 | க௪ | தேவனே உமக்கு நிகரானவர் யார்? சங். 71. 19. |
| பு | 25 | க௫ | ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் |
| வி | 26 | க௬ | நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். 1 கொ. 9: 24. |
| வெ | 27 | க௭ | அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள். சகரி. 8: 16 |
| ச | 28 | க௮ | இதோ, இப்பொழுதே இரட்சணியநாள். 2 கொ. 6: 2. |
| ஞா | 29 | க௯ | அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள். மல்கி 3: 17. |

## விசேஷ நாட்கள்.

1. செக்சகேசிமா ஞாயிறு.
2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்பு திருநாள்.
8. கின்குவகேசிமா ஞாயிறு.
10. அமாவாசை.
11. லெந்தென்னும் நாட்களில் முதல்நாள்.
15. லெந்தென்னும் நாட்களில் 1-ம் ஞாயிறு.
22. லெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
24. பரி. அப். மத்தியாவின் திருநாள்.
26. பௌரணமி,
29. லெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲௮௱௯௰௯.

## உபாகமம்.

### 21. அதிகாரம்.

கொலையுண்டிறந்த அநாதப்பிரேதத்துக்காக தேசத்தாரெல்லாரும் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாவநிவிர்த்திபண்ணும் வகை 1—9 சொல்லியிருக்கிறது. கானானில் மட்டும் இது நடக்கக்கூடியதென்று சங்கதியின் தன்மையினாலேயே விளங்குகிறது. அப்படியே முதலாவதாக இது உபாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. இது உபமானப்பொருளுள்ளது. கிடாரி கொலைபாதகனுக்கு அடையாளம். ஏனென்றால் அது அவனுக்குப் பதிலாக உயிரைக்கொடுத்தது. அவனுடைய குற்றத்தை இது சுமந்துகொள்ளுகிற பாவனையாயிருந்தபடியினாலே, இது சரியான வளர்த்தியும் பலமுமுள்ளதாயும், (மனுஷரால் உபயோகப்படுத்தப்படுவதால்) சடங்குப்பிரமாணத்தினாலே தீட்டுப்படுத்தப்படாததாயுமிருக்கவேண்டும். (யாத்தி. 20: 25.) இது கிறிஸ்துநாதரையும் அவர் பலியாக அடைந்த மரணத்தையும் முன்னடையாளமாய்க் குறித்ததென்று வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். ஆனால் கிடாரி சரியானபடி பாவபலியாக மாட்டாது. இந்த நடபடியானது ஆதி. 9: 5-ன் பொருளை நன்றாய் வற்புறுத்திக் காட்டும்படி இங்கே எழுதப்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. பழிசெய்தவன் நீதிக்குத் தப்பித்துக்கொண்டான். குற்றமற்றவர்கள் அவனுக்குப் பதிலாக குற்றவாளிகளாக எண்ணப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் பாவநிவிர்த்திசெய்யப்படுமுன், பழிசெய்தவனுடைய குற்றத்தை உபமானமாயாவது ஒன்று சுமக்கவேணும். இப்படியாக இந்தச் சடங்கு நிறைவேறினபின், பழிசெய்தவன் பிடிக்கப்பட்டாலும் ரபிமார் சொல்லியபடி சரியான தண்டனையை அடையவேண்டியதுதான். மேற்காட்

டிய சடங்கினாலே அவன் குற்றம் எவ்வளவேனும் நீங்குகிறதுமில்லை, தண்டனை லகுவாகிறதுமில்லை.

4. "தலையை வெட்டி." "கழுத்தை முறித்து" என்று திருப்பப்படுவது மூலவாக்கியத்துக்குச் சரியாயிருக்கும். யாத்தி 13: 13. இப்படியாக இந்தப் பலியைக் கொல்லுகிற வகையைப் பார்த்தாலும் பாவபலி போலல்லவே. பாவபலியின் இரத்தம் சிந்தப்படவேணுமே, தெளிக்கப்படவேணுமே.

5. சடங்கானது ஒழுங்குப்படி நிறைவேற்றப்படுகிறதா என்று பார்க்கும்படி. மற்றப்படி இவர்கள் யாதொன்று செய்ததாயில்லை. இதினாலும் இது பலியின் தன்மையுள்ளதல்ல என்று விளங்குகிறதே.

10—14. சிறைப்பட்ட பெண்ணைக்குறித்து நடக்கவேண்டியதைச் சொல்லுகிறார். இஸ்ரவேலர் கானானியரை ஜெயித்து அழித்து அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டபிறபாடு (7: 3) பக்கத்து ஜாதியாரோடு யுத்தத்துக்குப் போகையில் நடப்பதைச் சொல்லுகிறார் என்று நினைக்கப்படுகிறது.

12. தலையைச் சிரைக்கிறது, சுத்திகரிப்புக்கடுத்த அடையாளம். லேவி. 14: 8. எண். 8: 7.

13 "ஒருமாதமட்டும்." அவளை மனுஷசாதிபோல தயாளமாய் நடத்தவேணும்.

15—17. தகப்பன் நியாயமான முகாந்தரத்தினாலே மாற்றலாம். ஆதி. 27: 33. ஆனால் பட்சபாதத்தினிமித்தம் அப்படிச்செய்யக்கூடாதென்று விலக்குகிறார்.

18—21. இதற்குச் சாட்சி விசாரணை வேண்டியதில்லை. யாத்தி. 20: 12. 21: 15, 17. லேவி. 20: 9. வீட்டுக்காரியமாய் மூப்பர், மேஜிஸ்திரேட்டாருடைய அதிகாரத்தை நிறைவேற்றலாம். 16: 18.

22, 23. கலாத். 3: 13. குற்றவாளியை மரணாக்கினை செய்வதால் தீமையை தேசத்திலிருந்து நீக்கும்படி கற்பிக்கிறார். அத்தோடு ஒரு எச்சரிப்பையும் சொல்லுகிறார். அதாவது குற்றஞ்செய்தவன் செத்த பிற்பாடு அவன் பிரேதத்தை மரத்திலே தூக்கிவைப்பதும் அவனுக்குத் தண்டனையாக விதிக்கப்படுமானால், இராமுழுவதும் அவன் பிரேதம் மரத்திலே தூங்கி இருக்கப்படாது. யோசு. 8: 29. 10: 26.

யூதருக்குள் 4 வித மரணாக்கினை உண்டு.

(1) கல்லெறிதல். யாத்தி. 17: 4.

(2) உயிரோடு சுட்டெரித்தல். லேவி 20: 14. 21: 9.

(3) பட்டயத்தால் கொல்லுதல். யாத்தி. 32: 27.

(4) தொண்டையை நெரித்துக்கொல்லுதல்.



4-வது ஆக்கினை வேதத்திலே சொல்லப்பட்டிராவிட்டாலும் யூதருக்குள் வழக்கமான ஆக்கினையென்றும், மற்ற மூன்று விதமான ஆக்கினைகளில் ஒன்று போல சொல்லப்பட்டிராத சமயத்தில், இதுவே சாதாரணமாய்க் கையாடப்பட்டதென்றும் தோன்றுகிறது. சிலுவை, அக்குமரம் இவற்றில் தூக்கிக்கொல்லுவது யூதருக்குள் வழங்கினதல்ல. ஆனால் விக்கிரகாராதனை, தெய்வதூஷணமுதலிய பாவங்களுக்குத் தண்டனையாக முதலாவது கொலைசெய்து, பிரேதத்தை மரத்திலே தூக்கிப்போடுவார்கள். ஆதி. 40: 19. யோசு. 8: 29. 1 சாமு. 31: 10. 2 சாமு 21: 6, 9, 12. எண். 25: 4, 5.

"சபிக்கப்பட்டவன்." தூக்கப்பட்டவன்பேரில் தேவசாபம் தங்கியிருப்பதால், தொங்குகிற பிரேதம் தேசத்தை அசுசிப்படுத்தாதபடி சாயுங்காலத்துக்குள்ளாக அடக்கிப்போடச் சொல்லுகிறார். லேவி. 18: 25, 28. எண். 35: 34. தேவநாமத்துக்கு இளப்பமுண்டாக்கினவன் சீக்கிரம் புதைக்கப்பட்டுப் போகவேணும். பிரேதம் தொங்கும்வரையும் தேவசாபம் சனங்களுடைய கண்களுக்கு முன்னிருக்கிறது.

## 22. அதிகாரம்.

1—12. நன்மாதிரிக்கடுத்த புத்தியடங்கிய சட்டங்களைக் காட்டியது. இந்தக் குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கவில்லை. என்றாலும் நியாயாதிபதிகளும் (16: 18), மூப்பரும் கவனித்துக்கொள்ளுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

1—4. யாத்தி. 23: 4, 5-ஐ விரித்துச் சொல்லுகிறார்.

5. "உடைகளை" மூலவாக்கியத்திலுள்ள வார்த்தை, உடை, ஆயுதம் மற்றும் ஆண்பிள்ளைகள் தரிக்கிற வீட்டுச்சாமான் எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாய்க் குறிக்கிற பொது வார்த்தையாயிருக்கிறது. யாத்தி. 25: 39. லேவி. 11: 32. 13: 49. ஏசா. 61: 10.

கற்பொழுக்கத்தைக் காக்கும் நோக்கமாய் இது ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்துக்கு விரோதமாய் நடப்பது, அசுத்தமான பாவங்களுக்கு நடத்தும் மோசமான சோதனைக்கேதுவாகும். விக்கிரகாராதனைக்காரருடைய விருந்துகளில் இப்படி நடப்பதுண்டு.

6—8. இரக்கத்தையும் தர்மகுணத்தையும் பயிற்றுவிக்கும்படி இவற்றைக் கற்பிக்கிறார்.

6, 7. லேவி. 22: 28. 25: 4. 1 கொரி. 9: 9, 10.

8. பலஸ்தீனாவில் வீடுகளின் மேற்பாகம் தட்டையாய்த் தளம் போடப்பட்டிருக்கும். சணல் அல்லது சணற்றாற் புடவைகளைக் காய வைக்கவும் (யோசு. 2: 6), சாயங்காலத்தில் உலாவுவதற்கும் (2 சாமு.

11: 2), செயம்பண்ணும்படிக்கும் (நட. 10: 9), ஆச இப்படிப்பட்ட பற்பல வீட்டுக்காரியங்களுக்கு உபயோகமாக தட்டையாய்ச் செய்வார்கள். விளிம்புகளிலே கிராதி கட்டியிருக்கும். அந்தக் கிராதிகள் குறைந்தது (2) முழ உயரத்துக்குக் குறையாமலிருக்கும்.

9.—11. லேவி. 19: 19. கொடுமைக்கு அஞ்சவும் இரக்க சிந்தையை உண்டாக்கவும் நோக்கமாய் இவை கற்பிக்கப்பட்டது. மாடும் கழுதையும், ஒரே பருமனும் ஒன்றுபோல பலமுமுள்ளவைகளல்ல. இவ்விரண்டும் உழவுக்கு உதவக்கூடியதென்று ஏசா. 32: 20 பார்.

12. "தொங்கல்கள்" எகிப்திய வழக்கத்திலிருந்து வந்தது. பாரம்பரியப்படி, தொங்கல் நீலநிறமாயிருக்கும். இது டை பிரமாணங்கள் பரத்துக்குரியது என்பதற்குக் குறிப்பாம். ஒன்று வெண்மையாயிருக்கும். இது சுத்தத்துக்குக் குறிப்பு. ஏசா. 1: 18. டை தொங்கல்கள் நூல்கள் சேர்ந்த குஞ்சம்போலிருக்கும், டை நூல்களின் வரிசையையும் அவற்றின் முடிச்சுகளையும் குறித்து யூதர் முக்கியமாய் எண்ணுவார்கள். நியாயப்பிரமாணம் (613) பிரமாணங்களுள்ளதாம். அந்தப் பிரமாணங்களுக்கு டை தொங்கல்கள் அடையாளமாயிருக்கிறதாம். நமது கர்த்தர் காலத்தில் (மத். 23: 5). இப்பொழுதும் யூதருக்குள் இந்த வழக்கமிருக்கிறது. விசேஷமாய் ஜெபகோவில் காலை ஆராதனை நடக்கும்போது இதை வழங்கிவருகிறார்கள்.

13—29. கலியாணத்துக்கடுத்த சட்டங்கள்.

18. "தண்டித்து" ரபிமார் சொல்லியபடி (40) அடிக்கு மேற்படாமல் அடிப்பார்கள்.

19. "நூறு வெள்ளிக்காசை" வீட்டுக்குத் தகப்பனானவன் தான் அதிகமான நிந்தையை அநுபவித்தவனானதால் அவனுக்குக் கொடுக்கவேணும். அநாதப் பிள்ளைகள் விஷயத்தில் டை (100) வெள்ளியும் அந்தப் பிள்ளைக்குக் கொடுத்துவிடவேணுமென்று ரபிமார் சொல்லுகிறார்கள். கெட்ட பெண்ணை விட்டுவிட்டு வேறே பெண்ணை நாடி இந்தக் கள்ளப் பிராதுகொண்டு வந்திருப்பான். ஆகையால் இவனுக்குத் தண்டனையாக, தள்ளுதல் சீட்டைக் கொடுத்துத் தள்ளிவிடுகிற பாத்தியம் இவனுக்கில்லை. (24: 1, 2).

அல்லது சீதனத்தின்பேரில் பேராசைப்பட்டு இந்தக் கள்ளப் பிராதுகொண்டு வந்திருப்பான். ஆகையால் அவன் (100) வெள்ளிக்காசை அபராதம் கொடுப்பதால் கண்டிக்கப்படுகிறான்.

29. யாத்தி. 22: 16, 17. இதுவும் ஒன்றல்ல. இவ்விடத்திற் சொல்லப்படுகிறவன் அபராதம்கொடுத்து அவளைக் கலியாணம்செய்துகொள்ள நோக்கம்கொண்டவன்.

30. 27: 20. லேவி. 18: 8. 20: 11. 1 கொரி. 5: 1, 23. "மானம்." ரூத். 3: 9. எசே. 16: 8.

---



# 23. அதிகாரம்.

இஸ்ரவேல் சபைக்கடுத்ததாக பரிசுத்தமாய் நடந்துகொள்ள வேண்டியதற்கு சில விதிகளையும், குடியிருப்புக்கடுத்த பாத்தியங்களையும் கடமைகளையும் சொல்லுகிறார்.

1—8. ஐந்து வகைப்பேர் தேவனுடைய சபையில் பிரவேசிக்கக் கூடாதென்று விலக்குகிறார்.

1. இதிற் சொல்லிய இரண்டு வகைப் பேரைப்பற்றி லேவி. 21: 17—24 பார். புறச்சாதியாருக்குள் அண்ணகர்கள் பொறுப்பான உத்தியோகஸ்தராயிருந்தார்கள். ஆனால் யூதருக்குள்ளிருந்த தேவ அரசாட்சியில், மனுஷர் தேவசாயலாகப் படைக்கப்பட்டவர்களானதால் அங்கஈனமுள்ளவர்களை உடன்படிக்கைக்குள்ளான இஸ்ரவேலரிலிருந்து தள்ளிப்போடச் சொல்லுகிறார். அவர்கள் புரொசலுத்துக்களாயிருக்கலாம். நட. 8: 27. இந்தக் கட்டுகளெல்லாம் மேசியாவின் இராச்சியத்தில் பரிசுத்தாவியின் கிரியையினாலே புறம்பான குறைவுகளெல்லாம் உள்ளாக இருதயத்தில் நீங்கிப்போகுமென்று ஏசாயா தானும் சொல்லுகிறார். ஏசா. 56: 3—5.

2. "வேசிப்பிள்ளை" இஸ்ரவேலருக்குள் வைப்பாட்டிகளை வைத்துக்கொள்வது தடுக்கப்படாததினாலும், கற்பழிக்கிறவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை லேசாயிருந்ததினாலும், வேசிப்பிள்ளைகள் யூதசபையைவிட்டு விலக்கப்பட்டார்களென்று நினைக்க இடமில்லை. தற்காலத்து யூதர் அவர்களைத் தள்ளிவைக்கிறதுமில்லை. இவ்விடத்தில் வேசிப்பிள்ளையென்பது விபசாரத்தினாலாவது முறைகேடாயாவது பிறந்த பிள்ளைகளைக் குறிக்கும். அப்படிப்பட்டவர்கள் தேவதன்மைக்கும் தேவஉத்தரவுக்கும் விரோதமான சேர்க்கையால் பிறந்தபடியால் அவர்களைத் தள்ளச் சொல்லுகிறார்.

பத்தாம் "என்றைக்கும்" என்றர்த்தம். இது நிறைவையும் முடிவையும் காட்டிய எண்.

3—5. நான்காவதும் ஐந்தாவதும் மோவாபியரையும் அம்மோனியரையும் விலக்குகிறது. மேற்காட்டியபடி அவர்கள் முறைகேடாய்ப் பிறந்தவர்களுடைய வம்சமானதால் அவர்களை விலக்கி வைக்கிறதாகத் தோன்றும். ஆதி. 19: 30—38. 4-ம் 5-ம் வாக்கியங்களில் சொல்லிய நியாயம், இஸ்ரவேலர் மனதிலே பதிந்து அவர்கள் ஞாபகத்திலே இருந்து வந்ததினாலே இதைச் சொல்லுகிறார். மேலும் தேவனியமன்களுக்கு எதிர்த்து நிற்பது, தேவாசீர்வாதங்களிலிருந்து சதாகாலமும் தள்ளப்படுவதற்கு ஏதுவாகும் என்று இஸ்ரவேலருக்குக் காட்ட ஒரு உதாரணமாகச் சொல்லுகிறார். நெகே. 13: 1, 2. புல. 1: 10. இந்தப்

புறச்சாதிகள் இஸ்ரவேலரோடு ஏகசாதியாகிறதை மட்டும் இந்தக் கட்டளை தடுக்கிறதேயல்லாது. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே குடியிருப்பதையாவது அவர்கள் பெண்களை இவர்கள் கலியாணஞ்செய்வதையாவது தடுக்கிறதில்லையென்று சில சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். திருஷ்டாந்தமாக ரூத்தைச் சொல்லுகிறார்கள். ரூத். 1: 4. 4: 13 ஆனால் ரூத்தும் அவள் சகோதரியும் புரோசலுத்துக்களாயிருந்தார்கள்.

4. 2: 29. அப்பம் தண்ணீர் கொண்டுவராத குற்றம், மோவாபியர் அம்மோனியர் ஆகிய இருசாதியாரும் செய்தது. பிலேயாமுக்குக் கூலிபேசிய குற்றமோ, மோவாபியருடைய குற்றம். ஆனால் அவ்விரு சாதியும் சேர்ந்து ஒரே கொடி வழியானதினாலும், அநேக காரியங்களில் ஒற்றுமையாயிருந்து விரோதஞ்செய்ததாலும், இவ்விடத்தில் அவர்களைச் சேர்த்துச் சொல்லுகிறார். 2 நாளா. 23: 1.

6. இதினாலே அவர்களுக்குத் தீமைக்குத் தீமை சரிக்கட்டவேண்டுமென்றாவது அவர்களைப் பகைக்கவேண்டுமென்றாவது கட்டளையில்லை. 2: 9, 19. பிற்காலத்தில் இஸ்ரவேலருக்கும் அம்மோனியருக்கும் அடிக்கடி பகையுண்டானதாக வாசிக்கிறோம். நியா. 11-அதி. 1 சாமு. 11-அதி. 2 சா. 10-அதி. 12: 26, 31. 2 நாளா. 20-அதி.

மோவாபியரோடும் பகையுண்டாயிருந்தது. நியா. 3: 12. 1 சா. 14: 47. 2 சா. 8: 2. 2 நாளா. 20-அதி.

7, 8. ஏதோமியர்: யாக்கோபுக்குச் சகோதரன் பிள்ளைகளானதாலும், எகிப்தியர்: யோசேப்புக்கும் அவன் சகோதரருக்கும் வெகுகாலமாய் உபகாரம்செய்து வந்ததாலும் அவர்களை வெறுக்கப்படாது. ஏதோமியர் பாதைகொடாதது நிஜம். (எண். 20: 18.) ஆனாலும் இஸ்ரவேலரை எதிர்த்துத் தடுக்கவில்லை. 2: 8. எகிப்தியர் இஸ்ரவேலரை ஒடுக்கினது, முக்கியமாய்ப் பார்வோனுடைய கொடுமையேயல்லாது சனங்களுடைய இஷ்டப்படி நடந்ததல்ல. யாத்தி. 1: 2, 8, எகிப்தியர் கொடுமைசெய்திருந்தாலும், அவர்கள் முன் காண்பித்த பட்சத்தை மறந்துவிடக்கூடாது. ஆகையால் இரண்டாம் பேரன் சபையில் சேர்ந்து கொள்ளலாம். யாத்தி. 20: 5.

9—14. யுத்தகாலத்திலுங் கூட பாளையத்தின் பரிசுத்தம் காக்கப்படவேண்டியது. மற்றச் சாதியாருக்குள் அப்படியிருந்ததில்லை. யுத்தகாலத்தில் விசேஷித்த வகையாய் தேவஉதவி இஸ்ரவேலருக்கு வேண்டியதிருந்ததால் அவர்கள் விசேஷித்த வகையாய் பாவங்களுக்கு விலகியிருக்கவேண்டியதும் நியாயமே.

"பாளையம்" என்பது இஸ்ரவேலர் வனாந்தரத்தில் போட்டிருந்த பாளையங்களைக் குறியாது. கானான்தேசத்தில் அவர்கள் போய்ச்சேர்ந்தபின் அவர்கள் யுத்தத்துக்குப் போகும்போது பாளையம்போடவேண்டியதைக் குறிக்கும்.



15, 16. "எஜமான்" அஞ்ஞான எஜமானுடைய கொடுமைக்குப் பயந்து அடைக்கலம் புகுகிறவன் என்றர்த்தம். இவ்விஷயத்தில் இங்கிலீஷ் தேசப் பிரமாணமும் இதே.

17. லேவி. 19: 29 விக்கிரகாராதனைச் சடங்குகளில் தாசியாட்டும் ஒன்று. அஸ்தரோத்தின் ஆராதனைக்குத் தாசியாட்டு அவசியம் வேண்டியது.

18. "பணயம்" வேசியின் கூலி என்றர்த்தம்.

"நாயின்கிரயம்" இது உபமான அர்த்தமுள்ளது. முந்தின வாக்கியத்திற் சொல்லிய ஆண்புணர்ச்சிக்காரனைக் குறிக்கும். வெளி. 22: 15. மீகா. 1: 7.

19, 20. யாத்தி. 22: 25. எண். 25: 36, 37.

21—23. யாத்தி. 22: 29. எண். 30: 2. பிர. 5: 4, 5. லேவி. 27-அதி.

24, 25. மத். 12: 1. லூக். 6: 1. உபா. 24: 19, 20 ல் சொல்லிய பிரமாணமும் இத்தன்மையுள்ளதே.

## 24. அதிகாரம்.

இந்த அதிகாரத்திலும் அடுத்த அதிகாரத்திலும் தேசாசாரத்துக்கும் குடியிருப்புக்கும், இல்வாழ்க்கைக்குமுரிய சில விசேஷித்த பாத்தியங்களையும், கடமைகளையுஞ் சொல்லுகிறார்.

1—5. புருஷன் மனைவிக்குரிய சம்பந்தத்தைக் குறித்து.

1—4. தள்ளுதல் சீட்டைக்குறித்து. எரே. 3: 1. மத். 5: 31, 32. 19: 3—9.

இந்த வாக்கியங்களில் தள்ளுதல் சீட்டைக்குறித்து மோசே ஏற்படுத்துகிறதுமில்லை, சட்டங் கற்பிக்கிறதுமில்லை. மத். 19: 8.

தள்ளுதல் சீட்டானது ஆதிவிவாக ஏற்பாட்டுக்கு விரோதமானது. ஆதி 2: 24.

மோசேயின் காலத்தில் யூதருக்குள்ளும் மற்றுஞ் சில தேசத்தாருக்குள்ளும் பாரம்பரியமாய் இந்தக் கெட்ட வழக்கம் நடந்தேறி வந்தது. இதை மோசே ஒருமிக்க நிறுத்திப்போடுவது கூடாத காரியமாயிருந்தபடியால், அதைப் பொல்லாப்புக்கு மட்டுக்கட்டுகிறார். அதற்காக அவர் இந்த வாக்கியங்களில் சட்டம் கற்பிக்கிறதாவது:

(1) இதுவரை நடந்துவந்த வழக்கப்படி புருஷன் தன் இஷ்டப்படிக்கும், தன் மனம்போன போக்குப்படிக்கும் தள்ளுதல்

சீட்டைக் கொடுக்கப்படாது. தள்ளுதல் சீட்டைக் கொடுக்கிறேன் போ என்று வெறுமனே வாய்மொழியினாலே சொல்லவுங் கூடாது. மனைவியைத் தள்ளுகிறதற்கு முகாந்தரங் காண்பிக்கவேண்டும். தள்ளுதல் சீட்டை எழுதிக் கொடுக்கவேண்டும். ஒழுங்குப்படியான வக்கணையுடன் பத்திரம் எழுதிக்கொடுத்துத் தள்ளவேண்டும்.

(2) தள்ளப்பட்டு இன்னொரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டவள் மறுபடி தன்னுடைய முந்திய புருஷனைச் சேரக்கூடாது.

முதலாவது சொல்லிய சட்டப்படி ஒருவன் தன் மனைவிக்கு ஒழுங்குப்படி தள்ளுதல் சீட்டு எழுதத் தகுந்த நியாயந் தேடவேண்டும், அந்த நியாயத்தை அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவும் வேண்டும். இதை நிறைவேற்றுவதில் காலம் பிடிக்கும். தள்ளுதல் சீட்டுக்குத் தகுந்த முகாந்தரம் இல்லாவிட்டால், அதிகாரிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் இந்த முகாந்தரங்களினாலே ஒருவன் தன் மனைவியை லேசாய்த் தள்ளிவிட ஏதுவிருந்ததில்லை. மேலும் கண்டபடி தள்ளுதல் சீட்டுக்கொடுக்க மோசே இடங்கொடுக்கவில்லை. 22: 18—19 பார். அல்லது கலியாணத்துக்கு முந்தி ஒருத்தியை கற்பழிக்க இடங்கொடுக்கவுமில்லை. 22: 28, 29. இப்படியாக மோசே தள்ளுதல் சீட்டை மட்டுக்கட்ட நோக்கமாய் அதற்கு இடங்கொடுத்தாரேயல்லாது அதைப் பிரமாணமாக ஏற்படுத்தவில்லை. தள்ளப்பட்டவள் மறு கலியாணஞ்செய்யாவிட்டால், தள்ளினவன் அவளைச் சேர்த்துக்கொள்ளலாமென்றுங் காணப்படுகிறது. இதுவே யூதரபிகளுக்குள்ளே பாரம்பரியமான வழக்கம். அவளை மறுபடியுஞ் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று இந்த வாக்கியங்களிலும் சாடையில்லை.

5. 20: 7.

6. யாத். 22: 25, 26.

7. யாத். 21: 16. அவளை அடிமைபோல் நடத்தக்கூடாதே.

8, 9. லேவி. 13-ம் அதி. 14-ம் அதி. மிரியாமைக்குறித்து. எண். 12: 10—பார். குஷ்டரோகமானது பாவத்துக்குக் குறிப்பாயிருந்தது. குஷ்டரோகத்துக்கு வருந் தண்டனை பெரும்பாலும் நேரான தேவ தண்டனையாயிருந்தது. இர்ஷ். மிரியாம், கேயாசி, உசியா. தேவகட்டளையை மீறினதினிமித்தம் மிரியாமுக்கு வந்த தண்டனை 8-ம் வாக்கியத்தில் காட்டிய கட்டளையைப் பிறப்பித்தது.

10—15. எளியவர்களை ஒடுக்காதபடி எச்சரிப்பு.

10—13. யாத். 22: 25—27. கடன் கொடுத்தவன் கடனாளியின் வீட்டுவாசலுக்குள் பிரவேசிக்கக்கூடாது. பலஸ்தீனாவில் அடிக்கடி சேலைதுணிகளை அடகுவைக்கிறது வழக்கமாயிருந்தது. 12, 13.

13. 6: 25. நீதி. 19: 17. தானி. 4: 27.



14, 15. லேவி. 19: 13 ஐ மறுபடி கூறி அதை விரித்துச் சொல்லியிருக்கிறது. 15: 9. யாக். 5: 4.

16. நியாயாதிபதிகளுக்கு ஒரு எச்சரிப்புச் சொல்லுகிறார். தேவன் மனிதஜாதி எல்லாருக்கும் ராஜாவானதினாலே பிதாக்களுடைய பாவங்களை பிள்ளைகள்மேல் சுமத்த அவருக்குப் பாத்தியதையுண்டு. யாத். 20: 5. ஆனால் உலக நியாயாதிபதிகளுக்கு அந்தப் பாத்தியதையில்லை.

மற்ற கிழ்தேசத்தாருக்குள் ஒருவன் அக்கிரமஞ்செய்தால் அவன் குடும்பத்தாரையும் தண்டிக்கிற வழக்கமுண்டு. எஸ். 9: 13, 14. இஸ்ரவேலருக்குள் அப்படியிருக்கக் கூடாது. 2 ரா. 14: 6. 2 நாளா. 25: 4. எரே. 31: 29, 30. எசேக். 18: 20.

17. யாத். 22: 21, 22. 23: 9.

18. லேவி. 19: 33, 34.

19—22. லேவி. 19: 9. 23: 22. இந்த வாக்கியங்களின் பொருளை மறுபடியும் எடுத்துச் சொல்லியிருக்கிறது. 22-ம் வாக்கியத்தில் சொல்லிய முகாந்தரமானது 18-ம் வாக்கியத்திலும் 16: 12-லும் சொல்லிய முகாந்தரந்தான்.

## பரிசுத்தாவிக்காக செய்யத்தக்க ஜெபம்.

உமது பரிசுத்தாவியை
தேவனே, பெந்தேகோஸ்தே நாளிற்போல உமது பரிசுத்தா
எங்கள்மேல் பொழிந்தருளும். பரமபாதையில் இட உமது ஜெபம்
வியினாலே எங்களை உயிர்ப்பித்தருளும். எதைப்பற்றி எப்படி எங்களைப்
செய்யவேண்டுமென்று உமது பரிசுத்தாவியைக்கொண்டு பேசவேண்டுமென்
படிப்பித்தருளும். எல்லாக்காலத்திலும் எதைப் போதித்தருளும்.
றும், எப்படி நடக்கவேண்டுமென்றும் எங்களைப் உமது பரிசுத்தாவி
உமது வேதத்தை நாங்கள் அறிந்துகொள்ளும்படி உமது பிரமாணத்தின்
யினால் எங்கள் புத்தியைத் தெளிவாக்கியருளும். கண்களைத் திறந்தருளும்.
அதிசயங்களை நாங்கள் பார்க்கும்படி எங்கள் நீதியையும் பின்
பாவத்தினால் விளையும் தீமையையும், கிறிஸ்துவின் பரிசுத்தாவியினால் உணர்த்
வரும் நியாயத்தீர்ப்பையுங் குறித்து அந்தப் கிறிஸ்தேசுவே எங்கள் எல்
தியருளும். நாங்கள் பாவிகளென்றும், இரட்சகரென்பதை
லாக் காரியங்களுக்கும் போதுமான ஒன்றான எங்களைக்
நாங்கள் கண்டறியச் செய்வாராக. பரிசுத்தாவியானவர் நன்றாய்
கிறிஸ்துவண்டைக்கு இழுத்து, எங்கள் ஆத்துமா அவரை எங்களைப் பரி
அறிந்துகொள்ளச் செய்வாராக. பரிசுத்தாவியினாலே ஆவியாயி
சுத்தமாக்கியருளும். எங்களுக்குள்ளே அவர் பரிசுத்தத்தின் எடுத்து,
ருந்து, நாங்கள் பாவஞ்செய்கிற ஆசையை எங்களிலிருந்து உண்டாக்குகிற
பரிசுத்தத்தை நேசிக்கச் செய்வாராக. மரணத்தை சமாதானத்தையும் முன்
மாம்ச சிந்தையுள்ளவர்களாயல்ல, ஜீவனையும்

டாக்குகிற ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி அருள்செய்வாராக. துன்பகாலங்களிலெல்லாம் அந்தப் பரிசுத்தாவியானவர் எங்களுக்குத் தேற்றரவாளராயிருப்பாராக. அவர் எப்போதும் இருக்கும் வாசஸ்தானமாக எங்கள் சரீரத்தை அவருடைய ஆலயமாக்கியருளும். எங்கள் பாவத்தினாலும், துன்பங்களினாலும் நாங்கள் தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்தாமலும் அணைத்துப்போடாமலும் இருப்போமாக.

பரமபிதாவே, உமது பிரியசித்தத்தின்படி நாங்கள் விரும்பவும், செய்யவுமாக உமது பரிசுத்தாவியானவர் பலமாய் எங்களில் கிரியை செய்வாராக. எங்களுக்கும் எங்கள் இனத்தார் சிநேகிதருக்கும் ஞானம், அறிவு, பலம், வல்லமையென்ற ஆவியைத் தந்தருளும். எல்லா மாம்சத்தின்பேரிலும், உமது பரிசுத்தாவியைப் பொழிந்தருளும். எங்கள் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்தாவியைப் பொழிந்தருளும். ஆமென்.

---

# இரக்ஷண்ய மனோகரம்.

## தேவாரம்.

### திருநாமப் பதிகம்.

பண். காந்தாரம்.

மன்னுயிர்த் தொகுதி ஈடேற வானினும்
இந்நிலத் தினும்பிறி தில்லையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவஜீவருக்
கின்னமு தாயது யேசு நாமமே.

தெருளெலாந் தனதெனும் தெய்வ மாமறைப்
பொருளெலாந் தனதெனப் பொலிந் திலங்குவத்
அருளெலாம் அன்பெலாம் அறனெலாம் வளர்த்
இருளெலாம் தொலைப்பது யேசு நாமமே.

பன்னருங் குணத்ததும் பவித்தி ரத்ததும்
அன்னரும் பொருளதும் தூய்மை பூண்டுளோர்
மன்னர் நெஞ்சத்திடை நடித்து நிற்பதும்
என்னுயிர்த் துணையதும் யேசு நாமமே.

நித்திய ஜீவனும் நெறியும் போதமும்
சத்திய நிலையமும் தானென் றுள்ளது
பத்தியிற் பரவுவோர் பரம வீடுற
இத்தலத் திறுத்தது யேசு நாமமே.

பொன்னுலகத் தனோர் புணரி சூழ்புவி
தன்னிலுள் ளோர்தலை தாழ்ந்து போற்றிட



மன்னிய நகையது மருவி வானிழிந்த்
இந்நிலம் புரப்பது யேசு நாமமே.

நன்னெறி புகுத்திடும் நவையி னீக்கிடும்
இன்னலை யகற்றிடும் இகல் செகுத்திடும்,
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே.

அன்பினுக் குருவம்நல் லறத்துக் காலயம்
மன்பதைக் கருண்மழை வழங்கு பைம்புயல்
இன்பர மென்றினை வோர்க்கு நித்திய பேர்
இன்பசஞ்சீவிதம் யேசு நாமமே.

வஞ்சகக் கூளியை மடிக்கு மந்திரம்
பஞ்ச விந்தியங்களைப் படுக்கும் மந்திரம்
செஞ்சவே ஜெகமருள் தீர்க்கு மந்திரம்
எஞ்சலில் மந்திரம் யேசு நாமமே.

கூறு மந்திரமறை குணித்த வேதியர்
தேறு மந்திரம் ஜெபத்தினுக்குச் செவ்வியின்
வேறு மந்திரமிலை வேதனுர் செவிக்க்
ஏறு மந்திரம் கிறிஸ்தியேசு நாமமே.

தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாம் கருதில் யாதுமோர்
அருமையும் பயனு மொன்றில்லை யாதலால்
இருமையும் துணையெனக் கியேசு நாமமே.

நஷ்டமே தருஜெகம் நகைக்க நாளெலாம்
கஷ்ட ஜீவனஞ் செய்து கழிப்பமாயினும்
அஷ்ட வல்வினையெலாம் தொலைக்கும் துமன
இஷ்ட காமியந்தரும் யேசு நாமமே.

திருநாமப்பதிகம் முற்றிற்று.

## திருநாமஸ்மரணை.

### நேரிசை.

முன்னவ னென்கோ வேத முழுமுத லென்கோ மூத்தார்க்
கின்னுயிர் என்கோ சிந்தைக் கினிய தெள்ளமுத மென்கோ
கன்னிகா புத்திர னென்கோ கருதரும் பொருளீ தென்கோ
தன்னிக ரில்லாயூத ஜாதி மாணிக்கத் தையே.

வானவர் திலகனென்கோ வையக முய்ய வந்த
மனவ னென்கோ ஜீவ வழியென்கோ வழியைக் காட்டும்
ஞான சற்குருவே யென்கோ நராத்தும நாயனென்கோ
தானவ னூன பூத ஜாதி மாணிக்கத் தையே. 2

முத்திமா முதல்வ னென்கோ மூலகாரண மாய்நின்ற
சத்துவ மென்கோ லோக சரணிய னென்கோ ஆன்ம
நித்திய ஜீவ னென்கோ நெறிநின்றார் நினைவினிறகும்
சத்திய மென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 3

பேயக நடுங்கி மாழ்கப் பெருந்தலை யிடித்த தெய்வச்
சாயக மென்கோ ஞாயதனுவென்கோ சருவ லோக
நாயக மென்கோ பாப நராத்தும ஜீவர்க்கேற்ற
தாயக மென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 4

அன்புரு வென்கோ அன்பர் அகத்துளே தெவிட்டா நின்ற
இன்புரு வென்கோ இன்பமெவற்றிற்கும் ஹேதுவென்கோ
மன்பதைத் தொகுதி நித்திய வாழ்வடைந்துய்யும் வண்ணம்
தன்படர் நினையா பூத ஜாதி மாணிக்கத் தையே. 5

சிற்குணா லயமே யென்கோதிகழ் ஜெகஜோதி யென்கோ
எற்கருள் புரிந்தாட் கொண்ட ஈசனென்கோ தாவீதின்
நற்குலம் விளங்க வந்த நாயகமென்கோ லோக
சற்குருவென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 6

விந்தை யெம்பகவ னென்கோ மெய்யுணர் வுடைய நீரார்
சிந்தையின் விளக்க மென்கோ திவ்விய வார்த்தை யென்கோ
பந்தநோய் தீர்க்கவந்த பரமபண்டிதனே யென்கோ
தந்தை தாயென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 7

ஆரணிலை குலையப் பேயை அடர்த்த காய்வீரனென்கோ
மரண புண்ணியத்தை நல்கும் மாண் புறுவள்ள லென்கோ
தாரணி யாதிக்க னென்கோ சருவலோகமும் வணங்கும்
சரணிய னென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 8

தமாநீர் உலகு தந்த தற்பரன் தானே யென்கோ
அமருலகத்து வாழ்நர் அறிவிற்கும் அதீத னென்கோ
எமரொடு மெனை ரக்ஷித்த எம்பிரான் இரக்க நீதி
சமரசன் என்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 9

அருள் நயனத்த னென்கோ அமுதச் செவ்வாய னென்கோ
கருணை யார்கலியுட் பூத்த கமலவாண் முகத்தனென்கோ
பருணிதர் தொடையல் வேய்ந்த பதாம்புஜ னென்கோ ஞான
தருணியே யென்கோ பூத ஜாதி மாணிக்கத் தையே. 10



நிலையிது குணமீதையன் நெறியிது நாமமீதென்று
உலகுறு பாஷை கொண்டிங் குரைக்கு மாறரி தென்றுள்ளி
அலையு மெய்ச்சுருதி யின்னும் அறிவிலா மூகையாய
புலைய னென் நினையும் புன்சொற்பொருந்துமோ புனையத்தானே. 11

திருநாமஸ்மரணை முற்றிற்று.

## பசுதாத்தாபம்.

நேரிசை.

நின்னடிக் கன்புசெய்யா நீசனேன் ஈசனே உன்
பொன்னடிக் கன்புசெய்யும் புண்ணியர் குழாத்துட்புக்கு
நன்னடை கற்றுமில்லேன் நன்றெலாம் ஒருவி நின்ற
என்னடை யிகந்து மில்லேன் என்செய்வான் தோன்றினேனே. 1

தன்னுயிர் போல இந்தத் தடங்கடற் புடவிமேய
மன்னுயிர்க் கிரங்கி மேனாள் மனுமகனாகத் தோன்றி
இன்னுயிர் கொடுத்திரக்ஷ யீட்டிய இறையை யேத்தி
என்னுயிர் ஓம்புகில்லேன் என்செய்வான் தோன்றினேனே. 2

வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனை நிகழ்ந்திடாதென்
புன்கணுக் கிரங்கியோர்பூம் பொழிலிடைப் புனிதமூர்த்தி
நின்கணீர் சொரிந்து செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணேன் என்செய்வான் தோன்றினேனே. 3

கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமையம் கீறிப்
பிதிர்படச் சிலுவை மீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோலத்தை மனக்கணால் தரிசித்தேத்தி
இதையம் நெக்குருகு கில்லேன் என்செய்வான் தோன்றினேனே. 4

கன்றிய காம நெஞ்சக் கள்வனேன் காமநீத்த
நன்றிகொள் மாந்தர்போல நடித்திடும் கடலையுள்ளேன்
ஒன்றிய மனத்தோ டெந்தாய் உன்னருள் துணையை நாடி
என்றினி உய்யப்போவேன் என்செய்வான் தோன்றினேனே. 5

தேசற்ற மின்னார் மோகச் சிக்குளே சிக்கிச் சிந்தை
மாசுற்றேன் உலகமாய வாழ்க்கையை மருண்டு நச்சி
வேசற்றேன் கவலையாலே மெலிவுற்றேன் விழைசாரானும்
ஏசற்றேன் ஈசனேயான் என்செய்வான் தோன்றினேனே. 6

அருளுடை முகிலையன்பர் ஆருயிர்க் குயிராய் நின்ற
தெருளுடைய முதை உள்ளம் தித்திக்குஞ் செழுந்தேன் வைப்பை

மருளுடை யறிவிற்கெட்டா வாழ்வினை வழுத்தி வாழேன்
இருளுடை மனத்தேன் யானே என்செய்வான் தோன்றினனே. 7
பொறிவழி உள்ளம்போக்கிப் புலைநெறி யொழுகும் பொல்லேன்
அறிவிலி யாதலாலே ஆத்துமக் கவலை கொள்ளேன்
செறியுடற்போக நச்சித் திரண்ட பேராசை யென்னும்
எறிகடற் குளித்து நின்றேன் என்செய்வான் தோன்றினனே. 8
சுத்தனே அல்லன் நன்மை சொல்ல எட்டுணையு மில்லேன்
பித்தனுன் பெரிய பாவி பிழைக்கு மாறுணர மாட்டேன்
நித்தநீ யருளும் ஈவை நினைகிலேன் நன்றியீனம்
எத்தனை யிறைவனே யான் என்செய்வான் தோன்றினனே. 9
மெய்த்திடப் பிறர்க்கு வேதம் விளம்புவன் விரித்தெனுள்ளே
உய்த்ததை யுணரமாட்டேன் ஒழுக்குடையவர்போல் நின்றும்
கைத்திடேன் பாவப் பிச்சைக் கபடு நாட்சழிய வானா
எய்த்தினைத் தயர்ந்தேன் எந்தாய் என்செய்வான் தோன்றினனே. 10
அழுகிலேன் மனங் கசந்திட் டளியனேன் பிழையை உன்னி
விழுகிலேன் நின்பாதார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலேன் ஆவியாலே தொடர்பவத்துயிலை நீத்தெ
ழுகிலேன் ஈசனே யான் என்செய்வான் தோன்றினனே. 11
புன்முலை யிதய மென்னும் படிகளைப் பார்க்குந் தோறும்
நன்மை யோரணுவுங் காணேன் நஞ்சினை யமுதா நச்சும்
புன்மையேன் போத மில்லேன் புவிப்பொறை ஆயதன்றி
இன்மையேன் பயன்மற் றேர்தாய் என்செய்வான் தோன்றினனே. 12

(இன்னும் வரும்.)

---

Exposition of the Church Catechism.

# ஞானோபதேசவினாவிடை
வியாக்கியானம்.

## ௩-ம் அதிகாரம்.

ஞானஸ்நானத்தில் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள்.
(தொடர்ச்சி.)

பிசாசானவன் வேதாகமத்தில் பற்பல நாமங்களால் அழைக்கப்பட்டிருக்கிறான்.

1. சாத்தான் (எதிராளி, குற்றஞ்சாட்டுகிறவன்.) யோபு 1: 6. சகரி. 3: 1.



2. விடிவெள்ளி. ஏசா. 14: 12.
3. சோதனைக்காரன் (நமது இரட்சகரையும் சோதித்தான்.) மத். 4: 3.
4. பெயெல்செபூல். மத். 12: 24.
5. ஆயுதந்தரித்த பலவான். லூக். 11: 21.
6. பொய்யன், கொலைபாதகன். யோவா. 8: 44.
7. இந்த உலகத்தின் அதிபதி. யோவா. 12: 31. 14: 30.
8. இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி. எபே. 6: 12.
9. இப்பிரபஞ்சத்தின் தேவன். 2 கொரி. 4: 4.
10. பேலியாள். (மிகவும் பொல்லாதவன்.) 2 கொரி. 6: 15.
11. கெர்ச்சிக்கிற சிங்கம். 1 பேது. 5: 8.
12. ஆதிமுதல் பாவஞ்செய்கிறவன். 1 யோவா. 3: 8.
13. அப்பொல்லியோன் (அழிக்கிறவன்.) வெளி. 9: 11.
14. வலுசர்ப்பம். வெளி. 12: 3.
15. பழைய பாம்பு. வெளி. 12: 9.
16. குற்றஞ்சாட்டுகிறவன். வெளி. 12: 10.
17. மோசம்போக்குகிறவன். வெளி. 20: 10.

நாம் பிசாசானவனுடைய வல்லமையையும், சூட்சமத்தையும் கவனிக்கும்பொழுது, நிச்சயமாகவே நாம், "எங்களைச் சோதனைக்குட்பிரவேசிக்கப்பண்ணாதேயும்" என்று ஜெபஞ்செய்ய நியாயமுண்டு என்று அறிந்துகொள்ளலாம்.

வினா. பிசாசின் கிரியைகள் எவை?

விடை. தேவனுடைய சித்தத்துக்கு விரோதமான பொய், ஆணை, ஒய்வுநாளின் மீறுதல், பொறாமை, சண்டை, களவு, கொலை, அசுத்தம், பகை, குடிவெறிமுதலிய பாவமான யாவுமே. கலாத். 5: 19—21.

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரி. 4: 4.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டீர்கள். எபே. 2: 2.

மனுஷர் இரட்சிப்பைத் தேடாதபடி அவன் தடைசெய்கிறான்.

களைகளை விதைக்கிற சத்துரு பிசாசு. மத்தே. 13: 39.

அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான். மத். 13: 19. லூக். 8: 12.

மனுஷர் தாங்கள் அறிக்கையிட்ட மார்க்கத்தை மறுதலிக்கும்படி சோதிக்கிறான்.

யூதாஸ்காரியோத்து அவனைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினான். யோவா. 13: 2, 27.

பரிசுத்தாவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அப். 5: 3.

நாம் நம்மைக் காத்துக்கொள்ளவும் அவனுடைய கிரியைகளுக்கு எதிர்த்து நிற்கவும் எச்சரிக்கப்படுகிறோம்.

பிசாசுக்கு இடங்கொடாமலுமிருங்கள். எபே. 4: 27.

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். எபே. 6: 11.

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக். 4: 7.

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். 1 பேது. 5: 8.

விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். 1 பேது. 5: 9.

நீ அவனால் ஜெயிக்கப்படாதபடிக்கும், அவனுடைய கண்ணிகளில் பிடிபடாதபடிக்கும்; தேவனுடைய சர்வவியாபகத்தையும், சர்வஞானத்தையும், அவருக்கு நீ செய்யவேண்டிய கடமையையும் இடைவிடாமல் தியானித்துக்கொள்ளும்படி பிரயாசப்படு. சோதனைகள் உனக்கு நேரிடும்போது யோசேப்பைப் போல் "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வது எப்படி" என்று அறிக்கையிடு. ஆதி. 39: 9.

சாத்தானும், வஞ்சிக்கும்படி ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்பதை நினைத்துக்கொள். 2 கொரி. 11: 14. அவனுடைய ஆலோசனையை உன்னுடைய சொந்த பெலவீனமும் உதவியற்றதுமான எத்தனத்தினாலே எதிர்க்கும்படி எப்படிப் பிரயாசப்படவேண்டுமென்று விழிப்பாயிரு. அவனோடு சம்பாஷணைசெய்யாமல் "சாத்தானே அப்பாலே போ" என்று சொல்லு. ஏசுநாதர் செய்ததுபோல "எழுதியிருக்கிறது" என்று சொல்லி உடனே அவன் வாயை அடைக்கும்படி தேவவசனத்தை உன்னுடைய இருதயத்திலே பத்திரப்படுத்திவை.

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1 யோவா. 3: 8.

---



# திருநெல்வேலி மிஷன் சதாப்த உற்சவம்.

அதாவது,

## திருநெல்வேலி நாட்டில் கிறிஸ்துமார்க்கம் உண்டான நூறும் வருடக் கொண்டாட்டம்.

திருநெல்வேலி மிஷன் சதாப்த உற்சவம் 1860-ம் ஞு ஜனுவரி மீ 21உ புதவாரம் பாளையங்கோட்டையில் கொண்டாடப்பட்டது. இந்தச் சமயம் சுதேச சபைக்கும் மிஷன் அனுசாரிகளனைவருக்கும் பெரிய கொண்டாட்டமாயிருந்தது. அந்நாள் காலை 7-மணிக்கு தேவாலயத்தில் பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. சென்னை அத்தியக்ஷரவர்களும் அவர்களுக்கு உதவியாக கால்டுவெல் அத்தியக்ஷரவர்களும், சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்களும், இரண்டு சுதேச சாப்ளன்மாரும் பரிசுத்த நற்கருணை பரிமாறினார்கள். அப்போது டொமெஸ்றிக் சாப்ளன் ஆகிய கனம் எஸ். மோர்லி (S. Morley) ஐயர் பரி. யோவான் 17-ம் அதிகாரம் 4-ம் வாக்கியத்தின்மேல் சமயத்துக்கேற்ற அருமையான பிரசங்கம்செய்தார். எஸ். பி. ஜி. மிஷன், சர்ச்சு மிஷன் ஆகிய இரு சங்கங்களையும் சேர்ந்த ஐரோப்பிய மிஷனெரிகளெல்லாரும், சுதேசகுருமார் அனேகரும் வந்திருந்தார்கள். சதாப்த உற்சவ கொண்டாட்டம் காலை 11-மணிக்கு நடந்தது. மகா கனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருக்க, அவர்களுக்கு வலபக்கமாய் கால்டுவெல் அத்தியக்ஷரவர்களும் இடபக்கமாய் சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்களும் உட்கார்ந்தார்கள். திருநெல்வேலி நாட்டின் நாலுதிசைகளிலுமுள்ள சபை காரியக்காரரும் சுதேச கிறிஸ்தவர்களுமான ஏராளமான ஜனங்கள் ஆலயம் நிறைய வந்திருந்தார்கள். அந்தப்புரத்து ஸ்திரீகளுக்குப் படிப்பிக்கும்படியாய் நியமிக்கப்பட்டிருக்கிற செனனா (Zenana) மிஷனைச் சேர்ந்த துரைசானிமாரும், மிஷன் வேலைக்கு அனுசாரிகளான பல இஷ்டரும் கூடிவந்தார்கள்.

ஒரு பிரார்த்தனை பாடி ஜெபஞ்செய்தபின் சென்னை அத்தியக்ஷரவர்கள் சுருக்கமாயும் மனதில் படத்தக்கதாயும் பேசினார்கள். இது மகா முக்கியமான சமயமென்று காட்டினதுமல்லாமல், கிறிஸ்துசபையின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் பற்றி பொதுவாயும், சென்ற நூறு வருஷங்களில் திருநெல்வேலி நாட்டுச் சபைகளில் உண்டாயிருக்கிற வளர்ச்சியைப் பற்றி முக்கியமாயும் வியந்து பேசினார்கள். திருநெல்வேலி மிஷன்களிலுண்டாயிருக்கிற வளர்ச்சி அவ்வளவு திருப்திகரமானதல்லவென்று சிலர் எண்ணினாலும், தேவனுடைய வழிகள் மனுஷனுடைய வழிகளைப்போலல்ல; புல்லறிவாளராகிய நாம் இம்மையில் கிரகித்து அறிந்துகொள்ளக்கூடாத காரியங்கள் மறுமையில் நித்தியமாகிய வெளிச்சத்திலே துலக்கமாய் விளங்கும் என்றும், சர்வஞானமும் சர்வவல்லமையுமுள்ள கடவுளு

டைய திருச்செயலால் இம்மட்டும் விளைந்திருக்கிற பலன்கள் மெய்யாய் நமது கண்களுக்கு ஆச்சரியமும் நமது துதி தோத்திரத்துக்கு பாத்திரமுமானவைகளே யென்றும் பேசினார்கள்.

அப்பால் மகாகனம் கால்டுவெல் அத்தியக்ஷரவர்கள் திருநெல்வேலி நாட்டு மிஷன்களின் வளர்ச்சியைப்பற்றி இங்கிலீஷில் நேர்த்தியாய் எழுதிவைத்திருந்த விருத்தாந்த சங்கிரகம் ஒன்றை தாங்களே வாசித்தார்கள். பிறகு அது கனம்: D. சாமுவேல் ஐயரால் தமிழிலும் வாசிக்கப்பட்டது. *

பின்பு வாகைக்குளம் கனம்: V. வேதநாயகம் ஐயர் சுருக்கமாய்ப் பேசினார். அதில், திருநெல்வேலியிலே மிஷன் வேலை நடத்துகிறவர்கள் வெவ்வேறான இரண்டு பெரிய சங்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தும், இரு சங்கத்தாருடைய முக்கிய நோக்கமும் கருத்தும் ஒன்றே என்றும், தாம் எஸ். பி. ஜி. சங்கத்தைச் சேர்ந்த இடையன்குடியில் பிறந்து வளர்ந்தவராயிருந்தாலும் இப்போது சர்ச்சுமிஷனில் உழைத்துவருகிறது இரு சங்கங்களும் ஒன்றுக்கொன்று உதவியும் அனுகூலமுமாயிருக்கிறதென்பதற்கு திருஷ்டாந்தமென்றும் காட்டினார்.

அதற்குப்பின் மகாகனம் சார்ஜென்ற் அத்தியக்ஷரவர்கள், சுதேசச் சபையை ஸ்திரப்படுத்தி விஸ்தீரணப்படுத்துகிற சிறந்த வேலையை கால்டுவெல் அத்தியக்ஷரவர்களும் தாமும் இவ்வளவு நீடித்தகாலமாய் ஒத்திருந்து செய்ய இடம்பெற்றதைப் பற்றி கேட்போர் மனதில் படத்தக்கவிதமாய்ப் பேசினார்கள்.

கடைசியில் மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்கள் ஆசீர்வாதம் கூற கூட்டம் முடிந்தது.

---

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—ஆப்கானிஸ்தான் விஷயமாய் இங்கிலந்தும் பார்சியாவும் ஒரு உடன்படிக்கைசெய்துகொண்டதாய் ஜனங்கள் நம்பிக்கொள்ளுகிறார்கள். மந்திரியாகிய லார்ட்சாலிஸ் பெரி என்னும் பிரபு அஸ்தி சுரத்தினால் மிகவும் உபாதிப்படுகிறதாகவும் லக்ஷுவடைவாரென்று நம்பிக்கையாயிருப்பதாகவும் செய்தி. அயர்லாந்தில் கடுமையான பஞ்சம் நேரிட்டிருப்பதினால் அதை நிவர்த்திக்கும்பொருட்டு இங்கிலந்தின் பலவிடங்களிலும் நிதி சேகரிக்கப்படுகிறது. பாரடெப்கருடஸ்

* அந்தப் பிரபந்தம் போன மாச நற்போதகத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டது. வாலியம். 32-ன் பக்கம். 33-பார்க்க.



பாரொன் பெருமாட்டி என்னும் துரைசானி ௰௲ ரூபாய் கொடுக்க மனதாயிருக்கிறாராம்.

**ருஷியா.**—ருஷியாவும் பிரான்சும் தத்தம் சேனைகளை அபிவிர்த்திசெய்கிறபடியால், ஜர்மானியாவும் சேனைகளை அதிகமாய்ச் சேர்க்கிறது. நோக்கங்கள் இனிமேல் வெளிப்படும்போல. ருஷிய சக்கரவர்த்தி பிராணனுக்கு பின்னுமோர் சதி நடந்தது. மாரிகாலத்தில் அரண்மனையில் அசனகூடத்துக்கு அடுத்த காவலறைக்குக் கீழாக சுரங்கம் உண்டாக்கி, இராஜகுடும்பத்தார் பகல் அசனத்துக்குக் கூடும் சமயத்தில், சுரங்கத்தில் நெருப்பு வைக்கவே பெரும் அதிர்ச்சியுடன் வெடிக்க, காவலறை சின்னாபின்னமாகி அசனகூடத்தில் ஒரு பெரிய பிளப்புண்டாயிற்று. சக்கரவர்த்தியும் குடும்பத்தாரும் அச்சமயத்தில் அங்கிராததால் தப்பினார்கள். காவலறையிலிருந்த காவற் சேவகரில் 5-பேர் இறந்து 39-பேர் பங்காயப்பட்டார்கள். மகா கொடிய அக்கிரமச் செய்கையல்லவா?

**இந்தியா.**—அயர்லாந்துப் பஞ்சநிவிர்த்திக்காக இந்தியாவிலும் அங்கங்கே பணம் சேகரிக்கப்படுகிறது. ஐதிராபாத்தில் கூடிய கூட்டமொன்றில் அந்த வகைக்காக நிஸாம் அரசர் ௫௲ ரூபாயும் மற்றொரு பிரபுவும் குடும்பத்தாரும் ௲ ரூபாயும் ஸ்ரீ சாலர்சிங்கும் குடும்பத்தாரும் அது ரூபாயும் கொடுத்தார்கள். பின்னும் மற்றவர்கள் கொடுத்ததுஞ் சேர்த்து ௰௲ ரூபாய்க்குமேல் வந்தது.

**ஆப்கானிஸ்தான்.**—ஆப்கானிஸ்தானில் முன் கலகஞ்செய்தவர்கள் அடங்கிப்போனாலும், இன்னும் அவ்விடத்தில் நிலையான சமாதானமுண்டாகவில்லை. மஹம்மது ஜான், மஹம்மது ஆசான்கான், அயூப்க்கன் முதலிய தலைவர்கள்; சிப்பாய்களுடனும் பீரங்கிகளுடனும் அங்கங்கே தாணயம்பண்ணிக்கொண்டும், சேனைக்கு வேண்டிய போஜனாதிகள் சவதரித்துக்கொண்டும், ஆட்கள் சேர்த்துக்கொண்டும் கலகத்துக்கு பிரயத்தனஞ்செய்து திரிகிறதாகச் செய்தி. பிரிட்டிஷ் துரைத்தனத்தாரும், சமயத்துக்கேற்ற யோசனையோடு, அதிக சேனைகள் யுத்தஸ்தானங்களில் வந்து சேரும்படி வேண்டும் ஏற்பாடுகள் செய்கிறதாகவும், பாதைகளை ஒப்பஞ்செய்யும்படி வேண்டிய பிரயத்தனங்கள் செய்கிறதாகவும் தெரிகிறது. துரைத்தனத்தார் எவ்வளவு தயாளசிந்தை ஆப்கானியருக்குக் காண்பித்தாலும் அவர்கள் இன்னும் குரூரமனமுடையவர்களாகவேயிருக்கிறார்கள். தாங்கள் யோசிக்கிற காரியம் வீணென்றும் துரைத்தனத்தாரை மேற்கொள்வது தங்களால் முடியாத காரியமென்றும் கடைசியில் கண்டுணர்வார்களென்பதற்கு ஐயமில்லை.

---

மார்ச்சுமீ நாள் 31. மாசிமீ 20உ-முதல், பங்குனிமீ 20உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | உ0 | எல்லாரும் பாவஞ்செய்திருக்கிறார்கள். ரோ. 3: 23. |
| செ | 2 | உக | திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார். சங். 146: 9. |
| பு | 3 | உஉ | பாவத்தின் சம்பளம் மரணம். ரோ. 6: 23. |
| வி | 4 | உங | ஆசரிப்புநாளில் என்னசெய்வீர்கள்? ஓசியா 9: 5. (பிர. 12: 14. |
| வெ | 5 | உச | ஒவ்வொரு கிரியையும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். |
| ச | 6 | உரு | ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள். ரோ. 12: 17. |
| ஞா | 7 | உசா | எல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிகிறோம். ஏசா. 53: 6. |
| தி | 8 | உஎ | நம்பிக்கை வெட்கப்படுத்தாது. ரோ. 5: 5. |
| செ | 9 | உஅ | தேவனுக்குப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள். பிர. 8: 12 |
| பு | 10 | உகூ | நாம் அவர் பாதைகளில் நடப்போம். ஏசா. 2: 3. |
| வி | 11 | ங0 | மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை. ரோ. 8: 7. |
| வெ | 12 | க | நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். சங். 51: 10. |
| ச | 13 | உ | உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1 கொ. 6: 20. |
| ஞா | 14 | ங | மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். 1 பே. 5: 5. |
| தி | 15 | ச | அதிகாலமே உம்மைத் தேடுகிறேன். சங். 63: 1. |
| செ | 16 | ரு | சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். எபே. 6: 11. |
| பு | 17 | சா | கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. சங். 55: 22. |
| வி | 18 | எ | அவருடைய அறிவு அளவில்லாதது. சங். 147: 5. (1 கொ. 10: 31. |
| வெ | 19 | அ | எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். |
| ச | 20 | கூ | நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. பிலி. 3: 20. |
| ஞா | 21 | க0 | கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள். சங். 4: 5. |
| தி | 22 | கக | முக்கியமான வரங்களை நாடுங்கள். 1 கொ. 12: 31. |
| செ | 23 | கஉ | உம்முடைய இரட்சிப்பினால் களிகூருவேன். சங். 9. 14. (15: 34. |
| பு | 24 | கங | பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொள்ளுங்கள். 1 கொ. |
| வி | 25 | கச | நீதி ஜீவனுக்கேதுவாகிறது. நீதி. 11: 19. (53: 3. |
| வெ | 26 | கரு | அவர் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார். ஏசா. |
| ச | 27 | கசா | உன்னைக் காக்கிறவர் உறங்கார். சங். 121: 3. (யோபு 19: 25. |
| ஞா | 28 | கஎ | என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன். |
| தி | 29 | கஅ | என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். யோவா. 15: 9. |
| செ | 30 | ககூ | பூரண அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். கொலோ. 3: 14. |
| பு | 31 | உ0 | எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். சங். 90: 14. |

## விசேஷ நாட்கள்.

7. லெந்தென்னும் நாட்களில் 4-ம் ஞாயிறு.
10. அமாவாசை.
14. லெந்தென்னும் நாட்களில் 5-ம் ஞாயிறு.
21. லெந்தென்னும் நாட்களில் 6-ம் ஞாயிறு.
25. பரி. கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.
26. பெரிய வெள்ளிக்கிழமை. (பௌர்ணமி.)
28. உயிர்த்தெழுந்த திருநாள்.

# நற்போதகம்.



## உபாகமம்.

### 25. அதிகாரம்.

1—3. குற்றவாளிகளை அடிப்பதைப்பற்றி.

1. "நீதிமானை நீதிமான் என்றும்." யாத்தி. 23: 7. நீதி. 17: 15.

2. "பாத்திரவானானால்" எபிரேயு மூலத்தில் "மகனானால்" என்றிருக்கிறது. இதுபோல் 3: 18. 1 சா. 20: 31.

முதுகில் கம்பினாலாவது பிரம்பினாலாவது அடிப்பார்கள். நீதி. 10: 13. 19: 29. 26: 3.

3. நியாயப்பிரமாணத்தை யூதர்கள் எழுத்துப்படி கைக்கொள்ளுகிறோம் என்று காட்ட 39-அடிக்கு அதிகம் அடிக்கமாட்டார்கள். 2 கொரி. 11: 24. "நாற்பது" என்பது நியாயத்தீர்ப்பின் நிறைவான அளவைக் குறிக்கிறது ஆதி. 7: 12. எண். 14: 33, 34. ஆனால் இவ்விடத்தில் "நாற்பதுக்கு" வேறு மூகாந்தரம் சொல்லியிருக்கிறது. அதாவது "உன் சகோதரன்...தோற்றுவான்." இதற்கு அடிமைகளைப்போல அடிக்கக் கூடாது என்றர்த்தம். யூதனை அடிக்கும்போது, இதைக் குறித்த நியாயப்பிரமாணம் மீறிப்போகவிடாதபடி நியாயாதிபதி தப்பாமல் கூடவே நிற்கவேண்டும்.

4. 1 கொரி. 9: 9. 1 தீமோ. 5: 18. ஓசி. 10: 11. கிரேக்கரும் மற்றும் அஞ்ஞானிகளும் வேலைக்கு உபயோகப்படும் மிருகங்களை அநியாயமாய் வாய்கட்டுவார்கள். அதினால் ஏழை மிருகங்கள் தண்ணீர் குடியாமலும் நன்றாய் மூச்சுவிடாமலும் நெடுநேரம் தவித்து வேதனைப்படும். இந்துக்களுக்குள்ளும் இந்தக் கெட்ட வழக்கமுண்டு. இப்படிச் செய்கிறவர்களை கிரிமினல் குற்றத்துக்குட்படுத்தி தண்டிக்கும்படி சர்க்கார் சட்டங் கட்டுவார்களானால் உத்தமமாயிருக்கும்.

இதே விலக்கப்பட்டிருக்கும்போது, பகிடிக்காக ஓணன் கண்க
ளைக் கட்டுவதும், பிள்ளைகள் கையில் குருவிக்குஞ்சுகளைக் கொடுத்து
விளையாடச் செய்வதும், தட்டாரப் பூச்சிகளையும் மினிமினிப் பூச்சி
களையும் பிடித்து இழைகோர்த்து விடுவதும் மிஞ்சின அக்கிரமம் என்று
திட்டமாய் அறிந்துகொள்ளவும், கர்த்தர் இவைகளை நியாயத்திலே கொ
ண்டு வருவார். இவ்வகைச் செய்கை தேவனுக்குப் பிரியமில்லை என்
பது நிச்சயமான காரியம்.

5—10. இந்தச் சட்டம் இஸ்ரவேலருக்கு மட்டுமுரியதல்ல. பூர்
வீகத்திலும் நவீனத்திலும் அநேக கீழ்தேச சாதியாருக்குள் வழங்கி
வந்திருக்கிறது. ஆதி. 38: 8. தென் ஆப்பிரிக்க சனங்கள், அரபர், துரு
கியர், காக்கேஷியர் இவர்களுக்குள் நாளதிலும் இந்த வழக்கம் நடக்
கிறது. ஆதி. 38-அதி-னால் இது மோசேயால் உற்பத்திசெய்யப்படாமல்
முன்னமே இருந்துவந்ததென்று விளங்கும். பூர்வத்தாருக்குள் பிள்ளை
யில்லாமற்போவது மெத்தவும் இளப்பம். ஆதி. 16: 4. பேரில்லாமற்
போவது பெரிய குறையாக எண்ணப்பட்டது. (உபா. 9: 14. சங்கீ. 109:
12—15.) இதினாலே இவ் வழக்கமுண்டானது. (தள்ளுதல் சீட்டு வழக்
கத்தைப்போல) இதையும் மோசே மட்டுக்கட்டுகிறார். எப்படியென்
றால் "ஒன்றாய்க் கூடியிருக்கும்போது" என்கிறார். கலியாணம்பண்
ணாமல் நழுவிக்கொள்ள இடம் வைத்திருக்கிறார்.

இந்த வழக்கம் கிறிஸ்துநாதர் காலத்திலும் வழங்கி வந்தது.
மத். 22: 25.

5. "புத்திர" எபிரேயுவில் "மகன்" என்றிருக்கிறது. ஆனாலும்
பெண்பிள்ளைப்பிள்ளை இருந்தாலும் போதும். ரபிமார் பெண்பிள்ளையை
யும் சேர்த்தே எப்போதும் அர்த்தம்பண்ணுவார்கள். எண். 27: 1—11.

"காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி." இது மரித்துப்
போனவனுடைய பெண்சாதியின் பேரிலும் சொத்தின்பேரிலும், மன
மில்லாச் சகோதரனுக்கிருக்கிற பாத்தியதையை எடுத்துப்போடுவ
தைக் காட்டுகிற அடையாளமாம். ஒன்றின்பேரில் காலை வைக்கிறது அதை மிதிப்
பது கர்த்தத்துவத்துக்கும் கையாட்சிக்குமான அறிகுறியாம். ஆதி.
13: 17. யோசு. 10: 24. அப்படியே பாதரட்சையைக் கழற்றி வேறொரு
வருக்குக் கொடுப்பது, தனக்குரிய பாத்தியதைகளையும் சுதந்தரங்களை
யும் இழந்து வேறொருவருக்குக் கையளித்துவிடுவதைக் காட்டினது.
ரூத். 4: 7, 8. சங்கீ. 60: 8. 108: 9. இந்த வழக்கத்தை வைத்துக்கொ
ண்டுதான், பூதவியாக்கியானிகள், "ஏதோமின்மேல் என் பாதரட்
சையை எறிந்துபோடுவேன்" என்ற வாக்கியத்துக்கு ஏதோமைச் சுதந்
தரித்துக்கொள்ளுவேன் என்று அர்த்தம்பண்ணினார்கள். இந்த வழக்
கம் தற்காலத்திலும் அரபருக்குள் வழங்கிவருகிறது. பெடுவன்அரபி,
ஓடிப்போய்விட்ட தன் பெண்சாதிக்கு தள்ளுதல் சீட்டுக்கொடுக்கிற



போது, "அவள் என்னுடைய மிதியடி, நான் அவளை உதறி எறிந்து
விட்டேன்" என்று வழக்கமாய்ச் சொல்லுவான்.

10. அல்லது வெற்றுக்காலன் வீடு என்றும்அர்த்தப்படும். வெற்
றுக்கால் மிக நீசமான ஸ்திதிக்கு அடையாளமாக வழங்கியது. 2 சா.
15: 30.

11. இத்தால் அவன் சந்தானமற்றுப்போகப்பண்ணுகிறாள். யாத்.
21: 22. இவ்வகை அக்கிரமம் அந்தக்காலத்தில் நடந்துவந்தது.

13. பெரிய கற்களால் வாங்கவும், சிறிய கற்களால் விற்கவும்.

15. 4: 26. 5: 16.

17—19. யாத்தி. 17: 8. எண். 14: 45. அமலேக்கியர் தேவனுக்
கும் அவரது இராச்சியத்துக்கும் விரோதமான பகைஞராயிருந்தார்
கள். மோசேயின் தீர்ப்பு கடைசியாக சவுலால் நிறைவேற்றப்பட்ட
து. 1 சாமு. 15-அதி.

---

## 26. அதிகாரம்.

முந்திச்சொல்லிய சட்டங்களையும் கடமைகளையும் பாத்தியங்களை
யும் மறுபடி கூறிவருவது இந்த அதிகாரத்தோடு முற்றுப் பெறுகிறது.
இஸ்ரவேலருடைய கீழ்ப்படிதலுக்குத்தக்கதாக தேவனுடைய ஆசீர்
வாதமுமிருக்கும். இது சமயம் பிடித்து 12-ல் மூன்றாம தசமபாகத்
தைப்பற்றிச் சொல்லுகிறார்.

2. முதற்பலன்களைக்குறித்து லேவி. 23: 10-முதல் பார். இங்கே
சொல்லிய முதற்பலன்: பஸ்கா பெந்தெகோஸ்தே பண்டிகைகளில்
அறுப்பின் ஆசீர்வாதங்களுக்கு நன்றியறிதலாகச் செலுத்தப்பட்ட
வைகளுக்கும் (யாத்தி. 22: 19. லேவி. 23: 10—17). எண். 18: 8-முதல்
சொல்லிய காணிக்கைகளுக்கும் வித்தியாசமானவைகளாம். அவைகள்:
எண்ணெய், மா, திராட்சரசம் இவற்றைப்போல, பூமியின் விளைவை
பக்குவப்படுத்தினவைகளையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. இந்த
வாக்கியத்திலோ, அப்போதான் எடுத்த பச்சையான முதற்பலன்களைச்
சொல்லியிருக்கிறது. மேலும் மேலே சொல்லியவை ஒரு ஜாதியாருக்
கடுத்த பப்ளிக் காணிக்கைகளாயிருந்தது. இந்த அதிகாரத்திற் சொல்லி
யதோ தனிமையாய் அவனவனுக்கடுத்த சொந்தக் காரியமாயுள்ளது.
முதற்பலன்கள் முழுமையும் வேலைநடத்துகிற ஆசாரியனுக்குரியது.

5. "தகப்பன்." யாக்கோபாம். ஆபிரகாமின் வம்சம் யாக்கோ
பால் தான் ஒரு ஜாதியானது. ஏசா. 43: 22, 28. யாக்கோபு சீரியாவில்
லாபானோடு நெடுங்காலம் வாசம்பண்ணி வந்ததினாலே (ஆதி. XXIX—
XXXI), சீரியாதேசத்தான் என்று அழைக்கப்படுகிறான். (அப்படியே

நமது கர்த்தர் நெடுங்காலமாய் நாசரேத் ஊரில் வாசம்பண்ணினதினாலே நசரேயன் என்றழைக்கப்பட்டாரே.) அதுவுமல்லாமல் முக்கியமாய் யாக்கோபு சீரியாவில் கலியாணம்பண்ணி பிள்ளைகளையும் பெற்று வாழ்ந்திருந்ததினாலே (ஓசி. 12: 12), மற்றெந்த தேசத்தைப் பார்க்கிலும் சீரியாதேசத்தானென்று சொல்லப்படுவதே சரி. சீரியாதேசத்தான் என்பது யாக்கோபைத்தான் குறிக்குமென்பதற்கு யோபு 29: 13. நீதி. 31: 6. சங்கதி தொடரணைக்காக ஆதி. 31-அதி. 35: 3. 42: 2. 43: 2, 8 பார்.

“எகிப்துக்குப்போய்” ஆதி. 46-அதி. “சாதியானான்.” உபா. 7: 7.

6, 7. யாத்தி. I, II, IV-அதி.

8. யாத்தி. XII, XIII.

“அடையாளங்கள், அற்புதங்கள்.” 4: 34.

9. “பாலும் தேனும்.” யாத்தி. 3: 8.

11. “சந்தோஷப்படுவீர்களாக.” 12: 7, 12. 16: 11.

12. தசமபாகங்களைப்பற்றி. ஆடுமாடுகளில் பத்திலொன்றும் நிலத்தின் வருமானங்களில் பத்திலொன்றும் கர்த்தருக்குரியது. லேவி. 27: 30—31. இந்தத் தசமபாகம் லேவியருடைய ஜீவனார்த்தத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டது. எண். 18: 20—25. இந்தத் “தசமபாகத்தில் பத்திலொன்றை” ஆசாரியருக்கு லேவியர் கொடுக்கவேண்டும். எண். 18: 26-முதல். பின்னும் உபா. 12: 6, 17. 14: 22. 14: 28, 29 பார்.

இந்த வாக்கியத்திலோ, ஒவ்வொரு மூன்றாம் வருஷத்திலும் இரண்டாம் தசமபாகம் அல்லது பயிர்வகைத் தசமபாகமானது தர்மவகையில் செலவிடப்படும்படி கட்டளையிடப்பட்டது. இந்தத் தசமபாகம்: மற்ற வருஷங்களில்போல ஆசரிப்புக்கூடாரத்துக்குக் கொண்டுபோகப்படாமல், அவரவர் வீடுகளிலே செலவிடப்படவேண்டும். 14: 28, 29. இந்த மூன்றாம் வருஷத்து தசமபாகமானது, உள்ளபடி (வித்தியாசமான வகையாய் உபயோகிக்கப்பட்ட) ஒழுங்குப்படியான இரண்டாம் தசமபாகமாயிருந்தபோதிலும், மூன்றாம் தசமபாகம் என்று வழக்கமாய்ச் சொல்லப்பட்டு வந்தது. தோபித். 1: 7, 8. ஏழாம் வருஷம் ஓய்வு வருஷமானதாலும் அதில் தசமபாகம் ஒன்றும் செலுத்தப்படாததாலும், (யாத்தி. 23: 10), இவ்விடத்தில், “தசமபாகம் செலுத்தும் மூன்றாம் வருஷம்” என்பது ஒவ்வொரு ஏழு வருஷத்தின் மூன்றாம் வருஷமும் ஆறாம் வருஷமுமாயிருக்கவேண்டும். இந்த ஒவ்வொரு மூன்றாம் வருஷத்திலும், மூன்றுவருஷத்து தசமபாகக் கணக்குகளெல்லாம் கொடுத்துத்தீரவேண்டும். அப்போதான் 12-ல் “மூன்றாம் வருஷத்திலே...கொடுத்துத் தீர்ந்தபின்” இஸ்ரவேலன், 13-ம் வாக்கியமுதல் சொல்லிய அறிக்கையை தேவனுக்கு முன்பாகச் சொல்லத்தக்கவனாவான். மத். 23: 23.



யூதசாஸ்திரிகளும் இப்படியே அர்த்தம்பண்ணி, ஒவ்வொரு நான்காம் வருஷத்திலும் ஏழாம் வருஷத்திலும் வருகிற பஸ்காப்பண்டிகைக்கு முன்னான ஆயத்தநாளில், பத்தியுள்ள இஸ்ரவேலன் முந்திய மூன்று வருஷங்களிலும் தேவனுக்குச் செலுத்தவேண்டியவைகளையெல்லாம் கிரமமாயும் உண்மையாயும் செலுத்தியிருக்கிறானா என்று தன்னைத் தானே சோதித்து, பாக்கிகளிருந்தால் சரிக்கட்டும்படி செய்வார்கள். அப்படியே இஸ்ரவேலன் எருசலேமிலிருந்து தன் வீட்டுக்குத் திரும்புமுன்னதாக, பஸ்காப்பண்டிகையின் கடைசிநாளில் சாயுங்காலப் பலிசெலுத்தும்போது, 13-முதல் 15-வரையுள்ள அறிக்கையைச் சொல்லவேண்டும். தசமபாகங்களைக் குறித்தும் அப்படியே அறிக்கை செய்யவேண்டும்.

கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குத் தசமபாகம் செலுத்திவருவார்களானால் எத்தனை நன்றாயிருக்கும்.

14. “துக்கங்கொண்டாடும்போது” இஸ்ரவேலன் தீட்டாயிருக்கும்போது, லேவி. 7: 20. 21: 1.

“இழவுகாரியம்” அடக்கம்பண்ணும் செலவுக்கும் விசேஷமாய் அழுகிறவர்களுக்குச் சாப்பாடுசெய்யும்படிக்கும். எரே. 16: 7. எசே. 24: 17. ஓசி. 9: 4. தோபித். 4: 17.

15. ஏசா. 63: 15. 66: 1.

16—19. உபாகமத்தின் இரண்டாவதும் நீண்டதுமான பிரசங்கம் இதில் முடிவதால் அதற்கு கனியான எச்சரிப்பு அடங்கிய ஒரு முடிவுரை சொல்லுகிறார்.

17. “வாக்கு.” யாத்தி. 24: 7. யோசு. 24: 14—25.

18. யாத்தி. 19: 5, 6.

19. எரே. 13: 11. 33: 9.

“பரிசுத்த” 7: 6 வியா. பார்.

# இரக்ஷண்ய மனோகரம்.

## தேவாரம்.

### நையடைப் பதிகம்.

பண், இந்தளம்.

ஓதியே சுருதி தினந்தினம் படித்தும்
உணர்விலா அலகொழுக் குவர்த்து

தீதிலே பயின்று செந்நெறி யிகந்த
தீயனேன் உய்யு மாறறியேன்
கோதிலா நீதிக் கொழுங் கதிர்ப் பிழம்பே
குணிப் பருங் கருணை வாரிதியே
ஆதியே அடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

பத்தனாய்ப் பாடேன் சித்தனா யொழுகேன்
பகலெலாம் பாவமே புரிதி
எத்தனாய்க் கழித்தேன் இன்றுளேன் நாளை
இலெனென வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரருள் அல்லால்
பிழைக்குமா றில்லை யாதலினால்
அத்தனே யடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

கலைக்கணுக் கரிய காட்சியே சிரத்தைக்
கண்ணினுங் கெளியகண் மணியே
புலைக்குடி லோம்பும் புன்மதி யதனால்
பொருவரும் பொழுதை வீண் போக்கி
உலைக்கம டம்போல் உலகமாயத்தை
உவந்த நின்றூடனென் றுளச்சான்
றலைக்க லொந் தடியேன் நின்சரணடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

மண்டலத் தெனைப்போற் பாவியுமில்லை.
மற்றுனைப் பொருவ தோர் தெய்வம்
உண்டொருக் காலென் றுணர்வுளார் எவரும்
உரைத்திடார் உண்மை யாதலினால்
தொண்டருக் கிரங்கி மனுவுரு வெடுத்த
தொல்லை மூலப்பரஞ் சுடரே
அண்டருக் கரசே நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

வெப்புறு பாவ விடத்தினைப் பருகி
மெய்யறி விழந்துனை மறந்தேன்
அப்புற வுலகம் அடுக்கில் என்செய்கேன்
ஆண்டெனைக் காதர வியாரோ
ஒப்பற வுயர்ந்தொரு தனிமுதலே
உணர்வுடை ஒலத்துக் குருகும்
அப்பனே அடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.



எனுதியா னென்னும் உடல்பொருள் ஆவி
இவை யொரு மூன்றையு மின்னே
உனதென உனக்கே கையளித் தெளியேன்
உன்னருட் பற்றையே உவந்து
மனுதி தத்துவங்கட் கதீதமாய் அன்பர்
மனத்தவி சுகந்து வீற்றிருக்கும்
அனுத ரக்ஷகனே நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

படித்தொழும் பாகிப் பதைத்தழல் வேலைப்
பரிந்துன தருள் விழி பாய்ப்பிக்
குடித்தொழும் பாக்கிக் கொண்ட கோமானே
குன்றிடா விழுந்திக் குலையே
மிடித்தொழும் பினையும் அகற்றிடா தென்னே
விசயம் ஏதும் பிறி தளவோ
அடித்தொழும் பலனே அப்பனே அடியேற்
கஞ்சலென் றடைக்கலம் அருளே.

என்புதோல் போர்த்த யாக்கையைச் சதமென்
றெண்ணி யாத்துமத்தை யெட்டுணையும்
முன்பின் எண்ணாது புரிந்த தீவினையென்
முன்பூரின் றுடற்றலால் முதிர்பேர்
இன்பநாட் டரசே புண்ணியப் பொருப்பே
இருளிலம் புதைத்தெழுந் தோங்கும்
அன்பின் ஆர்கலியே நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

புறத்தொரு புகலுமில்லை உனையல்லால்
பொய்யுறும் அலகையின் புணர்ப்பாம்
மறத்தினிற் புடையுண் டயருவேன் கருணை
மாரியை மூடுதல் முறையோ
மறத்தியோ மாறுமெய்த்திரு வாக்கை
வாதனே அபயனே வன்மை
அறத்தனி முதலே நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

மருள்மனோ வாஞ்சைச் சுழலிலே யுழலும்
வறிய புன்றிரணம் என்னாவி
இருள்மலா தியுள் உய்த்திடில் அந்தோ
என்செய்கேன் ஏழையின் அடிமை
தெருள்மனோ கரமே ஜீவ தாரகமே
செங்குண மேருவே சீர்சால்

அருள்மகோ ததியே நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 10

வேதமே வேத விளக்கமே விளக்கின்
விழுத்தகு ஜோதியே விமல
போதமே போதங் கடந்த மெய்ப்பொருளே
பொருள் புலப்பட வெளிவந்த
நாதமே யூதகுல நராதிபனே
நன்னெறி பிழைத்தல குழலும்
ஆதனன் அடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 11

உருளுறு சகடம் போல வென்மனமும்
ஒருவழி நிலையிலா துழலும்
மருளுறு மூலகோ டலகையும் கொடிய
மாயமாம் வலையிடைப் படுத்தும்
தெருளுறு சுடரோ நின்னடிக் கன்பு
செய்து நான் உய்யு மாறெங்ஙன்
அருளுறு மெர்தாய் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே. 12

வாழியாரண நூல் வரம்பெலாம் இகந்து
மதியிலேன் மடமையால் மயங்கிக்
கீழியான் பிழைத்த பிழையெலாம் பொறுத்துன்
கிருபை தந்தருளெனக் கெஞ்சி
ஊழியாய் ஊழிக்குறையுளா யெவையும்
உலப்பினும் உலப்பிலாத் தரும
ஆழியாய் அடியேன் நின்சரண் அடைந்தேன்
அஞ்சலென் றடைக்கலம் அருளே.

கையடை முற்றிற்று.

---

## நித்திய தாரகம்.

பண், இந்தளம்.

"கிறிஸ்துவே யெனக்கு எல்லாமாயிருக்கிறார்."

சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமியமும் இலதாய்ச்
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ் கின்ற திரித்துவமே
எத்தால் நாயடியேன் கடைத் தேறுவன் என்பவந்தீர்த்
அத்தா உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே.

எம்மாவிக் குருகி உயிர் ஈந்துபுரந்த தற்கோர்
கைம்மா றுண்டுகொலோ கடை காறுங்கை யடையாய்ச்



சும்மா ரக்ஷணைசெய் சொல்[ சுதந்தரம் யாது மிலேன்
அம்மான் உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 2

பித்தேறிச் சுழலும் ஜெகப் பேய்பிடித்துப் பவத்தே
செத்தேன்; உன்னருளாற் பிழைத்தேன் மறு ஜென்ம மதாய்
எத்தோ டங்களையும் பொறுத் தென்று மிரங்குகவென்
அத்தா உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 3

துப்பார் சிந்தையிலேன் மறைந் தீட்டிய தொல் வினையும்
தப்பாதே வெளியாம் கடு நாளெனைத் தாங்கிக்கொள்ள
இப்பார் உய்யவென் றே மனுக் கோலம் எடுத்த எங்கள்
அப்பா உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 4

மையார் கண்ணிருண்டு செவி வாயடைத்துக் குழறி
ஐயால் மூச்சொடுங்கி உயிர் ஆக்கைவிட் டேகிடும்நாள்
நாயேல் கைநெகிழேன் உனை நாளுண் டஞ்சலென
ஐயா உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 5

வான்றோய்ந் திட்டதன்றோ தமியேன்புரி வல்வினைதான்
ஏன்றான் இவ்வுலகில் ஜெனித் தேனென ஈடழிவேன்
மூன்றாய் மூன்றுமொன் றாய்த் தொழில் மூன்றும் இயற்றிநின்ற
ஆன்றோய் உனையல்லால் எனக் கார்துணை யாருறவே. 6

நீரசேர் வெம்பவமாங் கடல் மூழ்கியதீயனெமைக்
கரைசேர் துய்க்கவென்றே புணை யாயினை கன்னிலியான்
பரசேன் பற்றுகிலேன் எனைப் பற்றியப் பற்றுவிடாய்
அரசே உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 7

தாயே தந்தைமா குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான் கதி வேறில்லை நின்னையன்றி
ஏயே என்றிகழும் உல கோடெனக், கென்னுரிமை
ஆயே உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 8

என்னோ பாவியர்தான் உலகத்திலே யென்னினுமுன்
பொன்னே ருங்கழற்கே புகலாக வந்தடைந்தேன்
மன்னே ரக்ஷணிய வயிர் ஊட்டி மனுப்புரக்கும்
அன்னே உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 9

ஈண்டே யெனுள்ளத்தில் விசுவாச விளக்கிலங்கத்
தூண்டா யென்விலங்தோ மயல் சூழ்ந்து கெடுத்திடுங்காண்
மாண்டா யெம்பிழைக்கா உயிர்த் தாயெமை வாழ்விக்கவே
ஆண்டாய் உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே. 10

முற்றிற்று.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
வியாக்கியானம்.

### ரு-ம் அதிகாரம்.

ஞானஸ்நானத்தில் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள்.

(தொடர்ச்சி.)

வினா. ஆடம்பரம், வீண்மகிமை என்பவைகளின் கருத்து என்ன?

விடை. 1. ஆடம்பரம் என்பது ஜீவனத்தின் பெருமையும்; ஆஸ்தி மேன்மை என்பவற்றின் டம்பமும், லௌகீகக் கீர்த்தியும், அதிகாரப் பிரியமும், இருதயத்தை மயக்கி தேவனிடத்திலிருந்து பிரியச்செய்கிறதுமானவைகளே.

2. வீண்மகிமை என்பது வெற்றின்பங்களும், கொண்டாட்டங்களும், வேடிக்கையான உடைகளும் வீண் அலுவல்களுமே.

இவைகளை நாம் வெறுத்துவிடவேண்டும். அதாவது வெளித்தோற்றமான நடக்கையிலும், சம்பாஷணையிலும் மாத்திரமல்ல, நம்முடைய உள்ளான ஆசை இச்சைகளிலும் அவைகளை எதிர்த்துத் தள்ளவேண்டும்.

வினா. இதின் அவசியத்தையும், கடமையையும் வேதவாக்கியங்களைக் கொண்டு காண்பி?

தீமைசெய்யத் திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக. யாத். 23: 2.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாதேயுங்கள். ரோ. 12: 2.

கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாதேயுங்கள். எபே. 5: 11.

கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவன். 2 தீமோ. 2: 19.

உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. யாக். 4: 4.

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். 1 யோவா. 2: 15.

வினா. "இந்தப் பொல்லாத லோகம்" என்று ஏன் சொல்லுகிறாய்?

விடை. உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. 1 யோவா. 5: 19.

வினா. "பாவமான மாம்ச இச்சைகள்" எவை?



விடை. கெட்ட குணங்கள், நினைவுகள், ஆசைகளையுடைய முழுவதுங் கெட்ட சுபாவமே.

இச்சையானது கர்ப்பந் தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். யாக். 1: 15.

ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டுவிலகுங்கள். 1 பேது. 2: 11.

மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. 1 யோவா. 2: 16.

நாம் பாவ ஆசைகளுக்கு இணங்கவாவது, துர்க்குணங்களுக்கு இடங்கொடுக்கவாவது, கெட்ட நடத்தைகளை அப்பியாசிக்கவாவது செய்யாமல், நம்முடைய பாவஇச்சைகளைக் கீழ்ப்படுத்தி அழிக்கும்படி கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும்.

பாலியத்துக்குரிய இச்சைக்கு நீ விலகியோடு. 2 தீமோ. 2: 22.

அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியுமுள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணுங்கள். தீத்து 2: 12.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் அடைந்த தண்டனை, பொல்லாங்கானவைகளை இச்சிக்கிறவர்களுக்குப் பயங்கரமான திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. 1 கொரி. 10: 6. எண். 11: 4, 33, 34.—கிறிஸ்துநாதர் நம்மை உலகம், மாம்சம், பிசாசு ஆகிய இந்த மூன்று சத்துராதிகளினின்று இரட்சிக்கும்படி மரணமடைந்தார் என்றும், இந்தப் போர்களில் நம்மை ஆதரிக்க அவருடைய கிருபை வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் எண்ணுகிற எண்ணம் சத்துராதிகளுக்கு விரோதமாய்த் தைரியமாய்ப் போர்செய்ய நம்மை ஏவவேண்டும்.

அவர் நம்மை இப்பொழுது இருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். கலா. 1: 4.

ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். கலா. 5: 16.

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். கலா. 5: 24.

வினா. உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காக வாக்குத்தத்தம் செய்த இரண்டாவது காரியமென்ன?

விடை. நான் கிறிஸ்துமார்க்க சத்தியங்களெல்லாவற்றையும் விசுவாசிப்பேன் என்பதே.

[மெய்விசுவாசத்தையும் அதன் அவசியத்தையும் பற்றி 4-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.]

விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். மாற். 16: 16.

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். எபிரே. 11: 6.

வினா. உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காக வாக்குத்தத்தம் செய்த மூன்றாவது காரியமென்ன?

விடை. நான் தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொண்டு என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடப்பேன் என்பதே.

வினா. தேவனுடைய பரிசுத்த சித்தம் எங்கே தொகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது?

விடை. பத்துக்கற்பனைகளில் தொகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் பரலோகராச்சியத்தில் பிரவேசிப்பான். மத். 7: 21.

நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள். மத். 19: 17.

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிகப் பாக்கியவான்கள். லூக். 11: 28.

நாம் அவைகளை நமது நடக்கைக்குப் பிரமாணமாக வைத்து, நாடோறும் அவைகளின்படியே நடக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாம் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபே. 2: 10.

வினா. எவ்வளவுகாலம் இந்தக் கீழ்ப்படிதல் இருக்கவேண்டியது?

விடை. என் ஜீவகாலமெல்லாம் இருக்கவேண்டியது. நம்முடைய பெற்றோருக்கும், எஜமான்களுக்கும், உபாத்திமாருக்கும் கீழ்ப்பட்டிருக்கிற இளம்பிராயத்தில் மாத்திரமல்ல, நாம் பெரியவர்களாய் வளர்ந்து, அவர்களுடைய ஆளுகைக்கு நீங்கினவர்களாயிருக்கும்போதும் இந்தக் கீழ்ப்படிதல் அவசியமானது.

உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாக பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன். லூக். 2: 71.

வினா. உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காகச் செய்த வாக்குத்



தத்தத்தின்படி நீ விசுவாசிப்பதும் நடப்பதும் உன் கடமையென்று நினைக்கிறதில்லையா?

விடை. அப்படியே நினைக்கிறேன். தேவனுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன். நம்முடைய பரமபிதா நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு இந்த இரட்சணிய நிலைமைக்கு என்னை வரவழைத்ததற்காக அவருக்கு நான் முழு இருதயத்தோடே ஸ்தோத்திரம் செலுத்தி, என் ஜீவகாலமெல்லாம் அதிலே நிலைகொண்டிருக்கும்படி தம்முடைய கிருபையை எனக்குத் தந்தருளவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

வினா. நீ இவைகளை விசுவாசிக்கவும், இவைகளின்படி நடக்கவும் ஏன் கடமையுள்ளவனாயிருக்கிறாய்?

விடை. என் தாய்தகப்பன்மார் என் நாமத்தினாலும், என் நன்மைக்காகவும் வாக்குத்தத்தம் செய்தபடியினாலும்; அது என் கடமையென்று தேவனே சொல்லுகிறபடியினாலுமே.

நமக்கு மனந்திரும்புதலும் விசுவாசமும் இல்லாவிட்டால் ஞானஸ்நானம் நமக்குப் பிரயோசனப்படமாட்டாது. நாம் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால் இந்த விசேஷித்த கடமையை அசட்டைசெய்ததைப்பற்றி போக்குச்சொல்ல இடமுமில்லை.

புறம்பாக யூதனானவன் யூதனல்ல. ரோ. 2: 28.

இனிமேலும் நீங்கள் ஆசாரியங்களை நடப்பிக்கிறவர்களாயிருந்தால், ஞானஸ்நானத்துக்குரிய சலாக்கியங்கள் உங்களுடைய தண்டனையை அதிகரிக்கச்செய்யும்; நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு, சேரிவைதைப் பார்க்கிலும் சோதோம் கொமோராப் பட்டணங்களுக்கு சேரிவது இலகுவாயிருக்கும்.

வினா. இவைகளைச் செய்வதற்கு நாம் நம்மிலே தானே திராணியுடையவர்களா?

விடை. நம்மிலே நாம் திராணியுடையவர்களல்ல.

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவா. 15: 5.

தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். பிலி. 2: 13.

அவரிலிருந்தே சகல பரிசுத்த விருப்பங்களும், சகல நல்லாலோசனைகளும் சகல நீதியான கிரியைகளும் உண்டாகிறது.

ஜெபத்தினாலேயே நாம் அவருடைய உதவியைப் பெறக்கூடும். அவர் அளிக்கிற கிருபை போதுமானதாயிருக்கிறது.

வினா. நாம் தேவனை நோக்கி ஜெபம்செய்வதினாலே அவர் தமது கிருபையை நமக்குக் கொடுப்பாரா?

விடை. ஆம், கொடுப்பார்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். மத். 7: 7.

நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய்ச் செபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள். மத். 21: 22.

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? லூக். 11: 13.

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். யோவா. 14: 14.

நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். யோவா. 16: 23.

வினா. ஞானஸ்நானத்துக்கடுத்த ஆசீர்வாதங்களும், நீ அதற்கு அழைக்கப்பட்டதும் இரட்சிப்பின் நிலைமை என்று சொல்லப்படுவானேன்?

விடை. அதினாலே மனுஷஜாதிக்கு இரட்சிப்பு அருளப்படுகிற கிருபை உடன்படிக்கையின் சலாக்கியங்களுக்கு நாம் உட்படுவதினாலேயே.

வினா. இரட்சிப்பு என்பதில் அடங்கியதென்ன?

விடை. பாவஆசை, பாவப் பழக்கம், பாவஆளுகையினின்றும்; பாவத்தின் தண்டனையாகிய நரகத்தினின்றும் தப்புவிக்கப்பட்டு தேவதயவுக்கு கொண்டுவரப்பட்டு, நித்தியஜீவனுக்குப் பாத்திரவான்களாக்கப்படுவதே.

வினா. இந்த இரட்சிப்புக்கு அழைக்கப்படுகிறவர்கள் யார்!

விடை. ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறார்கள்.

பூமியின் எல்லை எங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். ஏசா. 45: 22.

ஓ, தாகமாயிருக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். ஏசா. 55: 1.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். மத். 11: 28.

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். மாற். 16: 15, 16.

மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேந் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. லூக். 24: 47.



ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். யோவா. 7: 37.

வினா. நம்மை அழைக்கிறவர் யார்?

விடை. நம்முடைய பரமபிதா நம்மை அழைக்கிறார்.

செவிகொடாதபடி தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப் போலாவது, (சங். 58: 5.) அழைக்கப்பட்டும் வரமனதில்லாதிருந்தவர்களைப்போலாவது (மத். 22: 3) இராதே. லூக். 14: 18-ல் சொல்லியவர்களைப்போல போக்குச்சொல்லத் தொடங்காதே.—ஆனால் ஆபிரகாமைப்போல, பட்சமும் கிருபையுமுள்ள தேவஅழைப்புக்குக் கீழ்ப்படியுங்கள். (ஆதி. 12: 1, 4.) சாமுவேலைப்போல (1 சாமு. 3: 10.) “சொல்லும்; அடியேன் கேட்கிறேன்” என்று சொல்லு. கிறிஸ்துநாதரைப் பின்செல்லும்படி கற்பிக்கப்படும்போது (மத். 9: 9.) எழுந்திருந்து அவரைப் பின்செல்லு. இன்னம் இடமுண்டு. கிருபையின் கதவு அடைக்கப்படுகிறவரைக்கும் தாமதியாதே.

இது பரிசுத்த அழைப்பு.

அவர் நம்மை பரிசுத்தஅழைப்பினாலே அழைத்தார். 2 தீமோ. 1: 9.

நாம் நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் இந்த இரட்சணிய நிலைமைக்கு அழைக்கப்படுகிறோம். நாம் பெறுகிற ஒவ்வொரு கிருபையும் அவர்மூலமாய், விசேஷமாய் இந்தப் புது கிருபை உடன்படிக்கையின் மூலமாய் வருகிறது. அவரே மத்தியஸ்தர். அவர் தம்மையே பலியாகச் செலுத்தினதினாலே பாவிகளின் இரட்சிப்புக்காக வழியைத் திறந்தார்.

எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. 1 தீமோ. 2: 6.

அவருடைய புண்ணியத்தினாலே பாவமன்னிப்பும், அங்கீகாரமும் உண்டாகிறது. அவரில் பெரிதும் விலைபெற்றதுமான வாக்குத்தத்தங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. பரிசுத்தஆவியின் வரப்பிரசாதங்களும் அவருடைய இரத்தத்தினாலே கொள்ளப்பட்டவைகளாயிருக்கின்றன. அப்படியானால் அவர் எவ்வளவு மேன்மையுள்ளவராயிருக்கவேண்டும்! இந்த இரட்சணிய நிலைமைக்கு என்னை வரவழைத்த பரமபிதாவுக்கு முழு இருதயத்தோடே ஸ்தோத்திரம் செலுத்துகிறேனென்று சொல்லுகிறாய். நீ இப்படி மிகுந்த நன்றியறிதலுள்ளவனாயிருப்பதற்கு நியாயமுண்டு. உன்னுடைய நிலைமையை உன்னைச் சூழ இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுடைய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார். நீ நித்தியஜீவனுக்குரிய ஞானியாகும்படி வேதாகமமும், போதகர்களும், எல்லாக் கிருபையின் சாதனங்களும்

உடையவனுயிருக்கையில்; அஞ்ஞானிகள் நம்பிக்கை இல்லாத
வர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருக்கிறார்
கள். (எபே. 2: 12) என்பதை நினைத்துக்கொள். உன் உதடு
களினால் அவரைத் துதிக்கிறதுமன்றி, உன் ஆவியினாலும் அவ
ரைத் துதித்து, அவருடைய ஊழியத்துக்கு உன்னை ஒப்புக்
கொடுத்து, உன் ஜீவகாலமெல்லாம் அவருக்கு முன்பாக பரி
சுத்தத்தோடும் நீதியோடும் நடந்துகொண்டு; இவ்விதமாய்
உன்னை ஆசீர்வதித்த தேவனைத் துதிக்கிறவனாகக் காணப்படு
வாயாக.

---

## "சோரன் திருடின சத்தியவேதம்."

"அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்
முடைய பாவங்களெல்லாவற்றையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்"
என்ற வேதவசனத்தை வாசித்துக் குணப்பட்டு கிறிஸ்தவனான ஒரு
அரபிய திருடனைக்குறித்து ஒரு போதகர் சொல்லுகிறதாவது;—
கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்ட ஒருவனை அறிவேன். வேத
புஸ்தகம் முதலாவது உற்பத்தியானதேசமாகிய கானான்தேசத்திலுள்
ள லீபனோன் மலையில் அரபியர் குடியிருப்பான ஒரு ஊரில் அவனைக்
கண்டேன். அந்தத் தேசத்தில் ஒருகாலத்தில் பிரகாசித்த வெளிச்சம்
அவபக்தியினாலும் தப்பிதமான கோட்பாடுகளினாலும் மங்கிப்போயிற்
று. தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரராகிய இங்கிலீஷ் ஐயன்
மார் வேதபுஸ்தகம் உற்பத்தியான அந்த இடத்துக்கே வேதபுஸ்தகத்
தைக் கொண்டுபோயிருக்கிறார்கள். இதற்காக தேவனுக்கு ஸ்தோத்திர
முண்டாவதாக. இப்படியாக "இருளிலிருக்கப்பட்ட ஜனங்கள் பெரிய
வெளிச்சத்தைக் கண்டார்கள். மரணஇருளின் திசையிலிருக்கிறவர்
களுக்கு வெளிச்சம் உதித்தது" என்று ஏசாயா சொல்லிய தீர்க்கதரி
சனம் ஒருவாறு இங்ஙனம் நிறைவேறினதாகக் காண்கிறோம் என்ப
தே. மேலும் ஷை போதகர் அந்த அரபியனைப் பார்த்து, உன்னுடைய
இனத்தார் அயலகத்தார் எல்லாரும் அறிவீனத்திலும் தாழ்வான ஸ்தி
தியிலும் இருக்கும்போது நீ என்ன வகையாய்க் கிறிஸ்தவனானாய் என்
று கேட்டார். அதற்கு அவன் அவைகளைச் சுருக்கமாய்ச் சொல்லுகி
றேன் என்று சொல்லத் தொடங்கினான்.—நான் துருக்கிய பட்டாளம்
ஒன்றில் சேவகம் எழுதினவன். ஒருநாள் நானும் என்னுடைய பட்டா
ளத்தைச்சேர்ந்த சிலருமாக சமீபத்திலிருந்த ஒரு கிராமத்தில் சில
சமுசாரிகளுடைய வீட்டைக் கொள்ளையடிக்கப் போயிருந்தோம்.
கொள்ளையிட்டுத் திரும்பும்போது, எனக்குக் கிடைத்த கொள்ளைப்பொ
ருள்களில் ஒரு பழைமையான புஸ்தகமிருந்தது. அதைச் சோதித்துப்
பார்க்கும்போது அது ஒரு வேதபுஸ்தகமென்று கண்டு வீட்டுக்குக்
கொண்டு வந்தேன். எனக்குக் கொஞ்சம் வாசிப்பு மாத்திரம் தெரிந்தி
ருந்தபோதிலும் அதை வாசித்துப் பார்த்தேன். வாசித்தபோது, நான்
கெட்டுப்போன பாவியென்றும் இயேசுக்கிறிஸ்துவினிடத்திலேயயல்
லாமல் வேறெங்கும் உதவி கிடையாதென்றும் அறிந்துகொண்டு தேவ
னை நோக்கி, என் இருதயத்தைப் பிரகாசிப்பித்து என்னை நடத்துமெ



ன்று செபம்பண்ணினேன். அப்படியே தேவன் என் செபத்தைக் கேட்
டார். இப்போது அவர் என்னுடையவராயிருக்கிறார். நான் அவருடைய
வனாயிருக்கிறேன்" என்றான். பின்பு அவன் தன்னுடைய இனத்தாரும்
அயலகத்தாரும் தன்னை கிறிஸ்துமார்க்கத்தினிமித்தம் எவ்வளவாய்த்
துன்பப்படுத்தினார்களென்று எனக்கு விபரமாய்த் தெரிவித்தான்.
அவர்கள் அவனைப் பதிதன் என்றும் வேதப்புரட்டன் என்றும் குற்றம்
சாட்டி பகலில் உதாசினமாய்ப் பேசி இரவில் அவனை மெத்தவும் தொந்
தரவுசெய்து அவனுடைய கனிமரங்களை வெட்டி திராட்சத்தோட்டத்
தை அழித்து கடைசியாக வீட்டைவிட்டு ஓடப்போகும்படி துரத்தி
விட்டார்கள். பின்பு அவன் தன் வீட்டுக்கு திரும்பிவந்தபோது அவனை
ஆறுதல்படுத்தும்படி சிலநாளாக நான் அவனுடைய வீட்டில் தங்கி
னேன். மேலும் சிலவாரங்களாக அவனை எனக்கு அரபிப் பாஷை
கற்றுக்கொடுக்கிற உபாத்தியாக வைத்திருந்தேன். அவனுடைய அன்
பான குணத்தினாலே அவன் தன்னுடைய சத்துராதிகளை ஆதாயப்
படுத்திக்கொண்டான். அவனுடைய நற்குணத்தினாலே சத்துருக்களு
டைய கெட்ட குணம் மாறி அவனை அன்பாய் நடத்தினார்கள். நான்
அந்த மனுஷனைப் பார்த்து இரண்டு வருஷமாயிற்று.
என் பிரிய சிநேகிதர்களே! நீங்கள் இன்றைக்கு அவனுடைய வீட்
டுக்குப் போவீர்களானால் லீபனோன் மலையின் உச்சியிலிருக்கிற அவனு
டைய ஊரில் கிறிஸ்தமான கோவிலையும், துன்பப்பட்ட கிறிஸ்தவனு
கிய ஷை அரபியன் ஓர் போதகராகி அவர்கள் நடுவிலிருக்கிறதையும்,
அவரைத் துன்பப்படுத்தினவர்கள் அவருடைய சபையாராயிருக்கிற
தையும் காண்பீர்கள். இந்த நன்மைகளெல்லாம் துவக்கத்தில் சொற்ப
நாகரீகமுள்ளவனாயிருந்த சமுசாரியின் கையில் அகப்பட்ட ஓர் சத்
தியவேத புஸ்தகத்தின்மூலமாய் உண்டானவைகளே.

---

## The Winter Palace.

செயின்ட் பீட்டர்ஸ்பெர்கென்கிற மகா பட்டணத்திலே கட்டியி
ருக்கிற மழைகால வசந்தயென்கிற அரமனையானது உலகத்திலுள்ள
அரமனைகளிலெல்லாம் பெரிது. ஆஸ்திரியா தேசத்துச் சக்கிரவர்த்தி
யவர்களது அரமனையைப் பார்க்கிலும் மூன்றிலொரு பங்கு அதிகம்.
மழைகாலத்தில் சக்கிரவர்த்தியும் அவருடைய அரமனைப் பிரபுக்
களும் குடியிருக்கிற இடம் இதுவே. இது "நீவா" என்கிற ஆற்
றோரத்திற் கட்டியிருக்கின்றது. நாலு மெத்தைகொண்ட என்பது அடி
உயரம். முன்முகப்பு நானூற்றைம்பத்தைந்து அடி நீளம். அகலம் மூந்
நூற்றைம்பது அடி. பிரதான ஆசாரவாசல் ஷை நீவா நதியின் எதிரில்,
மகா காம்பீரியமான வெண்கலவைக் கற்படிகளால் மேலே ஆஸ்தா
னம்போய் ஏறுமட்டும் எட்டி நிற்கின்றது. இதில் முக்கிய பாகம் யா
தெனில் (Peter I) மகா பீட்டர் என்கிற முதலாம் பீட்டர் மகா சக்கி
ரவர்த்தியின் சிம்மாசனமால். இங்கேதான் புதுவருஷப் பண்டிகையா
கிய ஜெனவரிப் பண்டிகையில் இராஜதரிசனத்துக்கும் வாழ்த்து மங்
களத்துக்கும் வருவோர் வந்து சந்திக்கிறது. நூற்றுநாற்பது அடிநீள
மும் நாற்பதடி அகலமுமாகிய நீண்ட நடை ஒன்றிருக்கிறது. இதற்கு
வைட் ஹால் என்று பேர். இது செயின்ட் ஜியார்ஜ் என்பவர் பேருக்கு
ஞாபகமாய் ஏற்படுத்திவைத்த கன்னிய பீடம். அலெக்சாண்டர் கால

ரியென்கிற மேடையில் படங்களும் வெண்கல் சாடிகளும் குடங்களும் செம்புகளும் பஞ்சபாத்திரங்களும் இன்னம் அனந்தவிதமான பொன் வெள்ளி விந்தைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. சக்கிரவர்த்தியார் இந்த மகா மாளிகையில் வசிக்குங்காலத்தில் அதில் அவரோடுங்கூட வசிக்கின்ற பிரபுமுதல் ஊழியர் பரியந்தம் தொகை ஆறாயிரம் பேர்.

(கி-வ-னி.)

---

## A good Friend.

## மிக்க அன்பன்.

ஜெர்மானியா தேசத்திலுள்ள இராஜன் பாக் என்னும் கிராமத்திலே ஓர் சத்திரத்தில் ஒரு பெரிய அறையிலே சூரிய அஸ்தமன நேரத்தில் ஒரு பெருந்தொகையான பேர் கூட்டங்கூடியிருந்தனர். அந்த அறைக்கு ஒரே வழி. அது திறந்திருந்தது. அவ்விடம் அதிதீரனாகிய ஒரு கொல்லனிருந்தான். அகஸ்மாத்தாய் ஒரு பெரும்வெறி நாய் அவ்வழியில் வந்து நின்றது. அது மிகவும் பயங்கரமான மிருகம். அதைக் கண்ட சத்திராதிபதியானவர் அங்குள்ள சனங்களை நோக்கி, விலகி நில்லுங்கள் விலகி நில்லுங்கள், அது வெறி நாய், மிகக் கொடியது என்றனர். யாவருங் கலக்கமுற்றனர். அவ்வறையினின்று இவ்வெறி நாயால் கடிக்கப்படாமல் தப்பியோடவென்றால் வேறு வழியுங் கண்டிலர். ஆனால் முன் கூறப்பட்ட கொல்லன் யாவரையும் நோக்கி, நேசர்களே! நான் அந்த நாயைக் கட்டிப்பிடிக்குமளவும் சற்று ஒதுங்கி நில்லுங்கள், பின்பு நீங்கள் தாராளமாய்த் தப்பிப் பிழையுங்கள். பலர் மாய்வதிலும் ஒருவன் மாய்வது சிறப்பன்றோ? என்று சொல்லி, உடனே அந்த நாயைத் தாவிப் பிடித்துக்கொண்டான். நாயோ அவனை சர்வாங்கமும் கடித்துக் காயப்படுத்திவிட்டது. அவனோ நாயை விடவில்லை. அங்கிருந்த யாவரும் தப்பிக்கொண்டார்கள். கடைசியில் நாயும் இறந்தது. கொல்லன் வெறிநாய்க் கடியால் வெறியனாவானென்றெண்ணி, விசனமுற்ற தன் நேசருக்கு வேண்டிய ஆறுதல் கூறி, தன் கடமையைத்தான் செய்ததாகக் களிப்புற்று மிகவும் பளுவாகிய சங்கிலிகளால் தன் கைகளையும் கால்களையும் பூட்டிட்டுக்கொண்டான்.

பசாசு ஓர் வெறி நாய்க்குச் சமம். மனிதர் அவ்வெறி நாயால் கடிபட்டு சாகத்தக்க நிலைமையிலிருக்கிறார்கள். சாக்ஷாத் கடவுளாகிய சற்குரு நமதையனா எல்லாருடைய மீட்புக்காகவும் தத்தஞ்செய்தார். அவரை விசுவாசித்துத் தாவிப் பிடித்துக்கொண்டால் மனிதருக்கு நித்தியஜீவனுண்டு.

(ச-வ-னி.)

---



## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—பார்லமெந்து என்னும் மகா சங்கம் கூடி கலைந்தது. நூதன பார்லமெந்து இரண்டொரு மாசத்தில் கூடும். அதில், சுயாதீன கட்சியார் தங்கள் பட்சம் பலக்குமென்ற நோக்கமாயிருக்கிறார்கள். பிரதம மந்திரியாகிய பேக்கன்ஸ்பீல்ட் பிரபு தம் மந்திரி உத்தியோகத்தை விட்டுவிடக் கருதியிருக்கிறார். நமது காருண்ய சக்கரவர்த்தினியவர்கள் போனமூ 22உ இங்கிலந்தைவிட்டு, ஐரோப்பாவின் மத்திய தேசங்களாகிய ஜெர்மனி முதலானதுகளைப் பார்த்துவரப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். ஏறக்குறைய பத்துவாரத்துக்குப்பின் சுதேசத்துக்குத் திரும்புவார்கள்.

**ருஷியா.**—ருஷிய சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேகத்தின் 25-ம் வருஷத்துப் பண்டிகை போன மார்ச்சுமூ 2உயில் வெகு மகத்துவமாய்க் கொண்டாடப்பட்டது. விசேஷ வரிகளினிமித்தமும் அமஞ்சிவேலைகளினிமித்தமும் இராஜாங்கத்தை வெறுத்த, இராஜாதிபத்தியம் வேண்டியதில்லையென்று சொல்லி, சக்கரவர்த்தியைக் கொலைசெய்யத் தேடுகிற நிகிலிஸ்தரால் அச்சமயத்தில் யாதொரு அக்கிரமமும் நடக்கவில்லை. ஆகிலும் நிகிலிஸ்தர் தொகையும் பிரயத்தனங்களும் வரவர அதிகப்பட்டுக்கொண்டே வருவதினால், இராஜாங்கத்தில் நிதானமான ஏற்பாடுகள் செய்யாதிருக்கிறவரை சக்கரவர்த்தியின் க்ஷேமநிலை சந்தேகாஸ்பதமான ஸ்திரில் இருக்குமென்று நினைக்கத்தக்கதுதான்.

**ஆப்கானிஸ்தான்.**—ஆப்கானிஸ்தான் இன்னும் பூரண சமாதான நிலைக்கு வாராவிடினும், தாமதமாயேனும் விரைவிலேனும் சண்டைச் சச்சரவுகள் யாவும் அடங்கி நேர்ப்பட்டுப்போமென்று நம்பக்கூடியதுதான். ஆப்கானிஸ்தான் அடங்கவும், இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ராஜதானியாகிய கபூல் நகரத்தில் வாசம்பண்ணும் தலைமை உத்தியோகஸ்தரின் கீழாக அரசாட்சி நடந்தேறத்தக்க திட்டங்கள் செய்யப்படுகிறதாய்ச் சமாசாரம். மகம்மதுஜான் என்பவன் சர்தார் அலிகானை எதிர்த்து, தோற்று முறியடிக்கப்பட்டான். மகம்மதுஜான் 2-பீரங்கிகளை இழந்ததுமன்றி அவன் பக்கம் 70-பேர் மாண்டும் போனார்கள். 40-பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்களில் அவன் சகோதரனும் குஜனி கவர்னரின் சகோதரனும் அகப்பட்டுக்கொண்டார்கள். சர்தார் அலிகான் பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்குச் செய்துவரும் உதவிகளுக்காக, காண்டகார் மாகாணத்தரசுரிமையும், வாலி என்னும் பட்டமும் நமது காருண்ய சக்கரவர்த்தினியவர்களால் ராஜபிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரலவர்கள் மூலமாய், அளிக்கப்பட்டிருக்கிறது. சர்தார் தம்முடைய ராஜதானியில் ஒரு ஏஜெண்டு இருக்கவேண்டுமென்றும் இங்கிலீஷ் சேனை அதை எப்பொழுதுங் காக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறார். வேறு விஷயங்களில் அவர் சுயாதீனமுள்ளவராயிருப்பார். காண்டகாருக்கும் ஒரு இருப்புப் பாதை போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஏப்பிரல்மீ நாள் 30. பங்குனிமீ 21உமுதல், சித்திரைமீ 19உவரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | உக | விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரர்களாயிருக்கிறீர்களே. |
| வெ | 2 | உஉ | உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும். சங். 85:26. |
| ச | 3 | உ௩ | கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறரே. 1 கொ. 5:7. |
| ஞா | 4 | உ௪ | கர்த்தர் என் கன்மலை. 18:2. |
| தி | 5 | உரு | இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தார். 1 தெச. 4: 14. |
| செ | 6 | உசு | இயேசுவை நோக்கி நடக்கடவோம். எபி. 12: 1. |
| பு | 7 | உஎ | ஆண்டவரே, விசுவாசிக்கிறேன். யோவா. 9:38. |
| வி | 8 | உஅ | நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். (சங். 4:4. |
| வெ | 9 | உகூ | கர்த்தர் தம்முடையவர்களை அறிவார். 2 தீமோ. 2:19. (70:10. |
| ச | 10 | ௩0 | தேவனுடைய கோபமுடைமது மகிமையைவிளங்கப்பண்ணும். சங். |
| ஞா | 11 | ௩க | தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்த. 2 தீமோ. 2:15. |
| தி | 12 | க | அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடு பிரவேசியுங்கள். சங். 100:4. |
| செ | 13 | உ | விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். 1 தீமோ. 2:12 |
| பு | 14 | ௩ | கர்த்தர் உன்னைக் காக்கிறவர். சங். 121: 5. |
| வி | 15 | ௪ | விசுவாசமும் நல்மனச்சாட்சியுமுடையவனாயிரு. 1 தீமோ. 1:19. |
| வெ | 16 | ரு | கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; தாழ்ச்சியடையேன். சங். 23: |
| ச | 17 | சு | கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார். எபே. 5:14. (1. |
| ஞா | 18 | எ | நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார். ஏசா. 53: 5. |
| தி | 19 | அ | உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். ஆகாய். 1: 7. |
| செ | 20 | கூ | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள். 1 தெச. 5:13. |
| பு | 21 | க0 | இரட்சிப்பு கர்த்தருடையது. சங். 3: 8. |
| வி | 22 | கக | என்னை ஆதரித்தருளும்; நான் இரட்சிக்கப்படுவேன். சங். 119: 117 |
| வெ | 23 | கஉ | நன்மைசெய்ய படியுங்கள். ஏசா. 1: 17. (வீண். பிலி. 2: 3. |
| ச | 24 | க௩ | வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமலிருக்கக் கட |
| ஞா | 25 | க௪ | அவரை உத்தமமாய்ச் சேவியுங்கள். யோசு. 24: 14. |
| தி | 26 | கரு | எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன். சங். 119: 104. |
| செ | 27 | கசு | உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். ரோ. 12: 12. (2: 9. |
| பு | 28 | கஎ | நீர் உம்முடைய உக்கிரமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? யோபு |
| வி | 29 | கஅ | ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள். யாக். 5: 9. |
| வெ | 30 | ககூ | உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும். சங். 119: 37. |

## விசேஷ நாட்கள்.

4. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
9. அமாவாசை.
11. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 2 ம் ஞாயிறு.
18. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
24. பௌரணமி.
25. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு.
பரி. மாற்குசுவி. திருநாள்.

# நற்போதகம்.

௫. மேமீ. ௲௮௱௮௰௫.

## உபாகமம்.

## 27. அதிகாரம்.

மூன்றும் பிரசங்கம் 27—30 அதி-வரை அடங்கியது. இந்த அதி
காரங்களில், தேவன் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கைக்கு
அவர்கள் உண்மையாய் நடந்தால் இன்னின்ன ஆசீர்வாதங்கள் வரு
மென்றும், கீழ்ப்படியாமையைக் காட்டினால் இன்னின்ன சாபங்கள்
வருமென்றும் விபரமாயும் திறமையாயும் எடுத்துரைக்கிறார்.

1—10. வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்கும்போது நியாயப் பிரமாணத்தை கல்லின்மேல் எழுதுவது.

11—26. ஆசீர்வாதமும் சாபமும் கூறவேண்டிய முறை.

1—10. இது இஸ்ரவேலர் தேவனோடு செய்த உடன்படிக்கையை யும், அந்த உடன்படிக்கைக்கு அவர்கள் உண்மையாய் நடக்கவேண்டு மென்கிறதையும் காட்டுகிற அடையாளமாயிருந்தது. இந்தச் செய் கையும், உடன்படிக்கைப்பெட்டிக்குள் வைத்திருந்த இரண்டு கற்பல கைகளும் (31: 26), இஸ்ரவேலர் ஷ உடன்படிக்கையின் நிபந்தனை களை மீறுதபடி அவர்களுக்கு விரோதமான சாட்சியாயிருந்தது. இவர் கள் தேவகற்பனைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால்தான் இவர்களுக்குக் கானான்தேசம் கிடைக்குமென்பதையும், அப்படிக் கீழ்ப்படிந்து நடக் கிறவரையுந்தான் அவர்கள் அங்கே குடியிருப்பார்களென்பதையும் அவர்களுக்குக் காட்டிக்கொண்டேயிருந்தது.

1. "மூப்பர்." இப்பொழுது மோசேயின் உத்தியோகம் முடி வடையப்போகிறது. இதுமுதல் மூப்பர் காரியத்தை நடத்தவேணும்.

2. யோசு. 8: 30—35.

"கல்லுகள்." பலிபீடம் கட்டப்பட்ட கற்களல்ல. (4-வா.)

3. இஸ்ரவேலர் நடக்கவேண்டியதைக் குறித்துத் தெளிவாய் அறிந்துகொள்ளவும், நிலையான ஞாபகமாயிருக்கவுமாக. 11: 18. இப்படி எழுதுவது பூர்வத்தாருக்கு வழக்கம்.

மோசேயின் ஐந்தாகமங்களிலடங்கிய முக்கிய கற்பனைகள் இந்தக் கற்களில் எழுதப்பட்டது. யூதர் (613) கற்பனைகள் என்று கணக்கிடுகிறார்கள். இவைகள்: முதலில் கற்களில் வெட்டப்பட்டு, பிறகு அவைகள் கெட்டுப்போகாதபடி சாந்துபூசப்பட்டதென்று தோன்றும்.

4. "ஏபால் மலை." 11: 29. யோசு. 8: 30. மனுஷன் பாவியானதினாலே அவனுக்கு எச்சரிப்புத்தான் முதலில் வேண்டியது. ஆதலால் சாபமலையில் இது நடந்தது.

5. யாத்தி. 20: 25.

6, 7. சீனாயில் உடன்படிக்கை ஸ்தாபகமானபோது நடந்ததுபோல, சர்வாங்கதகன பலிகளையும் சமாதான பலிகளையும் இடவேணும். யாத்தி. 24: 5.

12, 13. சனங்களை ஆசீர்வதிக்கும்படி கெரிசீம் மலைமேல் நிற்க நியமிக்கப்பட்ட கோத்திரத்தாரெல்லாரும், யாக்கோபின் மனைவிகளாகிய லேயாள், இராகேல் என்பவர்களாலே பிறந்தவர்கள். யாக்கோபின் வைப்பாட்டிகளாகிய சில்பாள், பில்காள் என்பவர்களாலே பிறந்த நாலு கோத்திரத்தாரும், ஏபால் மலையின்மேல் நிறுத்தப்பட்டார்கள். கோத்திரங்கள் சமபாகமாயிருக்கத் தக்கதாக்கும்படி, மூன்றாம் வகையிலிருந்து இரண்டு கோத்திரத்தார், வைப்பாட்டி மக்களோடு சேர்க்கப்பட்டார்கள். ரூபன், தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தை இழந்துவிட்டதாலும், செபுலோன், லேயாளின் கடைக்குட்டி மகனானதினாலும் இந்த இருவரும் சேர்க்கப்பட்டார்கள். இப்படியாகக் கெரிசீம் மலையில் நின்றவர்கள் ஏபால் மலையில் நின்றவர்களைப் பார்க்கிலும் முக்கியத்திலும் ஜனத்தொகையிலும் அதிகமானவர்கள். இதினாலே நியாயப்பிரமாணத்தின்படியும் ஆசீர்வாதமே சாபத்தை மேற்கொண்டது என்பதை இது காட்டுகிறது.

15. "ஆமென்." இந்த வார்த்தைக்கு மூன்வரும் வாக்கியங்கள், சத்தியம், நீதி, நிச்சயம் என்ற பொருளை உணர்த்தினது. அப்படியே. எண். 5: 22. அப்படியே நம்முடைய செபபுஸ்தகம், தேவஸோபாக்கினைகூடும் ஆராதனையில் வருகிற ஆமென் என்ற வார்த்தைக்கும் அர்த்தம் இதே.

15—26. உடன்படிக்கைக்கு விரோதமான (12) சாபங்கள் வருகிறது. இதில் முதல் 11-ம் விசேஷித்த பாவங்களுக்கு விரோதமாகச் சொல்லப்படுகிறது. கடைசியானதோ, தேவனுடைய நியாயப்பிரமா



ணத்துக்கு விரோதமான சகல குற்றங்களையும் பொதுவாகத் தொகுத்துக் காட்டி, அவைகளைத் தனித்தனியாகக் கண்டிக்கிறது.

15. 4: 16. 5: 8. யாத். 20: 4, 23. லேவி. 26: 1.

16. 21: 18. லேவி. 19: 3.

17. 19: 14 வியா.

18. லேவி. 19: 14.

19. 24: 17.

20. 22: 30.

21. லேவி. 18: 23. 20: 15.

22. லேவி. 18: 9. 20: 17.

23. லேவி. 18: 17. 20: 14.

24. 19: 11.

25. யாத்தி. 23: 7, 8.

26. 28: 15. சங். 119: 21. எரே. 11: 3.

ஆசீர்வாத வார்த்தைகள் இன்னதென்று எழுதப்படவில்லை. ஆனால் ஆசீர்வாதமும் சாபமும் மாறிமாறிக் கூறப்பட்டிருந்தால், சாபவார்த்தைகளை மாற்றியே ஆசீர்வாதமாகக் கூறியிருக்கவேண்டும். நிருவ: வார்க்கப்பட்ட யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வையாதவன். ஸ்ரீ.

## 28. அதிகாரம்.

மோசே இந்த அதிகாரத்தில் ஆசீர்வாதம் சாபம் ஆகிய இவற்றின் பயனையும் தாற்பரியத்தையும் சொல்லுகிறார். ஜனங்கள் தங்களுடைய நன்மை தீமைக்கு வரும் பலாபலன்களைத் தெளிவாயும் திட்டமாயும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதே இவருடைய நோக்கமாம். யாத். 23: 20—33. லேவி. 26-அதி. ஒத்துப்பார்க்கவும்.

ஆசீர்வாதங்கள் (14) வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சாபங்களோ ஏறக்குறைய நாலத்தனை அதிகமாய் வருகிறது. இந்த அதிகாரத்தில் சொல்லிய தீர்க்கதரிசனம் தெளிவும், திட்டமும், யதார்த்தமுமானவைகள். பூரண சம்பந்தத்தோடு உரைக்கப்பட்டது. அப்படியே இந்தத் தீர்க்கதரிசனம் திட்டமாயும் தெளிவாயும், யாதொரு ஆட்சேபனைக்கு இடமன்னியில் பூரண நிறைவேறுதல் அடைந்தும் வருகிறது. வேதம் தேவாவியினால் உண்டான திவ்விய ஆகமங்கள் என்று ரூபிக்க இந்த ஒரு அதிகாரமே போதுமானது.

1—14. தேவகற்பனைக்குக் கீழ்ப்படிந்தால் தான் ஆசீர்வாதம் கிடைக்குமென்பது அதிகாரத்தின் முதலிலும் (1, 2), மத்தியிலும் (9), முடிவிலும் (13, 14), மிகவும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறது.

6. சங். 121: 8.

8. நீதி. 3: 10.

9. "ஆணை." ஆதி. 22: 16. எபி. 6: 13, 14. யாத். 19: 5, 6.

13. வா. 44.

15—68. சாபங்களைக்குறித்து.

15—19. ஆசீர்வாதங்கள் கீழ்ப்படிதலுக்கு வெகுமதியாகவும், ஏற்ற நடத்தைக்குப் பயனாகவும். (6) வகையாய் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டது. 8—6.

20—68. சாபங்களோ 5-வகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

20—26. முதலாம் வகை நியாயத்தீர்ப்புகள் அடங்கியது. கொள்ளைநோய், பஞ்சம், யுத்தத்தில் அபஜெயம்.

20. மல்கி. 2: 2.

21. லேவி. 26: 25. ஆபகூக். 3; 5.

23. லேவி. 26: 19.

24. பலஸ்தீனாவில் உஷ்டணம் மிகுதியாயிருக்கும்போது, ஆகாயம் புழுதியினாலும் மண்ணினாலும் நிறைந்துபோம். காற்று அக்கினிக் காற்று ஆகும்; அக்கினிச்சூளையின் வாசலில் இருந்தாற்போலிருக்கும்.

25. லேவி. 26: 17, 30. ஏசா. 30: 17.

"சிதறுண்டுபோவாய்." லேவி. 26: 33-க்கும் இதற்கும் வித்தியாசமுண்டு. அங்கே இஸ்ரவேலர் அஞ்ஞானிகளான புறச்சாதியாருக்குள் சிதறடிக்கப்படுவதை பொதுவாகக் காட்டியிருக்கிறது. இந்த வாக்கியத்திலோ மற்றவர்களுடைய இஷ்டப்படி ஒரு பட்டணத்திலிருந்து இன்னொரு பட்டணத்துக்கும், ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்துக்கும் ஓட்டப்பட்டு, பூமியின் இராஜ்யத்தார் விளையாடும் பந்துக்கு ஒப்பாயிருப்பார்கள் என்றர்த்தமாய்ச் சொல்லியிருக்கிறது. எரே. 15: 4. 24; 9. எசே. 33: 46.

26. சங். 79: 2, 3.

27—37. பாவிகளுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும் ஜீவனத்திலும் வரும் சாபங்கள் அடங்கியது.

28. "குருட்டாட்டம்." இருதயக்குருட்டாட்டத்தைக் குறிக்கும். புலம்பல் 4: 14. செப். 1: 17. 2 கொரி. 3: 14.

"புத்திமயக்கம்." எரே. 25: 16—18.



"மனத்திகைப்பு." எரே. 4: 9

29. ஏசா. 59: 10. புலம்பல் 5: 8.

30. எரே. 8; 10. ஆமோஸ். 5: 11. மீகா. 6: 15.

32. 2 நாளா. 29: 9.

33. நெகே. 9: 36, 37. எரே. 5: 17.

35. வா. 27. ஏசா. 1: 6.

38—48. வேலையிலும் கைத்தொழிலிலும் வரும் சாபங்கள்.

38. மீகா. 6: 15. ஆகாய். 1: 6. யோவேல் 1: 4.

41. புல. 1: 5.

43, 44. 12, 13-ஓடு ஒத்துப்பார்.

46. "என்றைக்கும்." ரோமர் 9: 27. 11: 5. கொஞ்சமான மீதி விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் பரிசுத்த வித்தாகிறது.

47. நெகே. 9: 35—37. உபா. 32: 15.

48. எரே. 28: 14.

49—58. சத்துருக்களாலே அபஜெயப்பட்டபின்பு, இஸ்ரவேலர் அடையும் தீமைகளைக் குறித்து.

50 "ஜாதியை" விசேஷமாய் முதற் கருத்துப்படி கல்தேயரைக் குறிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. எரே. 4: 13. 5; 15. புலம்பல் 4: 19. ஆபகூக். 1: 8.

சிறுபான்மையாய் மேதியர் முதலான மற்றச் சத்துருக்களைக் குறிக்கும். ஏசா. 13: 17, 18. என்றாலும் இதினுடைய முழு நிறைவேறுதல் வெஸ்பாஷியனும் தீத்துவும் நடத்தின யுத்தங்களில், யூதர்கள் சேதமாய் அழிக்கப்பட்டபோது நடந்தேறியது.

"கழுகு." ரோமக்கொடியின் அடையாளம். மத். 24: 28.

49. "கொடிய முகம்" ரோமருடைய வல்லமையின் மகத்துவத்தைக் காட்டியது. தானி. 8: 23. நீதி. 7: 13. 21: 29.

53, சிறுபான்மையாகப் பல ஜாதியாரால் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுதலடைந்து, கடைசியாக ரோமரால் முற்றுப் பெற்றது. 2 ராசா 6-அதி. 25-அதி.

53. லேவி. 26: 29. 2 இரா. 6: 28.

56. பிள்ளைகளையல்லாமலும், தன் நஞ்சுக்கொடியையும் தன் புருஷனுக்குக் கூடக் கொடாதபடி தின்பாள்.

58—68. இஸ்ரவேலர் கானான்தேசத்திலிருந்து பிடுங்கப்படுவது.

58. "இந்தப் புஸ்தகத்தில்" உபாகமும் மற்றும் மோசேயின் ஆகமங்களும். வா. 61. 27: 3. 31: 9.

"மகிமையான நாமம்." யாத். 6: 3. லேவி. 24: 11.

60. 7: 15. பத்துவாதைகளையும் குறிக்கும்.

63. 30: 9. எரே. 32: 41.

64. 4: 27, 28. லேவி 26: 33. நெகே. 1: 8. எரே. 16: 13.

65. லேவி. 26: 36. ஆமோஸ். 9: 4.

66. "ஊசலாடும்." உன் ஜீவன் இழையில் தொங்குவதுபோல ஊசலாடும். எப்போதும் திகில்கொண்டிருப்பாய்.

67. யோபு 7: 4.

68. "கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்துக்குத் திரும்பக் கொண்டுபோகப்பண்ணுவார்." இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டது தேவனோடு உடன்படிக்கை உறவுக்குட்படும்படி அவர்கள் பிறந்ததுக்கு ஒப்பாயிருந்தது. அவர்கள் மறுபடி அடிமைத்தன வீட்டுக்குத் திரும்புவது, இஸ்ரவேலர் செத்து அழிந்துபோகிறதற்கு ஒப்பாயிருந்தது. இந்த ஒற்றுமையை மிகவும் பலமாய்க் காட்டும்படி கப்பல்களிலே கொண்டுபோகப்படுவதைக் கூட்டிச் சொல்லுகிறார். அவர்கள் உயர்ந்த கையினாலே எகிப்திலிருந்து புறப்பட்டு கடலைக் கடந்தார்கள். கடல் இரண்டாகப் பிளந்தது. இனிமேலோ அவர்கள் மறுபடியும் அடிமைவியாபாரக் கப்பல்களில் அடைப்புண்டு எகிப்துக்குப் போவார்கள். சவங்கள்போல் அகற்றப்படுவார்கள்.

ஓசே. 8: 13. 9: 3.

"வழியாய்" 17: 16. எரே. 42-அதி. 43-அதி.

ஓசே. 8: 13. 9: 13.

"விற்கப்படுவீர்கள்." நீங்கள் உங்களையே விலைகூறுவீர்கள் என்று திருப்பப்பட்டால் மூலத்துக்கு நெருங்கின அர்த்தம் கொடுக்கும். வாங்குவாரில்லாமல் என்னை வாங்கு என்னை வாங்கு என்று யூதர் வலிய தங்களை விலைகூறுவார்களாம். இந்தத் தீர்க்கதரிசனம் எழுத்தின்படியே ஒரு விசைக்கு அதிகமாகவும் நிறைவேறியிருக்கிறது. தீத்துஸ் ராயன் அநேகமாயிரம் யூதர்களை எகிப்துக்கு அனுப்பி அடிமைகளாக விற்றபொழுதும்; ஆதிரியன் ராயனாலே ஏராளமான யூதர்கள் எகிப்துக்கு அனுப்பப்பட்டு ராகேலின் கல்லறையண்டையில் விற்கப்பட்டபொழுதும் நிறைவேறல் அடைந்தது.

"கொள்வாரும் இல்லாதிருப்பார்கள்." நீங்கள் தேவனாலே சபிக்கப்பட்டவர்களென்பதினாலே எகிப்தியர் உங்களைத் தீட்டாக எண்ணி உங்களை வாங்கி வேலைகொள்ளக் கூடத் துணியமாட்டார்கள். மேலும் நீங்கள் மிகுதியாய்ச் சிறைப்பட்டுப்போவதினாலே உங்களை வாங்கி வேலைகொள்ள இடமில்லாமலும் போகும் என்றர்த்தமாம். இப்படியாக இந்த அதிகாரத்தின் வாக்கியங்களுக்குச் சுருக்க வியாக்கியானம் செய்



தபின், இனிமேல் இந்த அதிகாரத்தின் பொருளைத் தொகுப்பாய் எடுத்துரைத்து வியாக்கியானம்பண்ணுவோம்.

I. அந்நிய ஜாதியார் யூதரைச் சிறைப்படுத்தப் படையெடுப்பதைக்குறித்தது.

"உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகு தூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன்மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்." உபா. 28: 50.

கல்தேயரும், எரேமியா 10: 15. விசேஷமாய் உரோமரும் மத். XXIV. யூதரை அழித்ததில் இது நிறைவேறிற்று. உரோமர் மற்ற ஜாதியாரை வெகு சீக்கிரத்தில் ஜெயித்துக் கீழ்ப்படுத்தினதில் கழுகு பறக்கும் வேகமாய் இருந்ததினாலும், அவர்கள் கழுகு ரூபமுள்ள கொடியைப் பிடித்திருந்ததினாலும், அவர்கள் பாஷை யூதருக்குத் தெரியாதிருந்ததினாலும் (புலம்பல் 4: 19.) முக்கியமாய் ரோமரைக் குறிக்கும்.

மேலும் யூதருடைய சத்துராதிகள் "கிழவனென்று முகம் பாராமலும் வாலிபனென்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளது" என்று சொல்லப்படுகிறார்கள். இது கல்தேயராலும் 2 நாளாகமம் 36: 17. உரோமராலும் நிறைவேறிற்று. யோசேப்புஸ் சொல்லுகிறபடி எருசலேம் தீத்துஸ் ராயனால் அழிக்கப்படுகையில் கொலையுண்ட யூதருடைய இரத்தம் தெருக்களில் ஆறாய் ஓடிற்றாம்.

II. அவர்கள் பட்டணங்கள் முற்றுகையிடப்பட்டு பிடிபடுவதும் அதினாலுண்டாகும் இடுக்கணும் சொல்லப்பட்டது.

"உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழும் அளவும் அவன் உன் வாசல்களிலெல்லாம் உன்னை முற்றுகைபோடுவான். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் தேசமெங்குமுள்ள உன்னுடைய வாசல்கள்தோறும் உன்னை முற்றுகைபோடுவான். உன் சத்துருக்கள் உன்னை முற்றுகைபோட்டு நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக் கனியான உன் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளின் மாம்சத்தைத் தின்பாய். உன் சத்துருக்கள் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றுகைபோட்டு நெருக்குங்காலத்தில், உன்னிடத்தில் செருக்கும் சுகசெல்வமுமுள்ள மனிதன் சகலத்தையும் இழந்து, தன் இல்லாமையினாலே தான் தின்னும் தன் பிள்ளைகளின் மாம்சத்திலே, தன் சகோதரனுக்காகிலும், தன் மார்பிலிருக்கிற மனைவிக்காகிலும், தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவனுக்காகிலும், கொஞ்சமேனுங் கொடாதபடி அவர்கள்மேல் வன்கண்ணாயிருப்பான்; உன்னிடத்தில் சுகசெல்வத்தினாலும், செருக்கினாலும் தன் உள்ளங் காலைத் தரையின்மேல் வைக்க அஞ்சின செருக்கும் சுகசெல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக்கொடியினிமித்தமும்,

தான் பெற்ற பிள்ளைகளின் நிமித்தமும், தன் மார்பிலிருக்கிற தன் புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணுயிருப்பாள். உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றுகைபோட்டு நெருக்குங்காலத்தில், சகலமும் குறைபடுவதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவாள்." உபாகமம் 28: 52—57. லேவியராகமம் 26: 29, 31.

சல்மனாசர் சமாரியாவை முற்றிக்கைசெய்து (3) வருஷத்துக்குப்பின் அதைப் பிடித்ததினும்; 2 இராசா 18: 9, 10. சனகெரிப் யூதாவின் அரணிப்பான பட்டணங்களை அழிக்கவந்ததும்; நேபுகாத்நேசர் எருசலேமைப் பிடித்து, மதில்களைத் தகர்த்து தேவாலயத்தைச் சுட்டெரித்ததினும் இதின் முன் பங்கு நிறைவேறிற்று. 2 இராசா 25: 10.

அவர்கள் பஞ்சத்தினால் இடுக்கண் அடைவதைப்பற்றிச் சொல்லப்பட்டபடியே சமாரியாவின் முற்றிக்கையில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. "ஒரு கழுதைத் தலை எண்பது வெள்ளிக்காசுக்கும் புறாக்களுக்குப் போடுகிற காற்படி பயறு ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்பட்டது." 2 இராசா 6: 25. நேபுகாத்நேசரால் எருசலேம் முற்றிக்கை போடப்பட்டபோதும், 2 இராசா 25: 3. உரோமரால் கடைசியாக அழிக்கப்பட்டபோதும், மத். XXIV. கொடிய பஞ்சமுண்டாயிற்று.

இதில் பிள்ளைகளை அறுத்துத் தின்பதைப்பற்றி நுட்பமாய்ச் சொல்லியிருக்கிற இயல்புக்கு விரோதமான அரிய தீர்க்கதரிசனம், அது உரைக்கப்பட்டு (600) வருஷத்துக்குப்பின் சூரிய இராசா சமாரியாவை முற்றிக்கைபோட்டபோது முதலாவது நிறைவேறிற்று. அதாவது; "இராசா (யோராம்) பின்னையும் அவளைப் பார்த்து உனக்கு என்னவேண்டுமென்று கேட்டான். அதற்கு அவள்: இந்த ஸ்திரீ என்னை நோக்கி, உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி, நான் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்துவிட்டாள் என்றாள்." 2 இராசா 6: 28, 29.

மோசேயின் காலத்துக்கு (900) வருஷத்துக்குப் பிற்பாடு கல்தேயர் எருசலேமை முற்றிக்கைபோட்டபோதும் இது நிறைவேறிற்று. இதைக்குறித்து எரேமியா புலம்புகிறதாவது, "இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன. என் சனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின." புலம்பல் 4: 10.

மோசேயின் காலத்துக்கு (1500) வருஷத்துக்குப்பின் எருசலேம் உரோமரால் முற்றிக்கைசெய்யப்பட்டிருந்தபோதும் நிறைவேறிற்று. அப்போது நடந்ததைக்குறித்து யோசேப்புஸ் சொல்லுகிறதாவது,



"ஒரு பிரபு ஸ்திரீ பால் குடிக்கிற தன் சொந்த பிள்ளையைக்கொன்று, பாதியைத் தின்றபின் மற்றப் பாதியை இன்னொரு வேளைக்கு மறைத்து வைத்தாள்" என்பதே. மோசே தேவாவியால் ஏவப்படவில்லை என்று சொல்லுகிறவர்களே இந்த அதிசயத்தை விளக்குங்கள். ஒருகால் பிறப்பிப்பதை அறியமாட்டாத நம்மைப்போல பாமரனான மனிதனான மோசேக்கு இந்த நுட்பமான தேவஅறிவு வந்த வகையென்ன? மோசே தேவனால் அனுப்பப்பட்டவனென்றும் அவன் எழுதிய ஆகமங்கள் தெய்வீகமானதென்றும் நம்ப இதற்கு மிஞ்சின ருசு தேடுகிறவர்கள் இவ்வுலகத்திலே அதைக் கண்டடையார்கள்.

---

## வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
## பக்திக்குரிய
# சத்த தியானங்கள்.

## முதலாம் தியானம்.

### ஞாயிறு.

*நான் யார்? நான் எங்கே போகிறேன்?*

*நிலையான நகரம் நமக்கு இங்கேயில்லை வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். எபிரே. 13: 14.*

நான் யார்? நான் எங்கே போகிறேன்? இப்படிப்பட்ட கேள்வியை எந்தப் பிரயாணியும் கேட்கலாம். "நான் வீட்டுக்குப்போகிறேன்" என்றே அவனுடைய பொதுவான மாறுத்தரமிருக்கும்.

எல்லா மனுஷரும் பிரயாணிகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவகாலம் ஒரே தொடர்ச்சியான பிரயாணமாயிருக்கிறது. அவர்களெல்லாரும் ஒரே இடத்தை நோக்கியே போகிறார்கள். அது அவர்களுடைய கடைசி வீடாகிய பிரேதக்குழியே. ஆம்; நாம் எல்லாரும் அந்த வீட்டை நோக்கியே நடக்கிறோம்; அந்த வீட்டில் நாம் எல்லாரும் அமைதியாய் வைக்கப்படுவோம்; அந்த வீட்டில் நாம் சீக்கிரம் மறக்கப்பட்டுப்போவோம்; அந்த வீட்டினுடைய அடையாளமும் அதனுடைய ஞாபகமும், கொஞ்ச வருஷத்துக்குள்ளாக முழுவதுமாய் அற்றுப்போம்.

கொஞ்ச வருஷங்களுக்கு உயிரோடிருந்து, பிற்பாடு இலையுதிர் காலத்தின் இலைகளைப்போல அழிந்துபோவதா மனுஷனுடைய முடிவு! இல்லை! அப்படியல்ல; சரீரமானது அழிந்துபோவது நிச்சயமானாலும், ஆத்துமாவானது நித்தியகாலமாய் ஜீவித்திருக்கவேண்டியது. அந்த நித்தியம் என்பதென்ன? ஒரு கப்பல் வருஷத்தோறும் ஒரு கடற்கரைக்கு

வருகிறதென்றும், அது வருஷந்தோறும் திரும்பப் போகையில் கடற்கரையிலிருந்து ஒரு சிறு மணலை எடுத்துக்கொண்டுபோகிறதென்றும் வைத்துக்கொண்டால்; ஒரு சிறு பெட்டியானது முழுவதும் அந்த மணலால் நிறைந்துபோகுமுன்னதாக, அந்தக் கப்பல் எத்தனையோ ஆயிரவருஷங்களுக்கு வந்துபோய்க் கொண்டேயிருக்கும். இந்தியாவின் கடற்கரைகளிலுள்ள மணல்கள் எல்லாம் இன்னொரு இடத்துக்கு மேற்கண்டபிரகாரம் கொண்டுபோகப்படவேண்டுமானால், எவ்வளவோ கணக்கில்லாத யுகங்கள் செல்லும். ஏறக்குறைய 25000-மயில் சுற்றளவுள்ள இந்த உலகமுழுவதும், மேற்சொல்லியவிதமாய் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுமந்துகொண்டுபோகப்பட்டு, எவ்வளவோ ஏராளமான வருஷங்கள் கழிந்தபின்னும்,—நித்தியமானது, அப்போதுதான் துவக்குகிறதுபோலிருக்கும். நான் யார்? இந்த நித்திய யுகங்களில் நான் செய்யவேண்டியதென்ன? நித்தியமானது கரையற்றதாயிருக்கிறதுபோல நானும் முடிவில்லாத ஒரு வஸ்துவாயிருக்கிறேனே; என்றாலும் நான் இந்த நித்தியத்தைப்பற்றி யோசியாமல், என்னுடைய சரீரத்துக்கு வேண்டியவைகளை சவதரிக்கிறதில் கவலையாயிருக்கிறேனே? அநேக பிரயாணிகள் தங்களுடைய பிரயாணத்தின் அந்தத்தை அடைந்திருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் இந்த உலகத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். பிரேதக்குழியில் வைக்கப்பட்ட பிற்பாடு அவர்களுடைய பின்னிலைமை என்ன என்று நான் சிலவேளாவேளைகளில் பயபக்தியாய் யோசித்திருக்கிறேன். நான் என்னுடைய நினைவுகளை ஆராயும்போது அவர்களுடைய நிலைமையில் கொஞ்சம் நல்ல பங்கு உண்டென்றும், இப்பொழுது அவர்கள் என்னுடைய பார்வையைவிட்டு மறைந்துபோனார்கள் என்றும் நிச்சயமாகவே காண்கிறேன். இதை வாசிக்கிற என் சிநேகனே! மனச்சாக்ஷியினுடைய இப்படிப்பட்ட வார்த்தைகளை நீயும் சொல்லலாம். காணப்படக்கூடாத உலகத்தின் வாசல்களை நீ சேரும்பொழுது, நீ உன்னுடைய சொந்த நிலைமையை மறக்கமாட்டாய்; நீ அந்த வாசலுக்கு விரைவாய்ப் போகிறாய்.-ஒருவேளை ஒருநாள் பிரயாணத்தில், அல்லது இன்னும் ஒரு எட்டில் நீ அங்கேயிருப்பாய். அப்பொழுது நீ உன்னுடைய பிரயாணத்தை முடித்திருப்பாய்; அப்பால் நீ ஒருபோதும் பிரயாணியாயிருக்கமாட்டாய். உன் பிரயாணத்தில் நீ திரும்பிப் பார்க்கக் கூடாது. நீ நிற்கக்கூடாது. வாசல் திறக்கப்படும், அதன் வழியாய் நீ உலகத்திலிருக்கும்போது நடந்துகொண்டதற்குத்தக்கதாக, நித்திய சந்தோஷத்தையாவது, நிர்ப்பாக்கியத்தையாவது பெற்றுக்கொள்ள, அந்தப் புது உலகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவாய். உன்னுடைய ஜீவகாலத்தின் ஒவ்வொரு அடியும் அதற்கு தீவிரிக்கிறபடியால், நிச்சயமாகவே நீ அந்த வாசலுக்கு சீக்கிரம் சேருவாய். பிற்பாடு கிடைக்கும் என்னுடைய பங்கு என்ன என்று நீ பயபக்தியாய் யோசித்ததுண்டா? யோசிக்கவில்லை என்றால் நீ நித்திய அழிவுக்குள் தள்ளப்படுவாயே. உன்னைப்பற்றி நீ தானே நிச்சயமற்றிருப்பது என்ன பைத்தியம்! உன் ஜீவனின் கடைசி நிமிஷத்தில் நீ எப்படியிருப்பாயோ, அப்படியே நித்தியத்திலும் இருக்கவேண்டும். நான் உன்னுடைய நித்திய பாக்கியத்தை விரும்புகிறபடியால், நீ உன்னுடைய பிரயாணத்தில் இன்னும் ஒரு அடி எடுத்து வைக்குமுன்னதாக, நீ நரகத்துக்கல்ல, மோட்சத்துக்கே போவாய் என்பதைப்பற்றி உனக்கு நல்ல ரூபகாரமுண்டோ என்பதாக, ஆழ்ந்த புத்தியோடு சீர்தூக்கிப்பார்க்க நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன். நான் யார்? நான் எங்கே போகிறேன்



என்று பிரயாணம் முடிந்தபின் நீ கேட்பதற்கு உனக்கு என்ன நியாயமுண்டு.

சின்னப் பரதேசி
மோட்சம் நாடினேன்
லோகத்தின் சிற்றின்பம்
வெறுத்துவிட்டேன். மி.

---

# இரண்டாம் தியானம்.

## திங்கள்.

### பாக்கியம்.

*சகோதரனிலும் அதிக தொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு. நீதி. 18: 14.*

பாக்கியம் என்னும் சொல், நம்மெல்லாருக்கும் பிரியமுள்ள சொல்; நாம் வாஞ்சிக்கிற காரியம். பாக்கியத்தைக் கொடுக்கிற ஏதுக்கள் இந்த உலகத்தைவிட்டு நீக்கப்பட்டிருக்குமாகில், இவ்வுலகமானது ஒரு பாழிடம்போலிருக்கும். சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று தான் நினைக்கிற ஒரு நல்ல சமயத்தைக் கைப்பற்றாதிருக்கிறவன் யார்? மனுஷருடைய முயற்சியுள்ள பிரயாசங்கள், இந்தக் காரியத்தையே நோக்கியிருக்கிறது.

ஒருவர் நம்மை நேசிக்கிறார் என்கிற உணர்ச்சியினாலுண்டாகிற பாக்கியத்தைவிட, பெரிதான வேறே பாக்கியமில்லை. அன்னிய தேசத்துக்குத் தூரத்தப்பட்ட ஒரு மனுஷன், தான் வீட்டில் விட்டுப்போன தன் தாயினிடத்தில் ஒருபோதும் மாறாத அன்பைப் பெற்றுக்கொண்டதுபோலுள்ள அன்பையும் ஆனந்தத்தையும், அன்னிய இடத்தில் பெற்றுக்கொள்வான் என்று யார்தான் சொல்லக்கூடும். அவன் அன்னிய தேசத்தில் அனுபவிக்கும் கொஞ்ச சந்தோஷமும், தன் பட்சமுள்ள தாய் வியாதிப்படுக்கையிலிருக்கிறாள் என்கிற செய்தியினாலே குழம்பிப்போகுமே.

ஆனால் ஒருபொழுதும் அற்றுப்போகக்கூடாததும்; மரணமுதலாய் எடுத்துப்போடக்கூடாததுமான அன்புடைய சிநேகிதர் ஒருவர் நமக்கிருக்கிறார். சகோதரனிலும் அதிகத் தொந்தமாய்ச் சிநேகிப்பவரோ அவர். அவருடைய அன்பு எல்லாவித அன்பிலும் மேலானது; அவருடைய அன்பு, யோனத்தான் தாவீதின்மேல் வைத்த அன்பின் ஆச்சரியத்திலும், அதிக ஆச்சரியம் பொருந்தியது, அந்த அன்பர் பட்சமுள்ள ஏசுவே. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

இந்த உலகத்தில் நமக்கு பாக்கியத்தைக் கொடுக்கிற அநேக வஸ்துக்களிருக்கின்றன. ஆனால் கவனித்துப் பார்! அவைகள் ஒருபோதும் போதுமானபடி பாக்கியத்தை கொடுக்கிறவைகளல்ல. ஏனென்றால் நாம் எப்பொழுதும் அதிகமானவைகளை விரும்பி, அவைகளுக்கு எதிர்பார்க்கிறவர்களாயிருக்கிறோம். அவைகள் மாறிப்போகலாம்; அவைகள் இன்றைக்கிருந்தாலும் நாளைக்குக் காணாமற்போம்..

திரும்பவும் கவனித்துப் பார்; இயேசுவினுடைய அன்பு ஒருபோதும் மாறமாட்டாது. அவருடைய அன்பு இந்த குறுகின ஜீவகாலத்தில் மாத்திரமல்ல, நித்தியகால முழுவதிலும் ஆத்துமாவை பாக்கியத்தால்

பொறுமை வழியச் செய்யக்கூடியது. மரணபரியந்தமும், சாகும்வரைக்கும், அடிபட்டபிற்பாடும், சிறைச்சாலையிலிருந்து பாட்டுகள் பாடி, ஆனந்த சந்தோஷமாயிருந்தவர்கள் காரியத்தைப்பற்றி நீ வாசித்திருப்பாயே. பவுலும், சீலாவும் அப்படிச்செய்தார்களே. இது எப்படி நடந்தது? அவர்களை உற்சாகப்படுத்தினது என்ன? ரக்ஷகருடைய அன்பல்லவா?

திரும்பவும் சொல்லுகிறேன்; ஒருவர் நம்மை நேசிக்கிறார் என்கிற உணர்ச்சியிலிருந்து உண்டாகிற பாக்கியத்தைவிட, பெரிதான பாக்கியம் வேறொன்றுமில்லை. உன்னை எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கிற மனுஷனை நீ கண்டுபிடித்தால், நீ அந்த அன்புக்கு ஏற்ற நன்றியைச் செலுத்துகையில், அந்த சந்தோஷம் பாராட்டுவாயல்லவா? எல்லாரைவிட உன்னை அதிகமாய் நேசிக்கிற ஒருவரண்டைக்கு நீ போக நான் உனக்கு வழிகாட்டப் பிரியமாயிருக்கிறேன். ஏனென்றால் நீ பாக்கியசாலியாயிருக்கவேண்டுமென்பதே என் முழு ஆசை. உன்னை அதிகமாய் நேசிக்கிறவர் இயேசுகிறிஸ்துவேயல்லாமல் வேறொருவருமல்ல. உன்பேரில் அவர் பாராட்டியிருக்கிற அன்பு எவ்வளவென்று சொல்வேன்! அவர் தம்முடைய பிதாவின் சிங்காசனத்தைவிட்டு, தம்முடைய மரணத்தினால் உனக்கு பாக்கியத்தை அருளும்படியாக, பொல்லாத மனுஷரால் சபிக்கப்பட்ட மரத்தில் ஆணி அறையப்பட்டதனதாக, அவ்வளவு பெரிதாயிருக்கிறது. ஒரு இராஜா தன்னுடைய தோட்டத்திலுள்ள பூச்சியினுடைய உயிரைக் காப்பாற்றும்பொருட்டு, தன் சொந்த ஜீவனிலும் அருமையாய் எண்ணும் தன் ஒரே மகனுடைய ஜீவனை சாவுக்குட்படுத்த சம்மதிப்பானா? ஒருபோதும் சம்மதிக்கமாட்டானே. ஆனால் "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில அன்புகூர்ந்தார்." "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" என்று தாவீது சொன்னதையும், இயேசுகிறிஸ்து இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறார் என்பதையும், நாம் நினைவுகூர்ந்தால்; ஒரு அற்பப் பூச்சியின் ஜீவனுக்காக இராஜாவின் ஒரே மகன் மடிவதைவிட ரக்ஷகர் பாவிகளுக்காக மரித்தார் என்பது எவ்வளவு, மட்டற்ற, பெரிய அற்புதம் என்று நாம் மதிப்போம். நாயீனூரில் விதவையின் மகன் பாடை அண்டை அவர் இருந்தபொழுதும், எருசலேமைப் பார்த்து அவர் கண்ணீர் விட்டபொழுதும், தமது சீஷருக்காக செபம்பண்ணியபொழுதும், கல்வாரி மலையில மரண உபாதையில் அவர் மூழ்கினபொழுதும், அந்த இரட்சக பெருமானுடைய முகம் இருந்த சாடையை நீ உன் மனதில் பாவனைசெய்து அதை ஏறிட்டுப்பார்! அப்பொழுது பூரணமும், சமாதானமுமுள்ள பாக்கியம், உன் ஆத்துமாவை சாந்திசெய்யத் துவக்கும். உனக்கு வருஷங்கள் பெருகுகிறதோடு அந்தப் பாக்கியமும் பெருகிக்கொண்டேயிருந்து, அந்தமில்லாத யுகங்கள்வரையும் கலப்பில்லாமல் ஊறிக்கொண்டேயிருக்கும்.

யாரிலும் மேலான அன்பன்
மா நேசரே
தாயைப் பார்க்க நல்ல நண்பன்
மா நேசரே

மற்றநேசர் விட்டுப்போவார்
நேசித்தாலும் கோபங்கொள்வார்
இவரோ என்றென்றும் விடார்
மா நேசரே.

(இன்னும் வரும்.)



# இரக்ஷண்ய மனோகரம்.

## தேவாரம்.

### திருத்தாண்டகம்.

அம்பரம திரியேகத் துவத் தொன்றாகி
அருள்திருவாக் குருவாகி அகிலமீன்ற
நம்பரனுக் கொருமகவாய் ஜீவர் உய்ய
நடுநின்ற நாயகத்தை நயந்தெந் நாளும
உம்பருல குவந்து தொழும் மகா தெய்வத்தை
ஒன்றான ஊற்றதனை வழியைக் காட்டி
இம்பருலகம் புரந்த எம்பிரானை
என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே.

இல்லையொரு நாமமந் நாஜீவரக்ஷை
இயேசுவெனு நாமமலால இதந்தாவென்று
தொல்லை மறைமுறையிடு பேரின்ப வாழ்வைத்
அச்சற நினைதிலது பரஞ்சோதி தன்னைப்
பொல்லையெனப் புறக்கணியர் செலையாட் கொண்ட
பூரண புண்ணிய நிலையைப் புகழ்ச்சி யோங்கும்
எல்லையிலாப் பொருளின் இருப்பை நாயேன்
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே.

அருள் பழுத்த திருமுக மண்டலத்தினானை
அலரிலுறைத கமலலோசனத் தெம்மானைத்
தெருள்பழுத்த ஜீவமொழி கனிவாயானை
ஜென்ம விடாய் தணித்தருள் சீர்பாதத்தானை
மருள் பழுத்த மனத்தேனைத் தெருட்டினானை
வான்கதிக்கு வழிதிறந்து வைத்தினானை
இருள்பழுத்த நரகடைத்த வெம்பிரானை
என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே.

விண்ணுலக கணங்கள் ஜெயஜெய வென்றேத்தி
வாழ்த்தெடுப்ப வீற்றிருந்த மகிமைத் தேவைப்
புண்ணாடங்களை யோர் பொருளாயுன்னிப்
புகலரிய பெரும்பாவ பொறை சுமந்து
தன்னுயிரைப் பரித்தளித்த மேசியாவைச்
சர்வபரித் தியாகனை மெய்த் தரும வாழ்வை
என்னுயிருக் குயிராய நாதன் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே.

பன்னரிய பரமபத நாடுநீங்கிப்
பவித்திரமாய்க் கன்னிமரி பாலனாகிப்
பின்னர்விரத் தவம்பூண்டு ஞான தீக்ஷை
பெற்றவிதி விலக்கோம்பிச் சீடருக்கு
நன்னெறியின் துணிபுணர்த்தி அருளினானை
நாஜீவ தாரகனை நம்பன் சித்தம்
இந்நெறியா மெனத்தெரித்த இறைவன் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே.

ஜென்ம தரித்திரத் தழியாச் செல்வமோங்கச்
சிறுமையிலே மகிமை நலந் திகழ்ந்து தோன்ற
வன்மரணந் தனில் நின்று நித்ய ஜீவன்
மல்கஅருள் நீதிமுறை வழுவா வண்ணம்
தன்ம உருவெடுத்த குமரேசன் தன்னைத்
தற்பர மாயகில சராசரங்கள் என்றும்
இன்மையிலே தோற்று வித்த ஈசன்றன்னை
என்று கொலோ கண்குளிரக் காணுநாளே.

அலகை தலை நசுக்கிய பேராற்றலானை
அவித்தை யிருள் அறத்தொளிர் மெய்ஞ்ஞானத்தானை
உலக மயக்கொழித் திரக்ஷை உதவினானை
உத்தம சற்குணத்தானை உலப்பிலானை
விலகி யுயிர் உடலைவிடும் அமையத்தெம்மை
விலகாது விசுவாச விளக்கைத் தூண்டி
இலகு திருவடி நீழல் இருத்துவானை
என்று கொலோ கண்குளிரக் காணுநாளே.

தம்மாவி யினைந்து பெருந்துன்பந் தாங்கித்
தண்ணறும் பூங்காவி லொரு தனியாமத்தில்
விம்மா உள்ளுடையா நெட்டுயிர்ப்பு வீங்கி
மெய்புழுங்கி வெங்குருதி வெயர்வை சோர
அம்மானை விளித்திறைஞ்சி அலக்கணுற்ற
அருந்தவத்தின் பெருந்தகையை அருளின் வாழ்வை
எம்மாவிக் கினியானை யெய்தி நாயேன்
என்று கொலோ கண்குளிரக் காணுநாளே.

பொல்லார் முண்முடி சூடிக் கோல் கொண்டோச்சப்
பொழிகுருதி உடல் நனைப்பப்போதம் யாதும்
இல்லா மன்னவன் கொலைத்தீர்ப் பிசைந்து கூற
எருசலேம் நகர்கடந்து கொல்கதாவிற்
செல்லா நின்றருகிரண்டு திருடர் நாப்பண்
சிலுவை மரத்தறையுண்டு செயல் முடிந்த



தெல்லா மென்றுயிர்விட்ட ஈசன்தன்னை
என்று கொலோ கண்குளிரக் காணுநாளே. 9

தண்ணளி அங்குரத் தெழும்பி அன்புமூலந்
தாரணிக்குள் ஊறலூன்றித் தயை மூடாகி
நண்ணுமிரு தத்துவக் கோடார்ந்து ஆய
நல்லுரையாந் தழை மல்கி நன்மை பூத்துப்
புண்ணியங் காய்த் தருள்பழுத்துப் பரமானந்தப்
புத்தமுதங் கனிந்து கதி பொருந்தி நிற்கும்
எண்ணரும் நித்திய ஜீவகற்பகத்தை
என்று கொலோ கண்குளிரக் காணுநாளே. 10

---

## விஸ்வாசக் காட்சி.

பண், காந்தாரம்.

கள்ளமுறு கடையேனும் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமல லோசன நிதியை
உள்ளமுவப் புறுதேனை உயிர்க்குயிரை உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவையிசைக் கண்டேனே. 1

படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்த பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்தழி செங்குருதியுக
முடிசாய்த்த பெருமானை முதலலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே. 2

பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கும் உடையேமை யெண்ணி யொருபொருளாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த
சித்திருக்கும் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே. 3

மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாந்
தேவினைக்கை தொழுதேத்தும் திரிகரண சுத்தரும்தம்
பாவினைக் கொண் டேத்தரிய நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோர் அருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே. 4

மூவாத முதல்வனை முதுசுருதி மொழிப்பொருளை
ஓவாத பெருங்குணத்த உத்தமனை உலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டும்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே. 5

இன்னொலிபுக் குழல்கின்ற ஆர்த்தரிலும் ஆர்த்தனாய்ப்
புன்னெறிகொள் பரசமயப் படுகுழிவீழ்ந் தழிவேற்கு

நன்னெறியின் அணிபுணர்த்தி நயந்தியக் கன்டிறந்து
செந்நெறி காட்டிய குருவைச் சிறுவையிசைக் கண்டேனே. 6

அந்தரத்து அமர் முழங்க அமரொனாந் தொழுதேத்தத்
தந்தைதிரு முன்மதுமைத் தழிஇருந்த தற்பரனை
சந்தம்வினை தொலைத்திடற்காய் சாவிடும் கலிந்திரத்தம்
சிந்தியுயிர் அவஸ்தையுறச் சிறுவையிசைக் கண்டேனே. 7

நிந்தனைசெய் திருப்பாணி கொயமுத்திக் கோலைபுரியும்
வெந்தொழிலர் செய்வினையின் வினைவதியார் பொறுத்தருளும்
எந்தையென வெழிற் கனிவாய் இதழவிழ் எம்பெருமானைச்
செந்தனிக்கோல் கொளுந்தேவைச் சிறுவையிசைக் கண்டேனே. 8

மறம்வளர்க்கும் களறுளத்தை வளமலிதண் டனையாக்கி
அறம்வளர்க்கும் அருள்முகிலின் அன்புமழை மாரிபெய்து
புறம்வளர்க்கும் இரக்ஷிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம்வளர்க்கும் செழுங்கிரியைச் சிறுவையிசைக் கண்டேனே. 9

காயொளியிற் கதிர்பரப்பும் கனக்கறு நீதியின் கடலைப்
பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ் சித்ராமணியைத்
தூயொளிகொள் சித்திலத்தைத் துண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிறுவையிசைக் கண்டேனே. 10

கில்வாசக் காட்சி முற்றிற்று.

---

## "கர்த்தாவை நல்ல பத்தியாலே"

### என்று துவக்கும் ஞானப்பாட்டின் சரித்திரம்.

நாம் சொல்லப்போகிற சரித்திரம், ஜர்மனிதேசத்தில் 30-வருஷ யுத்தம் முடிந்து 2-வருஷங்களுக்குப்பின் அதாவது 1650-ஆம் வருஷம் நடந்தது. இக்காலத்தில் ஹம்புர்கு நகரியின் அலங்காரத் தெருவொன்றில் வாலிபர் ஒருவர், யோவான்சன் என்ற ஓர் அம்மையினுடைய வீட்டின் ஒரு அறையில் குடியிருந்தார். அவர் சாப்பாட்டுவேளை ஒழிந்த மற்ற நேரமெல்லாம் தமது (பிடில்) கின்னரத்தை வாசித்துக்கொண்டேயிருப்பார். இதைக் கேட்பதற்காக வீட்டுவாசலண்டை தெருச்சனங்கள் அடிக்கடி கூட்டம்போடுவார்கள். மத்தியான நேரத்தில் ஒரு சிறந்த சாப்பாட்டுக் கடைக்குப்போய், போசனம் வாங்கிச் சாப்பிடுவார். பொழுது சாயும் நேரத்தில் தமது பழஞ்சட்டைக்குள் எதனிலும் ஒரு பொருளை மறைத்துக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுப்போவார். இப்படிப் போய் வந்ததற்கு அடுத்த நாளில் தமது சாப்பாட்டுக்காரி முதலியவர்களின் கணக்கைத் தீர்ப்பார். மேலே சொன்ன வீட்டுக்காரி தனக்குத் தெரியாமல் நடக்கும் மேற்குறித்த மறைவான சங்கதியைத் திட்டமாய் அறிந்துகொள்ளும்பொருட்டு ஒரு சாயங்காலம் அவருக்குத் தெரியாமல் அவர் பிறகே போய் அவர் ஒருவனிடம் தமக்குச்



162400

சொந்தமான ஒரு சாமானை அடகுவைத்துப் பணம் வாங்குவதை நின்றுகொண்டு பார்த்தாள். இப்படியே சங்கதியை அறிந்துகொண்டு அக் குணசீலி தன்னாலியன்ற உதவியை அவருக்குச் செய்யவேண்டுமென்று மனதில் நிர்ணயம்பண்ணிக்கொண்டாள்.

சில தினங்களுக்குப்பின் அவள் அவர் அறைக்குள் போய்ப் பார்த்த போது, அவருக்குத் தான் இரவலாய்க் கொடுத்திருந்த சில சாமான்களேயன்றி வேறொன்றுமிருந்ததில்லையென்று கண்டு மிகுந்த மனவருத்தம் அடைந்தாள். ஏனெனில் அவர் சாமானெல்லாம் அடகில் முழுகிப் போயிற்று. அவர் செகிமாளாய்க் கையாடிவந்த கைக்கின்னரம் ஒன்று மாத்திரம் மீதியாகி ஒரு மூலையில் சார்த்திவைக்கப்பட்டிருந்தது. மற்றொரு மூலையில் அந்த வாலிபர் தமது முகத்தை மூடிக்கொண்டு உளுக்கார்ந்திருந்தார். அவள் அவரைப் பார்த்து: நைமார்க்கு துரையே, நான் உமது அறைக்குள் திடீரென வந்ததற்காக ஆயாசப்படாதேயும். நீர் இரண்டு நாளாக வெளிப்புறப்படாமலும் உமது வாத்தியம் தொனியாமலுமிருந்ததால் நீர் ஒருவேளை வியாதியாயிருப்பீர் என்று எண்ணினேன். என்றால் உமக்கு ஆகவேண்டியது ஏதேனும் உண்டோ, சொல்லும் என்க, அவர்: குணபூஷணியே, வந்தனம், எனக்குக் காய்ச்சலாவது வேறெந்த நோவாவது இல்லாதிருந்தும், நான் சுகவீனமாயிருக்கிறேன், மிகுந்த சுகவீனமாயிருக்கிறேன் என்று மிக்க மனவருத்தத்தோடு சொன்னார். அதற்கு அந்த அம்மாள்: என்னமாயிருந்தாலும் நீர் போய்ப் படுத்துக்கொள்ளுமென்க, அவர்: முடியாது என்றார். அவளோ சற்றுக் கண்டிப்பாய்: நீர் படுத்துக்கொள்ளத்தான் வேண்டும். நான் போய் உமக்குப் படுக்கைபோடுகிறேன். நான் வயதுசென்றவள். உமது தாய்க்குச் சமானம் என்றாள். அவர் அவளைத் தடுத்து: தாயே, அவ்வளவு தொந்தரை உமக்கு வேண்டாம் என்று சொல்லி, அவளைத் தமது படுக்கை அறைக்குட் செல்லாமல் நிறுத்தப் பார்த்தார். அவள் சற்று ஒதுக்கிக்கொண்டு படுக்கை அறையை எட்டிப்பார்க்கையில், ஒரு வைக்கோல் மெத்தையும் அவர் வழக்கமாய்ப் போர்த்துக் கொள்ளும் ஒரு பழந்துப்பட்டியுமே கிடக்கிறதைக் கண்டாள். அப்போது நைமார்க்கு என்பவர்: அம்மா, நான் உமக்குக் கொடுக்கவேண்டிய வீட்டுவாடகையைக் கொடாமல் போய் விடுவேன் என்று நீர் அஞ்சுகிறீரோ; அப்படி நீர் ஐயப்படத் தேவையில்லை. நான் ஏழையாயினும் நாணயஸ்தன்; மெய்தான, அடிக்கடி தரித்திரம் மேலிடுகிறது. ஆகிலும் எப்படியாவது காரியம் நடந்தேறி வருகிறது என்க, அவள் திகைப்பால் சற்றுத் தாமதித்து: துரையே, நாங்களும் மிகுந்த ஸ்திதியர்தாமல்லாவிட்டாலும் எங்களுக்கு வேண்டியதற்கு மேல் கையில் உண்டாகும் பல சமயங்களுண்டு. இன்றைக்கும் அப்படித்தான். நீர் இன்றைக்கெல்லாம் வெளிப்புறப்படாதிருந்ததால், நீர் எனக்கு உத்தரவு கொடுக்கிற பட்சத்தில்———என்று சொல்லி அதை முடிப்பதற்குள், அந்த வாலிபர் நாணத்தோடு எழுந்து, அங்குமிங்கும் உலாவி வந்து: சரி, சரி நான் இன்றைக்கு ஒன்றும் சாப்பிடவில்லை என்று சொல்ல, அவள் ஒரு வார்த்தையும் பதில் சொல்லாமல் ஓரோட்டமாய்த் தன் வீட்டுக்குள் ஓடி, நல்ல சாப்பாடாய்க் கொண்டுவந்து கொடுத்து அவரைச் சாப்பிடச்சொன்னாள். அவர் சாப்பிட்டபின் உண்டான சம்பாஷணை வருமாறு:

யோவான்சன் அம்மாள்: நான் கேட்கப்போகிறதற்காக ஆயாசப்படவேண்டாம். நீர் இந்த ஊராரல்லவே, இந்தப் பட்டணத்தில் உமக்கு யாராவது அறிமுகமோ என்க,

கைமார்க்கு: ஒருவருமில்லை. ஒருவருமில்லை. நான் இந்த ஊருக்கு முற்றிலும் அந்நியன்; நீர் தான் இந்த ஊரில் முதல் முதல் என்னோடு பட்சமாய்ப் பேசினவர். இதற்காகக் கர்த்தர் உமக்குப் பலனளிப்பாராக என்றார்.

யோ: நான் இன்னங் கொஞ்சங் கேட்கிறேன், தயவுபண்ணவேண்டும். நீர் ஆர், உமது ஊரென்ன பேரென்ன, உத்தியோகமென்ன, இந்த ஆம்பர்கு பட்டணத்தில் உமக்கு வேலையென்ன என்ன,

கை: (புன்னகைகொண்டு) என் பெயர் கெயோர்க்கு கைமார்க். என் பெற்றார் பீலெளசன் ஊராரான ஏழைகள். அவர்கள் இருவரும் பரலோகப்பிராப்தி அடைந்துவிட்டார்கள். நான் 29–வருஷத்துக்குமுன் அதாவது 1621–ஆம் மார்ச்சு மீ 16உ பிறந்தவன். நான் பிறந்தது முதல் எங்கள் வீட்டில் தரித்திரத்துக்குக் குறைவில்லை. நான் உள்ளநாளும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் என் வயிறு வளர்த்தேன். ஆயினும் நான் பதறிப்பேச நிமித்தமில்லை. நான் என் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமாய் முறுமுறுத்துப் பாவஞ்செய்யத் துணியேன். அவர் கடைசியில் எனக்கு எப்படியும் ஒத்தாசைசெய்வாரென்று அறிவேன் என்றார்.

யோ: நீர் ஜீவனம்பண்ணுவது எப்படி என்ன,

கை: நான் நீதிசாஸ்திரம் படித்திருக்கிறேன். இதைப் படித்தது நான் செய்த பெரும்பிசகு. ஏனெனில் நான் அருமை ரட்சகர் கிருபையினாலே சமாதானப் பிரியமான சுபாவமுள்ளவனாயிருப்பதால் கச்சேரி வழக்கு விவாதங்களில் எனக்கு நாட்டமில்லை. நான் இந்தப் படிப்பைத் துவக்குகையில், என் பராபரனின் சித்தத்தைக் கவனித்திருப்பேனாகில் தாவிலை. அது போகட்டும். நான் பிறந்த ஊருக்குச் சமீபமான ஸிலாய்சிங்கன் என்ற சிற்றூரிலிருக்கும் லத்தின் பாடசாலையில் படித்த பத்து வருஷக்காலமும் கஞ்சிக்குங் காற்றாய்ப் பறந்தேன். உலக ஞானம் எனக்கு அப்பந்தராது என்று இந்தப் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்டேன். நான் 22–வயதாயிருக்கையில் நியாயசாஸ்திரங் கற்க கேனிக்ஸ்பர்கு என்ற ஊருக்குப் போனேன். அக்காலத்தில் என் சுதேசம் யுத்தகளமாயிருந்ததால் தலை தப்பிற்றென்று ஓடினேன். நான் யுத்தத்துக்குத் தப்பிப்போனபோதிலும், போன இடத்தில் எனக்கு உள்ளது உரியது எல்லாம் அக்கினிக்கு இரையாய்ப் போயிற்று; அரைக்காசுக்கும் வழியற்ற அகதியானேன் என்க,

யோ: ஏழை மனுஷனே, நீர் இந்த சமயத்தில் கூட அவநம்பிக்கைக்குள்ளாக இல்லையா என்றாள்.

கை: நான் யதார்த்தர் தப்பிப்பேச மனதில்லாமல் உள்ளபடி சொல்லுகிறேன். நான் அந்தப் பெரிய பட்டணத்தில் அன்றாட அப்பத்துக்காகப் பட்டபாடு கொஞ்சமல்ல. நான் ஆருமற்ற பரதேசியாய் மனஞ்சோர்ந்து நின்றேன். ஆனால் என் நல்ல இரட்சகர் என்மேல் கிருபை வைத்து என் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் நற்சகத்தைக் கட்டளையிட்டதால் நான் சிலுவையைச் சுமக்கக் கற்றுக்கொண்டேன் என்றார்.

(இன்னும் வரும்.)



# சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—பார்லிமெந்து என்னும் மந்திராலோசனைச் சபை புதிதாய்க் கூட்டுவிக்கப்பட்டது. முன் நம்பிக்கொள்ளப்பட்டபடி, சுயாதீன கட்சியார் தொகையே அதில் அதிகரித்திருக்கிறபடியால், பழய மந்திரிகள் உத்தியோகம் கைவிட்டார்கள். சுயாதீன கட்சியைச் சேர்ந்தவராகிய கிளாட்ஸ்டன் துரை பிரதம மந்திரி வேலையை ஒப்புக்கொண்டார். நூதன பார்லிமெந்தில் சுயாதீன கட்சியார் கோட்பாடுகளே மேல் நடத்தப்படும். இந்த அரசியல் மாறுதலினால் இந்தியாவிலும், இங்கிலந்துக்கு சம்பந்தப்பட்ட மற்றத் தேசங்களிலும் இன்னின்ன நூதன ஏற்பாடுகள் நடக்குமென்று நமக்கு இப்போது தெரியாவிட்டாலும், எல்லாம் நன்மையாகவே முடியுமென்று நம்பிக்கொள்ளவேண்டியது.

**இந்தியா.**—பழய இந்திய ராஜபிரதிநிதியாகிய நார்த்புருக் பிரபு இனி இந்திய துரைத்தன மந்திரியாவாரென்று வதந்தி. இப்போது இந்திய ராஜபிரதிநிதியாகவிருக்கும் லிற்றன் பிரபுவுக்கு பிரபுக்கள் வரிசையில் ஓர் உயர்ந்த பதவி கிடைத்திருக்கிறது. அவர் உத்தியோகம் கைவிட்டார். ஆயினும் பதில் கவர்னர்ஜெனரல் வந்து சேருகிறவரையும் உத்தியோக பாரத்தை அவரே தாங்குவார். பம்பாயின் கவர்னர் உத்தியோகம் விட்டதினால் ஸர் ஜேம்ஸ் பர்குஸோன் துரை புதிய கவர்னராக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்குப் பயணமாய் புறப்பட்டிருக்கிறார்.

**ஆப்கானிஸ்தான்.**—ஆப்கானிஸ்தானில் சென்ற மாசம் நடந்த சண்டைகளில் எதிரிகள் மிகுதியும் அபஜெயப்பட்டுப்போனார்கள். குஜ்னியை யடுத்து நடந்த சண்டையொன்றில் பகைவரில் கொலையுண்டவர்களும் காயம்பட்டவர்களுமாக இரண்டாயிரம் பேர்வரையுண்டாம். பிரிட்டிஷ் துரைத்தன சேனையில் கொலையுண்டவரும் காயம்பட்டவருமாக நூற்றுச்சில்வானம் பேர். குஜ்னி மிக்க அபாய நிலையிலிருந்ததாம். அதன் கோட்டை மதில்கள் சண்டைக்கு நிற்கத் தகுந்தவைகளல்ல. ஒரு மணிநேர யுத்தத்துக்குமுதலாய் அம்மதில்கள் தாங்கும் தரமல்ல.

ஆப்கான் தேச யுத்தத்தில் பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்கு துணைநின்ற சுதேச அரசர்களுக்கு இந்திய நட்சத்திரப் பட்டம் சூட்டவேண்டுமென்று துரைத்தனத்தாரவர்களைக் கேட்டுக்கொள்ளப்படுமென்று பத்திராதிபரொருவர் பிரசித்தஞ்செய்தார்.

மேமீ நாள் 31. சித்திரைமீ 20௨ முதல், வைகாசிமீ 20௨ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௨௦ | எல்லாரையும் கனம்பண்ணுங்கள். 1 பே. 2: 17. |
| ஞா | 2 | ௨௧ | நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு. 2 தீமோ. 4: 5. |
| தி | 3 | ௨௨ | சகோதர சிநேகமுள்ளவர்களாயிருங்கள். 1 பே. 3: 8. (வேண்டும். |
| செ | 4 | ௨௩ | கர்த்தரின் ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமலிருக்க |
| பு | 5 | ௨௪ | சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துவார். சங். 25: 9. |
| வி | 6 | ௨௫ | கர்த்தர் எனக்குச் சகாயர். எபி. 13: 6. |
| வெ | 7 | ௨௬ | உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும். சங். 6: 4. |
| ச | 8 | ௨௭ | தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். 1 பே. 5: 5. |
| ஞா | 9 | ௨௮ | மனஉருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள். |
| தி | 10 | ௨௯ | உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக. சங். 132: 9. |
| செ | 11 | ௩௦ | அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். 1 யோ. 4: 19. |
| பு | 12 | ௧ | கர்த்தர் என் சுதந்தரத்தின் பங்கானவர். சங். 16: 5. |
| வி | 13 | ௨ | அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்ல. 1 யோ. 5: 3. (20 |
| வெ | 14 | ௩ | சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். மத். 28: |
| ச | 15 | ௪ | என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும். சங். 17: 5. |
| ஞா | 16 | ௫ | நடக்கப்போகிறது இன்னதென்று மனுஷன் அறியான். பிர. 10 |
| தி | 17 | ௬ | நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்வோம். சங். 20: 5. (14 |
| செ | 18 | ௭ | தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார். பிலி. 4: 19. |
| பு | 19 | ௮ | கர்த்தருடைய வசனமோ நிலைத்திருக்கும். 1 பே. 1: 25. |
| வி | 20 | ௯ | தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். யோபு 5: 17. |
| வெ | 21 | ௧௦ | அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. 1 தீமோ. 4: 14. |
| ச | 22 | ௧௧ | கர்த்தருடைய வேதம் குறைவற்றதாயிருக்கிறது. சங் 19; 7. |
| ஞா | 23 | ௧௨ | வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரு. யோ. 5: 17. |
| தி | 24 | ௧௩ | ஆவியானவர், சத்தியமானவர். 1 யோ. 5: 6. |
| செ | 25 | ௧௪ | உலகத்தில் அன்புகூராதிருங்கள். 1 யோ. 2: 15. |
| பு | 26 | ௧௫ | சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். மத். 5: 9. (5: 6. |
| வி | 27 | ௧௬ | உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க இடங்கொடாதே. பிர. |
| வெ | 28 | ௧௭ | நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மத். 5: 14. |
| ச | 29 | ௧௮ | சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர். சங். 9: 9. |
| ஞா | 30 | ௧௯ | சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப் போராடுங்கள். பிலி. |
| தி | 31 | ௨௦ | உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. மத். 6: 9. (1: 27. |

## விசேஷ நாட்கள்.

1. பரி. பிலிப்பு, யாக்கோபு, அப். திருநாள்.
2. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
6. பரத்துக்கேறின திருநாள்.
9. பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும், ஞாயிறு. அமாவாசை.
16. பரிசுத்தஆவியின் திருநாள்.
23. திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.
24. ராஜாத்தியவர்கள் ஜநநநாள். பௌர்ணமி.
30. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௬. ஜூன்மீ. ௲௮௱௯௰௫.

## உபாகமம்.

### 28. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

III. திரள் யூதர் அழிக்கப்படுவது.

"திரட்சியிலே வானத்து நட்சத்திரத்தைப்போலிருந்த நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற்போனதினால் கொஞ்சச் சனமாய்ப் போவீர்கள்." உபாகமம் 28: 62.

தீத்துஸ் எருசலேமை முற்றிக்கைபோட்டபோது (11) லட்சம் யூதர் பஞ்சத்தினாலும் பெருவாரிக்காய்ச்சலினாலும் பட்டயத்தினாலும் மடிந்தார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உலகமுண்டானதுமுதல் இதுவரை இத்தனை பேர் ஒரு முற்றிக்கையில் அழிந்ததாகக் கேள்விப்பட்டிருப்பது அபூர்வம். அப்படியிருந்தும் யூதரெல்லாரும் கூடுகிற பஸ்காப் பண்டிகை காலத்தில் தீத்துஸ் இராயன் முற்றிக்கைபோட்டதினாலும், உரோமருடைய படை வருகிறதாகக் கேள்விப்பட்டு அக்கம்பக்கம் தேசங்களிலுள்ள யூதர் எருசலேமுக்குள் ஓடி அடைக்கலம் புகுந்திருந்ததினாலும் இவ்வளவு திரள் யூதர் அங்கே ஒருமிக்க இருக்கக்கூடிய சமயமாயிருந்தது.

யூதர் எகிப்துக்குக் கொண்டுபோகப்படுவதையும் அவ்விடத்தில் அவர்கள் ஊழியத்துக்கு விற்கப்படுவதையும் அவர்கள் கொண்டுபோகப்படும் வகையையும் கூட மோசே முன்னறிவித்தான். "இனிக் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்ன வழியாய் கர்த்தர் உன்னை கப்பல்களிலே எகிப்துக்குத் திரும்பக் கொண்டுபோகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராயும் வேலைக்காரிகளாயும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள்வாரும் இல்லாதிருப்பார்கள் என்றான்." 28: 68. யோசேப்புஸ் சரித்திரக்காரன் சொ

ல்லுகிறபடி, பட்டணம் உரோமரால் பிடிபட்டபோது, 17-வயதுக்கு மேற்பட்ட சிறைகள் எகிப்துக்கு வேலைசெய்ய அனுப்பப்பட்டார்கள். வழியில் அவர்கள் மிகவும் கேவலமாய் நடத்தப்பட்ட வகையில் (11,000) பேர் பசியினாலே மடிந்துபோனார்கள். அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது கப்பல் வழியாயென்று யோசேப்புஸ் சொல்லாவிட்டாலும், உரோமர் அப்போது மெதித்திரேனியாக் கடலில் கூட்டமான கப்பல் போக்குவரவு செய்ததினாலே இந்த வகையாகத் தான் கொண்டுபோகப்பட்டிருக்கவேண்டும். ஏராளமென்னப்பட்ட இந்தச் சிறைகளை சந்தைகொள்ளமாட்டாமல் மிகுதியாயிருந்ததினாலே தீர்க்கதரிசனத்தின்படி ஏனக்கிரயத்துக்கு விற்கப்பட்டும் கொள்வாரில்லாமலும் இருந்திருக்கவேண்டுமென்பதற்கு ஐயமில்லை.

IV. யூதர் சொந்தத் தேசத்திலிருந்து பிடுங்கப்பட்டு எல்லாச் சாதியாருக்குள்ளும் சிதறடிக்கப்படுவது.

"நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப்போடப்படுவீர்கள்; கர்த்தர் உன்னை பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டுமிருக்கிற எல்லாச் சனங்களுக்குள்ளும் சிதறடிப்பார்." உபாகமம் 28: 63, 64.

இது எத்தனை நுட்பமாய் நிறைவேறியிருக்கிறதென்று எல்லாருக்குந் தெரியும். முதலாவது பத்துக்கோத்திரத்தார் அசூரியராலும், பிற்பாடு இரண்டு கோத்திரத்தார் பாபிலோனுக்கு நேபுகாத்நேசராலும் சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள். கடைசியாக உரோமர் அவர்கள் பட்டணத்தையும் தேவாலயத்தையுமெல்லாம் முழுவதுமாய் அழித்துப்போட்டு சனங்களையும் சிறையாக்கினார்கள். பிற்காலத்திலும் எருசலேமுக்காவது அதற்கடுத்த தேசத்துக்காவது யூதர் போனால் மரணத்துக்குட்படுத்தப்படவேண்டுமென்று ஆதிரியான் இராயன் பகிரங்கமாய்க் கட்டளையிட்டான். தெர்த்துலியான், எரோம் என்பவர்கள் காலத்திலும் அவர்கள் யூதேயாவுக்குப் போகக்கூடாதென்று தடுக்கப்பட்டார்கள். அந்நாள்முதல் இன்னாள்வரையும் பலஸ்தீனாவில் யூதர் தொகை மிகவும் சொற்பமாயிருக்கிறது. உலகத்திலிருக்கிற எல்லாத் தேசங்களிலும் அவர்கள் இப்பொழுது சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

V. யூதர் மற்ற சாதியாரால் நிந்தைப்படுத்தப்படுவது.

"கர்த்தர் உன்னைக்கொண்டு போய்விடும் எல்லாச் சனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்." 28: 37. அந்தச் சாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது. 28: 65. கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய நோய்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதிப்பார். 28: 59.



ஒவ்வொரு தேசத்திலும் யூதர் பகைக்கப்பட்டு நிந்திக்கப்படுகிறார்கள். அவர்கள் உள்ளபடிக்கே பழமொழியும் பரியாசச் சொல்லுமானார்கள். மகமதியர், அஞ்ஞானிகள், ரோமானித்தார்களாகிய இவர்கள் மற்ற விஷயங்களில் ஒருவருக்கொருவர் எவ்வளவோ வித்தியாசப்பட்டிருந்தாலும், யூதரை நிந்தித்துத் துன்பப்படுத்துவதில் ஒருமைப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய விசேஷித்த சனமாகிய இவர்கள் (1880) வருஷமாய் அந்நிய தேசங்களில் சிதறுண்டு துன்பத்துக்கும் நிந்தைக்குமுள்ளாகி பரதபிக்கிறது ஐயோ எவ்வளவு துக்கமான காரியம்!

"அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது. உன் உள்ளங்கால்கள் தங்கித்தரிக்க இடமிராது" என்பது எவ்வளவு திட்டமாய் நிறைவேறிவருகிறது.

ஐரோப்பாக்கண்டத்தில் ஏறக்குறைய ஒவ்வொரு தேசத்திலுமிருந்து யூதர் துரத்தப்பட்டிருக்கிறார்கள். 13-ம் 14-ம் நூற்றாண்டுகளில் ஜர்மனி, பிரான்சு, ஸ்பானியா என்னும் தேசங்களில் ஏராளமான யூதர் பயங்கரமாய்க் கொலையுண்டு சிதறடிக்கப்பட்டதல்லாமலும், ஒரு ஸ்பானியா சரித்திரக்காரன் சொல்லுகிறபடி பர்டினன்று (Ferdinand) இசபெலா (Isabela) என்பவர்களால் ஸ்பானியாவிலிருந்து (8) லக்ஷம் யூதர் துரத்தப்பட்டார்கள்.

"உன் குமாரரும் உன் குமாரத்திகளும் அன்னிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்து பார்த்து பூத்துப்போம்." இஸ்பானியா போர்த்துக்கல் தேசங்களில் இராசாக்கத்தின் உத்தரவினாலே யூதப்பிள்ளைகளைத் தங்கள் தாய்தந்தைகளிடத்திலிருந்து பிடுங்கி பாப்புமார்க்கம் படிக்கச் செய்தார்கள். மற்ற இடங்களிலும் யூதப்பிள்ளைகள் அநியாயமாய் நடத்தப்பட்டதை இவ்விடத்திற் சொன்னால் விரியும்.

"இவன் இரத்தம் எங்கள்மேலும்
எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்றார்கள்."

VI. யூதர் திரும்பச் சேர்க்கப்படுவது.

"அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடு பண்ணின உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவும் மாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்." லேவி. 26: 44.

"இதென்ன அதிசயமான காரியம்! எத்தனையோ யுத்தங்கள், சண்டைகள், முற்றிக்கைகளுக்குள்ளானாலும்; எத்தனையோ கலகங்கள், கொலைபாதகங்கள், துன்பங்களுக்குள்ளானாலும்; சிறையிருப்பிலும், அடிமைத்தனத்திலும், நிர்ப்பந்தத்திலும் எத்தனையோ வருஷக்காலமாயிருந்தாலும் அவர்கள் முழுவதும் நாசமாகவில்லை!! எல்

லாருக்குள்ளும் சிதறடிக்கப்பட்டிருந்தும் அவர்களோடு கலவாமல் பிரத்தியேகமான ஜாதியாராயிருக்கிறார்கள். எந்தச் சரித்திரத்திலாவது சூரியன் கீழ்க்கண்ட எச்சாதியிலாவது இதைப்போல் ஒத்தது கண்டதுண்டா!" என்று நியூட்டன் கன்காணியார் சொல்லுகிறது எத்தனை யதார்த்தமாயிருக்கிறது.

இன்னொரு இடத்தில் அவர்,

"எந்தச் சாதியார் தங்கள் சுய தேசத்தைவிட்டுச் சிதறடிக்கப்பட்டுப்போன இடங்களிலெல்லாம் பிரத்தியேகமான ஜனங்களாயிருக்கிறார்கள்! எல்லா உலகத்தாரும் கண்டு வியக்கும்படி இது எப்படிப்பட்ட நிலையான அற்புதமாகக் காட்டப்பட்டிருக்கிறது" என்கிறார்.

இப்போது சில யூதர் எருசலேமுக்குப் போகிறார்கள். அங்கே ஒரு சிறு கிறிஸ்து சபையுண்டாகி அவர்களைப் போதிக்க ஒரு கண்காணியாரும் ஏற்பட்டிருக்கிறார்.

(3,000) வருஷத்துக்குமுன் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை இன்றைக்கும் காண்கிறோம். மோசேயினுடைய ஆகமங்கள் தேவனாலுண்டான திவ்விய புத்தகங்கள் என்பதைக் காட்ட இதற்கு மிஞ்சின ருசு வேண்டியதா?

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### க-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### க-ம் பிரிவு.

வினா. உன் ஞானத்தாய்தகப்பன்மார் உனக்காக வாக்குத்தத்தம் செய்த இரண்டாவது காரியமென்ன?

விடை. நான் கிறிஸ்துமார்க்க சத்தியங்களெல்லாவற்றையும் விசுவாசிப்பேன் என்பது.

வினா. கிறிஸ்தவனுடைய விசுவாசத்தின் சுருக்கம் எது?

விடை. அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணமே.

வினா: அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தின் முதலாம் உபதேசம் என்ன?



விடை. "வானத்தையும், பூமியையும் படைத்த சருவவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்."

தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தைக்குறித்து, விசுவாசத்தைப்பற்றிச் சொல்லிய அதிகாரத்தில் கவனித்தோம். இப்பொழுது விசுவாசப்பொருளாகிய தேவனைப்பற்றி விசாரிப்பது அவசியமாயிருக்கிறது.

வினா. தேவன் யார்?

விடை. தானாயிருக்கிறவரும், சமஸ்த வஸ்துக்களையும் தனக்கென்று உண்டாக்கினவரும், எல்லாவற்றையும் தாங்குகிறவரும், சர்வத்தையும் ஆளுகிறவருமான அரூபியே.

அஞ்ஞானிகளெல்லாரும் தேவனுண்டென்று அறிக்கையிடுகிறார்கள்.

சிருஷ்டிப்பின் கிரியைகளெல்லாம் தேவன் இருக்கிறாரென்று அதிகத் தெளிவாய் அறிவிக்கிறது.

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. சங். 19: 1.

வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப்பண்ணாதிருந்ததில்லை. அப். 14: 17.

காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும். ரோ. 1: 20.

வினா. தேவனைப்பற்றிய அறிவு அவசியமா?

விடை. ஆம், அவசியந்தான்.

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். யோ. 17: 3.

வினா. தேவனுடைய விசேஷித்த இலட்சணங்களெவை?

விடை. 1. நித்தியர். அவருக்குத் துவக்கமுமில்லை, முடிவுமில்லை.

நான் என் கரத்தை வானத்துக்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். உபா. 32:40.

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். உபா. 33: 27.

நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். சங். 90: 2.

அநாதி தேவன் சோர்ந்துபோவதில்லை. ஏசா. 40: 28.

நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. எபி. 1: 12.

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேனென்று திருவுளம்பற்றுகிறார். வெளி. 1: 8.

2. அதரிசனமானவர். அவரோ எல்லாப் பொருட்களையும் காண்கிறார்.

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. யோவா. 1: 18. 1 தீமோ. 6: 16. 1 யோவா. 4: 12.

அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமானவர். கொலோ. 1: 15.

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள இராசனுமாயிருக்கிறார். 1 தீமோ. 1: 17.

3. மனோவாக்குக் கெட்டாதவர்.

இருக்கிறவராக இருக்கிறேன். யாத். 3: 14.

நீர் என்னசெய்கிறீரென்று அவரைக் கேட்பவர் யார்? யோபு 9: 12. தானி. 4: 35.

தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? யோபு. 11: 7.

அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள். ரோ. 11: 33.

தேவன் தம்மை வெளிப்படுத்தியிராத வழியில் அவரைத் தேடுகிறவர்களுக்கு, அவரும் அவருடைய வழிகளும் ஆராய்ந்தறியக் கூடாதவைகள். ஆனாலும் தாழ்மையான எண்ணத்தோடு சத்தியத்தைத் தேடி, தான் அறிந்த அறிவைப் பிரயோகிக்க விருப்பமுள்ளவன்: தன்னை இரட்சிப்புக்குரிய ஞானியாக்குகிறதற்கு அவசியமான எல்லா அறிவையும் வேதத்தினால் அறிந்துகொள்வான்.

அதநாசி என்பவரின் விசுவாசப்பிரமாணத்தில் தேவன் நித்திய பிதா என்று சொல்லப்படுவதுமல்லாமல்; சிருஷ்டிக்கப்படாதவர், அளவிடப்படாதவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறார்.

4. சருவவியாபகர். தமது ஊழியக்காரரை ஆதரிக்கவும், தமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறவர்களுடைய கிரியைகளைக் கவனிக்கவும் அவர் எங்கும் நிறைந்தவராயிருக்கிறார்.

வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே. 1 இரா. 8: 27.

கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. 2 நாளா. 16: 9.

நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கேயிருக்கிறீர். சங். 139: 8—10.



நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே. 23: 24.

5. சர்வஞ்ஞர். அவர் போனகால, நிகழ்கால, எதிர்கால சங்கதிகளை எல்லாம் அறிகிறார். அவர் எல்லா இருதயங்களின் அந்தரங்கங்களையும் அறிந்து, அவருக்கு நாம் செய்கிற ஊழியம் உண்மையோ, தப்பிதமோ என்பதைச் சொல்ல அவரால் கூடும். "வஞ்சிக்கப்படாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ண ஒட்டார்."

கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்தறிகிறார். 1 நாளா. 28: 9

என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். சங். 139: 4.

கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது. நீதி. 15: 3.

சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. எபி. 4: 13.

தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகராகிய தேவன். யூதா. 25.

அவர் தம்முடைய ஜனங்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார்.

அவர் ஞானிகளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். தானி. 2: 20, 21.

அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். 1 கொரி. 1: 30.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமான தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். யாக். 1: 5.

சாலொமோனைப்போல (1 இரா. 3: 9.) "அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" என்று சொல்லு.

6. சர்வவல்லவர். "சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவன்."

நான் சர்வவல்லமையுள்ள தேவன். ஆதி. 17: 1.

கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ. ஆதி. 18: 14. ஆதி. 35: 11. உபா. 10: 14, 17. 27: 39. 1 நாளா. 29: 11.

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். யோபு 42: 2. சங். 2: 9. 89: 11. 97: 5. 103: 19. 115: 3. 135: 6. நீதி. 30: 4. ஏசா. 40: 12. 48: 13. மத். 11: 25.

தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. லூக். 1: 37. லூக். 12: 5. அப். 17: 24, 25, 28. வெளி. 4: 8. 5: 13. 19: 6.

சேனைகளின் தேவனுடைய எதிர்க்கப்படாத வல்லமையையும், அளவற்ற அதிகாரத்தையும் பார்ப்பதினால் அச்சமும் மனத்தாழ்மையும் உண்டாகவேண்டும்.

தாவீது சீமேயினால் தூஷிக்கப்பட்டபோது (2 சாமு. 16:10.) நான் மவுனமாகி ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன் என்றான். சங். 39: 2.

அது நம்முடைய முழு நம்பிக்கையையும் அவரில் வைப்பதற்கு நம்மைத் தைரியப்படுத்தவேண்டும்.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையுள்ளவர். எபே. 3: 20.

ஆபிரகாமைப்போல (ரோ. 4: 21.) தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்புவோமாக.

---

தேவன் தம்முடைய பகைஞருக்கு விரோதமாய் இந்தப் பெரிய வல்லமையைப் பிரயோகித்ததில் நம்மை உணர்த்தத்தக்க அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு.

ஜலப்பிரளயம் வரப்பண்ணினார். ஆதி. 7: 10, 21.

பாபேலில் பாஷையைத் தாறுமாறாக்கினார். ஆதி. 11: 9.

சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது. ஆதி. 17: 24, 25

எகிப்தில் பத்துவாதைகளை வரவிட்டார். யாத். 7: 19 12: 29.

எகிப்தியர் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டார்கள். யாத். 14: 27.

நாதாப், அபியூ தகனிக்கப்பட்டார்கள். லேவி. 10: 2.

கோராகும் அவன் கூட்டத்தாரும் அழிக்கப்பட்டார்கள். எண். 16: 32.

இஸ்ரவேலரின் பாளையத்தில் பயங்கரமான வாதைகளுண்டாயிற்று. எண். 16: 49.

சிசெராவுக்கு விரோதமாய் நக்ஷத்திரங்கள் யுத்தம்செய்தன. நியா. 5: 20.

அசீரியரின் பாளையம் சங்கரிக்கப்பட்டது. 2 இரா. 19: 35.

நேபுகாத்நேச்சார் மனுஷரிலிருந்து தள்ளப்பட்டான். தானி. 4: 33.

தேவன் தம்முடைய வல்லமையைத் தம்முடைய ஜனங்களிடத்தில் காண்பித்திருக்கிறார்.



நோவா பேழையில் தற்காக்கப்பட்டான். ஆதி. 8: 1.

சிவந்த சமுத்திரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. யாத். 14: 21.

இஸ்ரவேலர் மன்னாவினால் போஷிக்கப்பட்டார்கள். யாத். 16: 14, 15.

ஒரேப் மலையை அடித்ததால் ஜலம் புறப்பட்டது. யாத். 17: 6.

யோர்தான் இரண்டாகப் பிரிந்தது. யோசு. 3: 16.

எரிகோவின் மதில்கள் எக்காளத்தொனியினால் இடிந்து விழுந்தது. யோசு. 8: 16.

சூரியனும் சந்திரனும் ஒரே நிலையாய் நின்றது. யோசு. 10: 13.

கிதியோன் 300-பேரைக்கொண்டு ஜெயம் அடைந்தான். நியா. 7: 22.

சாத்ராக் முதலான மூவர் அக்கினி சூளையினின்று இரட்சிக்கப்பட்டார்கள். தானி. 3: 27.

தானியேல் சிங்கக்குகையில் தற்காக்கப்பட்டான். தானி. 6: 22.

யோனா மீன் வயிற்றில் காக்கப்பட்டான். யோனா. 2: 10.

பவுல் அப்போஸ்தலன் விரியன்பாம்புக் கடிக்குத் தப்பினான். அப். 28: 5

உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். ஏசா. 54: 17.

உன்னிடத்திலும் அவர் தம்முடைய சர்வவல்லமையைப் பிரயோகிக்கும்படி, அவரை நோக்கி ஜெபம்செய்வாயாக.

---

## 1880-81 வருஷ-ல் ரிசல்ட் கிரான்டு பள்ளிக்கூடங்கள் சோதனையாகும் தேதியைக் காட்டிய அட்டவணை.

### சங்கரநயினார்கோவில் தாலூகா.

| | | | |
|---|---|---|---|
| மடத்துப்பட்டி. | செப்டெம்பர் 27 | மேல இலந்தைக்குளம். | செப்டெ. 15 |
| புளியங்குடி. | செப்டெம்பர் 24, 26 | சேந்தமரம். | ஜுன் 12, 14 |
| அருணாசலபுரம். | செப்டெம்பர் 27 | இளவரசனேந்தல். | பெப்புருவரி 12 |
| தலைவன்கோட்டை. | ஜுன் 2, 3 | அழகாபுரி. | பெப்புருவரி 8, 9 |
| சிரானேந்தல். | செப்டெம். 20 | வடக்குப்பனவடலி. | செப்டெ. 17 |
| ஆண்கொண்டார்குளம். | செப்டெ. 20 | சந்திரகொண்டான். | பெபு. 8, 9 |
| அச்சம்பட்டி. | செப்டெம். 16 | வன்னிக்கோனேந்தல். | செப்டெ. 17 |
| அப்பனேரி. | பெப்புருவரி 12. 1881 | குருவிகுளம். | பெப்புருவரி 15 |
| | | பட்டாடைகட்டி. | செப்டெம். 20 |

ஆலங்குளம். செப்டெம்பர் 27
குளக்கட்டாகுறிச்சி பெப்ருவரி 12
சேரகன்குளம். செப்டெம். 20

பிச்சத்தலைவன்பட்டி. பெபு. 1881
கொண்டுசெட்டியபட்டி. பெபு. 8, 9
வேப்பன்குளம். செப்டெம். 20

## திருநெல்வேலித் தாலூகா.

உக்கிரன்கோட்டை. டிசம்பர் 1
காஞ்சாங்குளம். மேய் 19
கொங்கந்தான்பாறை. மேய் 11
சுத்தமல்லி மேய் 14
தச்சநல்லூர். நவம்பர் 6
கருங்காடு. செப்டெம்பர் 4
அருவன்குளம். செப்டெம்பர் 9
மணற்காடு. மேய் 26
பேட்டை. செப்டெம். 6
தென்கலம். செப்டெம்பர் 2
ஆலாங்குளம். மேய் 19
இமாசல்லூர். மேய் 18
கட்டாரங்குளம் ஆகஸ்டு 25
கண்டித்தான்குளம். மேய் 12
கல்லூர். நவம்பர் 29

நடியூர். மேய் 12
வெள்ளாளன்குளம், மேய் 17
மேலக்குளம். மேய் 25
மடத்துப்பட்டி. மேய் 28
மாவடி. மேய் 11
பழயபேட்டை. ஜூலை 24
பிள்ளையார்குளம். மேய் 18
பார்வதியபுரம். மேய் 18
வீரளபெருஞ்செல்வி. மேய் 18
பூக்குளி. மேய் 11
குன்னத்தூர். ஜுன் 2
அலவுகந்தான்குளம். மேய் 11
கருப்பன்துறை. ஜுன் 2
பற்பநாதபுரம். ஜை.

## தென்கரைத் தாலூகா.

இடையன்குடி போதிக். அக். 23
நாசரேத் போதிக். டிசம்பர் 8, 9
ஆழமுககேரி. டிசம்பர் 15, 16
சாயற்புரம். டிசம்பர் 21
மெஞ்ஞானபுரம். டிசம்பர் 10
ஆசீர்வாதபுரம் அக்டோபர் 14, 15
வெள்ளாளன்விளை. டிசம்பர் 11
கடாக்ஷபுரம. அக்டோபர் 30
மூத்தலிங்கபுரம். அக். 18, 19, 20
ஆழ்வார்தோப்பு. டிச. 4
சாத்தான்குளம். அக். 19, 20
பன்னிவிளை. டிசம்பர் 18, 19, 20
பெருங்குளம். டிச. 18, 19, 20
சந்தோஷபுரம். அக். 14, 15
பெய்யூர். அக்டோபர் 30

அமத்தவன்குடி அ 18, 19, 20
சேதுக்கநல்லூர். ஜூலை 27
தருவை. அக்டோபர் 25
பண்டாரவிளை. டிசம். 18, 19, 20
குமாரவிளை, அக்டோபர் 21, 22
சிவசுப்பிரமணியபுரம். அக். 25
விஜயராமபுரம். அக். 18, 19, 20
கண்டிபுரம். அக்டோபர் 21, 22
கண்காணியார்புரம். அக் 28, 29
மணற்கரை. நவம்பர் 1, 2
திருபாபுரம். அக். 18, 19, 20
இடையர்காடு அக். 21
பனைக்குளம். அக்டோபர் 14, 15
மூக்குப்பீறி. டிசம்பர் 8, 9, 10
உடையார்குளம். டிசம்பர். 8, 9



சத்தியநகரம். அக். 18, 19, 20
அசப்பைகுளம். டிசம்பர் 8, 9
குமாரபுரம். 21
மூதலூர். அக்டோபர் 28, 29
சிரீவைகுண்டம். டிசம்பர் 4
செப்விளை. ஆகஸ்டு 10
புதுக்குளம். அக் 18, 19, 20
பரமன்குறிச்சி. டிசம்பர் 10
திருவழுதிநாடான்விளை. டிசம்பர் 18, 19, 20
மனாரம்பியபுரம். அக். 18, 19, 20
திருப்புளியங்குடி. டிசம்பர் 4
அன்பின்நகரம். அக்டோபர் 26, 27
சாத்தபுரம். டிசம்பர் 10
செவலை. டிசம்பர் 18, 19, 20
அடையல். அக்டோபர் 28, 29
சேசபுரம். அக்டோபர் 30
செட்டிக்குளம். அக்டோபர் 14, 15
சீருக்குளம். அக்டோபர் 14, 15
சவுக்குவிளை. அக்டோபர் 14, 15
திருவியாநகரம். டிசம்பர் 13
ஆசீர்வாதபுரம். டிசம்பர் 10
சுப்பிரமணியபுரம். டிசம்பர் 21
பிள்ளையன்மனை. டிசம்பர் 8, 9
பழனியப்பபுரம். அக். 14, 15
கட்டாரத்தி. டிசம்பர் 18, 19, 20
புதூர். அக்டோபர் 28, 29
திருவியாநகரம். வடக். டிச. 13
பலிக்கைப்பத்து. அக்டோ. 26, 27
கட்டாரிமங்கலம். அக். 14, 15
பன்திமடம். டிசம்பர் 8, 9
மூடித்தாசேகரம். டிச. 18, 19, 20
நடுவக்குறிச்சி டிசம்பர் 21
டக்கர்புரம். அக்டோபர் 28, 29
அடைக்கலபுரம். டிசம்பர் 10
பூவிருடியிருப்பு. ஆகஸ்டு 4
பாட்டக்கரை. ஆகஸ்டு 10

கொம்புக்காரன் பொட்டல் டிசம்பர். 18, 19, 20
ஞானநகரம். அக்டோ. 18, 19, 20
பழங்குளம். அக்டோபர் 16
சவுக்கியபுரம். அக்டோ. 21, 22
காயினூர். அக்டோபர் 30
திருவைகுண்டகேரி. அக்டோ. 14, 15
குளத்தூர்க்குடி. டிசம்பர் 6, 7
வெங்கராயகுறிச்சி. நவம்பர் 1, 2
தருவை கிழக்கு. அக்டோபர் 25
தருமநகரம். அக்டோபர் 26, 27
பிரகாசபுரம். டிசம்பர் 8, 9
தட்டான்மடம். அக்டோ. 28, 29
கற்குளம். நவம்பர் 1, 2
அருளூர். அக்டோபர் 14, 15
கொட்டன்காடு. டிசம்பர் 17
எருசலேம். டிசம்பர் 8, 9
பிள்ளைவிளை. டிசம்பர் 10
செபத்தியாபுரம். டிசம்பர் 21
தஞ்சப்புரம். அக்டோபர் 25
குலசேகரபட்டணம். டிச. 18, 19 20
காலன்குடி. அக்டோபர் 28, 29
அநுக்கிரகபுரம். அக்டோ. 26 27
சுசநகரம். அக்டோ. 18, 19 20
மங்களபுரம். டிசம்பர் 13
கருங்கடல் அக்டோபர் 14, 15
சாலுமாவடி. ஆகஸ்டு 10
செம்பவிளைபுரம். அக்டோ. 30
லெக்ஷிமிபுரம். டிசம்பர் 10.
மணல்குண்டு. டிசம்பர் 6, 7
தய்யாக்குடி. டிசம்பர் 8, 9
சிறு புதுக்குடி. டிசம்பர் 11
சிறப்பூர். அக்டோபர் 18, 19, 20
நாதன்குளம். நவம்பர் 1, 2
மங்களபுரம். டிசம். 18, 19, 20
போலயர்புரம். அக்டோ. 28, 29
மேலபுதுக்குடி. டிசம்பர் 4
பாவநாசபுரம், டிசம்பர் 10
பனைவிளை. அக்டோபர் 21, 22

திருவரங்கப்பட்டி. அக்டோ. 14, 15
ரட்சண்யபுரம். ஆகஸ்து 10
கருவேலம்பாடு. அக்டோபர் 16.
மணல்விளை. அக்டோபர் 14. 15
குப்பாபுரம். அக்டோபர் 16.
கல்லூர். அக்டோபர் 21, 22
ஆனந்தபுரம். அக்டோபர் 16
வேதக்கோட்டைவிளை. டிசம். 13
செக்கடிவிளை. அக். 18, 19, 20.
காலன்குடி. டிசம்பர் 13,
சவுந்தரபுரம். அக்டோபர் 28, 29
அதிசயபுரம். அக்டோபர் 21, 22
அரியாமொழி. அக்டோபர் 16
கடையனோடை. டிசம்பர் 8, 9
கல்லாம்பாறை. டிசம்பர் 6, 7
கல்விளை. ஆகஸ்து 4
குறிப்பன்குளம். அக்டோபர் 16
மேல வீரவநல்லூர். டிசம்பர் 10
தொட்டியன்குடி. டிசம்பர் 6, 7
ஆதாளிகுளம். ஆகஸ்து 4
வெள்ளைமடம். டிசம்பர் 8, 9
கீழ நாலுமாவடி. ஆகஸ்து 10
தருவை தெற்கு. அக்டோ. 25
சொக்கலிங்கபுரம். அக். 26, 27
ராஜபதி. டிசம்பர் 15, 16
காஸான்கரை. மேய் 25
ஆத்தூர். ஆகஸ்து 11
வைத்திலிங்கபுரம். அக்டோ 16
அடைக்கலபுரம். டிச. 18, 19, 20
தோப்பைகுளம். அக். 18, 19 20
மல்லன் புதுக்குளம். அக். 14, 15
சமாதானபுரம். அக்டோ. 21, 22
ஏரல். டிசம்பர் 18, 19 20
கீழ ஆழ்வார்தோப்பு. டிசம்பர் 4
வாகைக்குளம். டிசம். 18, 19, 20
நரையன்குடி. அக்டோ. 21, 22
உடையப்பகுடி. ஷை
வைரவம். அக்டோபர் 21, 22

பண்டாரஞ்செட்டிவிளை. டிசம். 13
பெருமாள்புரம். டிசம்பர் 13
வெள்ளரிக்காய் ஊரணி. டிச. 8, 9
மறக்குடி. டிசம்பர் 6, 7
மணல்மேடு. ஷை
குலசேகரன்குடி. டிசம்பர் 8, 9
ஏறல். ஆகஸ்து 11
தோப்பூர். டிசம்பர் 8, 9
மாணிக்கபுரம். டிசம்பர் 10
சம்போடை. ஆகஸ்து 13, 14
செம்மறிக்குளம். டிசம்பர் 10
சகாயபுரம். டிசம்பர் 10
தைக்கா. டிசம்பர் 10
சீக்காச்சி. டிசம்பர் 10
தேரிக்குடியிருப்பு. டிசம்பர் 10
பூச்சிக்காடு. டிசம்பர் 10
சவுராஷ்டிரநாடு. டிசம்பர் 15, 16
மேற்படி தெற்கு. டிசம்பர் 15, 16
சோனகன்விளை. டிசம்பர் 11
குலசேகரன்குடியிருப்பு. அக்டோ. 18, 19, 20
பிச்சிவிளை. அக்டோ. 18, 19, 20
வடக்கு ஆழ்வார்தோப்பு. அக்டோ. 18, 19, 20
குறிப்பன்குளம்மறக்குடி. அக். 16
மங்களக்குறிச்சி. டிச. 18, 19, 20
அனியாபரணநல்லூர். 18, 19, 20
காணக்காடு. ஜூலை 23
உடன்குடி. டிசம்பர் 13
கட்டையாலங்குளம். ஆக. 13, 14
தளவாபுரம். ஆகஸ்து 13, 14
வாளவல்லான். ஆகஸ்து 13, 14
மொட்டத்தாதன்விளை. ஆக. 13, 14
கோவன்காடு. ஆகஸ்து 13, 14
இலக்கரிவிளை. அக்டோபர் 23
மணல்க்காடு. அக்டோ. 18, 19, 20
தைலாபுரம். டிசம்பர் 18, 19
மலவர்நத்தம். டிசம்பர் 6, 7



கரையடி. டிசம்பர் 8 9
கொமனிக்குடி. டிசம்பர் 8, 9
அகரம். ஆகஸ்து 13, 14
முள்ளன்விளை. ஆகஸ்து 13, 14

## ஓட்டப்பிடாரந் தாலூகா.

புதியம்புத்தூர் போர்டின். ஜனவரி 7,
பண்ணிகுளம் போர்டி. ஜெ 12. 13
மேலசெய்த்தலை. ஜெனவரி 8
சக்கம்மாள்புரம். ஜெனவரி 8
புதுக்கோட்டை. டிசம்பர் 22
வேப்பலோடை. ஜுன் 12,
பண்ணிகுளம். டே. ஜென. 12, 13
அரையூர். செப்டெம். 16, 17
கல்லத்திக்கிணறு. ஜெனவரி 11,
மருதன்வாழ்வு. ஜெனவரி 11
தெற்குமயிலோடை. ஜெனவரி 12, 13
தொட்டம்பட்டி. செப்ட். 16, 17,
அயிரவன்பட்டி. செப்ட். 16 17
கோவிந்தபுரம். ஜென. 12·13,
வேப்பங்குளம். ஜுன் 7
வாலம்பட்டி. செப்டெம். 16, 17
அகிலாண்டபுரம். ஜெ. 12, 13
வடஇலந்தக்குளம். ஜென. 12, 13
ராமனூதபுரம். செப்டெ. 13
கடலை. செப்டெம்பர் 21
காரைக்கிணறு. ஜெனவரி 11
கயிலாசபுரம். ஜெனவரி 6
கசவன்குன்று. ஜெனவரி 12, 13
ஒளவி கரிசல்க்குளம். ஆகஸ். 23
புதியம்புத்தூர் டே. ஜென. 7
முஜாவின்கோவில் ஆக. 19, 20
முப்படிபட்டி. ஆகஸ்து 19, 20
மீனாக்ஷிபுரம். ஜெனவரி 7
தளவாய்ப்புரம். ஜெனவரி 8
சிந்தலக்கோட்டை. ஜெனவரி 8
மடத்தூர். ஆகஸ்து 17, 18

மீளவிட்டான். ஜெனவரி, 17 8
ஓடைப்பட்டி புதூர். ஆகஸ்து 17
மாப்பிள்ளையூரணி. ஆகஸ்து 17, 18
சண்முகபுரம். ஜுன் 11
ஆதனூர். ஜுன் 11
பூசனூர். ஜுன் 11
செச்சிலாபுரம். ஜுன் 12
குளத்தூர். ஜுன் 12
பனையூர். ஜுன் 12
துரைசாமிபுரம். ஜுன் 12
சேர்வைகாரன்மடம். டிச. 22
குலையன்கருசல். டிசம்பர் 22
முள்ளக்காடு. ஆகஸ்து 16
கோரம்பள்ளம், மேற்படி
நாகலாபுரம், ஜுன் 17, 18
விளாத்திகுளம். ஜுன் 15
ஆர்தான்கரை. ஜுன் 15
கருசல்குளம். ஆகஸ்து 23
புதூர். ஜுன் 17, 18
குமாரபுரம். ஜுன் 16
எட்டுவேர்பட்டி. ஜுன் 14
மாதனபுரம். ஜுன் 17, 18
கருசல்குளம். ஜுன் 17, 18
பட்டிதேவன்பட்டி. ஜுன் 17, 8
ஓசநூத்து. ஜெனவரி 8
ஈராச்சி. செப்டெம். 16, 17
வடமலாபுரம். ஜுன் 9
ஆத்திகிணறு. ஆகஸ்து 23
ஒத்தைகபட்டி. ஜுன் 10
அரசடி பனையூர். ஆகஸ்து 17, 18
டேவிஸ்புரம். ஆகஸ்து 17, 18
தருவைகுளம். ஜுன் 11
பாண்டியபுரம் ஜுன் 11
கல்லூரணி. ஆகஸ்து 19, 20

முத்தாருணிபுரம். ஆகஸ்டு 19, 20
மாத்தாண்டன்பட்டி. ஜூன் 15
கிழசெய்த்தலை. ஜூன் 11
வெள்ளாரம். ஜூன் 12
பீஞ்ச்சிபுரம். ஜூன் 12
கழுநமலை. செப்டம்பர் 13
பாணாகுட்டம். ஜனுவரி 6
குமாரெட்டியாபுரம். செப். 13
வானரம்பட்டி. செப். 14
நகலாபுரம். ஜூன் 17, 18
கவ்வால்தொத்தி. ஜூன் 17, 18
கூத்தலாபுரம். ஜூன் 17, 18
மாவிலோடை. ஜூன் 12
காடல்க்குடி. ஜூன் 1(
குருவாசபட்டி. ஜூன் 1(
செட்டிநாயக்கன்பட்டி. ஜூன் 14
இலர்தகுளம். ஜூன் 14
குஞ்சியபுரம். ஜூன் 14
மேல்மாந்தை. ஜூன் 14
வேம்பார். ஜூன் 14
காச்சியார்புரம், ஆகஸ்டு 18 30
மொரம்பன். ஜூன் 10
சவரிமங்கலம். ஜெனவரி 6
தனவாபுரம். ஜெனவரி 6
லிங்கம்பட்டி. செப்டம்பர் 21
மஙிளம்புரம். ஜெனவரி 6

## சாத்தூர்த் தாலூகா.

சாட்சியாபுரம் போர்டி. அக். 4, 5
மேற்படி இன்பெண்டு. அக். 4, 5
முகலிபட்டி. அக்டோபர் 6
தம்பநாயக்கன்பட்டி. அக்டோ. 6
ரெட்டியாபட்டி. அக்டோபர் 6
பனையடிப்பட்டி. செப்டெம். 23
ஆயிரம்பண்ணை. சிர் 1 செப். 23
கொல்லம்பட்டி. ஜூன் 19
ஊமத்தேவன்பட்டி. செப். 21
நூப்பன்பட்டி. செப்டெம். 15
சக்கிலியபட்டி. செப்டெம். 21
ஆயிரம்பண்ணை. ஜூலை 6
அங்கசெட்டிபட்டி. ஜூலை 5
கம்மாநூர்க்குடி. ஜூலை 5
புதநூர்க்குடி. ஜூலை 5
சாத்தூர். ஜூன் 22
கநசல்பட்டி. செப்டெம். 23
இளையாயிரம்பண்ணை. செப். 23
பழயமேற்படி. செப்டெம். 23
மேட்டுமலை. ஜூன் 25
கருசல்பட்டி. செப்டெம்பர் 23
ஆலம்பட்டி. செப்டெம்பர் 15
இளைசரந்தை. ஜூன் 15
வெம்பூர். ஜூன் 15
கம்பியபுரம். ஜூன் 15

## ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகா.

ஸ்ரீவில்லிபுத்தூர் சந்தப்பேட்டை. செப்டெம்பர். 29, 30
புத்தூர். செப்டெம்பர் 25
அத்திகுளம். செப்டெம்பர் 29
சேனபுரம். ஜூன் 30
கிச்சநாயக்கன்பட்டி. ஜூன் 30



பெண்பள்ளிக்கூடங்கள்.

## சேர்மாதேவி சர்க்கிள்.

### தென்காசித் தாலூகா.

மேலக்கலங்கல். ஜெனவரி 25
கல்லூர். ஜெனவரி 24
பெத்தநாடான்பட்டி. அக்டோ. 4
காக்கைபனூர். அக்டோ. 4
ஆவுடையானூர். ஜெனவரி 29
தென்காசி. 1. ஜெனவரி 29
மேற்படி 2. ஜென. 24
குருவன்கோட்டை. பெபுரு. 1
இலஞ்சி. ஜெனவரி 25
ஊற்றுமலை. பெபுரு. 22

### அம்பாசமுத்திரந் தாலூகா.

வேலசமுத்திரம். பெபுரு 22
பாப்பாக்குடி. ஜெ 20
இடைகால். ஜென. 21
ஆலங்குளணிபுரம். அக்டோ. 9
புலவனூர். அக்டோ. 6, 7
சேர்வைகாரன்பட்டி. ஜெ 19, 20
சாட்டுப்பத்து. அக்டோபர் 18
பிரமதேசம். பெபுருவரி 20
முக்கூடல். அக்டோபர் 19
கல்லிடைக்குறிச்சி. ஜூலை 6
வீரவநல்லூர். ஜெனவரி 15
ரெட்டியாபுரம். அக். 6, 7
கடையம். ஜெனவரி 17, 18
அம்பாசமுத்திரம். மேயீ 21
ஆழ்வார்குறிச்சி. ஜூலை 7

### நாங்கூநேரித் தாலூகா.

வீரவநல்லூர். நவம்பர் 28
கவிசேஷபுரம். டிசம்பர் 8, 9
நாங்கூநேரி. ஜூலை 19
டோனாவூர். ஆகஸ்டு 6, 7
இடையன்குளம். ஆகஸ்டு 10
ஆழ்வாநேரி. டிசம்பர் 17
மருதகுளம். டிசம்பர் 18
காடன்குளம். டிசம்பர் 16
ஆவிப்பகட்டம். டிசம்பர் 18
மூன்றடைப்பு. டிச 20
சுவிசேஷபுரம். டிசம்பர் 8, 9
இட்டமொழி. டிசம்பர் 8, 9
இளைக்காரன்தட்டு. ஜூலை 26
சோதிநகரம். ஜூலை 23
சமாரியா. நவம்பர் 30
கடன்குளம். டிசம்பர் 1
மாதாபுரம். டிசம்பர் 1

## திருநெல்வேலி சர்க்கிள்.

### சங்கரநயினார்கோவில் தாலூகா.

சங்கரநயினார்கோவில். ... ... ... ஜூன் 10, 11
சிவகிரி. ... ... ... ... செப்டம்பர் 23

## திருநெல்வேலித் தாலூகா.

| | |
|---|---|
| தச்சநல்லூர். | செப்ற். 11 |
| வீரராகவபுரம். | ஜூலை 21 |
| முன்னீர்ப்பள்ளம். | ஜெ. 21 |
| வண்ணார்பேட்டை. | மே 8 |
| புதுப்பேட்டை. | செப்ற். 6 |
| புதுப்பேட்டை. | செப்ற். 6 |
| கொக்கரகுளம். | ஜூன் 5 |
| சுத்தமல்லி. | மே 14 |
| நாஞ்சான்குளம். | மே 19 |
| தென்கலம். | மே 19 |
| மணற்காடு. | மே 26 |
| கொண்டாநான்பாறை. | மே 26 |

## தென்கரைத் தாலூகா.

| | |
|---|---|
| மெஞ்ஞானபுரம். போர்டிங். | டிசம்பர 10 |
| இடையன்குடி. | அக்டோபர் 23 |
| நாசரேத். | டிசம்பர் 8, 9 |
| பன்னைவிளை. | டிசம்பர் 18, 19, 20 |
| மூ லூர். | அக்டோ. 28, 29 |
| வெள்ளாளன்விளை. | டிசம்பர் 11 |
| கடாகஷபுரம். | அக்டோபர் 30 |
| மெஞ்ஞானபுரம். டே. | டிசம். 10 |
| சிறப்பூர். | அக்டோ. 18, 19, 20 |
| அன்பினகரம். | அக்டோ. 26, 27 |
| பழங்குளம். | அக்டோபர் 16 |
| சிரிவைகுண்டம். | டிசம். 4 |
| சத்தியநகரம். | அக். 18, 19, 20 |
| நல்லம்மாள்புரம். | அக். 21, 22 |
| பூவராகூர். | டிசம்பர் 15, 16 |
| சாத்தன்குளம். | அக். 18, 19, 20 |
| கிறிஸ்தியான்நகரம். | டிசம். 13. |
| செபேல்குளம். | அக்டோபர். 14, 15 |
| கன்னன்டிவிளை. | டிச. 18, 19. 20 |
| திருவரங்கநேரி. | அகடோ. 14, 15 |
| பண்டாரவிளை. | அக். 18, 19, 20 |
| செவலை. | டிசம்பர் 18, 19 20 |
| சின்ன நட்டாத்தி. | டிச. 18, 19 20 |
| பிரகாசபுரம். | டிசம்பர் 8, 9 |
| சிரிவைகுண்டம். | டிசம்பர் 4 |
| ஆழ்வார்நேரி. | டிசம்பர் 15, 16 |
| ஆனந்தபுரம். | அக்டோபர் 16 |
| சாந்தபுரம். | டிசம்பர் 10 |
| பெருங்குளம். | டிசம்பர் 18, 19 20 |
| பண்ணைவிளை. | டிசம். 18, 19, 20 |
| அநுக்கிரகபுரம். | அக். 26, 27 |
| லட்சுமிபுரம். | டிசம்பர் 10 |
| தர்மநகரம். | அக்டோ. 26, 27 |
| சமாதானபுரம் | டிசம். 18, 19, 20 |
| திருப்புளியன்குடி. | டிசம்பர் 4 |
| கதுங்குவிளை. | அக்டோ. 14, 15 |
| பாவநாசபுரம். | டிசம்பர் 10 |
| பிள்ளைவிளை. | டிசம்பர் 10 |
| பொட்டக்கரை. | ஆகஸ்டு 10 |
| குலசேகரம்பட்டணம். | டிசம். 14 |
| முடித்தானேந்தல். | டிச. 18, 19 20 |
| ஏரல். | டிசம்பர் 18, 19 20 |
| ஆழ்வார்தோப்பு. | டிசம்பர் 4 |
| நாலுமாவடி. | ஆகஸ்டு 10 |
| கிழ. ஷை | ஆகஸ்டு 10 |
| ஆத்தூர் | ஆகஸ்டு 11 |
| மூன்னன்விளை. | ஆகஸ்டு 13, 14 |
| வடக்கூர். | டிசம்பர் 13 |
| ஆசீர்வாதபுரம். | அக்டோ. 14, 15 |
| ஆழ்வார்நேரி. | டிசம்பர் 15, 16 |
| அதிசயபுரம். | அக்டோ. 21, 22 |
| நாசரேத். | டிசம்பர் 8, 9 |



## ஒட்டப்பிடாரம் தாலூகா.

| | |
|---|---|
| புதியம்புத்தூர். | ஜனுவரி 7 |
| பசுவந்தனை(?)குளம். | ஜனுவரி 12, 13 |
| கைலாசபுரம். | ஜனுவரி 6 |
| தெற்கு மயிலோடை. | ஜனு. 12, 13 |
| கல்லத்திக்கிணறு. | ஜனுவரி 11 |
| மருதன்வாழ்வு. | ஜனுவரி 11 |
| கசவன்குண்டு. | ஜனுவரி 12, 13 |
| கயித்தூர். | ஆகஸ்டு 24 |
| வடக்கு இலந்தைக்குளம் | ஜனுவரி 12, 13 |

## சாத்தூர்த் தாலூகா.

| | |
|---|---|
| சாஸ்தியாபுரம். ... ... ... | அக்டோ. 4, 5 |

## ஆண்பள்ளிக்கூடங்கள்.

## சேர்மாதேவி சர்க்கிள்.

### தென்காசித் தாலூகா.

| | |
|---|---|
| மருக்காலன்குளம். | செப்ற் 17 |
| காரண்டை. | ஜனுவரி 27, 28 |
| ஷை | ஜனுவரி 27, 28 |
| புது காரண்டை. | ஜனுவரி 27, 28 |
| பரங்குன்றபுரம் | ஜனு. 27, 28 |
| ராஜகோபாலப்பேரி. | ஜனு. 27, 28 |
| அதிசயபுரம். | ஜனுவரி 27, 28 |
| வீராணம். | ஜனுவரி 27, 28 |
| கருவந்தா. | ஜனுவரி 27, 28 |
| சோலைசேரி. | ஜனுவரி 27, 28 |
| வேத்தமல்லி(?). | ஜனுவரி 25 |
| மேலகலங்கல். | ஜனுவரி 25 |
| ரெட்டியாபட்டி. | ஜனுவரி 25 |
| சொக்கம்பட்டி | செப்ற். 24, 25 |
| வாகைக்குளம். | செப்டெம்பர் 15 |
| இருக்கன்பட்டி. | செப்ற் 18 |
| சில்லிகுளம். | ஜூன் 10, 11 |
| பொய்கை. | ஜனுவரி 27, 28, |
| பாவநாசபுரம். | ஜனுவரி 27, 28 |
| நல்லூர். | ஜனுவரி 24 |
| ஆலங்குளம். | ,, 24 |
| குருவன்கோட்டை. | ,, 24 |
| கிஷ்ணப்பேரி. | ,, 24 |
| பெத்தநாடான்பட்டி. | அக்டோ. 5 |
| அடைக்கலபட்டணம். | அக்டோ. 4 |
| மீனாஷிபுரம். | ,, 4 |
| காக்கையனூர். | ,, 4 |
| தென்காசி. 1 | மே 26 |
| ஷை 2 | மே 27 |
| பாவூர். | அக்டோ. 3 |
| ஆவுடையானூர். | அக்டோ. 4 |

## அம்பாசமுத்திரம் தாலூகா.

| | |
|---|---|
| கடையம். | அக்டோபர் 6, 7 |
| கோவிலூற்று. | ,, 5 |
| மயிலப்பபுரம். | ,, 5 |
| கலியாணிபுரம். | ,, 9 |
| அளகம்மாள்புரம். | ,, 5 |
| ஐந்தான்கட்டளை. | ,, 5 |
| கருத்தப்பிள்ளையூர் | ,, 9 |
| சிவசமுத்திரம். | பெபுருவரி 22 |

| | |
|---|---|
| ஒடமறித்தான். | ,, 22 |
| மருதம்புத்தூர். | ,, 22 |
| முக்கூடல். | ,, 20 |
| பாப்பாக்குடி. | ,, 20 |
| இடைகால். | ஜனுவரி 21 |
| புலவனூர். | அக்டோபர் 6, 7 |
| சேர்வைகாரன்பட்டி | ,, 6, 7 |
| திருமலையப்பபுரம். | ,, 8 |
| மேட்டூர். | ,, 4 |
| அமபாசமுத்திரம். | ஜனுவரி 17, 18 |
| செவந்திபுரம. | ,, 17, 18 |
| கல்லிடைக்குறிச்சி. | ஆகஸ்து 13 |
| சாட்டுப்பத்து. | ஜனுவரி 19, 20 |
| பிரமதேசம. | அக்டோபர் 11, 12 |
| தாட்டான்பட்டி | பெபுருவரி 22 |
| ரெட்டியாபுரம | ஜுன் 24 |
| உகந்தாஞ்டிபுரம். | ஆகஸ்து 12 |
| கரிசல். | ,, 11 |
| வயனம்பிகுளம். | ,, 11 |
| சமாதானபுரம. | ,, 11 |
| செவ்வல். | செப்றெம்பர் 11 |
| வீரவநல்லூர். | ஜுலை 7 |
| காருகுறிச்சி. | நவம்பர் 5 |

## நாங்குநேரித் தாலூகா.

| | |
|---|---|
| டோனூர் போர்டி. | ஆகஸ்து 6, 7 |
| டேஸ். | மேற்படி 6, 7 |
| இடையன்குளம். | ஆகஸ்து 10 |
| மைலாப்புதூர். | டிசம்பர் 11 |
| பணகுடி. | நவம்பர் 19, 20 |
| பூனர். | நவம்பர் 19, 20 |
| பேர்ப்புலான்குளம். | நவம்பர் 18 |
| சின்னம்மாள்புரம். | டிசம்பர் 11 |
| தண்ணாநல்லூர். | டிசம்பர் 11 |
| ஆனைகுளம். | டிசம்பர் 11 |
| தண்டிகைப்பேரி. | டிசம்பர் 11 |
| மணிமூர்த்திபுரம். | ஆகஸ்து 4 |
| நாசரேத். | நவம்பர் 18 |
| சகாயபுரம். | ஆகஸ்து 4 |
| ஆவரைகுளம். | நவம்பர் 16 |
| ஆலிச்சப்பேரி. | ஆகஸ்து 10 |
| பெருமாள்குளம். | நவம்பர் 16 |
| தர்மபுரம். | நவம்பர் 19 20 |
| தட்டான்குளம். | ஜுலை 20 |
| நல்லமரம். | ஆகஸ்து 6, 7 |
| களுங்கடி. | ஜுலை 20 |
| கன்னிகுளம். | ஜுலை 31 |
| விசுவாசபுரம். | ஆகஸ்து 4 |
| கன்னன்குளம். | டிசம்பர் 16 |
| ரெட்டாகுளம். | டிசம்பர் 16 |
| மேலசெட்டிகுளம். | டிசம்பர் 15 |
| சிந்தாமணி. | டிசம்பர் 15 |
| ஆழ்வாரனேரி. | டிசம்பர் 17 |
| கோலைகுளம். | டிசம்பர் 17 |
| மருதகுளம். | டிசம்பர் 18 |
| கோடன்குளம். | டிசம்பர் 16 |
| காடன்குளம். | டிசம்பர் 16 |
| பூலிபாட்டம். | டிசம்பர் 18 |
| அம்பலம். | டிசம்பர் 15 |
| அருமநேரி | டிசம்பர் 16 |
| அத்திகுளம். | டிசம்பர் 16 |
| மூன்றுடைப்பு. | டிசம்மர் 20 |
| புதுக்குளம். | டிசம்பர் 20 |
| பாணான்குளம். | டிசம்பர் 20 |
| வேதபுரம். | டிசம்பர் 20 |
| சவிசேஷபுரம். | டிசம்பர் 8, 9 |
| சுப்பிரமணியபுரம். | டிசம்பர் 8, 9 |
| புதூர். | டிசம்பர் 8, 9 |
| இட்டமொழி. | டிசம்பர் 8, 9 |
| பெரும்பனை. | டிசம்பர் 8, 9 |
| நன்னிகுளம். | டிசம்பர் 8, 9 |



| | |
|---|---|
| மீனாக்ஷிசுந்தபுரம். | டிசம்பர் 8, 9 |
| கழுதூர். | ஜுலை 21, 22 |
| பாப்பான்குளம். | ஜுலை 21, 22 |
| குளத்தூக்குடி. | ஜுலை 21, 22 |
| பறப்பாடி. | ஜுலை 21, 22 |
| ஈகைப்பபுரம். | ஜுலை 21, 22 |
| சியோன்மலை. | ஜுலை 21, 22 |
| ஊசிக்காரன்தட்டு. | டிசம்பர் 8, 9 |
| சோதிநகரம். | ஜுலை 26 |
| சமாரியா. | ஜுலை 28 |
| கூடன்குளம். | நவம்பர் 30 |
| கணக்கன்குளம். | டிசம்பர் 2 |
| ஆவரைக்குளம். | நவம்பர் 28 |
| யாக்கோபுரம். | நவம்பர் 28 |
| பன்னை. | நவம்பர் 26, 27 |
| ராமலிங்கபுரம். | நவம்பர் 22 |
| உதையத்தூர். | டிசம்பர் 2 |
| அருந்தப்பபுரம். | டிசம்பர் 1 |
| பரமேசுரபுரம். | ஜுலை 29 |
| சிதம்பரபுரம். | டிசம்பர் 2 |
| திருவம்பலபுரம். | டிசம்பர் 2 |
| ஆவுடையாபுரம். | டிசம்பர் 2 |
| மூடவன்குளம். | டிசம்பர் 2 |
| மாடநாடான்குடி. | நவம்பர் 23 |
| குமிழம்பாடு. | ஜுலை 29 |
| பெருங்கன்னன்குளம். | டிசம். 2 |
| வடக்கன்குளம். | நவம்பர் 22 |
| புதூர். | டிசம்பர் 3, 4 |
| சொக்கலிங்கபுரம். | டிசம்பர் 3, 4 |
| உவரி. | டிசம்பர் 6, 7 |
| காரிகோவில். | டிசம்பர் 3, 4 |
| குண்டல். | டிசம்பர் 3, 4 |
| கோடாவிளை. | டிசம்பர் 3, 4 |
| களக்காடு. | பெபுருவரி 27 |
| சேர்மாதேவி. | பெபுருவரி 25 |
| கல்லிடைக்குறிச்சி. | ஜனுவரி 17 |
| வாகைக்குளம். | ஜனுவரி 21 |
| நவ்வலடி. | டிசம்பர் 3, 4 |
| பெட்டக்குளம். | டிசம்திர் 3, 4 |
| கைலாசபுரம். | டிசம்பர் 3, 4 |
| ஆயான்குளம். | டிசம்பர் 3, 4 |
| ஆனைகுடி. | டிசம்பர் 6, 7 |
| முதுமொத்தமொழி. | டிசம். 6, 7 |
| புதிருப்புவிளை. | டிசம்பர் 6, 7 |

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—நாம் முன் தெரிவித்தபடி நூதன மந்திரிகள் சபை ஏற்பாடாயிற்று. கிலாட்ஸ்டன் துரை அதற்குத் தலைவர். டெவன்ஷியர் டியூக் பிரபுவின் சேஷ்ட குமாரராகிய மார்குவிஸ் ஹார்டிங்டன் பிரபு இந்திய துரைத்தன மந்திரியாகவும், மார்குவிஸ் லான்ஸ்டவுன் பிரபு உபமந்திரியாகவும் நியதிபெற்றார்கள். புதிய பார்லிமெந்து சபையார் அலுவல் தொடங்கியிருக்கிறார்கள். பெர்லின் உடன்படிக்கைக் கிரமங்கள் சரியாய் நிறைவேற்றப்படவேண்டுமென்று ஐரோப்பாவின் இதர ராஜாங்கத்தாருக்கு கடிதம்போக்கியிருக்கிறார்களாம். இந்திய அரசாட்சி விஷயமாய் அவர்கள் நூதனமாய் நடப்பிக்கப்போகிறதை நாம் அறிய இன்னும் சிலகாலம் செல்லும்.

**இந்தியா.**—புதிய ராஜபிரதிநிதியாகிய மார்குவிஸ் ரைபன் பிரபு அவர்கள் சென்றமீ 31உ அன்கோனாவென்னும் நீராவி மரக்கலத்தில் பம்பாய்த் துறை வந்து சேர்ந்தனர். அன்று மாலை 6-மணிக்கு 31-குண்டுவெடி தீர, பற்பல விருதுக்கொடிகள் நாட்டப்பட்டு புஷ்ப தோரணமுதலிய கட்டப்பட்டிருக்க, அநேக ஐரோப்பியர், இந்துக்கள், பார்சியர், அநேக துரைசானிகள், போர்த்துகேசு உரோம சபையார், அவர்களுடைய கன்யாஸ்திரீமார், மகமதியர், சுயாதீனரான அநேக ஐரோப்பிய துரைகள் அவர்கள் பெருமாட்டிகள் சகிதம் புடை சூழ, பிரபு அவர்கள் பம்பாய் ராஜமாளிகைக்கெழுந்தருளினர். பம்பாய் நகரவிசாரணைச் சங்கத்தாரால் மனுப்பத்திரம் ஒன்று பிரபு அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பத்திரத்தில் குறித்துச் சொல்லிய அபிப்பிராயங்களுக்கு பிரபு மிகவும் மகிழ்கூர்ந்தனர். பின்பு சங்கத் தலைவர் நமது எல்லையில் அக்கரவு இன்னும் ஒழிந்ததில்லை. தங்களுடைய நல்வரவுதான் அச்சச்சரவாகிய நெருப்பை அவிப்பதற்கான சோனாமழையென்று பிரஸ்தாபித்தார். ரைபன் பிரபு கொடுத்த மறுத்தரத்தில், இந்துக்கள் சாதாரணமாய் இராஜ விசுவாசமுள்ளவர்களாயிருப்பதாய் யாவரும் சொல்வதை நானும் உட்கொண்டிருக்கிறேனென்று சொல்லி அதிக உல்லாசங் காட்டினதுந்தவிர, சக்கரவர்த்தினியவர்கள் இட்ட கட்டளையைச் சிரசாவகித்து தான் ஒப்புக்கொண்ட காரியத்தைச் செவ்வையாய்ச் செய்துமுடிக்க உத்தேசித்திருப்பதையுங் குறிப்பித்ததுமன்றி, சொல்லளவிலேயே குணநிச்சயங்களைக் கணிப்பது நன்றல்லவென்றும், செய்கையால் செய்து காட்டியபின் அறிந்து பிறகு தெளியவேண்டுமென்றுந் தெரிவித்தார். நாளது மீ 8உ சிம்லாவுக்குப் பிரயாணப்படவிருந்தார். இப்புதிய ராஜபிரதிநிதி 6-வருஷத்துக்குமுன் புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தைவிட்டு பாப்பு மார்க்கத்தைத் தழுவினவர். இந்தியாவின் முதலாம் ரோமான் மத கவர்னர் ஜெனரல் இவரே. இவர் இதுமுன் முக்கியமான அநேக உத்தியோகங்களை நிர்வகித்து அநுபவ சித்தியடைந்திருப்பவராதலால் இந்திய கவர்னர் ஜெனராலுக்குரிய தமது பாரமான கடமைகளையும் வெகு சமர்த்தாய் நிறைவேற்றி பிரதிஷ்டைபெறுவாரென்று நம்பிக்கொள்ளலாம். இவர் துரைத்தன பாரத்தை ஒப்புக்கொண்டவுடனே மாட்சிமை தங்கிய லிட்டன் பிரபு சீமைக்குப் பிரயாணமாவார்.

---

# நற்போதகம்.

எ. சூலாய்மீ. ௲அ௱அ௰.

### உபாகமம்.

### 29. அதிகாரம்.

29-ம் 30-ம் அதிகாரங்களில், மோவாப்தேசத்தில் உடன்படிக்கை புதிப்பிக்கப்பட்டபொழுது மோசே சொன்ன புத்திமதிகளடங்கியது. இப்பொழுது இஸ்ரவேலர் கானான்தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு இன்னொருவிசை ஞாபகம்பண்ணுவது எத்தனை நல்லது! மோவாப்தேசத்தில் செய்த உடன்படிக்கையானது சீனாயின் உடன்படிக்கைக்கு மாறானதுமல்ல, அல்லது அதற்குக் கூட்டிக் குறைத்துச் சொல்லப்பட்டதுமல்ல. சீனாயின் உடன்படிக்கை யாதொரு மாறுதலில்லாமல் இருந்தபடியே அதிகாரமுள்ளதாய்த் தானிருக்கிறது. மோவாப்தேசத்தில் பண்ணப்பட்ட உடன்படிக்கையின் பொருள் என்னவென்றால், தேவனுடைய பஞ்சத்தில், இஸ்ரவேலைக்குறித்து தேவனுடைய வாக்குத்தத்தங்களும் நோக்கங்களுமெல்லாம் அப்படியே இன்னம் ஸ்திரத்திலிருக்கிறதென்றும், அவைகள் எவ்விதமும் நிறைவேறுமென்றும் காட்டவாம். இஸ்ரவேலருடைய பட்சத்தில், இஸ்ரவேலர் தங்கள் கடமையை ஒப்புக்கொண்டு அறிக்கைசெய்யவும், அவற்றை உண்மையாய் நிறைவேற்றுவோமென்று பொருத்தனைபண்ணவும் நோக்கமாக இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது. ஏனென்றால் இஸ்ரவேலர் அடிக்கடி உடன்படிக்கையை மீறிப்போகிறவர்களென்பதை மோசே பரீட்சையினால் அறிந்திருக்கிறாரே.

1. இந்த வாக்கியம் அநேக எபிரேயப் பதித்தல்களில் முந்தின அதிகாரத்தோடு சேர்ந்திருக்கிறது.

2. யாத்தி. 19: 4.

3. "பெரிய சோதனைகள்." 4: 34. 7: 19.

4. தேவனுக்குரியவைகளை அறிவது தேவவரமாம். 1 கொ. 2: 14.

5. 1: 3. 3: 2, 4.

6. 3: 3.

7. 2: 32. 3: 1.

8. 3: 12, 13.

9. 4: 6. யோசு. 1: 7.

13. "உங்கள் பிள்ளைகளும்." நம்முடைய திருச்சபையானது, சிறுபிள்ளைகளை ஞானஸ்நானத்தினாலே தேவனோடு உடன்படிக்கைக் குட்படுத்துவதும், சிறுபிள்ளைகளுக்காக ஞானத்தாய்தகப்பன்மார் செய்கிற வாக்குத்தத்தங்களை ஒப்புக்கொள்வதும் நியாயந்தானென்று இந்த வாக்கியத்தினால் விளங்குகிறது.

"அந்நியர்" புறஜாதியார். யாத்தி. 12: 38, 48.

"விறகுக்காரன்." யோசு. 9: 21.

15. இப்பொழுது உயிரோடிருந்து உடன்படிக்கைசெய்தவர்களுடைய வம்சத்தாரும் இந்த உடன்படிக்கையினால் கட்டப்பட்டவர்களென்று யூதர் வியாக்கியானம்பண்ணுகிறார்கள்.

16—29. மருளவிழாதபடி எச்சரிக்கிறார்.

18. "வேர்." உள்ளுக்குள்ளாயிருந்து விக்கிரகாராதனைக்கு இழுத்துவிடுகிற பாஷண்டனைக் குறிக்கும்.

19. அந்தரங்கத்தில் கேடுசெய்கிற நெஞ்சத் துணிவுள்ள துஷ்டனைக் குறிக்கும். சங். 78: 11.

20. அந்தரங்கத்தில் விக்கிரகாராதனைசெய்கிறவன் மனுஷர் தண்டனைக்குத் தப்பிக்கொண்டாலும் தேவகோபாக்கினைக்குத் தப்பார். எசே. 14: 7, 8. சங். 74: 1. 79: 5.

"பேழை." 9: 14.

23. மோசே இந்த வார்த்தைகளைப் பேசும்போது சோதோமுதலான இடங்களிருந்த சீர் அவர் மனதிலிருந்தது. பலஸ்தீனாவின் முற்கால செழிப்பும் நாளது அழிவும் அதற்கு ஒத்திருக்கிறது.

27. தானி. 9: 11—15.

28. பத்துக்கோத்திரத்தார் இப்படியே போனார்கள்.

29. "மறைவானவைகள்"...உரியவைகள்" ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் மொழிந்தபின் மோசே எச்சரிப்பான ஒரு முடிவுரை சொல்லுகிறார்.

இந்த வார்த்தைகளின் பொருள் யாதெனில், இப்போ பேசிவந்த நன்மையும் தீமையும் இனிமேல் எப்படி எவ்வகையாய் நிறைவேறும்



என்பது தேவனுக்கே தெரிந்த காரியம். நமக்குத் தெரிந்த காரியமோ, வெளிப்படுத்தப்பட்டவைகள். ஆகையால் இனி நிறைவேறப்போகிற தெரியாத காரியங்களில் தலையிட்டு நம்மை அலைக்கழியாமல், நமக்குக் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிற கற்பனைகளின்படி நடக்கக் கருத்தாயிருக்கவேண்டும் என்பதாம்.

---

## 30. அதிகாரம்.

இஸ்ரவேலர் கடைசியாக திரும்பச் சேர்க்கப்படுவதை முன்னறிவித்து முடிக்கிறார். 1 இரா. 8: 46—50.

1—10. தேவன் கொடுக்கும் தண்டனை இஸ்ரவேலர் சேர்ப்பட
ஏதுவாகும்.
3. இந்த வாக்கியம் நியாயாதிபதிகளின் காலத்தில் ஒரு பாக
மாய் நிறைவேறுதல் அடைந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால்
எரே. 32: 37. எசே. 11: 19. 34: 13. 36: 24. இந்த வாக்கியங்களைப்
பார்த்தால் அது சரியான நிறைவேறுதலாய்க் காணப்படாது. பாபி
லோன் சிறையிருப்பிலிருந்து திரும்பினதும் இந்த வாக்கியத்தின் முடி
வான நிறைவேறுதல் அல்ல. உரோமர் 9-அதி. பார்.-யூதர் கிறிஸ்துகா
தரை விசுவாசித்து ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்போது
தான் இது முடிவாக நிறைவேறுதலடையும். யோ. 11: 51, 52. 10: 16.
ஆனால் இனிமேல் யூதர் பொதுவாய்க் குணப்படும்பொழுது, அவர்கள்
ஒரு சாதியாராக அல்லது தேசத்தாராக மீட்கப்பட்டுக் குணப்படுவார்
களா? தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்ட சனங்களாக அவர்களுக்
கிருந்த பூர்வ சலாக்கியங்கள் மேன்மைகள் மறுபடி அவர்களுக்குக்
கிடைக்குமா? அவர்களுடைய் முற்பிதாக்கள் குடியிருந்த தேசத்தில்
இவர்கள் திரும்பிப்போய்க் குடியிருப்பார்களா என்ற கேள்விகள்,
கர்த்தருக்கே உரிய மறைவான காரியங்களாயிருக்கிறது. நம்முடைய
கர்த்தரும் அப்படியே போதித்திருக்கிறார். நடபடி. 1: 6, 7.
13. "சமுத்திரத்தைக் கடந்து" யோனாவைப்போல நமக்கும்
ஒரு சின்ன யோனா கிடைக்கமாட்டானா? என்று எருசலேம் தர்கூமில்
வியாக்கியானம்பண்ணியிருக்கிறது. இது மெச்சத்தக்க வியாக்கியானம்.
20. கீழ்ப்படிதலிலிருந்து பிறக்கும் கிருபை அன்பு.
"அவரே உனக்குச் சீவனும்" எருசலேம் தர்கூமில் "அவ
ரே" என்பது "அதே" என்றிருக்கிறது; அதாவது தேவனைச் சிநேகிப்
பதே உனக்குச் சீவன். வாக்குத்தத்த தேசத்தில் நீடித்திருப்பதற்கு
தேவனைச் சிநேகிப்பதே வழியும் வகையுமாயிருக்கிறது என்றர்த்தமா
கும். 4: 40. 32: 47.

"அகே" என்றிருக்கிறதும் பொருளுள்ளதுதான். சங். 21: 1. யோ. 11: 25. 17: 3. 1 யோ. 5: 20.

---

## Exposition of the Church Catechism.

---

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

---

### கூ-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

க-ம் பிரிவு.

---

தேவனுடைய இலட்சணங்களின் தொடர்ச்சி.

7. மகிமையின் தேவன்.

உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர். சங். 8: 1.

கர்த்தாவே மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகளே. 1 நா. 29: 11.

பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. ஏசா. 6: 3.

8. பரிசுத்தர்.

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக. லேவி. 11: 45. 19: 2 .1 பேது. 1: 15, 16.

கர்த்தரைப்போல பரிசுத்தமுள்ளவரில்லை. 1 சாமு. 2: 2

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். ஏசா. 6: 3.

தீமையைப் பார்க்கமாட்டாத சுத்த கண்ணனே. ஆபகூக். 1: 13.

சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். வெளி. 4: 8.

9. நீதியுள்ளவர்.

சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ ? ஆதி. 18: 25.

அவர் நீதியும் செம்மையுமானவர். உபா. 32: 4.

நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவனில்லை. ஏசா. 45: 21.



பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1: 9.

10. அன்புள்ளவர். அவர் தாம் உண்டாக்கின ஒன்றையும் பகைக்கிறவரல்ல. அவர் தம்முடைய ஜனங்களை நித்திய சிநேகத்தால் நேசிக்கிறார்.

அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகிக்கிறேன். எரே. 31: 3.

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவா. 3: 16.

தேவன் அன்பாகவே இருக்கிறார். 1 யோவா. 4: 8, 16.

11. இரக்கமுள்ளவர்

கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன்; ஆயிரந்தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காண்பிக்கிறவர். யாத். 34: 6, 7.

அவருடைய கிருபை என்றென்றைக்குமுள்ளது. சங். 100: 5. 103: 17.

தேவனே இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். எபே. 2: 4.

கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். யாக. 5: 11.

12. சத்தியமுள்ளவர். அவர் பொய்யைப் பகைத்து அருவருக்கிறார். நீ அவரை விசுவாசியாவிட்டால் அவரைப் பொய்யராக்குகிறாய். 1 யோ. 5: 10. இது எவ்வளவோ பயங்கரமான அவமதிப்பு ! நான் அவரை விசுவாசிக்கிறேனா என்று உன்னைக் கேள்.

உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது. சங். 36: 5.

தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யனென்றும் சொல்வோமாக. ரோ. 3: 4.

13. உடன்படிக்கையைக் காக்கிறவர்.

நோவா (ஆதி. 9: 9, 11.) ஆபிரகாம் (ஆதி. 17: 2-9.) ஈசாக்கு (ஆதி. 17: 19.) யாக்கோபு (ஆதி. 28: 13—15) என்பவர்களோடு உடன்படிக்கை செய்யப்பட்டது.

உடன்படிக்கையையும் தயையையும் காக்கிற உண்மையுள்ள தேவன் உபா. 7: 9, 12. 1 இரா. 8: 23. 2 நாளா. 6: 14. நெகே. 1: 5. 9: 32.

என் உடன்படிக்கையை மீறமாட்டேன் இருப்பேன். சங். 89: 34

14. மாறாதவர்.

நான் கர்த்தர், நான் மாறாதவர். மல்கி. 3: 6.

அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமை யின் நிழலுமில்லை. யாக். 1: 17.

மனந்திரும்பாத பாவிகளெல்லாரையும் தண்டிக்கும்படியான தீர்மானத்திலும், தமக்குப் பயந்து தமக்குக் கீழ்ப்படிகிறவர்களிடத்தில் அவர் வைக்கிற அன்பிலும், இரக்கத்திலும், மாறாதவராயிருக்கிறார்.

பொய்சொல்ல தேவன் ஒரு மனிதனல்ல, மனமாற அவர் ஒரு மனுப்புத்திரனுமல்ல. எண். 23: 19.

இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதுமில்லை. தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதுமில்லை. 1 சாமு. 15: 29.

பாவத்துக்கு விரோதமாக தேவனுடைய தீர்மானங்கள் வெளிப்படுவது உண்மையானாலும், அந்தத் தீர்மானங்கள் தன் பாவங்களுக்காகத் துயரப்பட்டு, குணப்படுகிற எந்தப் பாவியையாவது அவநம்பிக்கைக்குள்ளாக்குமென்று எண்ணக்கூடாது. ஒருதரம் பரம இன்பங்களை அனுபவித்து, பின்பு அந்த பரிசுத்த பாதையை விட்டுவிட்டால், தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கக் கூடாது.

கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைசெய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார். யாத். 32: 14.

நான் விரோதமாய்ப் பேசின அந்தச் சாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால் நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு மனமாறுவேன். எரே. 18: 8—10.

எரே. 26: 13. 42: 10.

---

# இரக்ஷண்ய மனோகரம்.

## தேவாரம்.

### பிராதகால ஸ்தோத்திரம்.

பொருட்படு பொறிபுலன் ஒடுங்கிப் பொன்றல்போல்
மருட்படு துயில்கொளீஇ மறந்திக் கங்குல்வாய்
இருட்பெருங் கடல்குளித் தேனைக் காத்தனை
அருட்பெருங் கடலனாய் அனந்த ஸ்தோத்திரம்.



எத்தனையோ விபத்திரவில் நேர்கிலேன்
அத்தனையுந் தூரந் தருள் விழிக்கடை
வைத்தெனைக் காருயிர் வழங்கிக் காத்தனை
அத்தனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 2

எண்ண வெம்மாத்திரம் ஏழை யானுன
புண்ணிய விழித்துணை பொருந் துருதெனைக்
கண்ணிய துயிலிடைக் காத்தளித்தனை
அண்ணலே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 3

மைப்படு கங்குலைக் கடந்துன் வண்மையால்
இப்பகல் கண்டுனை ஏத்த நின்றனன்
எப்பரி சியான் கைமா றியற்றுகேனெனத்
அப்பனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 4

கனவிருள் அகற்றி யிக்காலை உய்த்தல்போல்
மனவிருள் அதனையும் மாற்றி நீதியின்
தினகரன் அருள்வழி செலுத்தி யென்னையாள்
அனகனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 5

கண்டுயில் நீத்ததும் கருணைமைந்தனைக்
கொண்டெனைப் புரந்ததுங் குறிக்கொண்டன்பொடு
தொண்டனக் கியற்றமெய்த் துணிவு தந்தருள்
அண்டர் நாயக உனக் கனந்த ஸ்தோத்திரம். 6

எந்தையே ஸ்தோத்திரம் இகலில் மன்பொதுத்
தந்தையே ஸ்தோத்திரம் சருவ லோகமும்
விந்தையாய்ப் படைத்தருள்விமல ஸ்தோத்திரம்
அந்தணு ஸ்தோத்திரம் அனந்த ஸ்தோத்திரம். 7

மாதிரம் யாவையும் வளைந்த வல்லிருட்
போதிலே பலர்புகா உலகம் போகவிப்
பேதையேற் கெமரொடும் பிழைப்பை யூட்டினை
ஆதியாய் நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 8

திகிலுலாம் பவஇருள் சிதையத் திவ்விய
சுகிர்த மார்தரு மொழிச் சுருதி வான்சுடர்
மகிதல மெங்கணும் மலிய நல்குவாய்
அகில லோகேஸ்வர் அனந்த ஸ்தோத்திரம். 9

ஐயமேலிட மரணாந்தகாரம் வந்த்
ஓய்யென மூடினின் றுடற்று போழ்தினும்
அய்ய பங்கயமுக ஜோதி காட்டியாள்
அய்யனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 10

முற்றிற்று.

# ஜெபவிம்லதி.

## தெய்வவணக்கம்.

நினைத்தது முடிக்கின்றசர்வசாமர்த்தியமுள நிர்மலச்சித்தையெங்கும்
நிறைகின்ற பரிபூரணானந்த வஸ்துவை நிராதாரமானவொன்றை
எனைத்துமாசற்ற பரிசுத்த நிஷ்பக்ஷமொடிலங்கு நீதிப்பிளம்பை
எப்பொருளுமின்றி யேசுத்த சூனியமாயிருந்த அக்காலத்திலே
அனைத்துலகமும் விவிதபேதங்களாய சரவசரங்களும் படைத்த
அளவிலாஞான வேதாந்த முதலைத்தமியஞானமியத்தை நினையாத் (திரி
எனைத்தடுத்தாட்கொண்ட கருணைப்பிரவாகத்தையெண்ணரியமகிமைத்
யேகத்துவத்தை யுயர்மாகத்தனைப் பணிந்தென்றுமஞ்சலிசெய்குவாம்.
தீயநரகக் கதவடைத்ததாரடைபட்ட செப்பரிய மோக்ஷகதியின்
செம்பொற்கபாடந் திறந்ததார் நாரொவூர் தீவினைக்காளாகவே
மாயம்புரிந்த சண்டாளப் பசாசினை மடித்ததார் என்றியறியா
மாபாவிகட்கென்று மழியாத பேரின்பவாழ்வருள வேறைமறுவாய்
நேயமோடுதித்துநன்னெறியை யுபதேசித்துநீசர்கட்காய்ப்பிணைசொலி
நின்றதால் வருதேவநீதியின் தண்டனையைநேர்ந்தரிய பாடடைந்தைத்
காயம்படச் சிலுவைமீது பிராணத்தியாகஞ்செய்ததார் கொலந்தக்
கருணாகரன்றனிருசாரணா விந்தமலர் கருதியஞ்சலி செய்குவாம். 2
உன்னத மகத்துவ பரத்துவதிரித்துவத்தொன்றான தெய்வத்துவம்
உத்தம மிகுத்த பரிசுத்த சுகுணத்தலமுயர்ந்த மெய்ஞ்ஞானதீபம்
மன்னுதற்பர தேவசித்தபரமார்த்தமாம் மாபரமரகஸியத்தை
மறுவயச்சரஸ்வதமான சாதனமாக வளாவித்த கருணாலயம்
பன்னரியமுத்திநெறியுய்த்து மெய்ப்பத்தரைப் பாவபந்தத்தினீக்கிப்
பவித்திரமளித்து முற்றும் பாதுகாக்கின்ற பரமாத்மசித் ஸ்வரூபம்
என்னிதயமூடெழுமலத்திரய விருட்படலமிரியவிரி சுடர் பரப்பி
இனிதாக வமருமொரு புனிதாவிசெயல்நினைந்தென்றுமஞ்சலி செய்கு
வாம். 3

## பரதெய்வம்.

நில்லாத காயமிதுபுல்லாகுமென்று நானினையாதுபோன போக்கிலி
நெஞ்சத்தைவிட்டென்னை வஞ்சித்து நீதந்தநியமத்தையுங் கடந்து
செல்லாத வழியூடுசென்று மதிகெட்டுத் திரிந்தயருங்காளினுனது
திவ்விய கடாக்ஷமுறவுன்றஞ்சமாய் வந்தநீயசண்டாளனேனை
எல்லாரிலுங் கொடிய பொல்லாத பாவியென்றெள்ளாது திருவுளத்தில்
எனையுமொருபொருளாய் மதித்தடிமையாக்கினவுன்னேராளமான அன்
பைப்



பல்லாயிரங்கோடி நாக்கொண்டு புகழினும்பகருதற்கெளிதாகுமோ
பக்தஜெனபரிபால நித்யமவாருகூலபவரகித பரதெய்வமே. 1
ஆரணயவென்றுன்னி வேதாகமத்தை யென்னகந்திறந்துவைக்கும்
அக்ஷரங்களையுமிருகண்காணும் வாய்விண்டவற்றைப் படித்துரைக்கும்
நேராகவந்துனது கிருபாசனத்தண்டை நின்றுபணியுமுழங்கால்
நீசனேனிதயமோவேறுயலைந்தபோம் நீசெய்தநன்றி நினையாத்
தோரதுபாவத்தை யென்னைக்கெடுக்கின்றவுட்பகையிதன்றியுளவோ
உள்ளக்கருத்தறியும் வள்ளலுனதருளிலா துய்வழியிலைக் கடைக்கண்
பாராதிருக்கில் வேறாரதரிப்பர் சொல்பக்ஷமிகுகர்த்தவ்யமே
பக்தஜெனபரிபால நித்யமவாருகூல பவரகிதபர தெய்வமே. 2
கல்லானவிருதயமுடைந்துருகியிருவிழி சுழந்து கண்ணீர் சொரியவே
கையுச்சிமேன் முகிழ்த்தஞ்சலித்தகபுளகாங்கிதமெழும நின்றே
எல்லா உலகத்துக்குமூலகாரணமாய எந்தை நினதருளையுன்னி
யேழையேனுந் தழுதழுக்கவன்பொடு பணிந்தெந்நாளுமேத்தவுன்றன்
நல்லாவியைத் தந்துதிரமான விசுவாச நல்தியிகலோகபோகம்
நாடாது பரலோக போகமே விளைகின்ற நன்மன நிலைக்க அருள்வாய்
பல்லூழியூழியொரு கணமாக வலகிம்பாரமார்த்திகமோனமே
பக்தஜெனபரிபால நித்தியமவாருகூல பவரகிதபர தெய்வமே. 3
ஆகாமியத்திலே செத்துக்கிடந்தவெனையாவியுயிர்ப்பித்தனை
அஞ்ஞானவிருளுடு கண்கெட்டலைந்த வெற்கவியாத வொளிகாட்டினை
மாகாத கப்பேயினடிமையாய்ப்போன வெனைவலியப்பிடித்திழுத்துன்
மகிமைக்குயர்த்திக் கிறிஸ்துவுக்குள்ளெனையுமைந்தனாப் பாவித்தனை
தேகாதிபிரபஞ்சநச்சித் திரிந்தனைச் சேவியாப் பாவியேற்குத்
திருவுளமிரங்கி நீசெய்த விந்நன்றியைச் சிதையாத சிந்தைதருவாய்
பாகாயென்னுளமூடுமதுரிக்க நல்லருள் பழுத்தொழுகு ஜீவதருவே
பக்தஜெனபரிபால நித்தியமவாருகூல பவரகிதபர தெய்வமே. 4
மாதாகருப்பத்தியானுற்றகணமே ஜென்மப் பாவம்வந்துபற்ற
மண்ணிற்பிறந்தெலாத் துர்க்குணமும் வரவர மலிந்துதுன்மார்க்கனுகி
வாதாடிநன்மனோசாக்ஷியை மழுக்கிமூவாசையால் மதிமருண்டு
வலாயாது வைகலுமனந்த பாவஞ்செய்து வாணாளவீண் கழித்தேன்
ஏதாகிலும் சிறியநன்றிலே னென்வினையெனைக் கண்டதென்செய்கு
வேன்
எந்தாயுனக்கொளித்தெங்கோடினும்பிழைப்பெங்குமிலையேழையுன்றன்
பாதாரவிந்த மேகதியென்று கிட்டினேன் பக்ஷமொடுரக்ஷிஅய்யா
பக்தஜெனபரிபால நித்யமவாருகூல பவரகிதபர தெய்வமே. 5
இலகுபுகழ்பெற்றேக சக்கிராதிபதியாயிருந்து ஜெகமுழுதாண்டுமென்
னியாவருமதிக்கவே சன்மார்க்கநிலை நின்றிரும்பெயர் படைத்துமென்ன

உலகூடுபலகால நிர்ச்சிந்தையாய்ச் சரித்துலவாநிருந்துமென்ன
உயர்ககனஜோதிகளினிலையை மயர்வறகாமொள்ளியவிவேகியாயென்
அலகிலாப்பு வனங்களெல்லாம் படைத்தளித்தாள்கின்றனை யவுமே...ம்
ஆன்மகோடிகளுய்ய நீதர்தமகலைவயுமதிந்து மனமொழிமெய்களால்
புலகாதுமேத்திப் பணிந்துனைச் சேவியாப் பக்ஷத்தோர் பயனுமின்றே
பக்தஜெனபரிபால நித்யமவரநுகூல பவரஜிதபர தெய்வமே. 6
நீதமுயல்பாதகக் கூளி கெர்ச்சிக்கின்ற சிங்கேறுபோலயாரைத்
தின்னலாமென்றயதி காடியெக்கோமுர் திரிகின்றதுறவுகாட்டிச்
சூதுபுரியுலகமுமென்னைக் கெடுக்கத்துஜன் கட்டிநிற்குதன்றித்
தூர்ச்சிலமெல்லாஞ் சாக்கின்ற விதயமுந் துரோகஞ்செய்கின்றதந்தோ
ஏதுமவகாசமிலன்வேறு துணையிலனித்தலித சத்துருவை ஜெயிக்க
எம்பிரானேயுன்னை நம்பினேன்நம்பினேனெளியேற்கிரங்கி முற்றும்
பாதுகாத்தெனையாள்வதுன்பாரம்ஐய வொருபற்றில்லைவேறதிலையே
பக்தஜெனபரிபால நித்தியமவரநுகூல பவரஜிதபர தெய்வமே. 7.
எரிசினமிருக்கவே பரமதத் வேசிகளொழுப்பி வத்தாதானியிட்
டென்பிராணனுக்குலயமுண்டாக மாகுரூதுகிம்ஸை களியற்றினுவும்
விரிசுடர்ப் பரிதிமதிதாரகாகணமிருவிசும் பொடைம்பூதபேத (ய்
லியனுலகம் யாவும்வெர்தழியினுமொழியாத விசுவாசமொன்றருளுவா
தரியலர்வளர்த்த செந்தழலூடூலாய வத்தாஸொரு மூவருக்கும்
சண்டவெஞ்சியமுழையண்டையிற்றள்ளுண்ட தானியேல் தீர்க்கனுக்
பரிவுற்றுநீ கல்கு விசுவாசமே முடிவுபரியந்தம் நின்றதன்றோ (கும்
பக்தஜெனபரிபால நித்யமவரநுகூல பவரஜிதபர தெய்வமே. 8
காருற்ற மூகிலென்னையான் செய்பவமானதக்காட்சிக்கு விஷயமாகிக்
கனமான பயபீதிதருதலாலென்மனங் கவல்கின்றதோ ரோர்வேளை
சிருற்றவையுவுன்திரு மதலைகருணையைச் செயலையருள் மொழியையுன்
(னித்
தேறுமொருவேளை மற்றெர்நோமும் பொலாஜெகமாயை மூடியுலவை
செருற்றசருகெனச்சுழல்கின்ற தநிலையே நின்னருட்கண்றியிந்த
நின்மூடமனஸைத் திருப்பி சன்னிலையினில்நிறுத்த என்றுல் மூடியு
பாருற்றவஜீவருக்குருகி யொருமகவையும் பாராதபரமதியாகி (மோ
பக்தஜெனபரிபால நித்தியமவரநுகூல பவரஜிதபர தெய்வமே. 9
சீர்கொண்டமகிமைத்திரியேகத்துவதேவ நின்திருநாமமதியோங்கவும்
ஜெகமெலாம் யேசுவின்றிருவடி வணங்கவும் திவ்யாவிசெயஸ் மலியவும்
ஏர்கொண்ட நின்றிருச்சபை விருத்திக்கவுமிதாமாமிருண் மதங்கள்
எல்லா நிர்ம்மூலமாய்ச் சத்திய சுவிசேஷ வொளியெங்கும் பிரகாசிக்க
(வும்
பேர்கொண்டவாரிதிமூந்நீர் கொண்டுநிறைதல்போற் பெரும் நின்றன்
(னை யறியும்



பேரறிவுபுவிமுழுதும்நிறையவும் பலஜாதிபேதங்கள்கெட்டொழியவும்
பார்கொண்ட வேந்தர் செங்கோல் கொண்டு ராஜ்ய பரிபாலனஞ்செய
வுமருள்வாய்
பக்தஜெனபரிபால நித்தியமவரநுகூல பவரஜிதபர தெய்வமே. 10

முற்றிற்று.

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பக்திக்குரிய

## சத்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

---

## மூன்றும் தியானம்.

செவ்வாய்.

---

ஆறுதல்.

“ இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமா
யிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.,, 2 கொரி. 1: 3.

---

ஆறுதலானது, பாக்கியத்துக்கு மிகவும் நெருங்கின இனமாயி ருக்கிறது. இரண்டே வகையான ஆறுதல்கள் மாத்திரமுண்டு; ஒன்று சிஷ்டிக்குரிய இயற்கையான ஆறுதல், மற்றொன்று ஆவிக்குரிய ஈவா ன ஆறுதல். இவைகளில் முந்தினது நமது ஆஸ்தி, அந்தஸ்து, இஷ் டர்கள் இவை முதலியவைகளாலுண்டாகிறது; பிந்தினதோ பரிசுத் தாவியால், நம்முடைய இருதயத்துக்குக் கொடுக்கப்படுகிற தேவ ஈவாயிருக்கிறது.

நாம் ஒருவேளை, மேற்சொல்லிய இருவகையான ஆறுதல்களை அற்றவர்களாயிருக்கலாம், அல்லது, அவைகளில் ஒன்றை, அல்லது இரண்டையும், உடையவர்களாயு மிருக்கலாம்; இது நிச்சயம். இப் பொழுது நாம் ஆறுதலைப் பெற்றுக்கொள்ளும்படியாக, நம்மைச் சுற் றியிருக்கிற பொருள்களை மாத்திரம் சார்ந்திருக்கிறோம் என்று வைத் துக்கொண்டால்; நாம் ஞானவான்களாயிருப்போமா? ஒருபோதும் ஞானவான்களாயிரோம், ஒரு சிறு குழந்தை முதலாய், நாம் ஏன் அப்படியிரோம் என்று நமக்குச் சொல்லும். ஏனென்றால் இவ்வுலகத் துக்கடுத்த ஆறுதல், மாறிப்போகலாம். இந்த உலகத்தில் நமக்குச் சொந்தம் என்று அழைக்கத்தக்கது ஒன்றுமில்லை. நம்முடைய ஆஸ்தி, நம்முடைய இஷ்டர்கள், நமது சொந்த சுகமும், ஜீவனுமுதலாய், மிகவும் நுட்பமான ஒரு நூலில் தொங்குகிறது, அது எந்த நிமிஷத் திலாவது அறுந்துபோகலாம்; நாம் அதிகப் பிரியமாய் நேசிக்கிற பொருட்கள், நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்படலாம்; யோபைப்

போல் நாம் நேசித்தவர்தவைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்
பட்டு, நமது சரீரமும் வியாதியால் வருத்தப்பட்டு, தனிமையாய்
விட்டுவிடப்படலாம், நம்மைவிட்டு எடுக்கப்படக் கூடிய அந்தப் பொ
ருட்களை மாத்திரம் நம்முடைய ஆறுதலுக்காக நாம் சார்ந்திருந்
தோமானால்; அழிவுகாலத்தில் ஆறுதல் எங்கேயிருந்து கிடைக்கு";
நிச்சயமாகவே நாம் இன்னொரு ஊருக்கு எதிர் பார்த்திருக்கவே
ண்டும்; இல்லாவிட்டால், நாம் முழுவதும் நிர்ப்பந்தமான நிலைமை
யில் விடப்படுவோம். நான் சொல்வதை நன்றாய்க் கவனி! இவ்வு
லக ஆறுதல் அற்றுப்போய், காலத்துக்கடுத்த காரியங்களும், நமது
புத்தியும், நமக்கு வருத்தத்தைக் கொடுக்கும்பொழுது; நாம் நோக்
கிப் பார்த்து ஜெத்பெறத்தக்க இடம் ஒன்றே ஒன்றுதான் உண்டு,
அதாவது கிருபையின் ஆசனமே. கடவுள் மாத்திரம், இப்படிப்பட்ட
சமயத்தில் நமக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடும். அவர் கொடுக்கும்
ஆறுதல் ஆவிக்குரியது. ஆவிக்கடுத்தவிதமாய் உண்மையோடு கடவு
ளிடத்தில் போகக்கூடிய மனுஷன், அவனுடைய உலக ஆஸ்திகள்
எல்லாம் அற்றுப்போனாலும், ஆறுதலைக் கண்டடைகிறான். இப்படிப்
பட்ட மனுஷனுடைய நிலைமையின் அளவிறந்த மேன்மையைப் பார்!
ஆறுதலைக்கொடுக்கிற ஒரு காரணம் தவறிப்போனாலும், தவறாமலிருக்
கிற மற்றொரு காரணம் அவனுக்குண்டு; அதாவது "எல்லா ஆறுதல்
களின் தேவனே."

நீ ஒருவேளை சிறுவனாயிருக்கலாம்; ஒருவேளை உன்னுடைய
உலக ஆறுதல்கள் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம்,
அல்லது நீ பயப்படுத்தப்பட்டிருக்கலாம், அப்படியானால் உனக்குத்
தேவையான எல்லாவற்றிற்காகவும், தேவனை வேண்டிக்கொள்ளப்
படித்துக்கொள். கிருபையின் ஆசனம் எப்பொழுதும் வைக்கப்பட்டி
ருக்கிறது. தேவனுடைய திருச்செவி கேட்கக்கூடாதபடிக்கு மந்தமான
தல்ல; அவர் செபத்தில் பிரியப்படுகிற தேவனாயிருக்கிறார். அவர்
கேட்டு பதிலளிப்பார். "எந்த மனுஷனாகிலும், தன்னிடத்தில் அப்
பத்தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக்கொடுப்பானோ? மீனைக் கேட்
டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானோ!—பரலோகத்திலிருக்கிற உங்
கள் பிதா, தம்மிடத்திலே வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு, நன்மை
யானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா." நாம் கிறிஸ்த
வர்களானால் "தேவன் கிறிஸ்துவோடேகூட மற்ற எல்லாவற்றை
யும், நமக்கு அருளாதிருப்பதெப்படி." வேதாகமத்தில் இப்படிப்பட்ட
இன்னும் அநேக வாக்கியங்களை ஆராய்ந்து, ஒவ்வொரு காரியத்தையும்
தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பிரயாசப்படு. அப்படிச் செய்
தால் நீ கேட்கவும் நினைக்கவுங்கூடியதைவிட, அதிகமானவைகளைக்
கண்டடைவாய்.

தேவன் சிலவேளைகளில், நமக்கு ஆறுதலைக்கொடுக்கிற சில காரி
யங்களை நம்மிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகிறபடியால், நம்மு
டைய ஆறுதலைப்பற்றி எரிச்சலடைகிறார் என்று நீ நினைப்பாயோ?
ஆ! அப்படி நினையாதே. தம்முடைய சிஷ்டிகள் பாக்கியராயிருக்கக்
காண்பதே அவருக்குப் பிரியம். அவர் தம்மிடத்தில் கேட்கிற யாவை
யும் அடக்குகிறதில்லை, சம்பூரணமாய் கொடுக்கிறவராயிருக்கிறார்.
சிலவேளைகளில நாம் தண்டிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. தகப்
பனால் தண்டிக்கப்படாத பிள்ளை எப்படிப்பட்டது! நாம் அவரைத்
தவிர வேறொரு காரியத்தையுஞ் சார்ந்துகொள்ளக்கூடாதென்று, நமக்
கு பலமாய் நினைப்பூட்டுவது, சிலவேளைகளில் அவசியமாயிருக்கிறது.



தேவனிடத்திலிருந்து எல்லா ஆறுதல்களையும் இரவலாகப் பெற்
றுக்கொண்டதாக எண்ணுகிற மனுஷன் முக்காலும் பாக்கியவான்,
தேவன் தனக்கு நன்மையை மாத்திரம் அனுக்கிரகிப்பார் என்றும்
தனக்கு வேண்டியதற்கு மிஞ்சியாவது, குறைவாகவாவது கொடார்
என்றும் நன்றாய் உணர்ந்து, நன்மைகளை அனுபவிக்கும்போது, கட
வுளை ஸ்தோத்திரிப்பான். உலக சந்தோஷங்கள் அவனிலிருந்து எடு
பட்டுப்போகும்போது, "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்,
அவருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது" என்று மாத்திரம்
சொல்வான். தன்னைச் சுற்றிலுமிருந்த எல்லாப்பொருட்களும் அற்
றுப்போனாலும், கர்த்தர் பரலோகத்திலிருக்கிறார், அவர் என்னைத் தள்
ளிவிடார். என்னைக் கைவிடார் என்று மாத்திரம் சொல்லக்கூடியவனா
யிருப்பான். "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ,
நாசமோசமோ, பட்டயமோ, இவை எல்லாவற்றிலேயும், நாம் நம்
மில் அன்புகூருகிறவராலே, முற்றுஞ் ஜெயங்கொள்ளுகிறவர்களாயி
ருக்கிறோமே."

சேதம் அற யாவும் வர
கர்த்தர் தாம் நடத்துவார்
காற்றடித்தும் கொந்தளித்தும்
யேசுவை நீ பற்றப்பார்.

---

## நாலாம் தியானம்.

### புதன்.

சமாதானம்.

"சமாதானப் பிரபு." ஏசா. 9: 6.

சமாதானம் ஆளுகைசெய்யாத இடத்தில், பாக்கியமும், ஆறு
தலும், ஒருபோது மிருக்கமாட்டாது. இன்னும் வேண்டும் என்கிற
நினைவு ஆளுகைசெய்கிற இடத்திலும், சமாதானமிருப்பதுங் கூடாத
காரியம். ஆகையால் சமாதானமின்மை, திர்ப்தியின்மை என்னும்
நிலைமைகளில் பாக்கியமும், ஆறுதலும் இருக்கமாட்டாது.

உத்தம கிறிஸ்தவன், தன ஓட்டத்தில், பாவத்தோடும், உலகத்
தோடும்; ஓயாமல் போர்செய்யத்தக்கவனாயிருக்கிறபடியால், எப்படி
அவன் நிலைமை முற்றிலுஞ் சமாதானமுள்ளதாயிருக்கும் என்று
சொல்வது அரிதாயிருந்தாலும் கர்த்தர்பேரில் தன் நம்பிக்கையை
வைத்து, பூரணமாய் அவரைச் சார்ந்துகொள்பவனை, அவர் பூரண
மான சமாதானமுள்ள நிலைமையில் வைப்பார் என்பது நிச்சயம், தன்
ஆத்தும சத்துருக்களோடு போர்செய்வதில், அவன் பொறுமையுள்ள
சுபாவத்துக்குள்ளானவன் போலிருந்தாலும், அவன் ஒரே ஆதாரத்
தைப் பெற்று, அதனாலேயே ஆளப்பட்டுவருகிறான். கர்த்தரிடத்தில்
நம்பிக்கை வைத்து, அவரிடத்திலேயே அன்புகூருகிறான். சர்வவல்ல
வரையே முற்றும் சார்ந்திருக்கிறபடியால், அவன் பின்னாலே அடையப்
போகிற பலன்களைப்பற்றி, அவனுடைய யோர், யாதொரு சந்தேக
மான எண்ணங்களையும் உண்டாக்கிறதில்லை. ஆகையால் அவன் பூரண
சமாதானத்தை அனுபவிக்கலாம். இவ்விதமாய், கிறிஸ்தவனுடைய

சமாதானம் இருமடங்காயிருக்கிறது. அவனுடைய தற்கால வருத்தங்களில் கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பதாலுண்டாகிற சமாதானமும், பிற்கால ஸ்திதியைப் பற்றிய சமாதானமுமே.

ஆத்தமாவே! கர்த்தரோடு உனக்குச் சமாதானமுண்டா? அவருடைய சமுகத்தைப்பற்றி நீ நினைக்கும்பொழுது, பயப்படுகிறாயா? அல்லது, அவருடைய அன்பைபபற்றி நினைக்கும்பொழுது, புன்சிரிப்புக்கொள்ளுகிறாயா? அவரை ஒரு நியாயாதிபதி என்று எண்ணிப் பயப்படுகிறாயா? அல்லது, அவருடைய வருகைக்காக, ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறாயா? ஆத்துமாவே! கர்த்தரோடு சமாதானத்தை அநுபவிக்கிறாயா? என்று உன்னுடைய உள்ளான அறைகளிலிருந்து ஆராய்ந்துபார். இல்லாவிட்டால் உனக்கு கலக்கத்தைக்கொடுக்கிறதென்ன? பாவத்தைப்பற்றிய உணர்ச்சியோ, "இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம், எல்லாப் பாவங்களினுமிருந்து உன்னை சுத்திகரிக்கும்." கிறிஸ்துவின் இரட்சிப்பின் சம்பூரணத்தையும் நிறைவையும் பற்றிய சந்தேகமோ? "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.—என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே." அல்லது விசுவாசக்குறைவோ? "யாக்கோபென்ற பூச்சியே பயப்படாதே." "உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு." அல்லது, நீ முற்றிலும் தேவனை உன் சிநேகிதராக்கி, அவருக்கு முன்பாக உன் குறைகளையெல்லாம் அறிக்கையிடாததினாலோ?—"எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும், தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம், உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும், கிறிஸ்துயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்."

ஆம், என் ஆத்துமாவே! நீ சமாதானம்பெற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் உன் எசமானும் சிநேகிதருமாகிய இயேசு, சமாதானப்பிரபுவாயிருக்கிறார். ஆதியில் தமது சீஷருக்குச் சமாதானத்தைக் கொடுத்தவர், இப்போது உனக்குங் கொடுக்கக்கூடும். அவர் கொடுக்குஞ் சமாதானத்தை நீ அடையுமுன், அந்த சமாதானத்தை வருவிக்கத் தடையானதும், உன் தோளிலிருந்து உன்னை அலக்கழிக்கிறதுமான உன் பாவசுமையை தள்ளிவிட்டப் பார். அதை நீக்கிவிட உன்னாலே முடியாது. கிறிஸ்துவண்டை வா. அப்போது அது அவருடைய சிலுவையினடியில் விழுந்துபோம். அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உடையவனாயிருப்பாய்.

என் சமாதானப் பிரபு
இம்மானுவேலே நீர்
இவ்வண்ணம் நம்ப தயவு
அளிக்கக் கடவீர்.

---

## "கர்த்தாவை நல்ல பத்தியாலே"
### என்று துவக்கும் ஞானப்பாட்டின் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

யோ: நீர் இந்த எங்கள் ஊருக்கு வருமட்டும் கேனிக்ஸ்பெருகு நகரத்திலேயே இருந்தீரோ என்க.



நை: (பெருமூச்சுவிட்டு) இல்லை, இல்லை. நான் அங்கே 5—வருஷம் இருந்தபின் தான்சிக்குப்பட்டணத்தில் அப்பர் தேடலாம் என்று அங்கே போனேன். என் எண்ணங் கைகூடாமற் போனதால், தோனே என்கிற ஊருக்குப்போனேன். அங்கே நான் எதிர்பாராதவிதமாக க்ஷேமமாயிருந்தேன். அங்கே என்னைச் சிநேகிதனும், சகோதரனுமாக ஏற்றுக்கொள்ளும் அநேக அருமையான ஆத்துமாக்களைக் கர்த்தர் எழுப்பினார். ஆகிலும், அங்கே எனக்கு ஒரு உத்தியோகம் அகப்படாமையால், நான் பழையபடி என் பிறந்தகத்துக்குத் திரும்பத் தீர்மானித்தேன். நான் போகும் மார்க்கத்தில் இந்த ஆம்புர்கு நகரத்தைக் கண்டேன். நான் அதைக் கடந்துபோகையில்; நீ இங்கேயே தரித்திரு, கர்த்தர் உன்னை யாதரிப்பார் என்று எனக்கு யாரோ உரைப்பதுபோல் தோற்றிற்று. இது என் சொந்த சித்தத்தின் சொல் என்று எண்ணுகிறேன். ஏனெனில் நான் இங்கே காலடி வைத்தது முதல் என் நிலைமை சொல்லிக்கொள்ளத் தேவையில்லையே என்றார்.

யோ: நீர் எவ்வகைப்பட்ட உத்தியோகந் தேடுகிறீர் என்க,

நை: கர்த்தருக்குச் சித்தமாகி எழுத்துவேலையுள்ள எந்த உத்தியோகங் கிடைத்தாலும் என் அப்பத்தைச் சம்பாதித்துக்கொள்ளுவேன் என்றார்.

யோ: அப்படியானால், நீர் வாத்தியக்காரனல்லவோ என்க,

நை: ஆம், நான் வாத்தியக்காரனென்றுஞ் சொல்லலாம், அல்லவென்றுஞ் சொல்லலாம். நான் என் சுயசந்தோஷத்துக்கென்று கொஞ்சம் வாசிக்க என்னால் ஆகும். இதனால் சம்பாத்தியஞ் செய்ய என்னாலாகாது. இந்த கின்னாரந் தான் இவ்வுலகத்தில் என் ஒன்றான சிநேகிதன் என்று சொல்லி சற்றுப் புன்னகைகொண்டு: தயைசீலி, என் எல்லா வருத்தத்திலும் பராபரன் எனக்குக் காண்பித்த ஆச்சரியமான தயவையும் இரக்கத்தையுங் குறித்து நான் வெகுவாய்ப் பேச இடமுண்டு இப்போது எனக்கு இந்தப் பழங் கின்னாரத்தைத் தவிர வேறொன்றுமில்லையென்பது வாஸ்தவந்தான். ஆகிலும், சீபர்த் என்கிறதுரைக்கு ஒரு எழுத்துக்காரன் வேண்டுமாம். அந்த வேலையை எனக்குக் கொடுக்கும்படி மனுப்பண்ணியிருக்கிறேன். இன்றைக்கு அவர் உத்தரவு சொல்லவேண்டியது. அவரைக் கண்டுகொள்ள இது சமயம் என்று நினைக்கிறேன். உத்தரவுகொடும் என்றார்.

நாத்தான இர்ஷ் என்று பேருள்ள ஒரு யூதன் அவ்வூர் முடுக்கொன்றில் குடியிருந்தான். அவன் அடகுபிடிக்கும் வணிகன். அவனுடைய சரக்கடைக்குப் பழஞ்சட்டை யணிந்த வாலிபர் ஒருவர் பொழுது சாய்ந்த நேரத்தில் போனார். அவர் ஆர் தெரியுமா? மேற்சொன்ன நைமார்க்கு என்பவர்தான். இவர் கடைக்குள் நுழைந்தவுடன் உண்டான சம்பாஷணை இது:

யூதன்: வாரும், வாரும், நைமார்க்கு துரையே. நீர் இவ்வளவு பொழுதுபோய் வருகிறதென்ன? பொழுது விடியுமட்டும் பொறுத்திருக்கப்படாதா என்க,

நை: ஏது நாத்தான், என்னால் முடியாது. பொழுது விடியுமட்டும் நான் பொறுத்திருந்தால், ஆளுக்கே மோசமானாலுமாகும். இந்தக் கின்னாரத்தை வைத்துக்கொண்டு என்னகொடுப்பீர் என்று கேட்க,

யூ: நான் இதை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது என்று முனக்கமாய்ச் சொல்ல.

நை: வணிகரே, நீர் இதுதெரியாதவரல்ல. அதை ஒருவரும் பா

ராமல் மறைவாய் ஒரு மூலையிலே வையும். நல்லது அதை வைத்துக் கொண்டு என்ன கொடுப்பீர் என்று மறுபடியுங் கேட்டார்.

யூ: அதை மேலுங் கீழுமாய்ப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இதிலுள்ள பலகைக்கும் பழந்தந்திகளுக்கும் ஏதாகிலும் சில அணா கொடுக்கலாம். வெள்ளி, முத்துச்சிப்பிகள் முதலானதுகள் பொதிந்த எத்தனையோ கின்னாரங்களைப் பார்த்திருக்கிறேன். இதிலே மரந்தவிர வேறொன்றுமில்லையே என்றான்.

லை: கேளும் ஐயா, கேளும். நான் ஐந்து வருஷக்காலமாய்ப் பசியும் பட்டினியுமாய்க் கிடந்து கஷ்டப்பட்டு சிறுசிறு காசாய்க் கூட்டி 10-ரூ போல் சேர்த்து இந்த கின்னாரத்தை வாங்கினேன். எனக்கு இப்போது 4-ரூ மாத்திரம் கொடும். நான் இதை 6-ரூ கொடுத்து மீட்டுக்கொள்ளுவேன், என்றார்.

யூ: (கையைத் தட்டிக்கொண்டு) இந்த இலட்சணத்துக்கு 4-ரூபாயா. நீர் இதை மீட்டுக்கொள்ளாவிட்டால் நான் அதை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது என்க,

லை: என் முழு இருதயமும் இக்கின்னரியின்மேல் எவ்வளவு பற்றுதலாயிருக்கிறதென்று உமக்குத் தெரியாதாக்கும். இதுவே உலகத்தில் எனக்குள்ள பொக்கிஷம், என் ஒன்றான சிநேகிதன். ஓய், என் ஆத்துமத்தையும் எடுத்துக்கொள்ள மனதாயிருக்கிறீரோ என்றார்.

யூ: ஏன் அதையும் நீர் அடகுவைத்து மீட்டுக்கொள்ளாவிட்டால், அதுவும் எனக்குச் சொந்தமாய்ப் போய்விடாதோ. ஆகிலும், உமது ஆத்துமா ஒரு யூதனுக்கு என்னத்துக்காகும் என்க.

லை: போதும், போதும், யூதரே, நான் பேசினது தப்பிதம். உம்முடைய சாதியார் சிலுவையில் அறைந்த இரட்சகர் என் ஆத்துமத்தை அருமையாய் மீட்டுக்கொண்டார். நான் அவருடையவன். நான் ஒழுங்கு தப்பி லேசாய் இந்த வார்த்தையைச் சொல்லிப்போட்டேன். நான் அவருடையவனே. அவர் என்னைக் கைவிடமாட்டார். என் உலக பொக்கிஷங்களில் மகா அருமையானதாகிய இக்கின்னாரத்தை விட்டுப் பிரிவது எனக்கு லேசல்ல. ஆகிலும் கர்த்தர் எனக்கு ஒத்தாசை செய்வார். நான் என் கடனைச் செலுத்தித் தீர்ப்பேன் என்றார்.

யூ: ஸாமார்க்கு துரையே, இப்படிப்பட்ட வீண் நம்பிக்கையைக் காண்பித்து என்னை ஏமாத்தாதேயும். நீர் முந்தின விசை என்னிடம் வந்தபோது ஆரோ ஒரு ஆஸ்திக்கார வியாபாரி உமக்கு உதவி செய்யப் போகிறதாகச் சொன்னதில்லையோ என்று கேட்டான்.

லை: மெய்தான், சீபர்த்து என்பவரைப் பற்றியல்லவோ சொல்லியிருந்தேன். அவர் சொன்ன கெடுப்படியே போனேன். அவர் சமயர் தப்பிப்போயிற்றென்றும், தம்மிடத்தில் காலியாயிருந்த வேலையை வேறொருவருக்குக் கொடுத்தாயிற்றென்றும், சொல்லிப்போட்டார் என்றார்.

யூ: உமக்கும் எனக்கும் கணக்கேயல்லாமல் ஊராரைப்பற்றி எனக்கென்ன? உமது கின்னாரத்தை எடுத்துக்கொண்டு நடவும் என்க,

லை: ஊத்தாரே, நான் இந்த ஊருக்குப் புதுசு என்று உமக்குத் தெரியாதா. நீர் இந்த ஊருக்குப் புதுசாயிருந்த காலத்தில் எளிய யூதனாகிய உமக்கு ஒரு கிறிஸ்தவன் உதவி புரியவில்லையா. இங்கே உம்மைத் தவிர வேறொருவரையும் அறியேனே. 8-ரூபாயாவது கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்.

யூ: என்ன, இது கெட்ட கேட்டுக்கு 8-ரூபாயா. எந்த வியாபாரியும் ஒரு மரக்கட்டைக்கு 8-ரூ கொடுப்பானா என்க,



லை: நீர் ஈரநெஞ்சில்லாக் கொடிய மனுஷன் என்று சொல்லி தமது அருமையான கின்னரியை எடுத்துக்கொண்டு துரிதமாய்க் கடையை விட்டுப் புறப்பட்டார்.

யூ: போதும், போதும், வாலிபரே! வியாபாரம் என்றால் சும்மா தானா கிடைக்குது. நான் 2-ரூ கொடுக்கிறேன் என்க,

லை: நீர் அவசியம் 3-ரூபாயாவது கொடுக்கவேணும். நாளைக்கு நான் சாப்பாட்டுக்காரிக்கு 2-ரூ கொடுக்கவேண்டியதிருக்கிறது. அதைக் கொடுத்தபின் என் கையில் ஒன்றுமில்லாவிட்டால் எப்படிப் பிழைப்பேன் என்றான்.

யூ: நான் 3-ரூ கொடுக்கிறதில்லையென்று தீர்மானம்பண்ணிப் போட்டேன். ஒரு விசை உம்மோடு பழகிவிட்ட தோஷத்துக்காக 2½-ரூ கொடுக்கிறேன். நீர் அதை 8-நாளைக்குள் கொடுத்துவிடுகிற பட்சத்தில், இத்தொகையில் 8-ல் ஒரு பங்கை வட்டியாகக் கூட்டிக் கொடுக்கவேணும். 8-நாளைக்கு மேற்பட்டு அடுத்த 8-ம் நாளைக்குள் கொடுக்கிறதானால் ஒற்றிக்கு இரட்டியாய்க் கொடுக்கவேணும். அப்படியும் கொடுக்காவிட்டால் பண்டம் அறுதி பணம் அறுதி. ஆகிலும் இந்த மரக்கட்டையை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது என்றான்.

லை: ஆ, சுவாமி. இது எனக்குக் கடினமாயினும் படத்தான் வேண்டும். சுவாமி, கிருபையாயிரும் என்றார்.

யூதனே: என் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் தயவும் உண்மையுமுள்ளவர்; அவருடைய சகாயம் எனக்கில்லாதேபோனால் இவ்வளவு கைகஷ்டப்பட்டும் கெட்டுப்போகாதிருப்பேனோ என்றான்.

லை: இதற்கொன்றுஞ் சொல்லாமல், கண்ணீர் தாரை தாரையாய் ஓட கின்னாரத்தை உற்றுப்பார்த்து யூதனை நோக்கி: உம்மிடத்தில் ஒரே ஒரு காரியங் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் கின்னாரத்தை விட்டுப் பிரிவது எனக்கு எவ்வளவு வருத்தம் என்று உமக்குத் தெரியாதாக்கும். பத்து வருஷக்காலமாய் அது என் கையிலிருந்தது. எல்லாம் என்னைவிட்டுப் பிரிந்தும், இது மாத்திரம் பிரிந்ததில்லை. இது என் மிகுந்த நிற்பாக்கியத்தில் எனக்குத் தைரியத்தை உண்டாக்கக்கூடிய விதமாய்ப் பாடிப் பேசும். என்னை ஆற்றித்தேற்றும் இந்தச் சிநேகிதனைக் கொடுத்துவிடுவது என் சொந்த இரத்தத்தைக் கொடுப்பதுபோல் இருக்கிறது. உமது கடைக்கு வந்து துக்கமாகத் திரும்பின ஒருவருக்கும் இவ்வளவு துக்கம் இருந்திருக்காது என்று சொல்லிக்கொண்டு வரும்போது இவர் சத்தம் நடுக்கமாகி சற்றுநேரம் பேசாமல் நின்று: ஐயா, இந்தத் தயவை எனக்குச் செய்யும், நான் கடைசியாக இதில் சற்றே வாசித்துவிட்டுப் போக உத்தாரவருளும் என்று விண்ணப்பம்செய்து யாதொரு மறுமொழியும் வெளிப்படும் முன் கின்னாரத்தண்டை ஓடினார்.

யூதன்: போதும், போதும். நான் ஒரு மணிநேரத்துக்கு முந்தியே கடையைச் சாத்தியிருக்கவேண்டியது. உம்மாலும் உமது கின்னாரத்தாலும் இவ்வளவு நேரம் திறந்திருக்கலாயிற்று. மனதானால் நாளைக்கு வாரும், வராவிட்டாலும் நல்லதுதான் என்றான்.

(இன்னும் வரும்.)

---

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—நாம் முன் தெரிவித்தபடி, புதிய பார்லமெந்து மகா சங்கத்தின் அவயவங்களான மந்திரி சபையாரால் துரைத்தனத்தின் காரியங்கள் நடத்தப்பட்டு வருகிறது. பர்லின் உடன்படிக்கையை நிறைவேற்ற, தான் கடமைப்பட்டிருக்கவில்லையென்று துர்க்கியா சொல்வதினால் பெரிய விபரீதமும் ஓர்வேளை யுத்தமும் நேரிடுமென்று உத்தேசம். இங்கிலந்திலிருந்து புதிய ஸ்தானாபதி ஒருவர் கொன்ஸ்தந்தின்புரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். கிறிஸ்தவர்களான சகல வகுப்பாரும், அதாவது இங்கிலந்து திருச்சபைக் கொள்கைக்கு சார்பல்லாத மற்றவர்களும், பொதுவான மயான ஸ்தானங்களில் பிரேத சேமம் செய்வதில் அவரவருக்குரிய பிரேதச்சேம ஆராதனை நடத்திக்கொள்ளும்படி இடங்கொடுக்கிற சட்டம் ஒன்று பார்லமெந்து சபையில் அரங்கேற்றப்படவிருந்தது.

**ருஷியா.**—துரைத்தனத்துக்கு விரோதமாய் கலகஞ்செய்த துரோகிகளின் குற்றவிசாரணை நடந்துவருகிறது. அநேகர் காவலிற் போடப்பட்டார்கள். மரணதீர்ப்புப் பெற்றவர்களும் அநேகர். ஆகிலும், இன்னும் அங்கே சமாதானமுண்டாகவில்லை. சக்கரவர்த்தியின் பத்தினியார் சென்றமீ 3உயில் காலஞ்சென்றதாய் பிரஸ்தாபம்.

**இந்தியா.**—புது கவர்னர் ஜெனரலாகிய லார்ட்ரைபன் அவர்கள் ஞாயிற்றுக்கிழமையாகிய ஓய்வுநாளில் எவ்வித துரைத்தன வேலையும் நடத்தக்கூடாதென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பழைய கவர்னர் ஜெனராலாகிய லார்ட்லிற்றன் அவர்கள் பம்பாய் மார்க்கமாய் ஆவிக்கலத்தில் சீமைக்குப் பிரயாணப்படவிருந்தார்கள்.

**ஆப்கானிஸ்தான்.**—இத்தேசத்தின் காரியங்கள் இன்னும் முற்றிலுஞ் சீருக்கு வந்ததில்லை. அப்துல்ரயிமான் ௲-குதிரைவீரரோடும், ௲-காலாட்களோடும் ஒரு டசன் பீரங்கிகளோடும் கபூலுக்குப் போகிறாராம். அவர் போகும் நோக்கம் பின்பு தெரியும். அவரை கபூலுக்கு அமீராக நியமிக்க கவர்ன்மெண்டார் உத்தேசித்து அவருக்கு நிருபம் ஒன்று எழுதியிருக்கிறார்கள்.



*From the Tinnevelly District Gazette of May 26, 1880.*

*The following Extract from G. O. No. 861 of 9th May 1874 is published for general information.*

"His Excellency in Council takes this opportunity of desiring that, in the regulation of similar processions, all Magistrates shall make it an invariable condition that the music shall cease playing while the procession is passing any recognized place of public worship, to whatever denomination belonging, except of course the places of worship appertaining to processionaries themselves."

On the 24th February 1875 Government decided that the above order is to be taken literally and uniformly acted upon.

A. L. LISTER,
(Signed) *Ag. District Magistrate.*

திருநெல்வேலி ஜில்லா கெஜட்டிலிருந்து எடுத்தது.

## விளம்பரம்.

1874 ௵ மேமீ 9உ போட்ட 861-நீர் கவர்ன்மெண்டு உத்தரவிலிருந்து எடுத்தெழுதிய இதனடியிற் கண்ட எக்ஸ்திருக்கட்டை சகலரும் தெரியவேண்டியதற்காக பிரசுரஞ்செய்திருக்கிறது.

"ஊர்கோலத்துக்கு சம்பந்தமான தேவாலயங்களின் விஷயங்கள் தவிர, மற்றபடி எந்த மதத்தைச்சேர்ந்த பயிரங்கமான தேவாலயத்துக்கு சமீபமாகவாகிலும ஊர்கோலம் போகும்போது மேளவாத்தியங்களை வாசிப்பதை எப்பொழுதும் நிறுத்திப்போடவென்ற நிபந்தனையை அனுஷ்டிக்கும்படி செய்யவேணுமென்று ஆலோசனைச் சபையிலுள்ள மகிமைதங்கிய கவர்னரவர்கள் இப்பேர்க்கொத்த ஊர்கோலங்களை ஒழுங்குப்படுத்துவதில் எல்லா மேஜிஸ்திரேட்டுகளுக்கும் உத்தரவுசெய்கிறார்கள்."

மேற்படி உத்தரவுகளை அதின் கருத்துப்படி அறிந்து எவரும் ஓரே விதமாய் அனுஷ்டிக்கவேணுமென்று கவர்ன்மெண்டாரவர்கள் 1875-௵ பிப்பிரவரிமீ 24உ உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

ஜுலாய்மீ நாள் 31–ஆனிமீ 19உ முதல், ஆடிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௯ | என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும். |
| வெ | 2 | ௨௰ | கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி. அப். 16: 31. (சங். 39: |
| ச | 3 | ௨௧ | மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும். நீதி. 19: |
| ஞா | 4 | ௨௨ | என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாது. யோ. 15: |
| தி | 5 | ௨௩ | உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே. சங். 27: 8. (5. |
| செ | 6 | ௨௪ | உம்முடைய வசனமே சத்தியம். யோவா. 17: 17. |
| பு | 7 | ௨௫ | சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார். சங். 9: 12. |
| வி | 8 | ௨௬ | நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருங்கள். யோவா. 14: 15. |
| வெ | 9 | ௨௭ | பிழைக்கும்படிக்குத் தீமையையல்ல நன்மையைத் தேடுங்கள். |
| ச | 10 | ௨௮ | ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். யோ. |
| ஞா | 11 | ௨௯ | என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன். சங். 38: 18. (21: 16. |
| தி | 12 | ௩௰ | கர்த்தரை நம்பி நன்மைசெய். சங். 37: 3. |
| செ | 13 | ௩௧ | போதக சிட்சையே சீவவழி. நீதி. 6: 23. |
| பு | 14 | ௧ | ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர். அப். 9: 6. |
| வி | 15 | ௨ | உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோ. 4: 12. |
| வெ | 16 | ௩ | அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். |
| ச | 17 | ௪ | என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும். சங். 25: 7. |
| ஞா | 18 | ௫ | சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள். சங். 37: 11. |
| தி | 19 | ௬ | உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். சங். 84: 1. |
| செ | 20 | ௭ | தேவனுடைய கிருபை வரம் நித்தியசீவன். ரோ. 6: 23. (6: 6. |
| பு | 21 | ௮ | பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. ஏசா. |
| வி | 22 | ௯ | அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். எபே. 4: 2. |
| வெ | 23 | ௰ | கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உபா. 6: 12. |
| ச | 24 | ௧௧ | உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி. சங். 119: 77. |
| ஞா | 25 | ௧௨ | பாவத்திற்கு விரோதமாய்ப் போராடு. எபி. 12: 4. |
| தி | 26 | ௧௩ | மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். சங். 100: 2. |
| செ | 27 | ௧௪ | அவர் செய்கைகள் யதார்த்தம். 1 சாமு. 2: 3. |
| பு | 28 | ௧௫ | ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எபே. 4: 32. |
| வி | 29 | ௧௬ | கிருபை உம்முடையது ஆண்டவரே. சங். 62: 12. (14. |
| வெ | 30 | ௧௭ | கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. 2 கொ. 5: |
| ச | 31 | ௧௮ | அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். சங். 69: 30. |

## விசேஷ நாட்கள்.

4. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 6-ம் ஞாயிறு.
7. அமாவாசை.
11. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 7-ம் ஞாயிறு.
18. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 8-ம் ஞாயிறு.
22. பௌர்ணமி.
25. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 9-ம் ஞாயிறு.
பரி. அப். யாக்கோபின் திருநாள்.

# நற்போதகம்.

அ. ஆகஸ்துமீ. ௲௮௱௯௰௫.

## உபாகமம்.

### 31. அதிகாரம்.

மோசே தன் மரணத்தை எதிர்நோக்கினவனாய்ச் செய்த கடைசிக் கிரியைகளும் ஏற்பாடுகளுமடங்கியது.

1. "போய்" பலஸ்தீனா தர்கூமில், புத்திசொல்லுகிற வீட்டுக் கூடாரத்துக்கு மோசே போய் என்றிருக்கிறது.

2. யாத்தி. 7: 7. உபா. 34: 7.

"நான் போக்கும் வரத்துமாயிருக்கக் கூடாது." 34: 7 வாசி. ஜனங்களின் தலைவனாக நான் முயற்சியாய் வேலைசெய்ய ஏதுவில்லை என்பது கருத்து. 34: 7-ல் மோசேக்குப் பிந்தி எழுதுகிறவன்: மோசே சாகும்பரியந்தம் சரியான புத்தியும் திறமையுமுள்ளவனாயிருந்தான் என்று சொல்லுகிறான். இரண்டும் ஒன்றுக்கொன்று விகற்பமல்ல.

"நீ கடந்துபோவதில்லை." 3: 27.

3. 9: 3.

6. யோசு. 1: 5. எபி. 13: 5.

7, 8. மோசேக்குப்பின் யோசுவா இஸ்ரவேலரை நடத்துகிறவன் என்பது முன்னமே குறிப்பிடப்பட்டிருந்தது. 1: 38. எண். 27: 23. இப்போதோ மோசே தன் உத்தியோகத்தை யோசுவாவுக்கு வெளியரங்கமாய்க் கையளிக்கிறான். நியாயப்பிரமாணத்தை சனங்களுக்குப் போதித்து அதின்படி நடக்க ஏவுகிற பொறுப்பை, ஆசாரியர் பேரிலும் மூப்பர்பேரிலும் சுமத்துகிறான். 10—13.

9. மோசே தான் முன்னமே எழுதிவைத்திருந்த நியாயப்பிரமாணத்தை இப்பொழுது ஆசாரியருக்கும் மூப்பருக்கும் ஒப்புவித்தான் என்பது கருத்தாம். இனிமேல் நியாயப்பிரமாணத்துக்கு இவர்களே

உத்தரவாதிகளாயிருந்து காப்பாற்றவேண்டும். அதில் எழுதவேண்டியவைகளையெல்லாம் எழுதி முடியுமட்டும் அவன் புஸ்தகத்தைக் கொடுக்கவில்லை. 24-வா.

10. "விடுதலையின் வருஷம்." 15: 1-வியா.

"கூடாரப் பண்டிகை." லேவி. 23: 34.

11. "சந்நிதி." 16: 16. இந்தச் சடங்கு கொண்டாடப்பட்டதைக்குறித்து. நெகே. 8: 1.

"வாசிக்கக்கடவாய்." யோசு. 8: 34, 35. 2 இரா. 23: 2. நெகே. 8: 1. மோசேயின் ஆகமமுழுவதும் வாசிக்கப்பட்டதாக நினைக்கப்படாது. அப்படி வாசிக்கப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் எழுதக் கட்டளையில்லை. இப்படி வாசிக்கவேணுமென்ற கட்டளை கொடுக்கப்பட்டது, ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதித்து உணர்த்தவேணுமென்பது முக்கிய நோக்கமல்ல. ஏனென்றால் இது ஏழு வருஷத்துக்கொரு விசை தானே நடக்கும். ஆனால் இஸ்ரவேலருக்குக் கிடைத்த சலாக்கியங்களும் ஆசீர்வாதங்களுமெல்லாம் அந்த நிபந்தனைகளின்பேரில் கிடைத்ததென்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த நோக்கமாய் இப்படிக் கற்பிக்கப்பட்டது. நெகே. 8: 18-ல் விளங்குகிறபடி, பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும் எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசித்தான். பிற்காலத்தில் பண்டிகையின் முதல்நாளில் மாத்திரம் உபாகமத்தில் சில பாகங்களை மட்டும் யூதர் வாசித்தார்கள். இதற்குப் பிற்காலத்தில் இந்தக் கடமை பிரதான ஆசாரியன் அல்லது இராசன் செய்யவேண்டியதென்றும், அவை தேவாலயத்துக்குமுன் சபையாரெல்லாரும் கேட்க வாசிக்கவேண்டுமென்றும் யூதர் சட்டம் கட்டினார்கள். 12-வா.

14—23. கர்த்தர் யோசுவாவுக்குக் கட்டளைகொடுக்கும்படி, மோசேயையும் யோசுவாவையும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக கூடிவரக் கற்பித்தார். ஜனங்களின் ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்து உபாகமத்தில் முதல் விசையாக இந்தச் சமயத்தில தான் வருகிறது. கர்த்தர் மேகஸ்தம்பத்திலிருந்து தரிசனமானார். எண். 11: 25. 12: 5.

16. இஸ்ரவேலர் பிற்பாடு விக்கிரக ஆராதனைக்காரராய்ப் போவதைப்பற்றி யோசுவா அறிந்திருக்கும்படி இப்பொழுது கர்த்தர் முன்னியே எச்சரிக்கிறார். யோசு. 24: 31. 23: 15.

"சோரமார்க்கம்." யாத்தி. 34: 15. நியா. 2: 17. உபா. 32: 15 நியா. 8: 19.

17. "முகத்தை" உபா. 32: 20. ஏசா. 8: 17. 64: 7. எசே. 39: 23.

19. 32: 1—43 சொல்லிய மோசேயின் பாட்டை தேவனுக்குச் சாட்சியாக எழுதிவைக்கும்படி மோசேயும் யோசுவாவும் கற்பிக்கப்



பட்டார்கள். தேவனுடைய நன்மைகளையும், ஜனங்களுடைய கடமைகளையும், அவர்கள் மருளவிழுந்தால் கைவிடப்படுவதையும் குறித்து அவர்கள் வாயினாலேயே சாட்சிசொல்லும்படி கற்பிக்கப்பட்டது.

20. "கொழுத்து" 32: 15. நெகே. 9: 25. ஓசி. 13: 6.

21. "மறந்துபோகாதிருக்கும்." இது பாட்டாயிருப்பதால் லேசாய்ப் படிக்கவும் ஞாபகத்தில் பத்திரம்பண்ணவும் நன்றாய் உதவும்.

"இப்பொழுதே" ஆமோஸ். 5: 25.

24. "புஸ்தகத்தில்" இவ்விடத்தில் புஸ்தகம் என்பது, இந்த அதிகாரம் 24-ம வாக்கியம் வரையுமுள்ள மோசேயின் ஆகமங்கள் முழுவதும் அடங்கியதாம். மோசேயின புஸ்தகத்தை யூதர் பெரும்பாலும் "நியாயப்பிரமாணம்" என்று வழங்குவார்கள். மத். 22: 40 கலா. 4: 21.

25. "லேவியர்" அதாவது லேவிபுத்திரரான ஆசாரியர் என்றர்த்தம். ஆசாரியரல்லாத லேவியர் ஆசரிப்புக்கூடாரத்துக்குள்ளாக போகவாவது, உடன்படிக்கைப்பெட்டியைத் தொடவாவது கூடாது. எண். 4: 15. வனாந்தரத்தில் பிரயாணம்போகும்போது ஆசாரியரல்லாத கோகாத்தியரால உடன்படிக்கைப்பெட்டி சுமக்கப்பட்டபோதிலும், விசேஷ சமயங்களில் ஆசாரியராலேயே சுமக்கப்பட்டது. யோசு. 3: 3. 4: 9, 10. 6: 6, 12. 8: 33. 1 இரா. 8: 3.

26. "பக்கத்திலே" இரண்டு கற்பலகைகளும் உடன்படிக்கைக்கு உள்ளே வைக்கப்பட்டிருந்தது. 1 இரா. 8: 9. நியாயப்பிரமாணப் புஸ்தகம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப்பெட்டிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டது. அதாவது பக்கமாய் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டதென்று நிதானிக்கலாம். 2 இரா. 22: 8.

27. "என் மரணத்திற்குப் பின்பு எவ்வளவு அதிகமாய்" மோசே எழுதி முடித்த புஸ்தகத்தை இந்த வார்த்தைகளோடு ஆசாரியருக்கு ஒப்புக்கொடுத்தானென்று காணப்படுகிறது. 24-வா. மோசேயினால் எழுதியது 23-ம் வாக்கியம் மட்டுந்தான். 24-ம் வாக்கியமுதல் (மோசேயின் பாட்டுத் தவிர, 19-வா.) புஸ்தகம் முடிவுமட்டும் இன்னொருவனாலே இவ்வாகமங்களுக்கு முடிவுரையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆசீர்வாதம் சந்தேகமில்லாமல் மோசே எழுதிவைத்ததுதான்.

28. "கடைசிநாட்கள்." 4: 30.

# Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௬-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௧-ம் பிரிவு.

(தொடர்ச்சி.)

வினா. தேவனைப்பற்றி விசுவாசப்பிரமாணத்தில் இன்னம் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. "வானத்திலும், பூமியிலும், காணப்படுகிறதும், காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவர்" என்று சொல்லியிருக்கிறது.

அவைகள் உண்டாக்கப்பட்டன என்று விசுவாசிக்கிறது மாத்திரமல்ல, அவைகள் தேவனால் உண்டாக்கப்பட்டன என்றும், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற காலத்திலும், வகையாகவும் உண்டாக்கப்பட்டனவென்றும் விசுவாசிக்கவேண்டும். மனிதர் கருவிகளைக்கொண்டு வேலைசெய்கிறார்கள். தேவனோ ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கினார்.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவருமாயிருக்கிறார். ரோ. 4: 17.

உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். எபி. 11: 3.

சிருஷ்டிப்பின் கிரியை ஆதியாகமத்தின் முதலாம், இரண்டாம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

௧-ம் நாள். வெளிச்சத்தை உண்டாக்கினார்.

௨-ம் நாள். ஆகாயவிரிவை உண்டாக்கினார்.

௩-ம் நாள். தரையினின்று ஜலத்தை வேறாகப் பிரித்து; தரையில் புற்பூண்டுகளையும், கனிதரும் விருக்ஷங்களையும் சிருஷ்டித்தார்.



௪-ம் நாள். சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களைச் சிருஷ்டித்தார்.

௫-ம் நாள். நீர்வாழும் ஜெந்துக்களையும் பறவைகளையும் உண்டாக்கினார்.

௬-ம் நாள். மிருகங்களையும் ஊர்வனவற்றையும்,—மண்ணினாலே மனுஷனையும் உருவாக்கினார்.

(நீ மண்ணாயிருக்கிறாய். ஆதி. 3: 19.)

௭-ம் நாள். ஓய்ந்திருந்து, ஏழாம்நாளைப் பரிசுத்தமாக்கினார்.

கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார். யாத். 20: 11. 31: 17.

உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது. சங். 8: 3.

அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. சங். 148: 5.

கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். எபி. 1: 10.

எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். எபி. 3: 4.

தேவதூதர்களும் தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிச்சுவாலைகளாகவும் செய்கிறார். சங். 104: 4. எபி. 1: 7.

வினா. எல்லாச் சிருஷ்டிகளும் ஏன் உண்டாக்கப்பட்டிருக்கின்றன?

விடை. சர்வவல்லவரின் மகிமைக்காகவே உண்டாக்கப்பட்டன.

கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சர்வத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. வெளி. 4: 11.

வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி பிதாவாகிய தேவனுக்குச் சொல்லப்பட்டிருக்கிற எல்லா இலட்சணங்களையும் விசுவாசிக்கிறாயா? நீ அப்படி விசுவாசத்தால் குற்றமற்றவனாகவும், பரிசுத்தனாகவும் ஜீவிக்கிறாய்.—உன் பெற்றோருக்கும் போதகன்மாருக்கும் கீழ்ப்படிகிறாய்.—போதனையை அடைய விரும்புகிறாய்.—ஓய்வுநாளைக் கனப்படுத்துகிறாய்.—உனக்கு மற்றவர்கள் செய்ய நீ விரும்புவதுபோல நீயும் மற்றவர்களுக்குச் செய்கிறாய்.—சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் தேவனுடைய எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டு,

ஒவ்வொரு தீமையான வழியையும் பகைக்கிறாய். அப்படியானால் நிச்சயமாகவே உன் நிலைமை பாக்கியமானது. மறு உலகத்திலுள்ள அதிக மேன்மையான பாக்கியத்துக்காக பக்குவப்படுகிறாய்.—ஆனால் இந்த பரிசுத்த அப்பியாசங்களும், விருப்பங்களும் அற்று; பாவத்துக்கும் பாவத்தோழமைக்கும் உடன்படுகிறதாயிருந்தால், நீ இன்னம் தேவனை உண்மையாய் விசுவாசியாமலிருந்து, குற்றவாளி என்கிற மோசத்தை உன்மேல் சுமத்திக்கொள்ளுகிறவனாயுமிருக்கிறாய். தேவனுடைய இலட்சணங்களைத் தியானித்து, நீயும் அவரோடு ஐக்கியமாயிரு. அவருடைய பழிவாங்குதலுக்குப் பயப்படு. அவருடைய இரக்கத்தைத் தழுவிக்கொள். நீயே அவரை அண்டிக்கொள். அவரை நோக்கி தாழ்மையோடும், நம்பிக்கையோடும் "ஆண்டவரே விசுவாசிக்கிறேன்; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று விண்ணப்பம்செய்வாயாக.

---

## விசுவாசப்பிரமாணம்.

### உ-ம் பிரிவு.

---

(கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றி.)

வினா. விசுவாசப்பிரமாணத்தில் இரண்டாம் உபதேசம் என்ன?

விடை. அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.

ஞானோபதேசவினாவிடையில் அவர் "என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்டார்" என்று சொல்லியிருக்கிறது.

வினா. ஏசு என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

விடை. இரட்சகர் என்று அர்த்தம். தம்மை விசுவாசிக்கிற எல்லாரையும் பாவத்திலின்றும், நரகத்திலின்றும் இரட்சிக்கும்படி அவர் வந்ததினாலே இந்தப் பேர் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

நீர் பூமியின் கடைசிபரியந்தம் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை சாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன். ஏசா. 49: 6.

அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத். 1: 21.

மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார். மத். 18: 11. லூக். 19: 10.



நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார். லூக். 1: 75. லூக். 2: 30. யோவா. 3: 17. 4: 42. 12: 47. அப். 4: 12. பிலி. 3: 20. 1 தெச. 1: 10. 5: 9. 1 தீமோ. 1: 15. தீத்து 2: 14. எபி. 5: 9. 9: 12.

வினா. இந்த இரட்சிப்பை அடையும்படி மனிதருடைய நிலைமை எப்படிப்பட்டதாயிருந்தது?

விடை. மனுஷர் ஆதிநீதியைவிட்டு வெகுதூரம் விலகி, தீமைக்கு இயல்பாய்ச் சாய்கிறார்கள், மாம்சமும் எப்பொழுதும் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது; ஆகையால் இவ்வுலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவனும் ஜன்மபாவமுள்ளவனாயிருப்பதினால் தேவனுடைய கோபத்துக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் பாத்திரவானாயிருக்கிறான்.

வேதசித்தாந்தப் பிரமாணம். 9.

அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள். எபே. 2: 1.

இருதயம் முழுவதுமாய் சீர்கெட்டுப்போயிருக்கிறது.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார். ஆதி. 6: 5.

எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. எரே. 17: 9.

மத். 15: 19. மாற். 7: 21.

நம்முடைய திருச்சபை ஜெபபுஸ்தகம் நாம் அறிக்கையிடும்படி போதிக்கிறவைகளாவன. "எங்களுக்குச் சுகமேயில்லை." "நாங்கள் பாவங்களாகிய சங்கிலியினால் கட்டுண்டவர்களாயிருக்கிறோம்." "அக்கிரமங்களாலும் பாவங்களாலும் தடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்."

வினா. எல்லா மனிதரும் சுபாவப்படி இந்த நிர்ப்பந்த நிலைமைக்குட்பட்டவர்களா?

விடை. ஆம். எல்லா மனிதரும் சுபாவப்படி இந்த நிர்ப்பந்த நிலைமைக்குட்பட்டவர்கள் தான்.

நன்மைசெய்கிறவன் ஒருவனுமில்லை.—எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. சங். 14: 1, 3.

வினா. இந்தச் சீர்கெட்ட நிலைமை எப்படி உண்டாயிற்று?

விடை. ஆதாமின் மீறுதலினாலே உண்டாயிற்று.

ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. ரோ. 5: 12.

சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். எபே. 2: 3.

ஆனால் சென்மபாவமல்லாமல், நாம் செய்யும் பாவங்களே நம்முடைய அழிவுக்குப் போதுமானவைகளாயிருக்கின்றன. அவைகள் தொகையில் நம்முடைய சிரசின் ரோமங்களிலும் அதிகமாயும், நம்மை அமிழ்த்தத்தக்க பாரமானவைகளாயும் இருக்கின்றன.

நீ உலகத்தில் பிறந்தபொழுது இருந்த நிலைமையிலேயே இன்னம் இருப்பாயானால், நீ அக்கிரமத்தில் ஜீவிக்கிறவனாய், அல்லது அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் மரித்தவனாயும்; தே[illegible] கோபத்துக்கும் நரகாக்கினைத் தீர்ப்புக்கும் ஏதுவானவனாயும் இருப்பாய். ஆனால் உன்னுடைய நிலைமை பயங்கரமானதா[illegible]ருக்கிறதுபோல நம்பிக்கையற்றதாயுமிருக்கிறது. உன்னை மீட்கிறதற்காக மரித்தவரும், உனக்காக மத்தியஸ்தம்பண்ணும்படி என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவருமான இயேசு, தமது சிலுவைப்பாடுகளின் புண்ணியங்கள் உனக்குப் பலிக்கும்படி காத்திருக்கிறார். அவரண்டை வா. உன் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

வினா. இயேசு நம்மை எப்படி மீட்டார்?

விடை. நம்முடைய சாயலைத் தாமெடுத்துக்கொண்டு, நமக்காக மரணமடைந்து நம்மை மீட்டார்.

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவா. 1: 14.

மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. ரோம. 9: 5.

ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் கலா. 4: 5.

பிலி. 2: 7. 1 தீமோ. 2: 5. 3: 16. எபி. 2: 16, 17.

அவர் மற்றக் குழந்தைகளைப்போல ஆதாரவற்றவராயிருந்ததினாலே, அவைகள் போஷிக்கப்படுகிறபடியே போஷிக்கப்பட்டார். பசியும் தாகமும் இளைப்பும் அடைந்தார். பிள்ளைகளுக்குண்டாகும் பலவகையான துன்பங்களுக்கும் உள்ளானவரானார்.

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். லூக். 2: 52.



மனுஷருக்குரிய எல்லாச் செய்கையுமுடையவராயிருந்தார். அழுதார், ஆவியிலே களிகூர்ந்தார்.

அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டார். லூக். 19: 41.

இயேசு கண்ணீர்விட்டார். யோவா. 11: 35. (21.

அந்தவேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்தார். லூக். 10:

அவர் பாவமற்றவராயிருந்த விஷயத்தில் மாத்திரம் நமக்கு வித்தியாசமானவராயிருந்தார்.

எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எபி. 4: 15.

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதானஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். எபி. 7: 26.

வினா. நமது இரட்சகருடைய மனுஷாவதாரத்துக்கடுத்த சங்கதிகளெவை?

விடை. பரிசுத்தாவியினாலே உற்பவித்தார். கன்னிமரியாளிடத்தில் பிறந்தார். மற்றப் பிள்ளைகளுக்கிருப்பதுபோல அவருக்கு பூமிக்குரிய தகப்பனில்லை. யோசேப்பு அவருடைய தகப்பனாக எண்ணப்பட்டவனாக மாத்திரமிருந்தான். லூக். 3: 23.

இந்த அதிசய சங்கதி அநேக வருஷங்களுக்கு முன்னே ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னறிவிக்கப்பட்டது.

ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். ஏசா. 7: 14. மத். 1: 23.

இது மரியாளுக்கு ஒரு தேவதூதனாலே உரைக்கப்பட்டது.

பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும். லூக். 1: 35.

வினா. இயேசுக்கிறிஸ்துவினுடைய ஜநநத்தை நமது திருச்சபை எப்பொழுது கொண்டாடுகிறது?

விடை. கிறிஸ்து ஜநந திருநாள் (கிறிஸ்த்மஸ்) என்று சொல்லப்படுகிற காலத்தில் கொண்டாடுகிறது.

இந்தப் பரிசுத்த திருநாள், திவ்விய ஸ்தோத்திரங்களைச் செய்வதற்காகப் பிரித்துவைக்கப்பட்டு, தேவனுடைய இரக்கங்களை அவமதிக்கிற இகழ்ச்சியான செய்கைகளைத் தடுக்கிற மார்க்க உணர்ச்சியை அதிகரிக்கச் செய்கிறதற்காகவும் பிரித்துவைக்கப்படவேண்டும்.

---

# இரக்ஷண்ய மனோகரம்.

## ஞானசம்பந்த குரு.

நீயாருனக்கேந்த வகையிலென்றோடுறவு நினதுவாசஸ்தலமுமிந்
நிலவுலகமன்றுநீ தேவாதி தேவன் நகன் நீசநரபுன் னிருமியாம்
மாயாபிரபஞ்சமும் நின்றிருவுளத்து நினைவாக வெம்மாத்திரங் காண்
மற்றதிலோரணுவுக்கு நிகரிலேனென்னையு மதித்துனுயிர் மாய்க்கவந்
(தாய்
தாயேனுமகவின் பொருட்டுயிரை யீவளோ சார்வதா நன்றிகெட்ட
சண்டாளனுக் குன்னையல்லாமலிப் பெரியதண்ணளியையார் காட்டுவர்
நாயேனிவ்வன்பினைமதித் துணர்ந்திடு செயநனிசிறிதும் வல்லனல்லேன்
நரசரீரங்கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 1
முள்ளுமுடியாகியுன் சென்னியிற்றைத்தது முரண்கோலதாகியுன்றன்
முடிமீதடித்ததுவுமுமிழ் நீரதாய்த்திருமுகக்கஞ்சமலர் தோய்த்ததும்
எள்ளுபழிமொழியாகி யஞ்செவி நிறைத்ததுவுமீனர்கரமாகியந்தோ
எழிலுறுகபோலத்தறைந்ததும் விலாவிலோரீட்டியாய்ந்துழைவுற்றதும்
விள்ளபயவரதாஸ்த முபயதிருவடி நோகவெவ்விருப்பாணியாகி
வேதனைவிளைத்ததும் பாதகப்புலையேன் விளைத்த தீவினையல்லவோ
நள்ளியெனையுள்ளென்ற கள்ளனுக்கூர்த்தகதி நல்குகருணாமூர்த்தமே
நரசரீரங்கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 2
அந்தோவறக்கொடிய நிர்ப்பந்த பாவிநான் அனைவுனையன்றியிந்த
ஆபாசமரண ஜடலத்தினின்றெனை மீட்டநுக்கிரகஞ்செய வல்லர்யார்
எந்தாய் பாராமுகம் பண்ணிலழைன்றேயேனீடேறும் வகையெங்ஙனம்
என்னிதய நோவு திருவுளமறியவுங்கணீரிருவன சபதமறியவும்
சிந்தாகுலந் தவிர்த்தலகுதர வொண்ணாத திவ்விய சமாதானமென்
சித்தமிசை நிலைகொளத்திருவிழிக்கடைசிறிது திறவாதிருப்பதென்னே
நந்தாத கருணைப்பிரவாகமே யெம்மனோர் நவிலரிய அன்புமயமே
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 3
ஜெனமத்திலேயுற்ற கர்ம்மாநுசாரமோ திரிகரண துர்ஜேஷ்டையோ
திடசித்தமின்மையோ விஸ்வாசஹீனமோ ஜெகசாலவிபரீதமோ
உன்மத்தமோபாப கன்மப்பழக்கமோ ஒன்றென்றெரோவேனையில்
வைர்ச்சிதமடைந்தகச் சாக்ஷியை மழுக்கியெனையூர்த்த நெறிநெறிவிலக்கி
வன்மித்தறக்கெடு சூழ்கின்றதென்று நான் மாறாத நிலையினின்றுன்
மலரடிக்கண்திலே யன்பு நிகளங்கொண்டு மன்மத்தயானை கட்டி
நன்மைத்திரவியமுண்டு சித்தசாஞ்சல்யமற நல்லருள் சுரப்பை அய்யா
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 4



மூடரியல்பிற் சிறந்தாகாம்ய கொதியிலே மூழ்கியின்னுங் கெடாமல்
முந்துசிறுவைக்கு வந்துன்றிருவடிச் சுவடுமுன் கண்டுபின்தொடரவும்
பாடரிய வுன்றிருப்புகழ் பாடியானந்த பரவசக் கூத்தனுகிப்
பக்திவிசுவாசத்தினாலுனை விடாது நனிபற்றிப் பிடித்தநுதினம்
கூடரியமன நிஷ்டைகூடிச் சுகிக்கவும் குன்றியுயிர்பொன்று நாளுன்
குளைகழற்றுணை நீழல் விரவியென்னாத்துமங் குலவியுய்யவுமருளுவாய்
நாடரிய ஞானமே தேடரிய மோனமே நவிலரிய சுகுண நிலையே
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 5
சுடுகின்ற சிலகவலையோடு பலபிணியுந் தொடர்ந்து பீடிக்கவுள்ளம்
துன்பவெஞ்சுழலிலே யுழல்கின்ற திரணமாய்ச் சோகமுற்றிடவேழை
(யான்
படுகின்றபாடெல்லாம் பாராதிருக்க விழிபார நித்திரைகொண்டவா
பாவியேற்கஞ்சலென் றொருமொழிபகர்ந்திடப்பவளவாய்திறவாததென்
கடுகின்றவள்ளமென் கைக்கின்றகற்றவுன் கருணைமடையடைபட்டவோ
கன்குல்பகலாய்க் கூவிவாயுஞ் சலித்ததேகா தென்னமந்தமுண்டோ
நடுகின்ற நாயனே வடுகின்ற காயனே நலிவுதீர்த்தெனையாளுவாய்
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 6
பொல்லாத நீசப்புலைப்பாவி வஞ்சனைபுரிந்த சண்டாளனிதயப்
புற்றிடங்கொண்டு வளரிச்சையாடரவை கனிபோற்றிவரு புத்திஹீனன்
கல்லாது சுருதியையுபேக்ஷித்த மூடன்முன் காப்பியக்கவிகள் கூடிக்
கட்டிய வறுங்கதை கற்றுவாளுள் வீண்கழித்திட்டமாகாதகன் (மும்
சொல்லாத பொய்யுமெண்ணினையாத கேடுந் துணிந்துசெய்யாப் பாவ
சுத்தமாயில்லை முற்றும் பாவிநானுனது துணைமலர்ச்சரணடைந்தேன்
நல்லாய்மனக்கினிய சொல்லாய் மனிப்பருளிநாளுருமரக்ஷி அய்யா
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 7
அம்புவியிலே தனுவெடுத்துப் பிறந்தநாளன்று தொட்டின்று காறும்
ஆகாததீவினைக்காளானதன்றி யோரணுநன்மைசெய்து மறியேன்
வெம்பிமனவேதனையோடுண்டுத்துக் கவலைமேன்மேலுமதிகரிக்க
வியாதிமுதலாய பலதுன்பமுமடர்ந்தெனை வெருட்டமெலிவுற்றுடைந்
(தேன்
இம்பரிற் கதியற்ற வேழையானுயினுமிகந்து தள்ளாதெமரொடும்
என்னையாட்கொண்டநின் பேரருளை நித்தமுமெண்ணியெண்ணித் தே
றுகேன்
நம்பியதொழும்பனென் பிழைபொறுத்துளமாயினல்லசுகவாழ்வருளு
(வாய்
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 8
பாவவுணர்வாதிய குணங்களுண்டாத்துமப் பசிதாகமெத்தவுண்டு
பரிசுத்தநிலை நின்றிரக்ஷண்யமடைய வெகுபாரமாங் கவலையுண்டு

தேவபயமுன்னோ திருவடிக்கே தொண்டுசெய்யுமனமுண்டையின்
திருவருளின்மாட்சியேயாயினு மிவர்துபவஜீயநெறி செல்லவென்னை
ஏவுமொரு கேடானதத்துவமிடைக்கிடை யென்னிருதயத்துடெழும்பி
இவ்விமேவிமேனாத்தர்தொலைய வேழைக்கிரங்கியொருவார்த்தைநவில
நாவசையமாட்டாத காரணமென்யானுன்னைநம்பியதொழும்பனலனோ
நரசீரங்கொண்டவராஜனே பரமஞான சம்பந்த குருவே, 9

சாதன சதுஷ்டயமடைந்திஷுணுத்திரய சம்பந்தமொருவி ஞான
சற்குருவநுக்கிரகமாட்சியாற் ஜீவாத்மதத்வயமுணர்ந்து
சேதனமகத்வ பரிசுத்த திரியேகத்வ தெய்வ நிர்ண்ணயமும் நீதி
திவ்யபரிபூரண இரக்கசமாசமுங் கெரிந்துதெளிவுற்று நினது
பாதமலினத்தை யிருதயமீதலர்த்திப் பராவிவருஜீவன்முக்தர்
பழுதின்றி வைதிகநெறி நின்று முடிவிலே பரசுகானந்தமடைவர்
நாதனின்னருளினாலடியேற்கு மிக்கிலயிக்க நல்லாவி தருவாய்
நரசீரங்கொண்டவராஜனே பரமஞான சம்பந்த குருவே. 10

முற்றிற்று.

## யேசுநாயக ஸ்வாமி.

காசாசைகொண்டொருக் காலுன்னை யூதாசகாட்டிக்கொடுத்தனன்று
கள்ளரிற்கள்ளனானுன்றெழும்பாயுனது கருணுயிர்தம் பருகியும் (னம்
ஆசாவசத்தனாய் நித்தமுமனேக முறையாகாமியம் புரிந்துன்
அன்புமயமான திருமேனியைச் சிலுவைமீதறைகின்ற துரோகி ஐயா
கூசாதுன்னருளைக் குறிக்கொண்டு கூடிமெக்கொடிய பாவனையும் நித்ய
கொந்தழல் கூடாதிரக்ஷிப்பதுன்னியல் பெனிற்குயிலைத்திடையெனைப்
(போல்
நாசமிகப் பெரியபாவியார் புகழுனக்கெனை யிரக்ஷிப்பதன்றோ
ஏகநாயக சருவலோக நாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 1

அன்புமயமே கருணையானந்தவாரியே அருள்பொழி மழைக்கொண்ட
ஆருயிர்க்குயிரான வுயிர்தசஞ்சீவியே அடியரிதயாம்புரத்தில் (வே
இன்புறவுதித்திலகுமெய்ஞ்ஞான பானுவே ஏத்தருஞ் சகுணநிதியே
இதாசமயாதீத நிலையமேவாவிழிர்திம்பர் வருஜீவநதியே
மன்பதை புரக்கவடு நின்றோங்குரக்ஷண்ய மாமேருவேயென்று நின்
வண்புகழ் வழுத்திமெய் யன்பினொடு சிந்தைபரவசமாகி யாவியனல்
(கொண்ட்
என்புருகியானந்த பாஸ்பஞ்சொரிந்த நின்றேத்தவருளியதென்றோ
ஏகநாயக சருவலோகநாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 2

பிறவியிற் பிடிவாத கொடியவைணவனுய்ப் பிறந்து மூப்புதுவற்காம்
பிரபஞ்சமயல்கொண்டு மூடாந்தகாரப் பினம்பிலடைபட்டுழன்று



மறவினைக்காளாகிநெறி நிலாத்துர்த்தமனவாஞ்சைக் கிடங்கொடுத்து
மருளுற்றுவழிது நாட்செலவிட்ட நீசனென்னைமலரடிக் காட்படுத்திக்
குறைவிலாப் பேரருளளித்தின்றுகாறுங் குறிக்கொண்டு காத்தியெனி
னும்
கொச்சைமதியேற்கின்னு நன்றியறியாக்கெட்ட குணதோஷமொழியவி
இறைவலப்புறமிருந்தடியருக்காப் பரிந்தென்றுமன்றாடுமுகிலே (லையே
ஏகநாயக சருவலோக நாயககிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 3

கண்ணீருகுப்பினுமானந்த பரவசங்காணினுங் கவனமொன்றிக்
கருதரிய நின்சீர்புனைந்து கவிபாடினுங் கன்மனங் கனியநாளும்
உண்ணிர்மையொடு முழங்கால்நின்றுப்பன் முறையுவப்பொடு ஜெபஞ்
செய்யினும்
உன்றுருநியே பிறர்க்குன்னன் பின்மாட்சியையுரைத்துழைத்தோலமிடி
னும்
தண்ணீரைவேட்டலையுமான்போல வினுமனோசஞ்சல நிவிர்த்தி நாடித்
தளருகின்றேனிதய தந்தாமலதுன்னருட்டாமத மெனத்தகுவதோ
எண்ணிர்மைகுன்றாத சித்தவிஸ்ராந்தி நிலையென்றைக்கெனக்கருள்வை
யோ
ஏகநாயக சருவலோக நாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 4

## “கர்த்தாவை நல்ல பத்தியாலே”

### என்று துவக்கும் ஞானப்பாட்டின் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

லை: நாளைக்கல்ல, இப்போதே அதை வாசித்து அதனிடத்தில் செலவு பெற்றுக்கொள்ளவேணும் என்று சொல்லி, கின்னாத்தைச் சட்டென்று எடுத்து உளுக்கார்ந்து அதில் வாசிக்கத் துவக்கினார். யூதனோ மெல்லவும் மாட்டாமல் முழுங்கவும் மாட்டாமல் உளுக்கார்ந்து வாத்தியத்தைக் கவனித்தான். அவர் அதில்: போதும், போதும். கர்த்தாவே என்னும் வார்த்தைகளோடு துவக்கும் தமது ஞானப்பாட்டின் உ-கவிசனை வாசித்துப் பாடி முடிக்குமுன் யூதன்: போதும், போதும், ஏன் இந்தப் புலம்பல் அப்பா! உமது பையில் 2½-ரூ யல்லவோ இருக்கிறது என்க,

லை: அதைக் கேளாதவர்போல் தொடுத்த பாட்டை விடாமல் பாடிக்கொண்டே போனார். சடுதியாய் வாத்தியத்தின் சுதியை மாற்றிக்கொண்டு வேறொரு இராகம் வாசித்தார். அவர் வாசித்தது கார்மேகங்களினின்று சூரிய வெளிச்சத்தில் பெருமழை சொரிந்ததுபோலிருந்தது. அவர் தொனி வரவர உச்சத்துக்கேறிற்று. அவர் முகம் ஆனந்தமாகி ஜொலித்தது.

யூ: வெகு நேர்த்தி, நிறுத்தும். உமது சாக்கிலே 2½-ரூ கிடக்கிறது என்பதையும், நீர் கெடுப்படி பதினாலு நாளைக்குள் பணஞ்செலுத்தாதேபோனால் கின்னாம் என்னுடையதாகிவிடும் என்பதையும் மறக்

க்வேண்டாமென்று உரக்கச்சொல்லி, இந்த மாத்துண்டை நான் வைத்துக்கொண்டு என்னபண்ணுகிறது என்று முணங்கிக்கொண்டான்.

நைமார்க்கு: அந்த கின்னாரத்தை ஒரு மூலையில் சார்த்திவிட்டு, கர்த்தருடைய சித்தத்தின்படி ஆகக்கடவதென்று மெதுவாய்ச் சொல்லிக்கொண்டு விசையாய் வெளிப்புறப்பட்டார். வாசற்படியில் நெடுநேரமாய் வாத்திய வாசிப்பையும் பாடலையும் கேட்டு உக்கார்ந்துகொண்டிருந்த ஒருவன்மேல் அவர் கால் தட்டி விழப்பார்த்தார். அந்த மனிதன் நைமார்க்கைப் பார்த்து: ஐயா மன்னியுங்கள். நீங்கள்தானா இவ்வளவுநேரம் அவ்வளவு நேர்த்தியாய் கின்னாரம் வாசித்துப் பாட்டுப் பாடினவர்கள் என்றான். அவர்: ஆம் என்க, அவன் இவர் சட்டையைப் பிடித்துக்கொண்டு: ஐயா, நான் ஒரு ஏழை மனிதன், நீங்கள் இப்போது பாடின பாட்டு என் ஆத்துமத்தைத் திருப்தியாக்கிற்று. அதின் ஒரு நகல் எனக்கு எங்கே கிடைக்கும் என்று சொல்லுவீர்களா. அதுக்குக் காசுகொடுத்து வாங்கிக்கொள்வேன். அது சரியாய் எனக்கென்றே எழுதப்பட்டதாகக் காணுது என்றான். அதற்கு நைமார்க்கு: பிரிய சிநேகிதா, நான் காசில்லாமல் சந்தோஷத்தோடு உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன். நீ யாரென்று எனக்குச் சொல் என்க. அவன்: ஐயா, என் பேர் யோனான் கீத்திகு, நான ரோசன் கிரான்சு பிரபு என்கிற சுவேதனிய ஸ்தானாபதி வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கிறேன் என்றான். நைமார்க்கு: நல்லது: நாளைக்கு வா. என் பேர் கேயோர்கு நைமார்க்கு. இந்த ஊர் கோணல் தெருவில் யேராவான்சன் என்ற அம்மாள் வீட்டில் என்னைப் பார்க்கலாம். சலாம் என்று சொல்லிப் போய்விட்டார். அப்படியே கீத்திகு மறுகாலையில் வந்து பிரதியும் வாங்கித் திரும்பினான்.

ஒரு வாரங் கழித்து, ஒருநாள் காலையில் கீத்திகு என்ற மேற்படி வேலைக்காரன் இரண்டாம் விசையாக நைமார்க்கிடம் வந்தான். நைமார்க்கு அவனோடு பட்சமாகப் பேசினபின், வேலைக்காரன்: நான் திரும்பவும் வந்தது ஒருவேளை மூடத்தனமாகத் தங்களுக்குத் தோன்றலாம். நான் இரவெல்லாம் ஒரு சங்கதியைக்குறித்துச் செபம்பண்ணினேன். தங்களுக்குச் சம்மதமானால்——என்று முடிப்பதற்குள் நைமார்க்கு: என்ன, என் ஞானப்பாட்டுக்கு இன்னம் ஒரு நகல் வேண்டுமோ. அப்படியானால் சந்தோஷத்துடன் தருகிறேன் என்க, அவன்: அல்ல, அல்ல, அது வேண்டியதில்லை. நீங்கள் கொடுத்த நகலை என் வேதபுத்தகத்தில் பத்திரமாய் வைத்திருக்கிறேன். நான் விசுவாசப் பிரமாணம், கர்த்தருடைய செபத்தைப்போல் இதையும் மனப்பாடமாக நன்றாய்ப் படித்திருப்பதால், அந்த நகல் காணாமற்போனாலும் மோசமில்லை. ஆனால், நேற்று ஒரு சங்கதி நடந்தது. அதைச் சொல்லுவதால் என்மேல் ஆயாசப்பட்டுக்கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன் என்க, நைமார்க்கு: மோசமில்லை. சொல் என்றார்.

கீத்திகு: என் எசமானாகிய ஸ்தானாபதியாருக்கு எழுத்துவேலை பார்க்கும் ஒரு லிகிதர் இருந்தார். அவர் ஏதுகாரணத்தாலோ திடீரென்று நேற்று உத்தியோகத்துக்கு நீங்கலானார். அவர் ஏதோ மோசம் பண்ணினதால் தள்ளுபட்டாரென்று நினைக்கிறேன். நேற்றிரவு என் ஆண்டவன் பள்ளியறைக்குப் போகையில், நானும் வேலையாக அவர் பின்னே சென்றேன். அவர் என்னுடனே: எனது லிகிதர் போய்விட்டது உனக்குத் தெரியுமே. அவனைப்போல் வேலைபார்க்கக் கூடிய சமர்த்தன் எனக்கு எங்கே அகப்படுவான் என்று தெரியவில்லை என்றார். அப்போது தெய்வச்செயலாய் உங்கள் பெயர் என் ஞாபகத்தில்



வந்ததால்: ஆண்டவனே, அதற்குத் தகுந்த ஒருவனை எனக்குத் தெரியுமென்று சொன்னேன். அதற்கு அவர்: நீ என்ன சொல்லுகிறாய். உன் இஷ்டர்களில் ஒருத்தன் லிகித உத்தியோகத்துக்கு லாயக்குள்ளவனாயிருக்கிறானா என்று சிரித்துக்கொண்டு சொன்னார். அதற்கு நான்: அப்படியல்ல, மகாப்பிரபு! அவனை எனக்குத் தெரிந்திருந்தபோதிலும் அவனை எனக்குச் சமதையான இஷ்டமித்திராள் தொகையில் சேர்க்க நான் அருகனல்ல என்று பல வார்த்தைகளால் தங்களைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லிப்போட்டேன் என்றான்.

நைமார்க்கு: எல்லாவற்றையுமா சொல்லிப்போட்டாய்; அடகுக்காரயூதனின் கடைவாசலில் என்னைக் கண்டதைக் கூடவா என்றார். கீத்திகு: ஆம் அதெல்லாந்தான். அதை நான் சொன்னது தப்பிதமாயிருக்குமாகில் மன்னியுங்கள், ஏனென்றால் நான் என் இருதயத்தின் பரிபூரணத்தால் பேசினேன். என் எசமான் அதனால் இடறற்படாமல் தங்கள் எழுத்தைப் பார்க்கும்படி தங்களின் ஞானப்பாட்டு நகலைக் கொண்டுவரச் சொன்னார். அவர் அதைப் பார்வையிட்டு: எழுத்து நடை செய்யுள் நடை இரண்டும் மேம்பாடுதான். அந்த வாலிபன் இப்படியே எழுதுகிறவனாயிருப்பானாகில் அவன் வேலைக்குத் தகுந்தவன் தான் என்று சொன்னதை நான் கேட்டதுமுதல் எனக்கு அமைச்சல் இல்லை. எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்து ஓடிவந்தேன். என் எசமானிடம் போவதற்குக் காலை நேரம் மிகவும் ஏற்றதாகையால், என் வார்த்தையைத் தட்டாமல் உடனே அவரிடம் போங்கள் என்று சொன்னான். நைமார்க்கு பதில் ஒன்றுஞ் சொல்லாமல் தமது அறையில் சற்று உலாவியபின்: ஆம், கர்த்தருடைய வழிகள் மெய்யாகவே ஆச்சரியமானவைகள். பராபரனை நம்பினவர்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று தாமாய்ச் சொல்லிக்கொண்டு வேலைக்காரனைப் பார்த்து: நீ எனக்குச் செய்தவைகளுக்காக கர்த்தர் உனக்குப் பலனளிப்பார். நான் உன்னோடு வருகிறேன் என்று சொல்லி அவனோடு ஸ்தானாபதி வீட்டுக்குப் போனார். அந்த ஸ்தானாபதியாகிய பிரபு அவரைப் பட்சமாக ஏற்றுக்கொண்டு: உமது செய்யுளை நான் பார்த்தமட்டில் நீர் கவிஞன் என்று காணுது. நீர் ஞானப்பாட்டுகள் மாத்திரம் செய்கிறதோ என்று கேட்டார். நை: தரித்திரரைக்குறித்து, வானராச்சியம் அவர்களுடையதாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறது. உலக செல்விக்கையில் கதித்த யாரும் ஞானப்பாட்டுகள் எழுதியிருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஏழைகளாகிய எங்களுக்குப் பாட்டுப் படித்துக்கொடுப்பது சிறுவைதான் என்றார்.

ஸ்தானாபதிப் பிரபு இதனால் கோபமடையாமல், ஆச்சரியமடைந்தவராய் நைமார்க்கைப் பார்த்து: வாலிபரே, உமது அனுபோகம் சொற்பம். எங்கள் அரசராகிய குஸ்தாவு அதொல்பு என்பவர் மகத்துவம்பொருந்திய சிம்மாசனாதிபதியாயிருந்தும், மெய்யாகவே சிறந்ததான ஒரு ஞானப்பாட்டை உண்டுபண்ணினதுமன்றி அதைத் தாமே பாடி, கின்னாரத்திலும் வாசித்தார் என்பது உமக்குத் தெரிந்திருக்கட்டும். என் வேலைக்காரன் உம்மைக்குறித்து எனக்குச் சொன்னது உண்மையானால் நீர் மகா ஏழை என்று நினைக்கவேண்டியது. உம்முடைய வறுமை உம்மை எந்தக் காலத்திலாவது அவநம்பிக்கைக்குள்ளாக்கினதுண்டோ என்று கேட்க, நை: ஒருக்காலும் இல்லை என்பதற்காக பராபரனுக்கு ஸ்தோத்திரம். அப்படி அவநம்பிக்கைப்பட கர்த்தர் இடங்கொடுத்ததில்லை. அவர் எப்போதும் என் இருதயதில் மெய்ச்சமாதானம் நிலைத்திருக்க அருள புரிந்தார். அவர், உங்களிடத்தில் எப்

போதும் தரித்திரர் இருக்கிறார்கள் என்று ஒரு சமயத்தில் சொன்னதுமன்றி, வேறொரு சமயத்தில் அவர்களைப் பாக்கியவான்கள் என்றார். அவர் எங்கள் நிமித்தமாகத் தரித்திரராகி, தரித்திரரை (அப்போஸ்தலன் சொல்லுகிறபடி) ஐசுவரியவான்களாக்க அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கட்டளைபண்ணினார். ஆகையால் ஒருவன் தரித்திரனாயிருப்பது அவ்வளவு வருத்தமல்ல என்றார். பிரபு அதைக் கேட்டு மகிழ்ந்து: ஒரு மெய்க்கிறிஸ்தவனுக்கேற்றபடியே மேன்மையான உத்தரவு சொன்னீர். இது விஷயத்தைக்குறித்து இன்னம் ஒரு சமயத்தில் பேசலாமென்று நினைக்கிறேன். நீர் நியாயசாஸ்திரம் படித்திருப்பீரென்று நம்புகிறேன். அது படித்தவர்கள் மாத்திரமே துரைத்தன தஸ்தாவேஜுகளைக் கிரமமாக வைக்கக்கூடும். நீர் அப்படிச் செய்யக்கூடியவரோ என்று கேட்க, ஸை: தங்களுக்குச் சித்தமானால் நான் சந்தோஷத்தோடு அப்படிச்செய்யப் பார்க்கிறேன் என்றார். அதற்குப் பிரபு: நல்லது, இந்தக் காகிதங்களை எடுத்து வாசித்துப் பாரும். அவைகள் ஆலோசனைக்காரரின் கேள்விகள் என்று எண்ணுகிறேன். இதற்கு மறுமொழி எழுதவேண்டும். ஆகையால் இந்தக் கேள்விகளுக்கு ஒரு தொகுப்பு எழுதிவாரும். நீர் இதைச் சாவகாசமாய்ச் செய்யும். அதை முடித்தவுடனே அடுத்த அறைக் கதவைத் தட்டும் என்றார்.

அன்று சாயங்காலம் ஸைமார்க்கு, ஸ்தானாபதி தங்கியிருந்த வீட்டைவிட்டு ஆனந்த கம்பீர முகத்தோடு புறப்படக் கர்த்தர் கிருபை செய்ததால், அவர் தாமாய்ப் பேசி: ஆம், ஆம் கர்த்தாவை நல்ல பத்தியாலே எப்போதும் நம்புவது நல்லதல்லவா—என்று சொல்லிக்கொண்டு போனார். அவர் யூதன் கடைக்குள் பிரவேசித்து: என் கின்னாரத்தைக் கொடும். இதோ நீர் சொன்னபடிக்கு வட்டியும் முதலும்—நீர் ஆச்சரியப்படவேண்டாம். உம்மை நான் போர்தபடி அறிவேன். எனது வறுமையை உமக்கு ஆதாயவழியாக்கினீர் அல்லவா—நீர் சொன்ன உ-வாரக் கெடுவுக்குமேல் ஒருமணி நேரம் ஆனால் போதுமே; என் பத்து ரூ. கின்னாரத்தைப் பயமின்றி அபகரிப்பீரே. ஆயினும், நீர் சமயத்துக்கு உதவினீரே; அதற்காக வந்தனம். நீர் அந்த உதவிசெய்திராதேபோனால் நான் அனாக்காசுமற்ற அகதியாய் ஆம்பூரை விட்டுப் புறப்பட நேரிட்டிருக்கும். இந்த உதவியையும் நீர் சுயமாய்ச் செய்ததாக எனக்குத் தோன்றுகிறதில்லை. கர்த்தருடைய கரமே இதற்கெல்லாம் காரணம். ஒரு கிறிஸ்தவன் தன் சகோதரருக்கு உதவிபுரிந்து அடையும் ஆனந்தம் இன்னதென்று எள்ளளவும் உமக்குத் தெரியாதல்லவா. இதோ இன்னம் கால்ரூபாய் தருகிறேன். வல்லவரின்மேல் நம்பிக்கை வைத்தோன் கன்மலையில் வீடுகட்டினான் என்பதை மாத்திரம் கவனத்தில் வையும் என்று சொல்லி வீரதீரமாய்க் கின்னாரத்தைத் தூக்கிக்கொண்டு விரைவாய் வீடுபோய்ச் சேர்ந்தார். தமது அறைவீட்டில் நுழைந்ததும், ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இனிய இராகங்களை முழக்கினார். அந்த வீட்டுக்குச் சொந்தக்கார அம்மாள் ஆனந்த கீதங்களைக் கேட்ட மாத்திரத்தில் விரைந்து ஓடிவந்து அவரைக் கேட்ட கேள்விகள் கொஞ்சமல்ல. இவர் ஒன்றும் உத்தரம் சொல்லாமல் ஆனந்த கீதத்தில் அமிழ்ந்திவிட்டார். அதைப் பார்த்த அந்த அம்மாள், இது வானமோ பூமியோ என்றறியாதவள்போல் மலைத்து நின்றாள். ஸைமார்க்கு தமது வாத்திய வாசிப்பை முடித்தபின்: அம்மா நீரா இங்கே நிற்கிறீர். நல்லதுதான். நீர் தயவுசெய்து எத்தனைபேரை இங்கே அழைத்து வரக்கூடுமோ அத்தனை பேரையும் கொண்டுவாரும். அப்போது நீங்கள் இதுவரையில் கேட்டிராத ஒரு பாட்டைப் பாடு



வேன். ஏனெனில் இந்த ஆம்பூர்கு நகரத்தில் என்னிலும் பாக்கியசாலியில்லை. அம்மா சீக்கிரம் போய் நமது வீட்டில் ஒரு சிறு சபையைக் கூட்டும். அப்போது நான் எனது கின்னாரத்தைக்குறித்து ஒரு பிரசங்கம் செய்வேன் என்றார். அப்படியே சற்று நேரத்துக்குள் அறைவீடு நிறைந்துபோயிற்று. ஸைமார்க்கு: கின்னாரத்தை நன்றாய் மீட்டினபின் அதை வாசித்துக்கொண்டு தெளிவான சப்தமாய்ப் பாடினதென்னவெனில்:

க. கர்த்தாவை நல்ல பத்தியாலே
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்தீங்கிலேயும் அவராலே
அன்பாய்க் காப்பாற்றப்படுவான்;
உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை.

உ. அழுத்துங் கவலைகளாலே
பலன் ஏதாகிலும் உண்டோ,
நாம் நித்தம் சஞ்சலத்தினாலே
தவிப்பது உதவுமோ;
விசாரத்தாலே நமக்கு
இக்கட்டதிகரிக்குது.

ங. உன் காரியத்தை நலமாக
திருப்ப வல்லவருக்கு
நீ அதை ஒப்புவிப்பாயாக,
விசாரிப்பார், அமர்ந்திரு;
மாதிட்டமாய்த் தயாபரர்
உன் தாழ்ச்சியை அறிந்தவர்.

ச. சந்தோஷிப்பிக்கிறதற்கான
நாள் ஏதென்றவர் அறிவார்,
அநேக நற்குணங்கள் காண
அந்தந்த வேளை தண்டிப்பார்;
அசைப்பிலே திரும்பவும்
தெய்வன்பு பூரிப்பைத் தரும்.

இதைப் பாடும்போதே கை நடுங்க கண்ணீரோடே அவர் பேசாது அமர்ந்திருந்தார். இந்த அமைச்சலும் எழுப்புதலை உண்டாக்கிற்று. யாவரும் ஷை வீட்டுக்கார அம்மாளும் கண்ணீர் சொரிந்தார்கள். அந்த அம்மாள் பொறுத்திருக்கக் கூடாமல்: என் அருமைத் துரையே, இப்போது நான் என் எல்லாக் கவலைகளையும் மறந்து, என் பரமபிதாவையும் அருமை இரட்சகரையும் விலையேறப்பெற்ற சிலுவையையும் நினைத்துக்கொண்டு தேவாலயத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பதுபோலிருக்கிறது. இப்படியாவதற்குக் காரணமென்ன, காலமே சஞ்சலப்பட்டு எழுந்தீரே. இப்போதே கெம்பீரக் கீதம் தொனிக்குதே. கர்த்தர் உமக்குச் சகாயம்செய்தாரோ என்க, அவர்: ஆம், ஆம். தயவும் கிருபையுமுள்ள என் பராபரனும் பிதாவுமானவர் சகாயம்செய்தார். என் தரித்திரம் தூரத்தண்டது. இல்லாமை சொல்லாமல் சென்றுவிட்டது. நான் இப்போது ஆம்பூர்கு நகரம் வந்திருக்கும் சுவேதன் இராச்சிய ஸ்தானாபதியின் லிகிதர். சம்பளம் வருஷவாரி இருநூறு ரூ. நான் என் கின்னாரத்தை மீட்டுக்கொள்ள ஐம்பது ரூ. முன் பணம் கிடைத்ததால் என் சந்தோஷம் இரட்டிப்பாயிற்று. கர்த்தர் ஆச்சரியமுள்ள

கிருபை மிகுந்த தேவனல்லவா, ஆம் ஆம், என் பிரிய சனமே, ஒன்று நிச்சயம்.

உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை என்றார்.

யோவான்சன் அம்மாள்: இந்த சிறந்த பாட்டு உங்களுக்கு எங்கே கிடைத்தது. எனக்குப் பிரார்த்தனை புஸ்தகம் முழுவதும் தெரியும். அதில் இதில்லையே, ஒருவேளை நீங்கள் தான் உண்டாக்கினீர்களோ என்க, அவர்: நானு, ஆம் நான்தான். சரியாய்ச் சொன்னால் நான் வாத்தியம்; பராபரன் வாத்தியக்காரர். உன்னதமான கர்த்தரைச் சார்ந்தோருக்கவர் கன்மலை என்கிற வார்த்தைகள் நெடுநாளாக என் இருதயத்தில் கிடந்தது. அதைப்பற்றி நான் தியானிக்க தியானிக்க இந்தப் பிரார்த்தனை உண்டாயிற்று. எப்படியென்று எனக்குத் தெரியவில்லை. நான் சந்தோஷத்தினால் பாடி, செபிக்கத் துவக்கினேன். என் ஆத்துமா கர்த்தரை ஸ்தோத்திரிக்க ஊற்றிலிருந்து சலம் புறப்படுவதுபோல வார்த்தைகள் ஓடிவந்தன. அது போதும். இன்னமும் கேளுங்கள் என்று சொல்லி,

௫. நீ கர்த்தரால் கைவிடப்பட்டோன்
என்றுபத்தில் நினையாதே,
எப்போதும் பாடும் நோவு மற்றோன்
பிரியனென்றும் எண்ணாதே.
அநேக காரியத்துக்கு
பின் மாறுதல் உண்டாகுது.

௬. கதியுள்ளோரை ஏழையாக்கி
மகா எளியவனையோ
திரவிய சம்பன்னனாக்கி
உயர்த்த சுவாமிக்கரிதோ;
தாழ்வாக்குவார், உயர்த்துவார்.
அடிக்கிறார், அணைக்கிறார்.

௭. மன்றாடி, பாடி கிறிஸ்தோனாக
நடந்து கொண்டுன் வேலையை
நீ உண்மையோடே செய்வாயாக,
அப்போ தெய்வாசீர்வாதத்தை
திரும்பக் காண்பாய், நீதிமான்
கர்த்தாவால் கைவிடப்படான்.

என்று பாடி முடித்தவுடனே அவர் அதற்குமேல் வாசிக்கக்கூடாமல் கின்னரத்தை ஒரு மூலையில் வைத்தார். கூடிவந்த சபையார் ஒருவர் பின்னொருவராய்ப் போய்விட்டார்கள்.

இது நமது ஞானப்பாட்டுப் புஸ்தகத்திலுள்ள மிகவும் சிறந்த பாட்டுகளிலொன்றின் சரித்திரம். இதில், ஆறுதலற்றுச் சஞ்சலத்தில் மூழ்கியிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஏற்ற அரும் பிரசங்கம் அடங்கியிருக்கிறது. இதை உண்டுபண்ணின னைமார்க்கு இரண்டு வருஷத்துக்குப்பின் வையமார் நகரத்தின் புஸ்தகசாலைத் தலைவர் என்ற உயர்ந்த உத்தியோகம் வந்தது, தமது கசு-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் உண்டுபண்ணின பாடல்களில் மேற்படி பாட்டே அதிமுக்கியமானது.

(தாங்கள்-மிசி-அல்மனாக்கு.)

---



# சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து.—இந்திய சக்கரவர்த்தினியாகிய விக்றோரியா ராணியவர்களின் ஜென்மதினோற்சவம் சென்ற மேமீ 24உ கொண்டாடப்பட்டது. மகா ராணியவர்களின் வயசு 61. நார்தாம்பற்றன் நகரத்துக்கு பிரதிநிதியாக பார்லமெந்து மகா சங்கத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட பிராட்லா துரை என்னும் நிரீச்சுரவாதி ஒருவர், முறைப்படி, தேவசாட்சியாகப் பிரமாணஞ்செய்யச் சம்மதியாததினால், அவருக்கு அச்சபையில் இடமில்லையென்று விலக்கினார்கள். சத்தியத்துக்குப் பதிலாக பயபத்தியான வாக்குறுதி ஒப்புக்கொள்ளப்படலாமென்று ஒரு புதிய சட்டம் ஏற்பாடானதின்பின்பு அவரும் பார்லமெந்தில் இடம்பெற்றுக்கொண்டார். இதையிட்டு இங்கிலாந்தில் அநேக வாதானுவாதங்களுண்டாயின. மதுபான வகைகளின் விற்பனையைத் தடுக்கிறதான சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு ஜனப்பிரதிநிதிகளின் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி எந்த இடத்தில் நகரவாசிகளின் பொதுவான சம்மதமில்லையோ அந்த இடத்தில் மதுபான வியாபாரம் செய்யக்கூடாதென்று தடுத்துப்போடலாம். இந்தியாவிலும் இப்படிப்பட்ட சட்டம் ஏற்படுமானால் நலம் என்று சொல்லவும் வேண்டுமோ!

ருஷியா.—ருஷியச் சக்கரவர்த்தியின் பத்தினியார், நெடுநாள் க்ஷயரோகத்தால், காலஞ் சென்றுபோனார். இதினால் சக்கரவர்த்தி விசனமுடையவராயும் துணையிழந்தவராயுமிருக்கிறார்.

இந்தியா.—பழைய கவர்னர் ஜெனரலாகிய லார்ட் லிற்றன் பிரபு அவர்கள் சென்றமீ 3உ பம்பாய் மார்க்கமாக இங்கிலந்துக்குப் பிரயாணமானார்கள். அடுத்த வருஷம் இந்தியாமுழுவதிலும் குடிமதிப்புச் செய்யவேண்டுமென்று இந்திய அலோத்தனத்தாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறதினால் அதற்கு வேண்டும் பிரயத்தனங்கள் நடக்கிறது. திருவாங்கூரின் பழைய மகாராஜா சென்ற மேமாசத்தில் காலஞ்சென்றுபோனதினால், அவர் சகோதரராகிய இளவரசரை மகாராஜாவாக சென்ற ஜூன்மீ 17உயில் மிகுந்த ஆடம்பரத்துடன் பட்டாபிஷேகம் செய்தார்கள். புதியவரசர் கல்வி, கேள்வி முதலியவற்றில் மிகவும் தேர்ந்தவரென்று லோகப்பிரசித்தமாகையால் அவர் ஆளுகையில் ஜனங்களுக்கு அநுகூலமான அநேக நல்ல ஏற்பாடுகள் உண்டாகுமென்று யாவரும் ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள்.

ஆப்கானிஸ்தான்.—ஆப்கான் யுத்தம் சீக்கிரம் முடிவுபெறுமென்றும், அப்துல்ரயிமான் என்பவரை ஜனங்கள் தங்கள் அமீராக ஏற்றுக்கொள்வார்களென்றும் உத்தேசிக்கப்படுகிறது. அத்தேசத்தில் அங்கங்கே வைக்கப்பட்டிருக்கிற பிரிட்டிஷ் தளங்கள் அவ்விடம்விட்டு புறப்பட்டுவரும்படிக்கான எத்தனங்கள் நடக்கிறது. சீமைத் அலோத்தனத்தார் ஆப்கான் யுத்தச்செலவில் ஓர்பாகத்தைச் செலுத்துவார்களாம்.

| ஆகஸ்துமீ நாள் 31-ஆடிமீ 19உமுதல், ஆவணிமீ 18உவரை. | | | |
|---|---|---|---|
| வாரம். | இங்கிலீஷ் தேய்தி. | தமிழ்த் தேய்தி. | அன்றாடகத் தியானம. |
| ஞா | 1 | ௧௯ | நான் உம்முடையவன் என்னை இரட்சியும். சங். 119: 94. |
| தி | 2 | ௨0 | கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்கு காண்பியும். சங். 85:7 |
| செ | 3 | ௨௧ | ஆவியின் சிந்தை ஜீவனும் சமாதானமுமாம். ரோ. 8: 6. |
| பு | 4 | ௨௨ | தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். யோபு 42: 2. |
| வி | 5 | ௨௩ | தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக்கூடாது. |
| வெ | 6 | ௨௪ | பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். லூக். 12:15 |
| ச | 7 | ௨௫ | உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும். |
| ஞா | 8 | ௨௬ | உமது வாக்கை என் இருதயத்தில் வைத்தேன் சங். 119: 11. |
| தி | 9 | ௨௭ | அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக. லூக். 4: 8. |
| செ | 10 | ௨௮ | உம்முடைய வசனம் என் காலுக்குத் தீபம். சங். 119:105. |
| பு | 11 | ௨௯ | ஆபத்துக்காலத்தில் என்னைநோக்கிக் கூப்பிடு. சங். 50:15. |
| வி | 12 | ௩0 | எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளது. எரே. 17: 9. |
| வெ | 13 | ௩௧ | இருதயத்திலே சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் மத். 5: 8. |
| ச | 14 | ௩௨ | ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும். சங். 119: 133. |
| ஞா | 15 | ௧ | கர்த்தராகிய நானே இருதயத்தை ஆராய்கிறவனாயிருக்கிறேன். |
| தி | 16 | ௨ | கர்த்தாவே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும். ஆப. 3: 2. |
| செ | 17 | ௩ | தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் |
| பு | 18 | ௪ | நீதியின் கிரியை சமாதானம். ஏசா. 32: 17. (எபே. 4: 30. |
| வி | 19 | ௫ | தேவபக்தியானது பிரயோஜனமுள்ளது. 1 தீமோ. 4: 8. |
| வெ | 20 | ௬ | எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை. ஏசா. 64: 6. |
| ச | 21 | ௭ | தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுதிறகாலம் இனி வருகிறது |
| ஞா | 22 | ௮ | என்னைக் கொன்றாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். |
| தி | 23 | ௯ | இலக்கைநோக்கித் தொடருகிறேன். பிலி. 3: 14. (யோபு 13:15. |
| செ | 24 | ௧0 | தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். மத். 5:39. |
| பு | 25 | ௧௧ | என்னோடே இராதவன் விரோதியாயிருக்கிறான். மத். 12. 30. |
| வி | 26 | ௧௨ | நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக. எண். 23: 10. |
| வெ | 27 | ௧௩ | விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். மாற். 9: 23. |
| ச | 28 | ௧௪ | எனக்கு தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். சங். 73: 28. |
| ஞா | 29 | ௧௫ | தீமைசெய்தலைவிட்டு ஓயுங்கள். ஏசா. 1: 16. |
| தி | 30 | ௧௬ | என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறது. லூக். 19: 46. |
| செ | 31 | ௧௭ | யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். |

## விசேஷ நாட்கள்.

1. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 10-ம் ஞாயிறு.
6. அமாவாசை.
8. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 11-ம் ஞாயிறு.
15. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 12-ம் ஞாயிறு.
20. பௌரணமி.
22. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 13-ம் ஞாயிறு.
24. பரி. பர்த்தொலோமெயுவின் திருநாள்.
29. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 14-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௱௮௰௫.

## உபாகமம்.

### 32. அதிகாரம்.

மோசேயின் பாட்டு (1—43.) மோசேயால் எழுதப்பட்டது.

1—3. முகவுரை. 43-முடிவுரை. மற்ற வாக்கியங்களை மூன்று பிரிவாகச் சொல்லுகிறார்.

I. 4—18. தேவனுடைய உண்மையும் இஸ்ரவேலருடைய உண்மைத் தாழ்வும்.

II. 19—33. தேவன் இஸ்ரவேலரைத் தண்டித்ததும் அத்தால் உண்டான சிறுமையும்.

III. 34—42. தேவன் தமது ஜனங்களின் தாழ்வான ஸ்திதியைப் பார்த்து இரங்குவது.

1. "வானங்களே மி." 4: 26. 30: 19. 31: 28, 29. ஏசா. 1: 2. எரே. 2: 12. 22: 29. பேசப்போகிறவைகளின் முக்கியத்தையும் அருமையையும் உணர்த்தும்படி.

4—14. பாட்டின் முக்கிய பாகம் அடங்கியது. தேவனுடைய உண்மையையும் இஸ்ரவேலருடைய இரண்டகத்தையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

4. "அவர் கன்மலே." 15, 18, 31, 37. தேவ மகத்துவத்தை வற்புறுத்திக் காட்டுகிறார்.

6. "ஆட்கொண்ட" விலைக்கு வாங்கின என்றர்த்தம்.

7. "நாட்கள்" இந்த வாக்கியத்திலும் சங்கீ. 90: 15-லும் வருஷங்கள் என்றர்த்தம்.

8. தேவனுடைய ஆளுகையின்படி அந்தந்த ஜாதியாருக்கு தேசங்களைப் பங்கிட்டபோது, இஸ்ரவேலரைக் குறித்து விசேஷித்த ஞாபகமிருந்ததாம்.

10. "ஊளையிடுதல்" மிருகங்கள் ஊளையிட்டுத் திரிகிற.

"பாழான" ஆதி. 1: 2-ல் "வெறுமை" என்றிருக்கிற வார்த்தை இந்த வார்த்தைதான்.

"கண்மணி" சங். 17: 8. நீதி. 7: 2.

11. தேவன் இஸ்ரவேலரை நடத்தின' வகையை விளக்கும்படி ஒரு சிறந்த உபமானத்தைச் சொல்லுகிறார். கழுகு தன் குஞ்சுகளை விந்தையாய்ப் பறக்காட்டும் விதத்தைச் சொல்லுகிறார். கழுகு குஞ்சுகளைப் பறக்காட்டும்பொழுது, ஒரு கழுகு, குஞ்சிருக்கிற கூட்டைக் கலைத்துவிடும். இன்னொரு கழுகு குஞ்சுகள்மேல் வெகு விழிப்பாய் அசைவாடிக்கொண்டிருக்கும். கூட்டைக் கலைத்தவுடனே குஞ்சுகள் தத்தித்தத்திக் கீழேவிழும். அப்போ கழுகுகள் மின வேகமாய் விலாப்பாய்ச்சலில் வந்து, குஞ்சுகள் கீழே விழாதபடி செட்டைகளை விரித்துத் தாங்கி அதி உயரமான தன் பழய கூட்டில் கொண்டு போய்ச் சேர்க்கும். இந்தப்படியே செய்து பறக்காட்டப் படிபபிக்கும். தேவன் தமது பிள்ளைகளை துன்பத்தினாலே சிட்சிக்கும்போது அவர்களை அழித்துப்போடவேண்டுமென்பது அவருடைய நோக்கமல்ல, அவர்களை மேலான இடத்துக்குப் பக்குவப்படுத்தும்படிக்கே அப்படிச் செய்கிறார்.

13. பாழான இடத்தை அல்ல. (31.) மன்னர்கள் அதிகாரம் செலுத்திவந்த உயர்ந்த ஸ்தானங்களைக் கொடுத்தார்.

"கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெ." ஒலிவ எண்ணெயாம். ஒலிவமரம் கற்பாறையான இடத்தில்தான் நன்றாய் செழிக்கும்.

15. "யெசூரன்" இந்த வார்த்தை. 33: 5, 26-லும் ஏசா. 44: 2-லும் மட்டும் வருகிறது. இந்த வார்த்தைக்கு உத்தமன், நீதிமான் என்றர்த்தம். இஸ்ரவேலர் உத்தமராயிருக்கும்படி அழைக்கப்பட்டதினாலே இந்தப் பேரைச் சொல்லுகிறார். எண். 23: 21. மற்றப்படி இஸ்ரவேலர் நீதிமான்களாய் நடந்தார்கள் என்று அவர்கள் குணத்தைக் காட்ட நோக்கமாய் மோசே இந்தப் பேரைச் சொல்லவில்லை. அடுத்தாற்போல் இஸ்ரவேலருடைய இரண்டகத்தைச் சொல்லப் போகிறார். அதற்காக இப்படிப்பட்ட பேரை முந்திச் சொல்வது, அவர்களுக்கு உறைக்கும்படிக் கூர்மையாய்க் கடிந்துகொள்ளுகிறதாயிருக்கிறது.

17. "பயப்படாதவைகள்." 13: 7. 29: 25.

19—33. தேவன் இஸ்ரவேலரைத் தள்ளிப்போடும்படி தீர்த்த தீர்ப்பு. அதின் பயங்கர நிறைவேறுதல். அதற்கடுத்த முகாந்தரங்கள் சொல்லப்பட்டது.

21. "மதிக்கப்படாத...மதிகெட்ட". யூதர் புறச்சாதியாரை இப்படிச் சொல்லுவார்கள். யூதருடைய சலாக்கியத்தைப் பிடுங்கி தேவன் புறச்சாதியாருக்குக் கொடுத்தார். ரோமர். 10: அதி. ஓசி. 1: 10. இந்த இரகசியம் இன்னம் பூரண நிறைவேறுதல் அடையவில்லை.



22. எரே. 15: 14. 17: 4. புல. 4: 11.

24. லேவி. 26: 22. எரேமி. 15: 2. எசே. 5: 17. 14: 21.

27. சத்துருக்கள் இஸரவேலரை நசுக்கும்போது தங்கள் சாமர்த்தியத்தினாலே அப்படிச் செய்ததாக நினைத்தார்கள். தேவன் இஸ்ரவேலரைக் கைவிட்டதினாலே தங்களுக்கு ஜெயம் கிடைத்ததென்று நினைக்கவில்லை. அதற்காக இஸரவேலரை ஒடுக்கின சத்துருக்களை தேவன் நியாயந் தீர்த்தார்.

32. இஸரவேலருடைய தன்மை குணகுணங்களைக் காட்ட ஒரு உபமானம் சொல்லுகிறார்.

44—52. உபாகமத்திற்கு முடிவுரை எழுதினவன் இந்த வாக்கியங்களை யெழுதியிருக்கவேண்டும்.

52. எபி. 11: 13.

49. "அபாரீம்" என்ற வார்த்தைக்கு கரைச்சுற்று நாடுகள் என்றர்த்தம். ஆனால் எரிகோவுக்கு நேர் எதிரேயிருக்கிற மலைகளுக்கு இந்தப் பேர் விசேஷித்த வகையாய் வழங்கியது. பொதுவாகச் சொன்னால், யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள மேடான தேசங்களையெல்லாம் குறிக்கும். எரே. 22: 20.

"பிஸ்கா" என்ற வார்த்தைக்கு உச்சிப் பரும்பு என்றர்த்தம். அபாரீம் மலைகளின் ஒரு உயர்ந்த உச்சிக்கு பிஸ்கா என்று பேர் இது எஷ்பானுக்கு மேற்கேயிருக்கிறது. இந்த உச்சி அல்லது கொடிமுடியின் மேல் சரிவில் நேபோ என்ற பேருள்ள ஒரு பட்டணமுண்டு. 32: 3, 38. நேபா என்று பேருள்ள ஒரு பட்டணம் அழிந்து கிடக்கிறதை நாளதிலும் பிரயாணிகள் கண்டிருக்கிறார்கள். ஒருவேளை இந்தப் பட்டணம் அதாயிருக்கலாம். இப்பட்டணத்தின் பேரால், பிஸ்காவுக்கு நேபோமலை எனவும் பேர் வந்தது. இந்தப் பிஸ்காவின் சிகரத்திலேறி இஸ்ரவேலர், சவக்கடலின் பக்கமான பாழ்வனங்களையும் யோர்தானின் பள்ளத்தாக்கையும் பார்த்தார்கள். மோசே மரிக்குமுன் இவ்விடத்திலிருந்துதான் வாக்குத்தத்த தேசத்தைப் பார்த்தான். இவ்விடத்தின் முக்கியத்தையிட்டு கிறிஸ்தவர்கள் இதை நேபோ மலை என்று அடிக்கடி சொல்லுவார்கள்.

## 33. அதிகாரம்.

### மோசேயின் ஆசீர்வாதம்.

i. முகவுரை 1—5.

ii. கோத்திரங்களுக்கு தனித்தனியே சொன்ன ஆசீர்வாதம். 6—25.

iii. முடிவுரை. 26—29.

இந்த ஆசீர்வாதம் மோசேயால் சொல்லப்பட்டது. இவனுடைய பாட்டைக் கேட்ட சனங்களுக்கு அந்த ஒரே நாளிலேயே இந்த ஆசீர்வாதமும் சொல்லப்பட்டது. 32: 48-ன்படி மோசே தன் மரணத்தைக் குறித்த கடைசி உத்தரவைப் பெற்ற உடனேயும், நேபோ மலையில் ஏறுகிறதற்குச் சற்று முன்னதாகவும் இப்படி ஆசீர்வதித்தான்.

ஆதி. 49-அதி. வாசி. யாக்கோபு சொல்லிய ஆசீர்வாதத்தோடு இதை ஒத்துப்பார்த்தால் மோசே ஒருவகையில், யாக்கோபு முன்னறிவித்தவைகளையே திரும்பச் சொல்லுகிறார். இன்னொரு வகையில் அவர் சொல்லியதை விரித்துக் கூட்டியும் சொல்லுகிறார். சில விஷயங்களில் அவைகுறைப்படுத்தியும் ரத்துச்செய்தும் போடுகிறார்.

"தேவனுடைய மனுஷன்" யோசு. 14: 6. 1 சா. 9: 6. 1 இரா. 12: 22. தேவனிடத்திலிருந்து நேரான வெளிப்படுத்தல் அடைந்தவனுக்கு பழய ஏற்பாட்டில் இந்தப் பேர் வழங்கியது. இந்தப் பேர் பெற்றவனெல்லாம் அவசியமாய் தீர்க்கதரிசியாயிருக்கவேண்டிய நிமித்தமில்லை. இந்த வார்த்தை இந்த இடத்தில் வருகிற சம்பந்தமென்னவென்றால், மோசேயின் பாட்டை மோசே தானே எழுதிவைத்ததுபோல், மோசேயின் ஆசீர்வாதத்தை எழுதிவையாவிட்டாலும் அது திவ்ய அதிகாரமுள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை என்று காட்டவே.

மோசே இந்த ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது யோசுவாவும் கூடவே இருந்தான். 31: 14. மோசே அடைந்த தீர்க்கதரிசன ஆவியில் அவனும் வரமடைந்தான்.

2. "சேயீர்." ஏதோமியருடைய மலைத்தேசத்தைக் குறிக்கும்.

"பாரான்மலை." எண். 10: 12. சீனாய்வனாந்தரத்தின் வடஎல்லையிலிருக்கிற மலைத்தொடருக்குப் பேர். இப்படியாக தேவன் இத்தனை விஸ்தாரமான இடத்தில் பிரசன்னமானார் என்று சொல்லுகிறார்.

"பரிசுத்தவான்கள்." பரிசுத்த தூதர்களைக் குறிக்கும். சகரி. 14: 5.



3. "சனங்களை" அதாவது 12-கோத்திரத்தாரைக் குறிக்கிறார்.

"பரிசுத்தவான்கள்." தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அதே 12-கோத்திரத்தாரைக் குறிக்கும். 7: 18, 21. எண். 19: 6: தானி. 7: 18, 21.

"அவர்கள்...உம்முடைய" திடீரென்று படர்க்கையிடத்தை முன்னிலையிடமாய்ப் பேசுவது எபிரேயச் செய்யுளுக்கு வழக்கந்தான். 32: 15. சங்கி. 49: 15—19.

4. மோசே தான் சொன்ன ஆசீர்வாதத்தை எழுதாவிட்டாலும், தேவாவியினால் ஏவப்பட்டுப் பேசினானே. ஆகையால் தன்னையும் மற்ற இஸ்ரவேலரில் ஒருவனாகப் பாவித்து "நமக்கு" என்கிறான்.

5. "இராசாவாயிருந்தார்." கர்த்தரைக் குறிக்கும். மோசேயைக் குறிக்கமாட்டாது. மோசே ஒருக்காலும் இராசா என்று சொல்லப்பட்டிருப்பதில்லை.

6. "ரூபன்" இவன் சனம் கொஞ்சமாயிராமல் பெருகிப்போம் என்று முன்னறிவிக்கிறார். ஆதி. 49-ல் சொல்லியதை ஒத்துப்பார்த்து இப்படிச் சொல்லுகிறார். என்றாலும் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதுமுதல் இவர்கள் தொகை குறைந்துவந்ததென்று காண்கிறோம். (எண். 1: 21ஐ 26: 7 ஓடு பார்.) பிற்பாடு ரூபன், காத், பாதி மனாசே இந்த 3-கோத்திரங்களையும் சேர்த்துத் தொகை எடுத்தபோதும், எண். 1-ல் சொல்லிய குடிமதிப்பின்படி. இந்த 3-கோத்திரங்களின் மொத்தத் தொகையெல்லாம் கூடி, ரூபன் கோத்திரத் தொகைக்குக் கூடச் சரிவரவில்லை. 1 நாளா. 5: 18. ரூபனர் யோர்தானுக்குக் கிழக்கே பங்குபெற்றார்கள். இவர்களுக்குத் திட்டமான எல்லை குறிக்கப்படாமல் ஐபிராத் நதிவரையும் போக இடங்கொடுக்கப்பட்டிருந்தது. இவர்களுடைய ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்கேற்ற நல்ல இடங்களிருந்தது. என்றாலும் யோசுவாவுக்குப்பின் இவர்கள் தங்கள் ஆதி தைரியத்தை விட்டு விட்டதாகக் காணப்படுகிறது. யாபீனைச் செயிக்கும்போது இவர்கள் முன்னுக்கு வரவில்லை. நியா. 5: 15, 16. இவர்கள் தங்கள் ஆடுமாடுகளுக்கு வசதியான இடம் தேடுவதில் ஐபிராத்வரையும் போய் சண்டைசெய்து தங்கள் பலத்தையெல்லாம் செலவழித்துப்போட்டார்கள். 1 நாளா. 5: 9, 10, 18. சீகோன் ஓகு என்ற இராசாக்களின்மேல் ஜெயங்கொண்டபின் அவர்களிடத்திலிருந்து பிடித்தின நாடுகளைக் காப்பாற்றி, மேலும் மேலும் ஜெயிக்கவேணுமென்று பிரயாசப்பட்டதாய்த் தோன்றவில்லை. எண் 32: யாதாமொரு நியாயாதிபதி, தீர்க்கதரிசி, அல்லது வீரன் இந்தக் கோத்திரத்திலிருந்து எழும்பவில்லை. இப்போ கொஞ்சக்காலத்துக்குமுன் மோவாபியரைச் சேர்ந்த கற்கள் கண்டெடுக்கப்பட்டது. அவற்றினால் துலங்குகிறபடி, யோசுவா ரூபேனியருக்குக் கொடுத்த பட்டணங்கள் ஒரு பாகமாயாவது முழுவதுமா

யாவது மோவாபியராலே பிடிக்கப்பட்டுப்போயிருக்கவேணுமென்று தெரியவருகிறது. ரூபேனர் வரவர மோவாபியரோடு சம்பந்தம் கலந்துபோனார்களென்றும் நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது.

சிமியோன் கோத்திரம் பிறப்பு வரிசையின்படி இரண்டாவது வரவேண்டும். சனங்கள் எல்லார்மேலும் பொதுவாய்ச் சொல்லப்பட்ட ஆசீர்வாதத்தில் இந்தக் கோத்திரமும் சேர்ந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. 1-5. 26-29. என்றாலும் இவ்விடத்தில் அந்தக் கோத்திரப் பேர் சொல்லப்படவில்லை. இதற்கு முகாந்தரமாவது: யாக்கோபு முன்னறிவித்தபடி இவர்கள் இஸ்ரவேலிலே சிதறடிக்கப்பட்டார்கள். ஆதி. 49: 7-வியா. வாசி. யாக்கோபு சொல்லிய குற்றங்களல்லாமலும் இவர்கள் வேறே குற்றத்துக்குமுள்ளானார்கள். எண். 25: ஆகையால் எகிப்தை விட்டுப் புறப்படும்போது இவர்கள் மிக ஏராளமாயிருந்தாலும், மோசேயின் மரணத்துக்குள்ளாக அதிகமாய் குறைந்துபோனார்கள். (எண். 1: 22, 23 ஐ 26: 12—14 ஓடு பார்.) கடைசியாக யூதாக்கோத்திர எல்லைக்குள் ஒரு கோணத்தில் இடம் கிடைத்தது. யோசு. 19: 2—9. இவர்கள் யூதாக்கோத்திரத்தாரோடு சேர்ந்து சில ஜெயங்களை அடைந்ததாக வாசிக்கிறோம். (நியா. 1: 17.) 1 இரா. 12: 23-ல் "மற்ற சனங்கள்" என்பது இவர்கள் தானென்று தோன்றும். பிற்கால சரித்திரத்தில் துலங்குகிறபடி இவர்கள் தென் திசைகளில் சில ஜெயங்களை அடைந்தார்கள். 1 நாளா. 4: 24. 39—43.

7. "யூதாவைக்குறித்து." இவன் யுத்தங்களில் ஜெய கெம்பீரமாய்த் திரும்புவானென்று யாக்கோபு முன்னறிவித்தான். ஆதி. 49: 8, 9. இதை மோசே இப்பொழுது முன்னுக்கு வைத்துக்கொண்டு, மற்றக் கோத்திரங்களுக்குத் தலைமையாக நின்று யூதா யுத்தத்துக்குப் போகும்போது, சுகத்தோடும் ஜெயத்தோடும் "தன் சனத்தோடு திரும்பச் சேரப்பண்ணும்" என்று ஜெபிக்கிறார். மற்றப்படி பிரிந்துபோன 10-கோத்திரத்தாரை அவனோடு சேரப்பண்ணும் என்ற அர்த்தமில்லை.

8—11 லேவிக்கு இடப்பட்ட ஆசீர்வாதம் யூதாவைப்போல் தேவனைப் பார்த்து ஜெபிக்கும் ஜெபமுறையாய்ச் சொல்லப்பட்டது.

"பரிசுத்த புருஷன்." அதாவது லேவியாம். ஆசாரியரும் லேவியரும், லேவியிலிருந்துண்டானவர்கள். யாக்கோபு லேவியைக்குறித்து விரோதமாய் உரைத்திருந்தபோதிலும்.

1. மோசே ஆரோன் என்பவர்கள் தங்கள் உயர்ந்த உத்தியோகங்களிலிருந்து மகா உத்தமமாய் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ததாலும்,

2. இந்தக் கோத்திரத்தில் பினெகாஸ் முதலானவர்கள் உண்மையும் பத்திவைராக்கியமும் காட்டினதாலும்; எண். 25: 11—.



3. விபத்தான வேளையில் இந்தக் கோத்திரத்தாரெல்லாரும் கர்த்தர் பட்சமாய்ச் சேர்ந்துகொண்டதாலும்; யாத்தி. 32: 26.

இவர்களுக்கிடப்பட்ட சாபம் ஆசீர்வாதமாக மாறி, கும்பிடும் தட்சணையும் வாங்கும்படி இஸ்ரவேலிலே சிதறடிக்கப்பட்டார்கள். (ஆதி. 49: 7-வியா.) ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனுக்கடுத்த முக்கிய வேலைகளைச் செய்யும்படி தெரிந்தெடுக்கப்பட்டதற்கும், நியாயப்பிரமாணத்தை மற்ற யூதருக்குப் போதிக்கும்படி இவர்கள் நியமிக்கப்பட்டதற்கும் மேற்காட்டிய முகாந்தரங்களே காரணமாகச் சொல்லப்படுகிறது. 10: 8—. எண். 8: 5—. மாசாவின் பரீட்சையானது (யாத். 17: 1—7.) 40-வருஷ அலைச்சலின் ஆரம்பத்திலும், மெரிபாவின் வாக்குவாதம் (எண். 20: 1—13.) அடி காலத்தின் கடைசியிலும் நடந்ததால் இந்தக் காலங்களிலெல்லாம் தேவன் இந்தக் கோத்திரத்தாரின் உண்மையையும் கீழ்ப்படிதலையும் சோதித்தார் என்று காட்ட நோக்கமாய் இந்த இரண்டு சரித்திரங்களையும் சொல்லுகிறார். இப்படிப்பட்ட முகாந்தரங்களையிட்டுத்தான் மோசே ஆரோன என்பவர்கள் காதேசில் தவறின சங்கதியையும், எண். 20-அதி—. சில லேவியர், கோராவின் கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்த சங்கதியையும் (எண். 16: அதி.) சொல்லாமல் விட்டுவிட்டார்.

9. "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்." மத். 10: 37. லூக். 14: 26.

11. "இடுப்புகளை" பலத்துக்கு ஆதாரம் இடுப்பு.

12. "பென்யமீன்" தன் தகப்பனாலே விசேஷித்த வகையாய் அன்புகூரப்பட்டவன். ஆதி. 35: 18. 44: 20. இப்பொழுதும் அப்படியே தேவனாலே நேசிக்கப்படுவான் என்று மோசே ஆசீர்வதிக்கிறார்.

13—17. எப்பிராயீமும் மனாசேயும் யோசேப்பில் அடக்கம். ஆதி. 49: 25, 26. மோசே சொன்னதும் யாக்கோபு சொன்னதும் ஒன்றுபோல தான். ஆனால் இந்தக் கோத்திரங்களுக்குண்டாகும் போராட்டத்தைக்குறித்து யாக்கோபு வற்புறுத்திப் பேசுகிறார். ஆதி. 49: 23, 24. மோசேயோ, இவர்கள் வெற்றியடைந்து வல்லமையில் ஸ்திரப்படுவதைப்பற்றி வற்புறுத்திப் பேசுகிறார்.

17. "அவன்" அதாவது யோசேப்பின் அலங்காரமாம். காளை என்பது யோசேப்பையாவது, யோசுவாவையாவது, II. எரோபோவாமையாவது குறியாமல், எப்பிராயீமைக் குறிக்கும். எப்பிராயீமுக்குத் தான் தலைச்சனுக்குரிய கண்ணியத்தை யாக்கோபு கொடுத்தான். ஆதி. 48-அதி. இந்த வாக்கியத்தில், எப்பிராயீம், யோசேப்பின் தலையீற்றுக் காளைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறான். இது பலத்துக்குக் குறிப்பாம்.

"பதினாயிரம்" ஆதி. 48: 19. 1 சாமு. 18: 7, 8.

18, 19 "செபுலோன், இசக்கார்" ஆதி. 49: 13—15-ன் பொ
ருளை மனதில் உறைக்கும்படி மோசே வற்புறுத்திச் சொல்லுகிறார்.
யாக்கோபைப்போலவே மோசேயும் இளையவனை முந்திச் சொல்லு
கிறார். செபுலோனுக்கு கடற்கரையோரத்தில் வசதியான சுதந்தரம்
கிடைத்தது. திபேரியாக் கடலில் மீன்பிடிக்க நல்ல துறைகள் கிடைத்
தது. ஆகையால் வியாபாரம்பண்ணி வர்த்தகனாகி, வியாபார விர்த்திக்
காக "வெளியே புறப்பட்டுப்போகையில் சந்தோஷமாயிரு" என்று
ஆசீர்வதிக்கிறார்.

இசக்காருக்குச் செழிப்பான உள்நாடு கிடைத்தது. ஆகையால்
அவன் வீட்டிலே வாசம்பண்ணி சமுசாரியாக வேளாண்மைத் தொ
ழிலில் வாழ்வடைவான் என்கிறார். இரண்டு கோத்திரத்தாரும் யாபீன்
யுத்தத்தில் வீரம் பாராட்டினார்கள். நியா. 5: 14, 15, 18. சிசேராவின்
சேனையை மடங்கடித்த ஆபீசர்கள், செபுலோனைச் சேர்ந்தவர்கள்.
நியா. 5: 14. 1 நாளா. 12: 33.

"மலையின்மேல்" யாத்தி. 15: 17.

"மண்ணுக்குள்ளே" மீ. இது பொதுவாக கடலினால் உண்
டாகக் கூடிய நன்மையெல்லாம் குறிக்கும். ஆனபோதிலும் இந்தக்
கடற்கரை மணல் பளிங்குக் கண்ணாடி வார்ப்புக்கு மெத்த உபயோகப்
பட்டது. விலையுயர்ந்த கண்ணாடிகள் இத்தால் வார்க்கப்பட்டதினால்
இந்த மணல் விலையுயர்ந்த பொருளாய் மதிக்கப்பட்டது. பூர்வகாலத்
தில் பளிங்குக் கண்ணாடி வெகு அருமையான பொருளாக எண்ணப்
பட்டது. யோபு 28: 17. "மணலுக்குள்ளே மறைந்திருக்கும்" சங்கு,
சிப்பி, நத்தை இவற்றால் நல்ல ஆதாயம் பெற்றார்கள். எப்படியென்
றால் சங்குக்கறி சிப்பிக்கறி முதலிய இவைபோல்வனவற்றால் விலையு
யர்ந்த ரத்தாம்பரம் வடிப்பார்கள். இது புறச்சாதியார் திருச்சபை
யில் சேர்க்கப்படுவதை உபமானமாய்க் குறிக்கிறதாக ஏசாயா சொல்
லுகிறார். ஏசா. 60: 5, 6, 16. 66: 11, 12.

20. "காத்துக்கு" விஸ்தாரமான எல்லை கிடைக்குமாம். ஆதி.
9: 26.

"புயத்தையும்" இவர்கள் யுத்தத்தில் பிரியப்படுகிற கோத்திரத்
தார் என்பது யோசு. 4: 12, 13. 22: 1—4. யெகூவின் செய்கையா
லும் விளங்கும். 2 இரா. 9-அதி. 10-அதி. மேலும் 1 நா. 5: 18—22.
12: 8-லும் விளங்கும்.

21. "முதல் இடத்தை" எண். 32-ன் வெற்றி, மோசேயால் காதி
யருக்கும் ரூபேனருக்கும் முதலாவதாகச் சொல்லப்படுகிறது.

"பத்திரமாயிருக்கிறது." யுத்தத்தில் முகாண்மையாயிருந்து
முன்னணியில் செல்லும்படி கொடுத்த பங்கு என்றர்த்தம்



"முன்னணியாய் வந்து" கானான்தேசத்தை ஜெயித்து தேவ
கட்டளையை நிறைவேற்றுவதில் முகாண்மையாய் நின்ற மற்ற இஸ்ர
வேலரோடு காதியரும் முகாண்மைக்காரராயிருந்தார்கள் என்றர்த்
தம். எண். 32: 17, 21, 32. யோசு. 1: 14. 4: 12.

22. "தாணைக்குறித்து." பாஷானிலிருக்கிற பதிவிடையிலி
ருந்து சிங்கத்தைப்போல் பாய்வானும். உன். 4: 8, தாண்லாயிலை
ஜெயித்த விபரத்தைப்பற்றிய சரித்திரமில்லை. யோசு. 19: 47.

23. "நப்தலி" ஆதி. 49: 21-வியா. வாசி. இரண்டு வாக்கியமும்
பொருளில் ஒன்றுதான்.

"மேற்றிசையையும் தென்றிசையையும்". நப்தலியின் எல்லை
கானானுக்குத் தென் மேற்கிலுள்ளது. ஆகையால் இவ்வார்த்தைகள் பூமி
சாஸ்திரப் பிரிவை அல்ல, பூமி இயல்பாய் அமைந்திருக்கிற பிரிவுப்
படி பேசுகிறார் என்று காணலாம். இந்த வார்த்தைகளை, "கடலையும்
சூரிய நாட்டையும்" என்று திருப்பலாம். கலிலேயாக் கடல், மெரோம்
ஏரி, தற்காலத்து பார்எல்ஆலே ஆகிய இவற்றின் மேல் கரையை
கொஞ்சங்குறைய முழுவதுமாகவும், யோர்தான் உற்பத்தி ஸ்தானத்
துக்குச் சமீபமான நீர்வளம்பொருந்திய நாட்டையும், நப்தலி சுதந்
தரித்தான். இவன் சுதந்தரித்த சில இடங்களில், பலஸ்தீனாவில் எங்கும்
கிடையாத மகா சேர்த்தியான காட்சிக்குரிய அழகான இடங்களும்,
மிகவும் செழிப்பான பூமியுமிருந்தது. கினேசரேத் கடற்கரையை
யோசேப்புஸ் சரித்திரக்காரன்: "பூமியின் பரதீசு" என்று அழைக்
கிறார். இன்னொருவர் அதை "பலஸ்தீனாவின் தோட்டம்" என்கி
றார். நாளதில் அதற்கு "பேலாத் பெஷாரா" என்று பேர். இந்த வார்த்
தைக்கு "நற்செய்திகளின் தரை" என்றர்த்தம். மேரோம் குளம்
பக்கமாய் உஷ்டணம் மிகுதியாயிருப்பதாலும், ஆகாயகுணத்தினாலும்
மற்ற இடங்களைப் பார்க்கிலும் முந்தி இவ்விடத்தில் நல்ல பழம் பழுக்
கும். ஆ! இவ்விடம் பழத்துக்கு வர்பூறும்.
24, 25. "ஆசேரைக்குறித்து" ஆதி. 49: 20. இவனுடைய நாட்
டில் இரும்பும் வெண்கலமும் கண்டெடுக்கக்கூடிய இடங்களுண்டு. 8: 9.
26—29. மோசே, தேவவல்லமையில் சார்ந்தவராய் தான் உரை
த்தவைகளையெல்லாம் தேவனே நிறைவேற்றுவார் என்று அகமகிழ்கி
றார். நாமும் நமது மரணவேளையில் நாம் விட்டுப்போபவர்களுக்கு
இந்த வார்த்தைகளைச் சொல்லி விசுவாசத்தோடு பிரிந்தால் எத்தனை
நன்றாயிருக்கும். "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவரு
டைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்"

"மேடுகளை மிதிப்பாய்." உன் சத்துருக்களின் முக்கிய ஸ்தா
னங்களைப் பிடித்து ஆண்டுகொள்ளுவாய் என்றர்த்தம். 32: 13. ஏசா.
37: 24.

## 34. அதிகாரம்.

மோசேயின் பாக்கியமான மரணமும் அடக்கமும்.

1 "நேபோ மலை" 32: 49. வியா.

"தாண்மட்டுமுள்ள கிலேயாத் தேசம் அனைத்தையும்." இது, நியா. 18: 27-ன் தாண்லாயிஷாயிருக்கமாட்டாது. ஏனென்றால் அது கிலேயாத் தேசத்திலிருந்ததில்லை. இவ்விடத்தில் சொல்லிய தாணானது, பெரோயா நாட்டுக்கு வடக்கிலிருந்திருக்கவேண்டுமென்று தோன்றும். ஒருவேளை 2 சாமு. 24: 6, ஆதி. 14: 14. இவ்வாக்கியங்களில் சொல்லிய தாண்ஜயான் என்ற பட்டணமாயிருக்கலாம்.

2. "கடைசிச் சமுத்திரம்" மெதித்திராணியாக் கடல் 11: 24.

3. "சோவார்" சவக்கடலின் தென் அந்தத்திலிருக்கிறது. ஆதி. 19: 22.

4. "இதை உன் கண் காணும்படி செய்தேன்." லூக். 4: 5-ல் சொல்லியபடி கிறிஸ்துநாதருக்கு, "உலகத்தின் இராச்சியங்களையெல்லாம் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்தது" எப்படி இயல்புக்கு மிஞ்சி தேவாதீனமாய் நடந்ததோ, அப்படியே மோசேக்கும் இந்தக் காட்சி திவ்ய வல்லமையால் காட்டப்பட்டது. இந்தக் காட்சி மோசேக்கு மனத்தோற்ற தரிசனமாக காட்டப்பட்டதல்ல, உள்ளபடிக்கே அந்தத் தேசங்களை அவன் கண்கள் கண்டன. மரிக்கப்போகிற நியாயப்பிரமாணிக்கனுடைய பார்வைக்கு இப்போது இயல்புக்கு மிஞ்சின சத்துவம் அளிக்கப்பட்டிருக்கும்.

5. "கர்த்தருடைய வார்த்தையின்படியே" எபிரேயு பாஷையில் "கர்த்தருடைய வாயின்படியே" என்றிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு யூத ரபிமார், கர்த்தர் மோசேக்கு முத்தங்கொடுத்த பின் மரித்தான் என்று அர்த்தம் பண்ணுகிறார்கள். ஆனால் இவ்வார்த்தைகளின் அர்த்தம் தெளிவாயிருக்கிறது. (ஆதி. 45: 21) அதாவது மோசே மரித்தது அவனுடைய ஜீவ சத்துவங்கள் தளர்ந்து நின்று போனதினாலல்ல. தேவன் இட்டத் தீர்ப்பின்படிக்கும், உபா. 32: 51-ன்படி அவன் செய்த பாவத்துக்குத் தண்டனையாகவுமே மரித்தான் என்பதே கருத்தாம்.

6. "அடக்கம் பண்ணினார்" தேவன் தாமே அடக்கஞ்செய்தார்! மோசேயால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை தாம் ஒப்பி அங்கீகரிக்கிறதாகவும், அப்பிரமாணம் பூரண ஸ்ரேஷ்டத்திலிருக்கிறதென்றும் காட்டும்படிக்கு அதைக் கொடுத்த மனுஷனை இப்படி கனப்படுத்தினதினாலே காட்டினார். ஒருவருக்குமில்லாத மேலான



கண்யதை மோசேக்குக் கிடைத்தது. நியாயப்பிரமாணம் இத்தனை மேன்மையுள்ளதாயிருந்தாலும் நம்மை பரம கானானில் சேர்க்கிறது அதல்ல. பரம கானான் நமக்கு தேவனுடைய இலவசமான கிருபையால் கிடைக்கக் கூடியது. மோசே முன்னறிவித்த மேசியாவின் புண்ணியத்தால் மட்டும் நமக்குக் கிடைக்கிறது.

என் நேச ரட்சகா
அருளின் சொரூபா!
நீர்தாம் அல்லோ
பாவத்தை ஜெயித்தீர்!
சாபத்தைச் சகித்தீர்!
என்றைக்கும் ரட்சிப்பீர்
என் ரட்சகா!

"ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்." மோசேயின் பிரேதக் கல்லறையை யூதர் அவபக்திக்கேதுவான பொருளாக்காதபடி தேவன் அதை மறைத்துவைத்ததாகத் தோன்றுது. ஏனென்றால் யூதர்கள் இந்த விசேஷித்த வகையான தவறுதலுக்கு மனஞ்சாய்ந்தவர்களல்ல.

கிறிஸ்துநாதர் மறுரூபமானபோது மோசே காணப்பட்டதையும் மத். (17: 1—10), பரி. யூதா சொல்லியதையும் (யூதா. 9-வா) கவனிக்கும்போது, (தேவன் இட்ட தீர்ப்பின்படி உபா. 32: 51.) மோசே மரணமடைந்தாலும், சற்றுக்காலத்துக்குப்பின், ஏனோக் எலியா அடைந்த கதியை இவனும் அடைந்தான் என்றும்; மோசே தன் பிரேதக் கல்லறையிலிருந்து சீக்கிரமாய் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதினாலேதான் "ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறிய" வில்லை என்றும் நிதானிக்கலாம்.

9. "ஞானத்தின் ஆவி." மோசே காண்பித்த அனுபவத்துக்கடுத்த ஞானத்தை முக்கியமாய்க் குறிக்கும். ஏசா. 11: 2.

12. "ஒரு தீர்க்கதரிசியும் மி" மோசே மரித்து கொஞ்சகாலத்துக்குப் பின் இந்த வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். வெகுகாலம் சென்றபின் எழுதப்பட்டதென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. இஸ்ரவேலர் எகிப்தை விட்டபோதும், வனாந்தரத்திலும், மோசேயால் செய்யப்பட்ட அதிசய அற்புதங்களை இவ்வாக்கியங்கள் முக்கியமாய்க் குறிக்கும். தேவன் சொன்ன சாட்சியையே மறுபடி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறது. எண். 12: 6, 7. கானானில் இஸ்ரவேலர் நிலையாய்க் குடியேறின பிற்பாடு மோசேக்குப் பின்வந்த ஒருவன் இந்த வார்த்தைகளை எழுதினானென்று இயல்பாய் நினைக்கத்தக்கதாயிருக்கிறது.

உபாகமம் முற்றிற்று.

## யோசுவாவின் புஸ்தகம்.

I. இந்த ஆகமம் யோசுவாவினால் எழுதப்பட்டதென்பதைக் குறித்துப் பல தர்க்கங்களுண்டு. ஆனால் வேதசாஸ்திரிகளில் பலர் இது யோசுவாவினாலேயே எழுதப்பட்டதென்று நிச்சயிக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் நியாயங்களாவன;

1. கல்தேயப் பாஷையின் வார்த்தைகள் இதில் சொல்லப்பட்டிராதபடியால், யூத ஆகமக்காரரும், அப்போஸ்தல பிதாக்களும் இது பூர்வீகமானதென்றும், யோசுவாவினால் எழுதப்பட்டதென்றுஞ் சொல்லுகிறார்கள்.

2. 24: 26-ல் யோசுவா, நடந்தவைகளைத் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதிவைத்ததாகச் சொல்லியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது யோசுவாவின் புஸ்தகம் மோசேயின் பஞ்சாகமங்களின் தொடர்ச்சியென்றும், அது யோசுவாவினால் எழுதப்பட்டதென்றும் தோன்றுகிறது. இந்த நியாயத்தை மறுக்கிறவர்கள் 24: 26-ல் “இந்த வார்த்தைகள்” என்று சொல்லப்பட்டிருப்பது யோசுவாவின் கடைசிப் பிரசங்கத்தைக் குறிக்குமென்றும், அந்தப் பங்கு மாத்திரம் யோசுவாவினால் எழுதப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள்.

3. 24: 29—33 வாக்கியங்களில் யோசுவாவின் மரண சரித்திரமடங்கியிருக்கிறது. அதில் யோசுவாவைக் கர்த்தருடைய ஊழியக்காரன் என்று சொல்லியிருப்பதினால், அந்தப் பங்கு பிற்காலத்திலே ஒருவன் எழுதப்பட்டிருக்க, முந்தின பங்கு யோசுவாவினால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்றும், அதற்கும் முந்தின பங்குக்கும் பாஷைநடையிலிருக்கிற வித்தியாசம் உபாகமம் கடைசிப் பங்குக்கும் அதற்கு முந்தின பங்குகளுக்குமிருக்கிற வித்தியாசம்போலிருக்கிறதென்றும் அநேகர் சொல்லுகிறார்கள்.

4. 5: 1-ல் கண்டிருக்கிற சங்கதி நடந்ததாகச் சொல்லப்படுகிற தருணத்தில் இந்த ஆகமத்தை எழுதினவர் கூட இருந்தாரென்பது “நாங்கள் கடந்தோம்” என்று தன்மையிடத்தில் சொல்லியிருப்பதால் விளங்குகிறது. இதை மறுக்கிறவர்கள் சீரியாக், அரபித் திருப்புதல்களில் அவர்கள் கடந்தார்களென்று படர்க்கை இடமாய்ச் சொல்லியிருப்பதினாலே மேற்கண்ட நியாயம், ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்கிறார்கள். ஆனாலும் எபிரேயு மூலத்தில் சொல்லியிருப்பதைத்தான் நாம் அங்கீகரிக்கவேண்டும்.

5. இந்த ஆகமம் முழுவதும் மோசேயின் நியாயப்பிரமாண ஆவியைக் காட்டுகிறபடியால், மோசேக்கு விசேஷித்த ஊழியக்காரனாயிருந்த யோசுவாவினாலேயே எழுதப்பட்டிருக்கவேண்டியது.



II. இது பூர்வீகமானதும், உண்மையுள்ளதும் ஆக்கியோனிருந்த காலத்தில் எழுதப்பட்டதுமான தஸ்தவேசுகளிலிருந்து பெயர்த்து வரையப்பட்டதென்பது பின்வரும் நியாயங்களால் தெரியவரும்.

1. மோசேயின் காலத்தில் நிகழ்ந்த சங்கதிகள் எழுதப்பட்டிருக்கிற மேரையைக் கவனித்தால், முற்பிதாக்களுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைக் காட்டவும், பன்னிரு கோத்திரத்தாருக்குள் கானான்தேசம் பங்கிடப்பட்ட ஜாபிதா இருக்கவும், பிற்காலத்தில் அவர்களுக்குள் வாக்குவாதமுஞ் சச்சரவும் நேரிடாதபடி விலக்கவும், மோசேயின் ஆகமத்துக்குத் தொடர்ச்சியான மற்றொரு ஆகமமிருக்கவேண்டியதவசியமென நினைக்க இடங்கொடுக்கிறதல்லவா?

2. அந்தப்படி யோசுவா 18-ல் இஸ்ரவேலின் தளகர்த்தனாயிருந்த யோசுவா தேசத்தைச் சுற்றிப்பார்த்து, பங்கு பங்காக ஓர் புஸ்தகத்தில் எழுதும்படி கற்பித்தான் என்று வாசிக்கிறதுந்தவிர, 24: 25-ல் தேவனோடு இஸ்ரவேலர் செய்த உடன்படிக்கையை யோசுவா புதுப்பித்து அதை எழுதினானென்றும் வாசிக்கிறபடியால், அக்காலத்துக்குரிய மற்றச் சங்கதிகளுக்கும் அப்படியே உண்மையான தஸ்தவேசுகளிருந்திருக்குமென்று அபிப்பிராயங்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

3. இப்படிப்பட்ட தஸ்தவேசுகளில்லாவிட்டால் இந்த ஆகமத்தை எழுதினவர் ஒவ்வொரு கோத்திரத்தின் எல்லைத் திட்டங்களை இவ்வளவு நுட்ப திட்பமாய்க் காட்டுவது கூடிய காரியமல்ல. காலேப்புடைய சம்பாஷணைகளையும், யோசுவா 14: 6—12. பினேகாஸ் முதலிய தானபதிகள் யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள கோத்திரத்தாருடன் பேசின விபரம். மீ. யோசு. 22: 16—20. யோசுவாவின் பிரசங்கமும், அதி. 23, 24. திட்டமாய் எழுத ஏதுவிராது.

4. இவ்வித தஸ்தவேசுகளில்லாமல், இந்நூலாசிரியன், தான் சொல்லுகிற சங்கதிகள் நடந்த காலத்தில் தானிருந்ததையும், 5: 1. இராகாப் விஷயத்தில் தாம் செய்ததையும், அவள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேல் நடுவில் குடியிருக்கிறாளென்றும், 6: 25. யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா என்றும் (10: 13) சொல்வது கூடாதே.

5. கோத்திரத்தாருக்குள் தங்கள் பங்குவீத எல்லைகளைப்பற்றி, வாக்குவாதங்களும், சச்சரவுகளும், அக்காலத்தில் சம்பவியாதபடியால், அதிகாரம்பெற்ற சில தஸ்தவேசுகள் அவர்கள் வசம் இருந்திருக்குமெனத் தெரியவருகிறது.

6. சங்கதி நடந்த காலத்தில், எழுதப்பட்டதும் உண்மையுள்ளதுமான ரிக்கார்ட்டுகளில்லாதிருக்குமானால், ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்ட 13-பட்டணங்கள் பயனற்றதாய்ப் போய்விடும். ஏனென்றால்

அக்காலத்தில் ஆரோன் வம்சத்தில் அத்தனை பட்டணங்களில் குடியிருக்கத்தக்கதான ஆசாரிமாரில்லை. பிற்காலத்தாருக்கு உதவியாக இப்பட்டணங்கள் குடியேற்றப்படாமல் விடப்பட்டிருக்கிறது.

III. இவ்வாகமத்திலடங்கிய சங்கதிகள் உண்மையும், திவ்ய அதிகாரமுமுள்ளவை.

1. காலேப், பினேகாஸ், இரண்டரைக் கோத்திரத்தார், யோசுவா இவர்களுடைய சம்பாஷணைகள் வார்த்தை, வார்த்தையாக விடாமல் சொல்லப்பட்டிருக்கின்றன. சீட்டினால் தேசம் பங்கிடப்பட்ட விபரப்படி, வரிசையாய் எழுதப்பட்டிருக்கிறது. யோசு. 15—19-அதி. பூர்வ தஸ்தவேசுகளுக்கிசைவாய் ஆக்கியோன், யோசுவாவைப்பற்றி அவன் மரணம்வரைக்கும் கனமாய்ப் பேசவில்லை. ஆதலால் பூர்வ தஸ்தவேசுகளும் யோசுவாவினால் எழுதப்பட்டவையென்று நம்பத்தக்கது.

2. பூர்வ தஸ்தவேசுகள் பரம்பியிருந்த காலத்திலும் ஆக்கியோனுடைய உண்மை பரீட்சிக்கப்படவேண்டியிருந்தபொழுதும், இவ்வாகமம் உண்மையுள்ளதென்று யூதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

3. இதிலடங்கிய சரித்திர விசேஷங்களுக்கு மற்றப் பழைய ஏற்பாட்டாகமங்களிலும், புதிய ஏற்பாட்டு ஆகமங்களிலும் அத்தாட்சி உண்டு. (1) சீலோவாவிலே ஆசரிப்புக்கூடாரம் நிறுத்தப்பட்டதைக் குறித்து நியாயா. 18: 31. 1 சாமு. 1: 3, 9. 3: 21. (2) எரிகோவைத் திரும்பக் கட்டுபவன்மேற் போடப்பட்ட சாபம். 16: 24. நிறைவேறுதல் 1 இராசா 16: 34. (3) 7: 1-ல் சொல்லிய ஆகானைப்பற்றி, 1 நா. 2: 7. (4) தேசத்தை ஜெயித்துப் பங்கிட்டதைக்குறித்து, சங். 78: 54—55. (5) கானானியர் அழிக்கப்பட்டதைக்குறித்து, சங். 68: 13-16. (6) யோர்தான் பிரிந்ததைப்பற்றி, சங். 114: 1—5. ஆபகூக். 3: 11-13. (7) 5: 6-ல் கீழ்ப்படியாதவர்கள் கானானுக்குள் பிரவேசிப்பதில்லையென்பதைப்பற்றி. சங். 95: 10, 11. (8) ஏழு ஜாதியார் ஜெயிக்கப்பட்டதற்கு அப். 13: 19. (9) யோசுவா அவர்களை இளைப்பாறச் செய்யவில்லை. எபி. 4: 8. (10) எரிகோவின் மதில் விழுந்தது. எபி. 11: 30. (11) இராகாப் காக்கப்பட்டது. எபி. 11: 31. (12) இராகாப்புடைய விசுவாசம். யாக். 2: 24, 25.

4. யோசுவாவின் புஸ்தகத்தில் சொல்லப்படுகிற சங்கதிகள் அஞ்ஞானிகளுக்குள் வழங்கிவந்த பாரம்பரையாலும் உலக சரித்திரங்களாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. யோசுவாவுக்குத் தப்பி ஓடின கிரியரால் கார்தேசகரப் பட்டணத்தார் உண்டானார்கள். பெனிக்கேயருக்குள் (Hercules.) ஏர்க்கியுலசைப் பற்றிய கதை யோசுவாவின் சரித்திரத்திலிருந்து உற்பத்தியானது.



5. சமாரித்தருக்குள்ளும் யோசுவாவின் புஸ்தகமென ஒன்றிருக்கிறது.

IV. இந்தப் புஸ்தகம் 17-வருஷக்கால சரித்திரத்தை அடக்கியிருக்கிறதென்று சிலர் சொன்னபோதைக்கும், இதில் 30-வருஷக்கால சரித்திரம் அடங்கியிருக்கிறதென்பதே பொதுவான கொள்கை. இது மோசேயின் பஞ்சாகமங்களிலிருந்து ஒருக்காலும் பிரிக்கப்படாமல் அதின் தொடர்ச்சியும் நிறைவுமாயிருக்கிறது.

V. நோக்கம். சத்திய தேவன் ஆபிரகாமுக்கும், ஆதி. 13: 15. ஈசாக்குக்கும் ஆதி. 26: 4. யாக்கோபுக்கும் ஆதி. 35: 12. யோசேப்புக்கும், ஆதி. 50: 24. மோசேக்கும் யாத். 3: 8. மி. முற்பிதாக்களுக்கும், கானான்தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுப்போமென்று சொன்ன வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைக் காண்பிக்கும் நோக்கமாக எழுதப்பட்டது. இதோடு இஸ்ரவேலர் பல கஷ்டங்கள் வருத்தங்களினின்று விடுதலையாக்கப்பட்டதிலும், ஆதரிக்கப்பட்டதிலும் விளங்கிய தேவனுடைய வல்லபமும் இரக்கமுங் காட்டப்படுகிறது.

2. ஒவ்வொரு கோத்திரத்தின் பங்கு விபரத்தைக் காட்டும் நோக்கமாகவும் எழுதப்பட்டது. இந்த நோக்கமாகவே ஆக்கியோன், 23: 14-லும் 21: 45-லும், "இஸ்ரவேலுக்குக் கர்த்தர் சொன்ன நல்வார்த்தைகளிலொன்றும் தவறிப்போகவில்லை" என்று பலதரஞ் சொல்லுகிறார். ஆக்கியோன், தேசம் பங்கிடப்பட்டதைப் பற்றியுள்ள மாறுதலைக்குறித்து ஒரு குறிப்புஞ் சொல்லக் காணோம்.

VI. இந்த ஆகமம் 3-பங்காகப் பிரிக்கப்படலாம்.

க. இஸ்ரவேலரால் கானான்தேசம் பிடிபட்டது. i—xii.

இவற்றுள்...1. இஸ்ரவேலுக்கு யோசுவா தளகர்த்தனாக உறுதிப்படுத்தப்பட்டது. I.

2. எரிகோவைச் சுற்றிப் பார்க்க வேவுகாரர் அனுப்பப்பட்டது. ii.

3. யோர்தானைக் கடந்த அதிசயம். iii, iv.

4. கில்காலில் இஸ்ரவேலர் விருத்தசேதனம் அடைந்ததும், பஸ்காவை ஆசரித்ததும், சேனையின் அதிபதி தரிசனம் அளித்ததும். V.

5. எரிகோவையும். vi. ஆயியையும் பிடித்தது. vii: viii.

6. கிபியோனர் தந்திரமாய் உடன்படிக்கைசெய்தது. ix.

7. கானானிய இராஜாக்களோடு யுத்தம், சூரியன் நின்ற அற்புதம். X.

8. யாபீனும் அவன் கூட்டாளிகளுஞ் செயிக்கப்பட்டது. xi.

9. இஸ்ரவேலர் மோசேயின் கீழாக கானானின் கீழ் பங்கையும், xii: 1—6. யோசுவாவின் கீழாக, மேல் பாகத்தையும், xii. 7—24. ஜெயித்த வரலாற்றின் தொகுப்பு.

உ. செயிக்கப்பட்ட தேசம் பங்கிடப்பட்டவரலாறு. xiii—xxii.

1. கானான்தேசததின் பொதுப் பிரிவு. xiii.

2. ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குப் பங்கிடப்பட்டது. xiv—xix.

3. அடைக்கலப் பட்டணங்களும். xx. லேவியரின் பட்டணங்களும் குறிக்கப்பட்டது. xxi.

N. B. எபிரேயருக்குள் கோத்திரப் பிரிவுகளும், வமச அட்டவணைகளும் பழுதுபடாமல் காக்கப்பட்டு வந்ததைக் கவனிக்கும்போது, நம்முடைய மேசியாவின் வம்ச அட்டவணையை, ரூபிக்கப் போதுமான தெனக் காணப்படுகிறது.

4. இரண்டரைக் கோத்திரத்தார் சாட்சிக்கென்று ஓர் பலிப்பீடங் கட்டினதினாலுண்டான விசனமும், அதற்கு அவர்கள் சொன்ன நியாயமும். xxii.

ங. யோசுவாவின் அந்தியகால போதனைகளும் மரணம், அடக்கம். ம். xxiii: xxiv. இதில்

1. இஸ்ரவேலருக்குத் தேவன் செய்த நன்மைகளை யோசுவா அவர்களுக்கு ஞாபகப்படுத்தித் தேவனை ஒட்டியிருக்கும்படி ஏவுகிற விபரம். xxiii.

2. தேவனுக்கும், இஸ்ரவேலருக்குமுண்டான உடன்படிக்கையைப் புதுப்பித்தல். xxiv: 1—28.

3. யோசுவாவின் மரணமும், அடக்கமும், யோசேப்பின் எலும்புகள் புதைக்கப்பட்டதும், பிரதானஆசாரியனாகிய எலெயெசாரின் மரணமும். xxiv: 29—33.

## கேள்விகள்.

1. வேதத்திலுள்ள ஒவ்வொரு ஆகமத்தின் பெயரும், என்னென்ன முகாந்தரங்களினால் அப்படி அழைக்கப்படுகின்றன? யோசுவாவின் புஸ்தகமும் இப்பெயரால் அழைக்கப்படும் முகாந்தரங்களென்ன ?

2. இந்த ஆகமம் யோசுவாவினால் எழுதப்படவில்லையென்று சொல்லுகிறவர்கள் காட்டும் நியாயங்களென்ன ? அதற்கு என்னென்ன சமாதானஞ் சொல்லக்கூடும்.

3. இப்புஸ்தகம் நியாயாதிபதிகளின் புஸ்தகத்துக்கு முன்னதாக எழுதப்பட்டதென்று காண்பிக்கவும்.



4. இது எஸ்றாவால் எழுதப்படவில்லையென்று ரூபிக்கவும்.

5. இப்புஸ்தகத்திற்கும், மோசேயின் பஞ்சாகமங்களுக்கும் என்னென்ன விஷயங்களில் சம்பந்தமுண்டு? இப்படிப்பட்ட சம்பந்தமுடைய புதியஏற்பாட்டாகமங்களெவை ?

6. இதிலுள்ள சங்கதிகளைக் காலக்கிரமப்படி ஒழுங்குப்படுத்தி இதில் கண்டிருக்கும் அற்புத சங்கதிகளைக் காட்டவும்.

7. இதிலிருந்து மற்ற ஆகமங்களில் எடுத்துச் சொல்லப்படுகிற சங்கதிகளெவை ?

8. மோசேயின் ஆகமங்களின் உண்மையை இப்புஸ்தகத்தைக் கொண்டு ரூபிக்கவும்.

9. இதிலிருந்து புதியஏற்பாட்டில் காட்டப்படுகிற வாகியங்களெவை ? என்ன சம்பந்தம் பற்றி வருகின்றன ?

10. இந்த ஆகமத்தால் விளங்குகிற தேவஇலட்சணங்களைத் திருஷ்டாந்தப்படுத்தவும்.

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பக்திக்குரிய

## சுத்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

## ஐந்தாம் தியானம்.

வியாழன்.

பரிசுத்தமாக்குதல்.

“பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே.” எபி. 12: 14.

மனுஷரை இரக்ஷிப்பதில், கடவுளுடைய கிரியையானது, இரு
மடங்காயிருக்கிறது. முதலாவது, அவர் பாவியை இயேசுக்கிறிஸ்து
வின் புண்ணியத்தால் நீதிமானாக்குகிறார்; இரண்டாவது, பரிசுத்தாவி
யின் வல்லமையினால் பரிசுத்தமாக்குகிறார். நீதிமானாக்கப்படுதல், பரி
சுத்தமாக்கப்படுதலின் முத்திரையாயிருக்கிறதுபோல, பரிசுத்தமாக்
கப்படுதல் நீதிமானாக்கப்பட்டதின் ரூபகாரமாயுமிருக்கிறது. தேவன்
பரலோகத்திலிருக்கிற மகிமைகளுக்கு பாவிகளை ஏற்றுக்கொள்ளச்
சித்தமுள்ளவராயிருக்கிறார். அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை பெற்றுக்
கொள்ளத்தக்கதான வழிகளையும், அவர் தாமே நியமித்திருக்கிறார்.
அதற்கென்றே இயேசுக்கிறிஸ்துவையுங் கொடுத்திருக்கிறார்; ஒருவன்
கிறிஸ்துவை தன் இரட்சகர் என்று விசுவாசித்தவுடனே அவன் நீதி
மானாக்கப்படுகிறான், அதை வேறு வார்த்தைகளால் சொல்லவேண்டு

மானால், அவருடைய முன்பின் பாவங்கள் எல்லாம் தேவனுடைய ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டு, ஏசுக்கிறிஸ்துவினிமித்தமாக, தேவனுடைய பிள்ளையென்று அங்கீகரிக்கப்படுகிறான். ஆனாலும் இப்படிப்பட்ட ஒருவன் பாவமன்னிப்பையும், தேவஅங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதுந்தவிர, பரிசுத்தவானாக்கப்பட்டு பரலோகத்துக்குப் பாத்திரவானாக வேண்டியவனாகவுமிருக்கிறான். ஏனென்றால் அவன் இன்னும் தவறக்கூடியவனாயிருக்கிறான். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்கக் கூடாது. ஆகையால் பரிசுத்தாவியாகிய தேவன் இயேசுக்கிறிஸ்துவினால் சம்பாதிக்கப்பட்ட இரக்ஷிப்பின் கிரியையைக் கொண்டு நடத்தவும், நீதிமானாக்கப்பட்ட பாவியை பரிசுத்தவானாக்கி, பரிசுத்தமுள்ள தேவனுடைய. சமுகத்தில் நிற்கத்தக்கவனாகவும், இரக்கமாய் கிருபைகூருகிறார். பாவியின் இருதயத்தில் பரிசுத்தாவியால் துவக்கி முடிப்பிக்கப்பட்ட இந்தத் தொழில் "பரிசுத்தமாக்கப்படுதல்" என்று சொல்லப்படும்.

வாசிக்கிறவனே! இந்தக் கிரியை உன் இருதயத்தில் நடந்துகொண்டு வருகிறதா? அப்படியானால் நீ கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருக்கிறாயா? பழையவைகள் எல்லாம் கடந்துபோய், எல்லாம் புதிதாயினவா? ஒவ்வொருநாளும் உலகமானது உனக்கும், நீ உலகத்துக்கும் சிலுவையிலறையப்படவேண்டும். நீ உலகத்தை பாவமும், குற்றமுமுள்ளதென்று தீர்க்கப்பட்ட உலகம் என்றும், அது நிலையானதல்லவென்றும், அதில் உனக்கு பங்குவேண்டியதில்லையென்றும் எண்ணுகிறாய். ஒருகாலத்தில் உனக்கு பிரியமாயிருந்த பாவங்கள் எல்லாம் உனக்குத் துன்பத்தைக் கொடுக்கிறவைகளும், வெறுக்கப்படத்தக்கவைகளுமாகக் காண்பாய். நீ ஒவ்வொருநாளும் பாவத்தோடு போர் செய்கிறவனாகக் காணப்படுவாய். உன் சந்தோஷமானது உன்னான மனுஷனுடைய சாயலாகக் காணும். நீ தேவனோடும் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவோடும் இசைந்திருப்பது உன்னுடைய போசனமும், பானமுமாயிருக்கும். நீ நாள்தோறும் உன் இரட்சகனைப் போலாகிறாய். அவருடைய மாதிரியைத் தொடர்ந்து, அவருடைய காலடியைப் பிடித்து நடக்கும்படி நீ பிரயாசப்படும்போது நீ அவருடைய சாயலுக்கு கொண்டுவரப்படுகிறாய். தேவாவியானவர் உன்னுடைய ஒவ்வொரு யோசனைகளையும், கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்தி, உன்னுடைய இருதயத்தில் கிரியை நடப்பிக்கிறபொழுது அவர் உன்னை ஒருபோதும் பாராமல்விடார். அவருடைய ஆவியானது நம்முடைய ஆவியோடிருக்கிறது. அவருடைய ஆவி நமது ஆவியோடு சாக்ஷிகொடுக்கிறது. நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் பிள்ளைகளானால் சுதந்தரவாளிகளும், கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரவாளிகளுமாகவேயிருப்போம். அப்படியானால் நமது தற்கால உபத்திரவங்கள் நம்மில் இனி வெளிப்படும் மகிமையோடு ஒப்பிடப் பாத்திரமல்ல என்பதை நாமே நிதானித்துக்கொள்ளவேண்டியது.

ஆத்துமாவே! தேவாவியானவர் கிறிஸ்துவுக்குடையவைகளை எடுத்து வந்து, அவைகளை உன்னிடத்தில் காட்டி உன்னை மோட்சத்துக்கு வழிநடத்தி, நீ பாக்கியத்திலும், நமது இரட்சகரும் தேவனுமாகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும் வளரச்செய்தால், நீ முக்காலும் பாக்கியவானாயிருப்பாய்.

அடியார் நெஞ்சை தயவாய் சுத்தித்து ரப்பி உமக்கே,
பொருந்தும் அலங்காரமாய் படையும் தேவ ஆவியே.



## சமாசாரத்திரட்டு.

**ஆப்கானிஸ்தான்.**—இத்தேசத்தின் அமீர் அதிபத்தியத்தைச் சம்பந்தித்த உடன்படிக்கைகள் அப்டேல் ராமான் என்பவனோடு இன்னும் நடந்தேறி வருகின்றன. மேற்படி அதிபத்தியத்தை அங்கீகரிக்கும் விஷயத்தில் அவனுக்கு மனக்குறை உண்டாயிருப்பதாகக் காணப்படவில்லை. ஆகிலும் அவனோடு செய்துகொண்ட ஊடாட்டங்கள் இன்னும் தகுந்த முடிவுக்குள்ளாகவில்லை. இதினிடையில் முந்தின அமீராகிய யாக்கூப்கானின் சகோதரன் அயூப்கான் என்பவன் ஒரு பெரிய சேனைதிரட்டி, கந்தகாரிலிருந்து சுமார் 20 மைல் தூரமான கூர்க்கீ—நகுந்து என்னும் இடத்திலுள்ள பிரிட்டிஷ் தளத்தைப் பொருதினான். பிரிட்டிஷ் ராணுவத்தார் கிட்டத்தட்ட ஆயிரம்பேரைச் சாகக்கொடுத்து, அபசெயப்பட்டவர்களாய் கந்தகார் கோட்டைக்குள்ளே இடைந்து போயினர். கந்தகாரிலுள்ள சேனையை நடத்தும் தளபதிக்கு உதவியாக துணைப்படைகள் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வர்த்தமானம் நம் இஷ்டர்களுக்கு எட்டுமுன் மேற்படி பட்டாளங்கள் அங்கே போய்ச் சேர்ந்துவிடும்போலும். அயூப்கான் அப்டேல் ராமானோடு பர்க்கட்டுக்குள்ளாய் இருந்தான் என்றும், அப்டேல் ராமான் பிரிட்டிஷ் அரசாட்சியார் நேருக்கு அபகடமாய் நடந்துகொண்டான் என்றும் வதந்திகள் பிறந்ததுண்டு. ஆனால் இதை வாஸ்தவம் என்று நிச்சயிக்க ஏதுவில்லை. இவ்வாறு தோல்வி நேரிட்டபோதிலும், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் கபூலிலிருந்து தங்கள் தண்டுகளை விலக்கிவிடவும் யுத்தத்திற்கு முடிவுசெய்யவும் ஏற்கனவே ஆலோசித்திருந்த தீர்மானத்தை மாற்றவில்லை.

**இங்கிலந்து.**—உவேல்ஸ் நாட்டில் நீயுப்போர்ட்டு நகரத்துக்குச் சமீபமாய் ரிஸ்கா என்னும் இடத்து நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் பயங்கரமான விபத்து நேரிட்டு, 119 ஆட்கள் உயிர் இழந்தனர். சுரங்கத்துக்குள் அகப்பட்ட ஒருவரும் உயிரோடு தப்பவில்லை. பிரதம மந்திரியாகிய கிலாட்ஸ்தோன் துரை கடினமாய் வியாதிப்பட்டிருந்து, இப்போது ஒருவாறு சுகமடைந்திருக்கிறார். "ஐரிஷ் குழப்பப் பத்திரம்" என்னப்பட்ட சட்டம் ஒன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கீகாரம் பெற்றபின் பிரபுக்கள் சபையில் தள்ளுபடியாய்ப் போயிற்று. அயர்லாந்திலுள்ள வாரக்குடிகளுக்கு சகாயம்செய்வதே மேற்படி பத்திரத்தின் தாற்பரியம். சுருக்கமான காலத்துக்குள் பார்லிமெந்தார் பெருத்த சோலிகள் நடத்தவேண்டியிருந்தமையால், இத்தவணைக் கூட்டத்தில் அரங்கேற்றக் கருதியிருந்த பத்திரங்கள் அநேகம் இருப்பிலாயின. செப்தெம்பர்மீ ஆரம்பத்தில் பார்லிமெந்து சிறிதுகாலத்துக்கு கலைந்துபோம். முன்னொரு காலத்தில் இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த டல்ஹௌஸி பிரபுவின் பௌத்திரனாகிய டல்ஹௌஸி ஏர்ல் பிரபு (Earl Dalhousie) சிலநாளுக்குமுன் தேகவியோகமானார். இந்தியாவின் முந்தின கவர்னர் ஜெனரலாகிய லிற்றன் ஏர்ல் பிரபு இங்கிலாந்தில் போய்ச் சேர்ந்து, காருண்ணிய ராணியவர்களின் முகதரிசனை அடைந்தார்.

செப்தெம்பர்மீ நாள் 30—ஆவணிமீ 19௳முதல், புரட்டாசிமீ 16௳வரை.

| வாரம். | இங்கிலீஷ் தெய்தி. | தமிழ்த் தெய்தி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௯ | உங்கள் வழிகளையும் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள். எரே. 7: 3. |
| வி | 2 | ௨௰ | மேலானவைகளையே நாடுங்கள். கொலோ. 3: 2. (வேல் 3:27· |
| வெ | 3 | ௨௧ | என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. யோ |
| ச | 4 | ௨௨ | நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? அப. 8: 30. |
| ஞா | 5 | ௨௩ | கர்த்தர் நீதிசெய்கிற தேவன். ஏசா. 30: 18. |
| தி | 6 | ௨௪ | உமது உண்மை பெரிதாயிருக்கிறது. புல. 3: 23. |
| செ | 7 | ௨௫ | உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். சங். 95: 8. |
| பு | 8 | ௨௬ | உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். மத். 5: 44. |
| வி | 9 | ௨௭ | என் மகிமையை வேறொருவனுக்குக் கொடேன். ஏசா. 42: 8. |
| வெ | 10 | ௨௮ | இச்சியாதிருப்பாயாக. ரோ. 7: 7. |
| ச | 11 | ௨௯ | மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார். ஏசா. 40: 11. |
| ஞா | 12 | ௩௰ | தீமையை நன்மையினாலே வெல்லு. ரோ. 12: 21. |
| தி | 13 | ௩௧ | இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள். |
| செ | 14 | ௩௨ | தீமையினாலே வெல்லப்படாதே. ரோ. 12: 21. |
| பு | 15 | ௧ | உமது கட்டளைகளால் உணர்வடைகிறேன். சங். 119: 104. |
| வி | 16 | ௨ | ஒருவனும் மனுஷனைக்குறித்துமேன்மைபாராட்டாதிருப்பானாக. |
| வெ | 17 | ௩ | அவரிடத்தில் திரளான மீட்பு உண்டு. சங். 130: 7. (சங். 51: 11. |
| ச | 18 | ௪ | பரிசுத்தஆவியைஎன்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலிரும். |
| ஞா | 19 | ௫ | கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். கொ. 15: 16. |
| தி | 20 | ௬ | கர்த்தருக்குள் காத்திரு. சங். 37: 7. |
| செ | 21 | ௭ | தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டும். 1 தெச. 2: 11. |
| பு | 22 | ௮ | தீமையைவிட்டு விலகி நன்மை செய். சங். 37: 27. |
| வி | 23 | ௯ | உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். |
| வெ | 24 | ௰ | என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்யவிரும்புகிறேன். |
| ச | 25 | ௧௧ | அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள். ரோ. 11: 33. |
| ஞா | 26 | ௧௨ | உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். |
| தி | 27 | ௧௩ | கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். பிலி. 4: 4. |
| செ | 28 | ௧௪ | என் ஆத்துமா கர்த்தரில் களிகூரும்; சங். 35. 9. |
| பு | 29 | ௧௫ | தேவன் ஒளியாயிருக்கிறார். 1 யோ. 1: 5. (33: 5. |
| வி | 30 | ௧௬ | பூமி கர்த்தருடைய காருண்யத்தினால் நிறைந்திருக்கிறது. சங். |

## விசேஷ நாட்கள்.

1. அமாவாசை.
5. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 15-ம் ஞாயிறு.
12. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 16-ம் ஞாயிறு.
13. பௌர்ணமி.
19. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 17-ம் ஞாயிறு.
21. பரி-அப். மத்தேயுவின் திருநாள்.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 18-ம் ஞாயிறு.
29. பரி-மிகாவேல் முதலான சகலதேவதூதர்களின் திருநாள்.

# நற்போதகம்.

௰. அக்டோபர்மீ. ௲௮௱௮௰௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

### I. அதிகாரம்.

1. "மோசே மரித்தபின்பு." மரித்த உடனே அல்லது மோசேக்காகத் துக்கித்த நாட்கள் முடிந்தபின், யோசுவா மோசேக்குப்பின் அதிகாரியாக வரவேண்டியவனென்று முன்னமே நியமிக்கப்பட்டிருந்தபடியால், எண். 27: 18. உபா. 31. அவர் மரித்த உடனே தேவனால் அந்த உத்தியோகத்தில் உறுதிப்படுத்தப்படுகிறார்.

"கர்த்தருடைய தாசன்." மோசே என்பவர் இந்தப் பெயரால், இந்த வாக்கியத்திலும் அடுத்த வாக்கியத்திலும், உபா. 34: 5-லும் மற்ற அநேக இடங்களிலும் அழைக்கப்படுகிறார். இதற்கு முகாந்தரங்களுண்டு. (1) அவருக்குக் கனமாக, (2) தேவஊழியக்காரனாகிய அவர் தேவநாமத்தினாலே சொன்ன பிரமாணங்களுக்கும், எழுதிய ஆகமங்களுக்கும், அதிகாரங்கொடுக்க (3) இஸ்ரவேலர் மோசேயைத் தெய்வமென்றெண்ணாமல் அவருடைய ஊழியக்காரனாக மாத்திரம் மதித்து, அவரை வணங்காமலும், அவருடைய ஏற்பாடுகளையே எப்போதும் பிடிவாதமாய்க் கைக்கொள்ளாமலிருக்க, (4) இவர் தேவனுடைய வீட்டில் ஊழியக்காரனாகவும், கிறிஸ்துவோ அவ்வீட்டுக்கு மேற்பட்டவரான குமாரனாகவும், கர்த்தாவாகவும் இருக்கிறாரென்று காட்டவுமே. எபி. 3: 3—6. இப்படிச் சொல்லப்படுகிறார்.

"கர்த்தர் பேசினார்." சொப்பனத்தின் மூலமாயாவது தரிசனத்தினாலாவது, எண். 27: 21. ஊரிமினாலாவது பேசியிருக்கலாம்.

2. "இந்த யோர்தான்" உங்களுக்குச் சமீபமாய் முன்னாலேயிருக்கிற யோர்தான். இதுவே கானானில் அவர்கள் பிரவேசிக்க, இப்போதிருக்கிற தடை. "நான் கொடுக்கும் தேசத்துக்கு" முன் வாக்குத்தத்தத்தினால் அதின் சுதந்தரத்தைக் கொடுத்தார். இப்போது நேராகவே கொடுக்கிறார்.

4. "இந்த லீபனோன்" இது சீரியாவிலுள்ள விசேஷித்ததும், கானானுக்கு வடஎல்லையுமான மலை. தேவன் மனுரூபமாக வந்து அவனுக்கு அந்த மலையைச் சுட்டிக் காண்பித்த பாவனைபோலிருக்கிறது. "ஏத்தியரின் தேசம்" இவர்கள் கானானியரோ. ஆதி. 15: 16-ல் எமோரியரென்றழைக்கப்படுகிறார்கள். ஏத்தியர் மற்றவர்களிலும் பெருக்கமாகவும் அதிகப் பெலசாலிகளுமாகக் காணப்படுவதாலும், எண். 13: 33. 14: 1. 2 இராசா 7: 6. அவர்களில் சிலர் எபிரோனில் இராட்சதராயிருந்தபடியாலும், ஆதி. 25: 9, 10. 26: 34. 27: 46. கானானியரில் ஓர் வகுப்பாராகிய இவர்கள், எல்லா வகுப்பாரையும் குறிக்கும் பொதுப் பெயராக அழைக்கப்படுகிறார்கள்.

இந்த வாக்கியத்தில் கண்டிருக்கிற எல்லைப்படி இந்தத் தேசத்தை இஸ்ரவேலர் முழுதுமாகச் சுதந்தரிக்கவில்லை. (1) இஸ்ரவேலருடைய சோம்பலும், வீண் பயமும், தேவனுக்குக் கீழ்ப்படியாமையும், மற்றும் குறைவுகளினிமித்தமுமே அந்த முழுச் சுதந்தரத்தையும் அடையவில்லை. நியா. 2: 20. (2) தேசம் ஒருமிக்க அல்ல, படிப்படியாய் இஸ்ரவேலருடைய பெருக்கத்துக்கும் அவசியத்துக்குந்தக்கதாகச் சுதந்தரிக்கப்பட்டது. அக்காலத்தில் கானான்தேசம் அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. இஸ்ரவேலருடைய பாவங்களினிமித்தம் அவர்கள் குறைக்கப்பட்டுஞ் சிறைபிடிக்கப்பட்டுமிருந்தபடியால், அவர்கள் சுதந்தரத்தை விசாலிக்க அவசியங் காணப்பட்டதில்லை. (3) ஐப்பிராத் நதிவரையில், அவர்கள் சுதந்தரம் நீண்டிராவிட்டாலும் தாவீது, சாலொமோனென்ற இராஜாக்கள் காலத்தில், அவ்விடத்தார் இஸ்ரவேலருடைய ஆளுகையின் கீழ் கப்பங் கட்டினார்கள்.

5. உபா. 7: 24. 31: 6—8. ஏசாயா 43: 5. எபி. 13: 5. சத்துருக்களை மேற்கொள்ளவும், கடினக்கழுத்துள்ள இஸ்ரவேலரை ஆளவும், தேவன் மோசேயோடிருந்ததுபோல யோசுவாவோடும் இருப்பேனென்கிறார். யோசுவாவோ கானானியரைப் பார்க்கிலும் இஸ்ரவேலரைப் பற்றியே அதிகப் பயமுடையவராயிருந்தார்.

6. யோசுவாவென்பவர் தைரியமும், மனநிர்ணயமுமுள்ளவராயிருந்தாரென்றாலும், இப்போது அவருக்குப் பெரிதும், வருத்தமும் நூதனமுமான வேலை கொடுக்கப்பட்டதாலும், மோசேயோடு தம்மை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த உத்தியோகத்துக்குத் தம்மை அபாத்திரனென எண்ணினதாலும், மோசேயின் காலத்திலேயே இஸ்ரவேலர் அடங்காத முரட்டாட்டக்காரராயிருந்தபடியால், அவர்களை ஆளுவது தமக்குப் பாரமென நினைத்ததாலும், இவ்வித வாக்குத்தத்தமும் ஆறுதலுமான போதனைகள் அவருக்கு வேண்டியதவசியமே.

7. யோசுவா இஸ்ரவேலருக்குத் தளகர்த்தனுயிருந்தாலும் தேவனுக்குக் கீழ்ப்பட்டவரானதால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்



ளக் கடமைப்பட்டவரென்பதை ஞாபகப்படுத்துகிறார். உபா. 31: 7. 5: 32. 28: 14.

8. உபா. 17: 18, 19. சங். 1: 2. வேதாகமமே யாவருக்கும், சொந்த வேலைகளையும், உத்தியோக கடமைகளையுஞ் செவ்வையாய் நிறைவேற்றுவதற்குத் தகுந்த எத்தனமாயிருக்கிறபடியால், அதை வாசிக்கிறதற்கும், படிக்கிறதற்கும், போதிக்கிறதற்கும் விடாமுயற்சி வேண்டியது.

9. உபா. 31: 7, 8, 23. எரே. 1: 8.

11. "போசனபதார்த்தங்களை ஆயத்தம்பண்ணுங்கள்." இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவால் போஷிக்கப்பட்டவர்களாயிருந்தாலும் அவர்களுக்குச் சமயங் கிடைத்தபோதெல்லாம் மற்றப் போசனபதார்த்தங்களையுஞ் சாப்பிட்டார்களென்றறிகிறோம். உபா. 2: 6, 28. ஏமோரியர் தேசத்தில் இப்போது அவர்களிருக்கிறபடியால், அத்தேசத்தின் போசனத்தையுஞ் சாப்பிட்டார்கள்.

"மூன்றுநாளைக்குள்ளே" வேவுகாரர் இன்னம் அனுப்பப்படவில்லையே. அவர்கள் தப்பி 3-நாள் மலையில் ஒளித்திருந்தார்களே. 2: 22. வேவுகாரர் திரும்பிவந்து மூன்றுநாளைக்குப் பின்பல்லவோ யோர்தானைக் கடந்தார்கள். 3: 2. அப்படியிருக்க இப்போது மூன்றுநாளைக்குள்ளே யோர்தானைக் கடப்பீர்களென்று எப்படிச் சொல்லலாம்? வேவுகாரர் வந்ததின் பின்னாலேதான் யோசுவா இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பார். வேதாகம சரித்திரங்களில் முன்பின் என்கிற வித்தியாசமில்லாமல் எழுதப்பட்டிருக்கிற அநேக சங்கதிகளுண்டு. செப்துவஜென்று திருப்புதலில் "இன்னம் மூன்றுநாள்" என்றும் கல்தேயத் திருப்புதலில் "மூன்றுநாளின் முடிவில்" என்றும் வேறு திருப்புதல்களில் "மூன்றுநாளைக்குப்பின்" என்றும் கண்டிருக்கிறது. இந்த வார்த்தைகள் சொல்லப்பட்ட அன்றே வேவுகாரர் அனுப்பப்பட்டிருக்கலாம். வேவுகாரர் மூன்றாம்நாள் கடைசியில் வந்திருப்பார்கள். 3: 2. இரண்டாந்தரம் இந்தக் கட்டளை கொடுத்திருப்பார்.

13. எண். 32: 20—28.

14. "யுத்தவீரர் யாவரும்" இஸ்ரவேலர் எகிப்தியரிடத்திலிருந்தும் பறித்தும், ஆமலேக்கியர் ஏமோரியர் முதலியவர்களிடத்திலிருந்தும் பறித்தும் ... மற்றச் சாதிகளிடத்திலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டதுமான ஆயுதங்களை உடைத்தாயிருந்தார்கள்.

"அணியணியாய்" யாத். 13: 18. யுத்தவரிசையாய் ஐம்பதைம்பது பேராய் ஆயுதப்பாடானவர்கள் யுத்தத்துக்கு வரவும், மீதியானவர்கள் அவர்களுடைய சமுசாரங்கள், பிள்ளைகள், சொத்துகள் முதலியவைகளைச் சத்துருக்கள் கையினின்று காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அவ்விடம் இருக்கவும் உத்தரவுபெற்றார்கள்.

## கேள்விகள்.

1. யோசுவாவைப்பற்றித் தெரிந்த சங்கதிகளை எழுதவும். இவர் கிறிஸ்துவானவருக்கு எப்படி முன்னடையாளமானவர்?

2. யோசுவா தன் உத்தியோகத்துக்குத் தேவனால் நியமிக்கப்பட்டபோது, அவரால் பெற்ற கற்பனைகளெவை? வேறெந்தச் சமயத்திலும் தைரியப்படுத்தப்பட்டார்?

3. யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலர் அவர்களுக்கு முன்னிருந்தவர்களைப் பார்க்கிலும் நல்லவர்களென்பதற்கு இந்த ஆகமத்திலிருந்து உதாரணஞ் சொல்லவும்.

4. இந்த அதிகாரத்தினால் தேவஊழியக்காரர் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளெவை?

5. பெரிய நதி, பெரிய சமுத்திரம், லீபனோன் இவைகளைப்பற்றித் தெரிந்ததை எழுது.

6. அதிகாரிகளுக்குச் செய்யவேண்டிய கடமையைப்பற்றி என்ன படிக்கிறோம்?

7. 1: 4-ல் சொல்லப்பட்டிருக்கிற எல்லைகளுக்குட்பட்ட தேசங்களை இஸ்ரவேலர் ஒருமிக்கச் சுதந்தரித்துக்கொண்டார்களா இல்லையா? ஏன்?

8. கர்த்தர் உம்மோடிருப்பாராக. யார், யாருக்கு இப்படிச் சொல்லுகிறார்கள்? இப்படியே யார், யாரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்?

9. யோசுவாவுக்குச் சொல்லப்பட்ட ஆறுதலான வாக்கு, எக்காலத்து விசுவாசிகளுக்குஞ் செல்லத்தக்கது என்று காட்டவும்.

10. ரூபெனியர், காதியர் சேர்ந்து, கீலேயாத்தில் பங்கு கேட்ட முகாந்தரமென்ன? முந்திச் சுதந்தரம்பெற்ற அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை என்ன? அவர்கள் சகோதரருக்கு முன்பாக அணியணியாய்க் கடந்துபோனதற்கு நியாயமென்ன?

---

## II. அதிகாரம்.

1. சித்தீம். ஆபேல் சித்தீமென்றும் பெயர். எண்ணா. 33: 49.

"இரண்டு மனிதர்" மோசே செய்ததுபோல வேவுகாரர் 12-பேர் அனுப்பப்படவில்லை. ஏனென்றால் மோசேயின் காலத்தைப் பார்க்கிலும், கானானியர் இப்போது அதிகப் பயமுற்றவர்களாயிருந்தாலும்,



அந்நியரைப்பற்றி ஐயங்கொண்டவர்களாயிருந்தாலும், தேசமுழுவதையுமல்ல, எரிகோவை மாத்திரம் வேவுபார்க்கப்போனதாலுமே. யோசுவா. உபாகமம் 1-ல் ஜனங்கள் செய்ததுபோல, அவநம்பிக்கையாயல்ல, தனக்கும், தன் சேனைக்கும் தைரியமுண்டாகத்தக்கதாக, தேவனால் நேரான கட்டளைபெற்றவராய், வேவுகாரரை அனுப்பினார். அவர்கள் தேவன்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயும், தங்கள் ஜாதியாருக்காக ஜீவனை வெறுத்தவர்களாயும் யோசுவாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துபோனார்கள்.

"வேசியின் வீடு." நியாயா. 11: 1. 16: 1. 1 இராசா 3: 16. மூலபாஷையில், ஷன் என்ற பதத்தின் பொருள் போஷிக்கிற என்றிருப்பதால், வேசியென்ற வார்த்தைக்கு அன்னியரை உபசரிக்கிறவளென்று அருத்தங்கொள்ளும். இந்தக் கருத்தாகவே, யூத ரபிமார்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். அநேகருடைய அபிப்பிராயங்கள் இதற்கெதிரிடையாயிருக்கிறது. புறச்சாதியாருக்குள் வேசித்தனமானது பாவமல்லவென்றும், அது அற்பக்காரியமென்றும் எண்ணப்படுவதுண்டு. இப்போது இராகாப், பணத்துக்காகிலும் நீதுக்காகிலும் வேவுகாரரை ஏற்றுக்கொள்ளாமல் விசுவாசத்தினாலேயே அவர்களைச் சேர்த்துக்கொண்டாள். எபி. 11: 31. யாக். 2: 25.

2. சங். 127: 1. நீதிமொ. 21: 30.

4, 5. இராகாப்பென்பவள் இராஜாவுக்கும், தன் ஜனத்துக்கும் பயப்படாமல் இந்தத் தேசத்தைத் தேவன் இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுப்பாரென்ற விசுவாசத்தால் வேவுகாரரை ஒளித்துவைத்தாள். யாரென்றும் எவ்விடத்தாரென்றும் அறியாதிருந்தும் அதை விசாரிக்காமல் ஒளித்துவைத்தது ஆச்சரியம். வேவுகாரர், தன் வீட்டிலிருக்க அவர்களில்லையென்று அவள் சொன்னது குற்றமாயினும் அவளுடைய எண்ணமும், நம்பிக்கையும் நல்லது. ஆனதால் அவளுடைய குற்றம் கிருபையாக மன்னிக்கப்பட்டு அவளுடைய விசுவாசம் வியந்துகொள்ளப்பட்டதோடு பலனளிக்கவும் பட்டது. 9—13.

"துறைகள்." யோர்தானைக் கடந்துபோவதற்கு இசைந்த திட்டையான இடங்கள்.

"வாசலடைக்கப்பட்டது." சத்துருக்கள் உட்பிரவேசியாதபடிக்கும், வேவுகாரர் தப்பிப்போகாதபடிக்குமே.

9. எபிரேயப் பாஷையைப் பேசுகிற வேவுகாரர் கானான் பாஷை பேசுகிற இராகாபோடு எப்படிச் சம்பாஷிக்கக் கூடும்? உத்தரவு. (1) எபிரேயப் பாஷைக்கும், கானான் அல்லது பெனிக்கேயப் பாஷைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. கல்விமான்கள் அந்த இரண்டு பாஷைகளும், கொஞ்சங்குறைய சமமென்றும், அநேக வார்த்தைகள், இரு பாஷைக்கும் பொதுவாயிருக்கின்றனவென்றுஞ் சொல்லுகிறார்

ளள். (2) இதற்கும் இதுபோன்ற மற்ற சமயங்களுக்கும் உதவியாயிருக் கும்பொருட்டு யோசுவாவின் உத்தரவுப்படி சில எபிரேயர் கானான் பாஷை கற்றிருக்கலாம்.

"உங்களைப்பற்றிய திகில்." யாத்தி. 23: 27. 34: 24. உபா. 11: 25. 28: 7.

12. "கர்த்தர்பேரில்." மெய்யான தெய்வமாகிய உங்கள் தேவன் மேல் தேவனண்டைக்கு அவள் மனந்திரும்பினதையும், அவரையே வணங்கத் தான் தெரிந்துகொண்டதையும் இதினால் காட்டுகிறாள்.

13. "நிச்சயமான அடையாளம்." தன்னையும், தன்னுடையவர் களையும் பொதுவான சங்காரத்திலிருந்து அவர்கள் காத்துக்கொள் வார்களென்பது நிச்சயமாகவும், அவர்கள் செய்த உடன்படிக்கைக் குச் சாட்சியாகவும், தானும் மற்றவர்களும் இரட்சிக்கப்படுவதற்கு எத்தனமாகவுமிருக்கும்படி அடையாளங் கேட்டாள்.

15. இராகாப் வேவுகாரரை மதில் வழியாய் இறக்கிவிட்டது போல், பவுலப்போஸ்தலனையும், சீஷர்கள் தமஸ்குப் பட்டணத்தில் கூடைவழியாய் இறக்கிவிட்டார்கள். அப். 9: 25. அலங்கத்தின் வாசல் அடைபட்டுப்போனதாலும், இராகாபின் வீடு அதிலிருந்தபடியாலும் அவள் விசுவாசத்தோடு கூடிய இரக்கத்துடன் அவர்களைத் தப்புவித் தாள்.

16. எரிகோவுக்குச் சமீபமாய்ச் சிறு மலைகளுண்டு. அந்த மலை களில் மறைந்துகொள்ளத்தக்கதான குகைகளுமுண்டு. வேவுகாரர் அங்கே மூன்றுநாள் முழுவதுமல்ல, ஒருநாள் முழுவதும் மற்ற இரண்டு நாட்களில் குறைவாயுமிருந்திருக்கலாம். யோசு. 1: 11.

17, 18. வேவுகாரர் இறக்கிவிடப்படுமுன்னதாகவே, இராகாப் புடன் இவ்வித ஏற்பாடுசெய்திருக்கவேண்டியது. இஸ்ரவேலருடைய தலைச்சன்பிள்ளைகள் சங்கார தூதனுக்குத் தப்ப, பஸ்காஆட்டுக்குட்டி யின் இரத்தம் நிலைகளில் பூசியிருந்தது நல்ல எத்தனமானதுபோல, தன் வீட்டாருடன் இராகாப், தப்பும்படி சன்னலில் கட்டியிருந்த சிவப் புநூல் கயிறும் ஓர் எத்தனமாயிற்று.

21. வேவுகாரர் புறப்பட்டுப்போவதற்குமுன், சிவப்புநூல் கயிற் றைத் தூரத்திலிருந்தும் அவர்கள் பார்க்கத்தக்கதாகவும், செய்த உடன்படிக்கையை மறந்துபோகாதபடி செய்யவும், தனக்கு ஆறுத லும் தன் விடுதலைக்கு நிச்சயமுமான அடையாளமாயிருக்கவும் கட்டி வைத்தாள்.

22. அக்காலத்திலும் அவ்விடங்களிலுமுள்ள வழக்கப்படி, மூன் றுநாளைக்குப் போதுமான போசனம் வேவுகாரருக்குக் கொடுத்தனுப் பியிருப்பாள்.



23. எண். 13-ல் சொல்லியபடி, வேவுகாரர் ஜனங்களிடத்தில் அல்ல, யோசுவாவிடத்தில் மாத்திரம் அறிவித்தார்கள்.

## கேள்விகள்.

1. வேவுகாரர் இரகசியமாய் அனுப்பப்படவேண்டியதென்ன ?

2. இராகாபுடைய விசுவாசம் வேதத்தில் எப்படி வியந்துகொள் ளப்படுகிறது ? விசுவாசத்தை எப்படிக் காண்பித்தாள் ? அவள் விசு வாசம் பலமுள்ளதென்று எப்படி அறியலாம் ?

3. கானானியரோடு உடன்படிக்கைசெய்யக்கூடாதென்று தேவ கட்டளையிருக்க, வேவுகாரர் செய்தது சரியா ?

4. சித்தீம், எரிகோ எங்கே ? அவைகளில் நடந்த விசேஷங் களென்ன ?

5. இஸ்ரவேலரைக்குறித்துக் கானானியர் பயந்ததினால் எந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று ? இதினால் நாம் அறிந்துகொள்ளும் படிப்பினையென்ன ?

6. சிவப்புநூல் கயிற்றைக் கட்டித் தொங்கவிட்ட முகாந்தரம் யாது ? அது எதற்குக் குறிப்பாயிருக்கலாம் ?

7. மத்தேயு 1-ல் வருகிற வம்ச அட்டவணையில் சொல்லப்படுகிற ஸ்திரீகளார் ? எப்படிப்பட்டவர்கள் ? அவர்கள் பேர் அங்கே சொல் லப்படுங் காரணமென்ன ?

## III. அதிகாரம்.

1. "அதிகாலையில்" நமக்கு முதலாவது தோன்றுகிறபடி, வேவு காரர் திரும்பினபின்பல்ல, 2-ல் சொல்லியபடி 3-நாளைக்குப் பின்புள்ள காலையில் மறுநாள் காலையில் யோர்தானைக் கடந்துபோகவேண்டிய தற்காகவும், அந்த அற்புதம் யாவருக்கும் பிரத்தியட்சமாயும் ஆட்சே பிக்கக் கூடாத வகையாயுமிருக்கவும், சத்துருக்களுக்கு எத்திக்கிலும் பயமுண்டாயிருக்கவும் நோக்கமாக அங்கே இராத்தங்கினார்கள்.

2. "மூன்றுநாள் சென்றபின்பு" யோசுவா 1: 11-ல் சொல்லிய மூன்றாம்நாளின் முடிவில் அல்லது உபா. 15: 1. 14: 28. எரே. 25: 12. லூக். 2: 21. அப். 2: 21-ல் காட்டியபடி மூன்றாம்நாளின் கடைசியில் என்றும், (2) அந்த நாட்கள் முடிந்தபின்பு யோசு. 1: 11. அதிபதிகள் பொதுவாய்க் கட்டளையிட்டிருக்க இப்போது 2-ம் தரமாக விசேஷித்த வகையாய் கட்டளையிடுகிறார்கள்

3. அதிபதிகள் யோசுவாவின் நாமத்தில் அதாவது அவருடைய அதிகாரத்தின்பேரில் சனங்களுக்குக் கட்டளையிடுகிறார்கள். இங்கே லேவியர் மாத்திரமல்ல ஆசாரியரும் கூட இருந்தார்கள். எண். 4-ல் லேவியர் மாத்திரந்தான் உடன்படிக்கைப்பெட்டியைச் சுமக்கும்படி கட்டளையிருந்தாலும், விசேஷித்த சமயங்களில் யோசு. 6: 6. ஆசாரியரும் சுமக்கிறதுண்டு.

இதுவரையும் உடன்படிக்கைப்பெட்டி மேகஸ்தம்பத்தின் நடுவில் அதாவது பாளையத்தின் நடுவில் போயிற்று. இப்போது அது மறைந்துபோனதால் அது சனங்களுக்கு முன்பாகப் போகவேண்டியதாயிற்று.

4. இரண்டாயிரம் முழம் 1000 கெஜத்துக்குச் சரி. அவ்வளவு தூரம் இஸ்ரவேலர் வனாந்தரத்தில் கூடாரம் அடித்திருந்தார்கள். இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களிலிருந்து தேவனை ஆராதிக்கும்படி உடன்படிக்கைப்பெட்டிக்கு நாடோறும் விசேஷமாய் ஓய்வுநாள்தோறும் போனதால் ஓய்வுநாள் பிரயாணமாக யூதருக்குள் 2000 முழம் தூரமாக கணக்கிட்டிருக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். வேறு சிலர் இது சரியல்ல. உடன்படிக்கைப்பெட்டிக்குச் சமீபமாயிருந்தவர்களுக்கு மாத்திரம் 2000 முழம் என்றாலும் மற்றவர்களுக்கோ அதிகத் தூரமாயிருந்ததால் ஓய்வுநாள் பயணமென்பது அதிகத் தூரமான இடமென்கிறார்கள்.

உடன்படிக்கைப்பெட்டிக்கு கனமாகவும் அவர்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படியர்கவும் அதற்கு சமீபமாய் வராதபடி கற்பிக்கப்பட்டார்கள். உடன்படிக்கைப்பெட்டி அவர்களுக்கு முன்பாக ஆற்றுக்கு நடுவே போகவும், அவர்கள் கடந்துபோகுமட்டும் அங்கே நிற்கவும் அதினால் அவர்கள் சந்தோஷமாய்க் கடந்துபோவதின் நிச்சயம் தெரியும்படிக்குமே அப்படி கற்பிக்கப்பட்டார்கள்.

5. யோர்தான் நதியைக் கடந்துபோகிற தேவனுடைய பெரிய தயவை அடையப்போகிறபடியால் அதைக் கவனமாயும் வணக்கமாயும் நினைத்து மதித்துக்கொள்ளவும், அது அவர்கள் இருதயங்களிலும் ஞாபகங்களிலும் நிலைத்திருக்கும்படிக்கும் அவர்கள் சரீரத்தையும், ஆத்துமாவையும் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளும்படியாக கற்பிக்கிறார். யாத். 19: 10. லேவி. 20: 7. 1 பேது. 1: 16. எபி. 10: 22.

6. எஸ்ரு. 4: 15-ல் முன் வனாந்தரத்தில் செய்ததுபோல இஸ்ரவேலருடைய பாளையத்தின் நடுவாகவல்ல, இப்போது அவர்கள் முன்பாக ஆசாரிமார் தோள்களில் சுமந்துபோகச் சொல்லுகிறார். எண். 7-9.

7. மோசேயின் உத்தியோகத்துக்கு யோசுவாவே நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதை அறிந்து அவரைக் கனஞ்செய்யவும் அவருடைய அதிகாரத்துக்கு அடங்கவும், யோசுவா மூலமாய் கானான்தேச சுதந்



தரம் கிடைக்குமென்பதை அறியச்செய்யவும் நோக்கமாக தேவன் இந்த அற்புதம் நடக்கச்செய்தார். 1 நாளா. 29: 25. 2 நாளா. 1: 1.

9. யோசுவா உடன்படிக்கைப் பெட்டி, அல்லது ஆசரிப்புக்கூடாரம், அல்லது சபைகூடிவரும் இடத்துக்குச் சனங்களை வரும்படி செய்து, தேவனே கர்த்தரென்றும் வானத்துக்கும் பூமிக்குமுரிய சருவவல்லமையுள்ள அதிபதியென்றும், இஸ்ரவேலர்மேல் பட்சமும் கவலையுமுள்ளவரென்பதையும் அறிந்துகொள்ளும்படிக்கான அத்தாட்சியை பார்க்கப் போகிறீர்கள் என்கிறார்.

10. சாதிகளின் தேவர்கள் மந்தமும், உயிரற்றதும் புத்தியற்றதும் அசைவற்றதுமாயிருக்க, நம்முடைய தேவனோ ஜீவனும் வல்லமையும் சுறுசுறுப்புமுள்ளவரானதால், நம்மைக் காக்கவும் நமது நன்மைக்காகப் பிரயாசப்படவும் தக்கவரென்பது நிச்சயம். இப்படிப்பட்ட ஜீவனுள்ள தெய்வம் நம்மைப் பெலப்படுத்தவும் ஆசீர்வதிக்கவும் நம்முடைய நடுவிலிருக்கிறாரென்கிறார். யாத். 17: 7. உபா. 31: 17. யோசு. 22: 31.

13. சருவபூமிக்கும் ஆண்டவர், சேர்ந்த தண்ணீரைப் பிரிந்துபோகச்செய்யத்தக்கவர். ஓடுகிற தண்ணீர் சவக்கடலுக்கு நேராக ஓடின. வந்த தண்ணீர் தேசமெங்கும் சிதறிப்போகாதபடி குவியலாக நின்றன. சங். 78: 13. 114: 3.

15. "அறுப்பு நாட்கள்." இது வாற்கோதுமை அறுப்பே. கோதுமை அறுப்பு முடிந்துபோயிற்று. ரூத். 1: 22. 2 சாமு. 21: 9. அவர்கள் கடந்தவுடன் பஸ்காவை ஆசரித்தபடியால் தெரியவருகிறது. யோசு. 5: 10. அவர்கள் ஆபீப் மாதம் 14-யில் முதற் விளைச்சலின் கதிர்க் கட்டை கொண்டுவரவேண்டியிருந்தது. லேவி. 23: 10. உபா. 16: 9, 10. இந்த வாற்கோதுமை அறுப்பே காங்கையான தேசங்களில் வசந்த காலத்தின் துவக்கத்தில் ஆற்றுவெள்ளம் புறப்படும்போது துவக்கும். யோர்தான் நதி, மாரிகாலத்தில் மழைபெய்தபடியாலும், மலைகளிலுள்ள மூடுபனி இளகிப்போகிறதாலும், கரை புரண்ட வெள்ளம் வரச்செய்தது. தேவன் இந்த அற்புதம் அதிக மகிமைப்படும்படிக்கும், இஸ்ரவேலருக்கு ஆச்சரியமும், கானானியருக்குப் பயமுமுண்டாகும்படிக்கும், இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்தவுடன் சம்பூரண போசன பதார்த்தங்கள் சவதரிக்கவும் தேவன் இதுவே நல்ல காலமாகத் தெரிந்துகொண்டார். 1 நாளா. 12: 15. எரேமி. 12: 5. 49: 19.

16. மிகவும் சிறிதான ஆதாம் ஊருக்குச் சமீபமாக பிரயசியமாக அறியப்பட்ட "சார்தான்" இருந்தது. இது 1 இராசா 4: 12. 7: 46-ல் சொல்லிய இடத்துக்குச் சரியென்பாருமுண்டு, அக்காலத்தில் அது பேர்பெற்றிருந்தும் பிற்காலத்தில் மங்கின இடமாயிருக்கலாம்.

"எரிகோவுக்கு எதிரே" இங்கே வல்லமையுள்ள இராசாவும், பல சாலிகளும் யுத்தவீரருமான சனங்களும் இருந்ததுமன்றி விசேஷித்த அரணான பட்டினமாயுமிருந்ததினாலும், இஸ்ரவேலர் நீடித்ததும் இளைப்புற்றதுமான பிரயாணங்களுக்குப்பின், இளைப்பாறும்படி வசதியும் செழிப்புமுள்ள இடமானதாலும், இஸ்ரவேலரை யுத்தத்துக்கு உற்சாகப்படுத்தும்படிக்கும் அதற்கு நேரே கடந்துபோனார்கள்.

17. தண்ணீர் வற்றிப்போகும் மட்டும் கரையில் நின்று சனங்கள் முழுவதும் கடந்துபோகுமட்டும் யோர்தான் நடுவில் ஆசாரியர் நின்றார்கள். (1) மூலத்தில் "நடு" என்பது சரியான பாதி. ஆதி. 45: 6. யாத். 8: 22. யோசு. 7: 13. 10: 13. (2) ஆழமான பள்ளத்தில் என்ற கருத்தாம். இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்கிறதில், அவர்களை உற்சாகப்படுத்தி நடத்தவும், மோசம் வராதபடிக்குக் காக்கவும் நடுவில் நிற்பதுதான் தகுதியான இடம். (3) யோ. 4: 3, 8-ல் சாட்சிக்கும் அடையாளத்துக்கும் எடுக்கப்பட்ட கற்கள் ஆற்றின் மத்தியில் எடுப்பதற்குச் சரியான இடம். அதினால் ஆசாரிமார் யோர்தான் நடுவிலிருந்து மேலே ஏறிவாருங்கள் என்று கற்பிக்கப்படுகிறார்கள்.

## கேள்விகள்.

1. யோசுவா எந்தெந்தப் பெரிய காரியங்களைச் செய்வதற்கு அதிகாலையில் எழுந்தார்? அதினால் நாம் படிக்கிற படிப்பினை.

2. யோர்தானைக் கடந்த சங்கதி அற்புதமென்று ரூபியுங்கள்? தேவன் இந்த அற்புதம் நடக்கச்செய்த நோக்கமென்ன? இதினால் உண்மைபெறுகிற வாக்குத்தத்தமென்ன? இது என்னத்துக்கு நிச்சயமும் ஆறுதலுமான அடையாளமாயிருந்தது?

3. இஸ்ரவேலர், எந்தக் காலத்தில் கானானில் பிரவேசித்தார்கள்? அது வசதியான காலமென்று காட்டுங்கள்?

4. "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்." இப்படி எந்தெந்த சமயங்களில் யார் யார் ஏன் கற்பிக்கப்பட்டார்கள்? இதினால் நாமும் படிக்கிறதென்ன?

5. உடன்படிக்கைப்பெட்டி புறப்படும்போதும் நிற்கும்போதும் செய்யப்படும் செபமென்ன? இதற்குரிய மேன்மையுமென்ன?

6. தேவன் தம்மைக் கனஞ்செய்கிறவர்களைக் கனஞ்செய்கிறாரென்பதற்கு உதாரணமுண்டா?

7. யோர்தான் நதி உற்பத்திமுதல் அது விழுகிறவரையுமுள்ள விசேஷங்களை எழுதுங்கள்? இப்போது இருகரையும் புரண்டுவருகிறதற்கு முகாந்தரமென்ன? இஸ்ரவேலர் லேசாய்க் கடந்துபோகாதபடிக்கு இந்தத் தடை நேரிட்டதால் நாம் படிக்கிறதென்ன? இந்த அற்புதத்தை உறுதிப்படுத்துகிற வேதவாக்கியங்களைச் சொல்லுங்கள்? இதற்கிசைவாய் சுவிசேஷ பிரபலியத்துக்கு தேவன் செய்கிறதென்ன?



8. இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலர், ஆசாரியர், யோசுவா என்பவர்களுடைய விசுவாசத்துக்குரிய ருசுத் தலக்குங்கள்?

9. உடன்படிக்கைப்பெட்டியை ஆசாரியர் எடுத்துக்கொண்டு போன விஷயத்தில் போதகன்மார் அவர்களுக்கு எப்படி ஒத்திருக்கிறார்கள்?

10. லேவியர், ஆசாரிமாருடைய வேலைகளென்ன? தாவீது இராசாவின் காலத்தில் எத்தனை பேர்? எப்படி வகுக்கப்பட்டார்கள்?

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௨-ம் பிரிவு.

(கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி.)

(தொடர்ச்சி.)

வினா. இயேசுகிறிஸ்துவைப்பற்றி விசுவாசப்பிரமாணம் இன்னம் நமக்குப் போதிக்கிறது என்ன?

விடை. அவர் "பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டார்" என்று போதிக்கிறது.

இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே சனத்தைப் பரிசுத்தம் செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். எபி. 13: 12.

வினா. பொந்தியுபிலாத்து என்பவன் ஆர்?

விடை. யூதேயாவில் தேசாதிபதியாயிருந்த ரோமனாயே. லூக். 3: 1. அவன் கண்டிப்பும் குரூரமுமுள்ளவன்.

நம்முடைய இரட்சகர் பிறந்த காலத்தில் (ஆதி. 49: 10-ல் உரைக்கப்பட்டிருக்கிறபடியே) தேசாதிபத்தியம் யூத ஜனத்திலிருந்து நீக்கப்பட்டது என்பதைக் காண்பிக்கும்படியாகவும்;

இயேசுகிறிஸ்துவானவர் பாடுபட்ட காலத்தைக் குறிப்பாய்க் காட்டும்படியாகவும்;

கிறிஸ்துவானவர் ஒரு குற்றமுமின்றி, யூதருடைய பகையினாலே மாத்திரம் மரணாக்கினைக்குட்பட்டாரென்று பிலாத்து உறுதியாய்ச் சாட்சிகொடுத்ததினாலும் இவனுடைய பேர் விசுவாசப் பிரமாணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

வினா. நம்முடைய இரட்சகர் தேவனும் மனிதனுமாயிருக்க, எந்தத் தன்மையில் பாடுபட்டார்?

விடை. மனிததன்மையில் மட்டும் பாடுபட்டார். அவருடைய தேவதன்மை பாடுகளுக்குட்படக் கூடாது.

கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டார் 1 பே. 4: 1.

வினா. கிறிஸ்துவானவர் எப்படி பாடுபட்டார்?

விடை. தம்முடைய சரீரத்திலும் ஆத்துமத்திலும் பாடுபட்டார்.—வறுமையும் நஷ்டமும் அடைந்தார்; பசியும் தாகமும் இளைப்புமுள்ளவரானார்.—வருத்தத்தையும், கைவிடப்படுதலையும், நிந்தையையும், மரணத்தையும் உத்தரித்தார்.—மனுஷ தன்மைக்குரிய திகில்களுக்கும், பாடுகளுக்குமுள்ளானார்.—பெத்லெகேமின் பிள்ளைத்தொட்டில் முதல் கல்வாரியின் கல்லறைவரைக்கும் துக்கம் நிறைந்தவராயிருந்தார். மாட்டுத்தொழுவில் பிறந்தார். முன்னணையில் கிடத்தப்பட்டார். பிள்ளையாயிருக்கும்போது தம்முடைய நாட்டினின்று துரத்தப்பட்டார். தம்முடைய வாலிபப் பிராயத்தைத் தச்சுவேலைசெய்வதில் செலவழித்தார். தாம் புருஷனானபோது வீடில்லாதவராயிருந்தார். வனாந்தரத்தில் பிசாசானவனால் சோதிக்கப்பட்டார். அவர் போதக ஊழியத்தைச் செய்த காலத்தில் மனிதர்களாலே அன்பபரித்தப்பட்டு, இகழப்பட்டார்; அவருடைய சீஷரில் ஒருவனாகிய யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டார்; தம்மைப் பின்சென்ற மற்றவர்களால் கைவிடப்பட்டார்; பேதுருவினால் ஆணையோடு மறுதலிக்கப்பட்டார். கெத்செமனே தோட்டத்தில் சேவகரால் பிடிக்கப்பட்டார். அன்னா முன்பாகவும், பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அரண்மனையிலும் கட்டுண்டவராய் நிறுத்தப்பட்டார். அங்கேயிருந்து பிலாத்து துரையின் நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சிகள் சொல்லப்பட்டது. அநியாயமாய் குற்றவாளியாக்கப்பட்டார். வாரினால் அடிக்கப்பட்டார். முள்முடி சூட்டப்பட்டார். குட்டப்பட்டார். சிவப்பு அங்கி தரிப்பிக்கப்பட்டார். அவருடைய கையில் ஒரு கோல் கொடுக்கப்பட்டது. பரிகாசமாய் அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, நிந்தையாய் "யூதருடைய



இராஜாவே" என்று வாழ்த்தப்பட்டார். அவருடைய வஸ்திரங்கள் கழற்றப்பட்டது. அவருடைய தோல் பிய்க்கப்பட்டது. பிலாத்து துரை அவரை நீச்சமாய் கொலைபாதகருக்கு முன்பாக நிறுத்தி, "இதோ இந்த மனுஷன்" என்று சொன்னபோது, பரிதபிக்க ஒருவனுமில்லை. (சங். 69: 20.) தமது சிலுவையைச் சுமந்துகொண்டு, அந்தப் பாரச்சுமையினால் தவிப்படைந்தவராய் கொல்கதாவுக்கு நடத்தப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டார். ரோமராலே நிற்பந்தமான அடிமைகளுக்கு நியமிக்கப்பட்ட அவ்வளவு நீசமான தண்டனையைச் சகித்தார். நிர்வாணியாக்கப்பட்டார். அவருடைய கைகள் விரிக்கப்பட்டது. அவருடைய கைகளும் கால்களும் சிலுவை மரத்தோடு சேர்த்து ஆணி உருவ அடிக்கப்பட்டது. இவ்விதமாய் இரண்டு கள்ளருக்கு நடுவே உயர்த்தப்பட்டு, மனுஷருக்கும் தூதருக்கும் வேடிக்கையானார். அவருடைய முழுச் சரீரமும் உலைக்கப்பட்டது. எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. (சங். 22: 14.) இந்தத் துயரமான நிலைமையில், அவருடைய இரத்த ஓட்டம் மெதுவாய்க் குறைந்து, அவரைத் தூஷிக்கிறவர்களும் பார்த்துக்கொண்டிருக்கவே அவர் தமது சத்தத்தை உயர்த்தி முடிந்தது என்று சொல்லி, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2 கொரி. 8: 9.

மத். 4: 22. யோவா. 19: 28. 4: 6. சங். 22: 7, 12—18. ஏசா. 53: 3. லூக். 2: 16. மத். 2: 13. மாற்கு 6: 3. மத். 8: 20. 4: 1. 11: 19.

இரட்சகருடைய பாடுபடுதலின் வரலாறு. மத். 27. மாற். 15. லூக். 23. யோவா. 19-அதிகாரங்களில் அடங்கியிருக்கிறது.

வெளியாகச் சரீரத்தில் துன்பங்கள் அடைந்தது மாத்திரமல்ல, அவருடைய ஆத்துமாவும் மிகவும் அயரப்பட்டு, ஆவிக்குரிய துக்கத்தை அனுபவித்தது. ஒரு பாவியின் நிமித்தம் உண்டாகும் துக்கம் சஞ்சலத்தையும் வேதனையையும் உண்டாக்குமென்றால், இலக்ஷக்கணக்கானவர்களினிமித்தம் தேவனுடைய கரம் அவரை இருத்தும்போது அவருக்குண்டாகும் துக்கம் எவ்வளவு அதிகமாயிருக்குமென்று உணர்ந்துகொள்ளலாம்.

என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. சங். 22: 14.

துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். மத். 26: 37.

என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. மத். 26: 38.

என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர். மத். 27: 46. மாற்கு 14: 33.

அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. லூக். 22: 44.

எரேமியாத் தீர்க்கதரிசியின் மூலமாய் எருசலேம் நகரம் முறையிட்டதுபோல, நன்றிகெட்ட பாவிகளைப் பார்த்தும் அவர் சொல்லவேண்டியது.

வழியில் நடந்துபோகிற சகல சனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள். புலம்பல் 1: 12.

கிறிஸ்துநாதர் பாடுகளை முழு மனதோடு சகித்தார். அவர் தமக்கு உதவிசெய்ய ஆறு லட்சம் பேர்கொண்ட பன்னிரண்டு லேகியோன் தேவதூதரை எந்தச் சமயத்திலும் வருவிக்கலாம். இவர்களிலொருவன் சனகெரிப்பின் திரள் சேனையை எல்லாம் அழிக்கப் போதுமான பெலமுடையவன். ஆனாலும் அவர் மனிதரிடத்தில் அவ்வளவாய் அன்புகூர்ந்து அவர்களுக்காகத் தம்மைத் தேவகோபத்துக்குள்ளாக்கினார்; அவர் நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்ததினாலே மனதாரப் பாடுபட்டார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

பரிசேயர், வேதபாரகரைப்போல "எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம்" என்று சொல்லாதேயுங்கள். நாம் பாவஞ்செய்யும்பொழுதெல்லாம் அவர்களுடைய குற்றத்தில் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென்றால் நாம், "தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையிலறைந்து அவமானப்படுத்துகிறோம்." எபி. 6: 6.

வினா. கிறிஸ்துவானவர் நிச்சயமாகவே மரணமடைந்தார் என்பதற்கு என்ன நிச்சயமுண்டு? ஏனென்றால் சரீர மரணம் பாவத்திற்கு வரும் தண்டனையின் பாகமே.

விடை. கிறிஸ்து மரணமடைந்தாரென்று நூற்றுக்கதிபதி சாட்சிகொடுத்தான். மாற். 15: 45.

கிறிஸ்து மரித்ததால் அவருடைய காலெலும்புகள் முறிக்கப்படவில்லை. யோவா. 19: 33.



கிறிஸ்துவினுடைய விலா ஈட்டியினால் குத்தப்பட்டதால், அவர் இனி ஜீவனோடிருப்பது கூடாத காரியம்.

கிறிஸ்து மரித்ததால் தான் குத்தப்பட்ட விலாவிலிருந்து இரத்தமும் ஜலமும் புறப்பட்டது.

கிறிஸ்து மரித்திராவிட்டால் பிலாத்து துரை அவரை அடக்கம் செய்ய உத்தரவுகொடுக்கமாட்டான்.

கிறிஸ்து மரணம் அடைந்திராவிட்டால், அவருடைய சிநேகிதர்கள் அவருடைய தேகத்தை கல்லறைக்குள் வைக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனைவிட்டார். மாற். 15: 37. லூக்கா 23: 46. யோவா. 19: 34.

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே. 1 கொரி. 5: 8.

கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார். 1 கொரி. 15: 3, 4.

அவர் நமக்காக மரித்தாரே. 1 தெச. 5: 9, 10.

வினா. கிறிஸ்து மரணமடைந்த சமயத்தில் சம்பவித்தது என்ன?

விடை. பற்பல அதிசயங்களும், அடையாளங்களும் நடந்தன.

வினா. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நம்முடைய சபை எப்பொழுது கொண்டாடுகிறது?

விடை. பெரிய வெள்ளிக்கிழமையில் கொண்டாடுகிறது.

இந்தக் காலம் நமக்கு எவ்வளவு பயபக்தியான சமயமாயிருக்கவேண்டும். நம்முடைய ஆண்டவரைச் சிலுவையில் அறைந்த பாவங்களுக்காக நாம் எவ்வளவாய்த் துக்கித்துப் புலம்பவேண்டும்!

வினா. கிறிஸ்துவானவர் ஏன் இவ்விதமாய்ப் பாடுபட்டார்?

விடை. தம்மையே பலியிட்டு, நம்முடைய பாவங்களைத் தொலைக்கவே இப்படி பாடுபட்டார்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொ. 5: 21.

கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா. 3: 13.

கலா. 3: 22. 5: 24. 6: 14. கொலோ. 2: 14.

கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். 1 பேது. 3: 18.

வினா: நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பாடுகளுககு குறிப்பாயிருந்த சில விசேஷித்த முன்னடையாளங்களைச் சொல்லு?

விடை. ஈசாக்கு பலியிடப்பட்டது. ஆதியாகமம் 22-ம் அதிகாரத்தை
ரோ. 8: 32-உடன் ஒத்துப்பார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி. யாத்திராகமம் 12-அதிகாரத்தை
யோவா. 1: 29. 1 கொரி. 5: 7-உடன் ஒத்துப்பார்.

வெண்கலச் சர்ப்பம். எண்ணாகமம் 21: 8, 9-ஐ ஏசா. 45:
22. யோவா. 3: 14, 15-உடன் ஒத்துப்பார்.

வினா. இயேசு மரித்தபிற்பாடு அவருடைய சரீரத்துக்கு சம்பவித்த
தென்ன?

விடை. பிலாத்துவினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்ட அரிமத்தி
யா ஊராகிய யோசேப்பினாலே மரியாதையாய் அடக்கம்
செய்யப்பட்டது. மத். 27: 57—60.

அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். ஏசா.
53: 9. யோவா. 19: 39, 40.

ரோமராலே சிலுவையில் அறையப்படுகிறவர்கள், வழக்க
மாய் ஆகாயத்துப்பறவைகளுக்கு இரையாகும்படிக்கு சிலு
வைமரத்திலேயே விட்டு வைக்கப்படுவார்கள். அவர்களுடைய
சரீரங்களை இனத்தார் எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்செய்
யாதபடி காவல்வைக்கப்பட்டிருக்கும். மத். 27: 65, 66.

வினா. இயேசுக்கிறிஸ்துவைப்பற்றி அப்புறம் நாம் விசுவாசிக்கிற
தென்ன?

விடை. அவர் பாதாளத்தில் இறங்கினார் என்று விசுவாசிக்கிறோம்.

பாதாளம் அல்லது ஆதேஸ் என்பது வேதாகமத்தில் பல கருத்துக்
கொள்ளும்.

1. கல்லறை:

நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்.
யோனா 2: 2.

2. நரகவேதனையை அனுபவிக்கும் நிலைமை.

பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது தன் கண்
களை ஏறெடுத்தான். லூக். 16: 23.

கிறிஸ்துவானவர் பாதாளத்திலிறங்கினார் என்று சொல்லும்போது
மேற்சொல்லிய இரண்டு நிலைமையையும் குறியாது.

1-வது. கல்லறையைக் குறியாது. ஏனென்றால் அவர் அடக்கம்பண்
ணப்பட்டார் என்று முன்னமே சொல்லியாயிற்று.

2-வது. நரகவேதனையை அனுபவிக்கும் நிலைமையைக் குறியாது.
ஏனென்றால் கிறிஸ்துவானவருக்குத் துன்மனச்சாட்சியில்லா
ததினாலே, அதன் வேதனையும் அவருக்கிருப்பது கூடாத
காரியம்.

வினா. இந்த இடத்தில் பாதாளம் என்கிற சொல்லுக்கு அர்த்தமெ
ன்ன?



விடை. மரித்தவர்களுடைய ஆத்துமாக்கள் நன்மைதீமை அனுபவிக்
கிற மறுலோகமே. மோட்சம், நரகமாகிய இரண்டும் பொது
வாய் மறுலோகம் என்று சொல்லப்படுகின்றன. ஆனால் இவ்
விடத்தில் பாதாளம் என்பது இன்பமான மோட்சலோகத்
தையே குறிக்கும். ஏனென்றால் கிறிஸ்துநாதர் குணப்பட்ட
கள்ளனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசில்
இருப்பாய்" என்று சொல்லி; தாம் மரிக்கிற சமயத்தில் தேவ
னை நோக்கி "பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை
ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லியிருப்பதினால் மோட்ச
லோகத்தில் சேர்ந்தார் என்பது நிச்சயம். லூக். 23: 43, 46.

வினா. அப்படியானால் கிறிஸ்துநாதர் பாதாளத்தில் இறங்கினார் என்
பதற்கு அர்த்தமென்ன?

விடை. மரணத்தினாலே அவருடைய ஆத்துமாவும், சரீரமும் பிரிந்து
போனபொழுது, அவருடைய ஆத்துமா மறுலோகத்தில்
சேர்ந்தது. அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்ட
து. இப்படி மற்ற மனுஷருக்கு உண்டாகிறதுபோலவே அவ
ருக்கும் உண்டாயிற்று என்பதே அர்த்தம்.

என் ஆத்துமாவை பாதாளத்திலே விடீர். சங். 16: 10. அப்.
2: 27, 31.

தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டவிழ்த்து,
அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்
கூடாதிருந்தது. அப். 2: 24.

பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார். எபே. 4: 9.

வினா. கிறிஸ்துநாதர் ஏன் இப்படி பாதாளத்தில் இறங்கினார்?

விடை. மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்
தினாலே அழிக்கும்படிக்கே. எபிரே. 2: 14.

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்றதாகவும்
பக்திக்குரிய

## சத்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

## ஆறாம் தியானம்.

வெள்ளி.

நன்றியறிதல்.

"என் ஆத்துமாவே! கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல
உபகாரங்களையும் மறவாதே." சங். 103: 2.

நன்றியறிதலுள்ள இருதயத்தின் ஞாபகாணிக்கை, புஷ்பங்களின்
சுகந்தமான வாசனையைப்போலிருக்கிறது. நன்றியறிதலானது, பரி

சுத்தஆவியாகிய பனியினால் நீர்ப்பாய்ச்சப்பட்டு போஷிப்பிக்கப்படுகிற எல்லா ஆவியின் கனிகளிலும், முக்கியமான பாகமாயிருக்கிறது. அது எல்லா கிறிஸ்தவ அனுபவங்களையும், புதுப்பித்து சிறப்பிக்கிறது. அது கிறிஸ்தவனுடைய ச்சாயலின் தொனியும், அவனுடைய கண்களின் ஒளியுமாயிருக்கிறது. அது பரலோக தேவனுக்கு முன்பாக படைக்கப்படும்பொழுது, அதுவே இருதயத்தின் முயற்சிக்கு ஏற்ற பலனாகவிருக்கிறது. அது நம்மை அன்போடு பலமான கட்டுகளால் இணைக்கிறது. வரண்ட மலை, ஆகாயத்திலுள்ள பனிகளையெல்லாம் பெற்று, அவைகளைத் தன் பக்கங்களில் செழிப்பான சிறு ஓடைகளாக வடியச்செய்கிறதுபோல, ஒரு கிறிஸ்தவனுடைய ஆவலுள்ள இருதயமானது, பரலோக ஆசீர்வாதங்களை மதுரமான நீரூற்றுகளிலிருந்து பெற்று, அவைகளை தேவனுடைய மடியில் திரும்பவும் ஊற்றுகிறது.

ஆனால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் நடுவாக ஓடுகிற இந்த ஆறு, சாத்தானுக்கு எப்படித் தெரியும்? அவன் அதினுடைய தண்ணீர்களைக் கருப்பாக்கி, அதன் ஓட்டத்தை அணைபோட்டுத் தடுக்கப் பிரயாசப்படுவது எப்படி? அவன் நன்றியறிதலில்லாத உலகத்தில் எவ்வளவாய் சித்தியடைந்திருக்கிறான் என்று பார்?

ஆ! தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயத்தில் நன்றியறிதலில்லாத சுபாபத்தை சுமந்துகொண்டு திரிவது சத்தியமார்க்கத்தின் ஆவியானவர் தம்முடைய செட்டைகளை அங்கே பரப்பவில்லை என்பதைக் காட்டுகிற ஒரு கெட்ட குறிப்பாயிருக்கிறது. என்னுடைய சந்தோஷத்துக்காக தேவன் இவ்வுலகத்தை எவ்விதமாய்ச் சிருஷ்டித்திருக்கிறார் என்று நான் கவனிக்கும்போது, நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? தேவன் என்னுடைய பாவங்களை, எவ்வளவு காலமாய்ச் சகித்திருக்கிறார் என்று நான் பார்க்கும்போதும், அவர் கோபிக்கத் தாமதமாயும், மன்னிக்க ஆயத்தமாயும் இருக்கிறார் என்று எனக்குச் சொல்லப்படும்போதும், நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? இந்த உலகத்தில் என்னுடைய ஜீவனை அவர் பராமரித்து வருகிற அவருடைய அதிசயத்தை நான் நினைவுகூரும்போது, நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? "வழக்காடுவோம் வாருங்கள், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறபோதும், "தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு தேவன் அவரைத் தந்தருள இவ்வளவாய் உலகத்தாரில் அன்புகூர்ந்தார்" என்பதை நான் வாசிக்கும்போதும், இரட்சகர் என்னுடையவர் என்று உணரும்போதும், தேவன் கிறிஸ்து ஏசுவின்மூலமாய் எல்லாவற்றையும் இலவசமாய் அருளுகிறார் என்று எனகுச் சொல்லப்படும்போதும், நான் நன்றியற்றவனாயிருப்பேனோ? ஆத்துமாவே! உன்மேலுள்ள தேவனுடைய இவ்வளவு அதிசயமான அன்பு, சொல்லமுடியாத தயை நீ அசதியாயிருக்கவும், குளிர்ந்துபோகவும் ஒட்டாதிருப்பதாக. தாவீதின் சங்கீதங்களில் சிலவற்றைப் பிடித்துக்கொள். "கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாகி மீட்கப்பட்டவர்கள் அப்படி சொல்லக்கடவர்கள்." "ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி" "நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்."



"என்னுடைய வாய் தேவனுடைய ஸ்துதியைச் சொல்வதாக, எல்லா மாம்சமும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் ஸ்தோத்திரிப்பார்களாக. அப்பொழுது காலையில் அவருடைய தயவையும் இரவில் அவருடைய உண்மையையும் காட்டும்படியாக, நீ ஸ்தோத்திரங்களைச் செலுத்துவது எத்தனை நன்று என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள்வாய்.

நல்ல யோசிப்பாய் விழித்து, தெளிவாகென் நெஞ்சமே!
தேவஅன்பையே சிந்தித்து, ஸ்தோத்திரி என் உள்ளமே!
இந்த நாளில் கர்த்தர் உன்னைக் காத்தாரே.

---

## சமாசாரத்திரட்டு.

**ஆப்கானிஸ்தான்.**—சர் பிரடிரிக் ராபெர்ட்ஸ் தளபதியின் சேனையொன்று சென்ற ஆகஸ்துமீ 31உ காந்தகாரில் சேர்ந்தது. காந்தகாரை முற்றுகைசெய்துகொண்டிருந்த அயூப்கான் பாபாவாலியென்ற இடத்துக்கு தன் சேனையோடு விலகிப்போயிருந்ததினால், பிரிட்டிஷ் தளத்துக்கும் அயூப்கான் சேனைக்கும் அந்த இடத்தில் யுத்தம் நடந்தது. அயூப்கான் சேனை முற்றிலும் அபஜெயப்பட்டு சிதறி புறங்காட்டியோடி விட்டது. அயூப்கானின் பாளயமும் 32-பீரங்கிகளும் பிரிட்டிஷ் தளத்தால் பிடிபட்டது. சில சர்தார்களுடனும் குதிரைவீரருடனும் அயூப்கான் ஈராத் நகரத்துக்குத் திரும்பிப்போய்விட்டான். ஆப்கானின் புதிய அமீராகிய அப்துல் ரைமான் கபூலில் ஸ்தாபகமானதினால் பிரிட்டிஷ் தளங்கள் அந்நகரத்திலிருந்து புறப்பட்டு விட்டன. காந்தகாரிலுள்ள பிரிட்டிஷ் தளங்களும் சீக்கிரம் அகன்றுவிடுமென்று தோன்றுகிறது.

**இங்கிலந்து**—பிரதம மந்திரியாகிய கிளாட்ஸ்டன் துரை மோசகரமான வியாதியாயிருந்து இப்போது நல்ல சௌக்கியம் அடைந்திருக்கிறார். அவருடைய சுகசேமத்தைவிட்டு இங்கிலந்து முழுவதும், அதிக கரிசனமாயிருந்ததென்பதற்கு அவர் சுகவீனமாயிருக்கும்போது அவர் சுகத்தை விசாரிக்கும் கடிதங்கள் தினம் ஒன்றுக்கு ஆயிரம் வீதம் தேசத்தின் நாலுதிசைகளிலுமிருந்து வந்துகொண்டேயிருந்தது என்று திஷ்டாந்தரமாயிருக்கிறது. செப்டம்பர்மீ 7உ பார்லிமெந்து சபை கலைந்தது. நாசகரமான கேணிவிபத்துகளும் இருப்புப்பாதை விக்கினங்களும் பின்னும் பல இடங்களில் நடந்தது.

**ஸ்பானியா.**—ஸ்பானியாதேசத்து அரசனின் தேவியாகிய கிறிஸ்தீனா ராணி செப்றெம்பர்மீ 11உ ஒரு புதல்வியைப் பிரசவித்தார்.

---

அக்டோபர்மீ நாள் 31-புரட்டாசிமீ 17உ முதல், ஐப்பசிமீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | கஎ | மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். |
| ச | 2 | கஅ | உமது முகத்தை ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணும். |
| ஞா | 3 | கசு | நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1 யோ. 3:4. |
| தி | 4 | உ0 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள். 1 கொ. 16:13. |
| செ | 5 | உக | வாயின் தாறுமாறுகளை உன்னைவிட்டு அகற்று. நீதி. 4:24. |
| பு | 6 | உஉ | எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 1 தெச. 5:15. |
| வி | 7 | உங | நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும். நீதி. 10.7. |
| வெ | 8 | உச | மேட்டிமைச் சிந்தையாயிராதே. ரோ. 11:20. |
| ச | 9 | உரு | வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு. பிர. 7:14. |
| ஞா | 10 | உசு | கர்த்தரை நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான். |
| தி | 11 | உஎ | விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். ரோ. 1:17. |
| செ | 12 | உஅ | தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. 1 தீமோ. 2:5. |
| பு | 13 | உகூ | உங்கள் பக்தி, காலையில் காணும் மேகத்தைப்போலானது. ஓசி. 6: |
| வி | 14 | ங0 | நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசிக்கிறாயா? யோ. 9:35. |
| வெ | 15 | க | உங்கள் உள்ளத்திலே ஆவியை வைப்பேன். எசே. 36:27. |
| ச | 16 | உ | விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடு. 1 தீமோ. 6:12. |
| ஞா | 17 | ங | தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். ரோ. 4:20. |
| தி | 18 | ச | நித்தியஜீவனைப் பற்றிக்கொள். 1 தீமோ. 6:12. (97:10. |
| செ | 19 | ரு | கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுங்கள். சங். |
| பு | 20 | சு | உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ரோ. 12:16. |
| வி | 21 | எ | கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழாமலிருப்பார். சங். 94:14. |
| வெ | 22 | அ | ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். ரோ. 13:12. |
| ச | 23 | கூ | மாம்ச சிந்தை மரணம். ரோ. 8:6. |
| ஞா | 24 | க0 | அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. 1 கொ. 13:4. |
| தி | 25 | கக | பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள். சங். 2:11. |
| செ | 26 | கஉ | ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். ரோ. 12:12. |
| பு | 27 | கங | கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதல் பெருகுகிறது. 2 கொ. 1:5. |
| வி | 28 | கச | இது நீங்கள் இளைப்பாறுகிற இடம் அல்ல. மீகா. 2:10. (7:10. |
| வெ | 29 | கரு | தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்கும். 2 கொ. |
| ச | 30 | கசு | தேவனே, நன்மையுண்டாக என்னை நினைத்தருளும். நெகே. 5:19. |
| ஞா | 31 | கஎ | பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. 1 யோ. 2:2. |

## விசேஷ நாட்கள்.

3. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 19-ம் ஞாயிறு.
4. அமாவாசை.
10. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 20-ம் ஞாயிறு.
17. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 21-ம் ஞாயிறு.
18. பரி. லூக்கா சுவி-திருநாள். (பௌரணமி.)
24. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 22-ம் ஞாயிறு.
28. பரி. சீமோன், யூதா அப்-திருநாள்.
31. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 23-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௱க. நவம்பர்மீ. ௲௮௱௯௰.

## யோசுவாவின் புஸ்தகம்.

### IV. அதிகாரம்.

1. இப்படியே முன் கற்பிக்கப்பட்டிருந்தது. யோசுவா 3:12. இப்போது விபரமாகத் திரும்பவுஞ் சொல்லப்படுகிறது.

2. அற்புத சங்கதிக்குச் சாட்சியாகவும், நிச்சய அடையாளமாகவும், எல்லாக் கோத்திரத்தாருக்கும் தெரியும்படியாகவும், கோத்திரத்துக்கு ஒருவராக 12-பேர் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

3. கில்காலில். 19, 20.

5. 12-கற்களை ஆற்றின் நடுவிலிருந்தெடுக்கும்படி குறிக்கப்பட்டவர்கள் ஆற்றைக் கடந்துபோய்த் திரும்பி உடன்படிக்கைப்பெட்டி நிற்கிற இடத்துக்கு வந்தார்கள்.

6. யாத்தி. 12:26. 13:14. உபா. 6:20. சங். 44:1. 78:3—6.

7. யாத்தி. 12:14. எண். 16:40.

9. "யோர்தான் நடுவில்." யோசு. 3:17. யோர்தானின் தண்ணீரால் அதின் நடுவிலுள்ள கற்கள் காணப்படாதிருக்க, எப்படி அவை இந்த அற்புத சங்கதிக்கடையாளமாயிருக்கும்? இவை 12-பேர் தங்கள் தோளிலெடுத்துப்போன கற்கள்போலல்ல, (வா. 5.) அவைகளிலும் அதிகப் பெரிதாயும், இரண்டு வரிசைகளில் ஒன்றின் மேலொன்றாய் வைக்கப்பட்டவைகளாயும் வெள்ளம் வற்றிப்போகுங்காலத்தில், எல்லாராலும் காணப்படக்கூடியதாயுமிருக்கும். அல்லது யோர்தானின் தண்ணீர் அதிகச் சுத்தமும், தெளிவுமானபடியாலும் அந்த நதி சாதாரணமாய் அகலமில்லாதபடியாலும், கரையில் நிற்கிறவர்கள் அவைகளை இலேசாய்ப் பார்க்கலாம். படகுகளால் ஆற்றைக் கடக்கிறவர்கள் சற்றுவிலகியிருந்து தண்ணீர் இளைச்சலாய் ஓடுகிறதாலும் அதை இலேசாய்க் காணக்கூடியது தானே.

“ அவை இந்நாள்வரைக்குமிருக்கின்றன. இது சம்பவித்து 20-வருஷத்துக்குப்பின் இதை எழுதின யோசுவாவினாலாவது, இதிலும் மோசேயின் ஆகமங்களிலும் இப்படி வருகிற வாக்கியங்கள் யூதச் சபையாரால் திவ்ய அதிகாரம்பெற்றவர்களென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பரிசுத்த மனுஷராலாவது இப்படிச் சொல்லப்பட்டிருக்கவேண்டியது.

10. ஜனங்கள் பயத்தினாலாவது, விசுவாசப் பெலவீனத்தாலாவது துரிதமாய்க் கடந்துபோக, ஆசாரியரோ தங்கள் மனதில் திடச்சித்தமுடையவர்களாய் அசையாமல் நின்றார்கள்.

12. எண். 32: 20—28.

13. “ கர்த்தருக்கு முன்பாக” யோர்தான் நதியைக் கடந்துபோது உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக, அல்லது தங்கள் சகோதரருக்குச் செய்த வாக்குகளையும் உடன்படிக்கைகளையும் கைக்கொள்கிறார்களோ அல்லவோ என்று கவனித்துவந்த தேவசமுகத்துக்கு முன்பாக.

16. ஆசாரிமார் ஆற்றின் நடுவில் அல்லது ஆழமும் பள்ளமுமான இடத்தில் நின்றதால் கரையேறி வரும்படி கற்பனைபெற்றார்கள். “ கரையேறி” என்ற வார்த்தை இதிலும் மற்ற வாக்கியங்களிலும் 3-தடவை சொல்லப்படுகிறது.

17. ஆசாரிமார் யோசுவாவைக்கொண்டு தேவன் கரையேறி வரச் சொல்லுமளவும் பொறுமையாய் நின்றார்கள்.

18. நின்ற தண்ணீர் தன் குவியலிலிருந்து முன்போல இயல்பான படி ஓடிப்போயிற்று.

19. எகிப்திலிருந்து புறப்பட்டு இப்போது 5-நாள் குறைய 40-வருஷமாயிற்று. புறப்பட்டது நீசான் மாதம் 15௳. வந்து சேர்ந்தது நீசான் மாதம் 10௳. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் வெகு திட்டமாய் இருந்திருக்கிறதாக இதினால் தெரிய வருகிறது. நியாயப்பிரமாணத்தின்படி, பஸ்காப்பண்டிகை கொண்டாட 4-நாளுக்குமுன் ஆட்டுக்குட்டியை ஆயத்தம்பண்ணவேண்டியதால், வந்துசேர்ந்தது சரியான காலமே.

20. 12-கற்களையும் அஸ்திபாரமாய், ஒழுங்காய், ஷெ அற்புத சங்கதியை நினைவுகூரும்படி சிறு தூண்களாய் நிறுத்தினார்கள்.

23. “ நமக்கு முன்பாக” சிவந்த சமுத்திரத்தைக் கடந்தவர்களில் இப்போது உயிரோடிருக்கிறவர்கள் யோசுவாவும், காலேப்புமே. மற்ற இஸ்ரவேலரோ தங்கள் பெற்றோரின் இடுப்பிலிருந்தபடியால் தன்மையிடமாகச் சொல்லுகிறார்.

24. 1 இராசா 8: 43, 48. யாத். 15: 16. 1 நாளா. 29: 12. உபா. 6: 2. சங். 89: 7. எரேமி. 10: 7.



## கேள்விகள்.

1. இரண்டரைக் கோத்திரத்தார் யோர்தானைக் கடக்குமுன் இலக்கம் பார்க்கப்பட்டதில் வாலிபராய் யுத்தஞ்செய்யத்தக்கவர்கள் ரூபேனியரில் 43,730. காதியரில் 40,500. மனாசே பாதியில் 20,000, 30,000 வரையிருக்கும். யுத்தத்துக்கு எல்லா ஆண்களும் போகவேண்டுமென்று கட்டளையிட்டிருக்க, லட்சத்துக்கு அதிகமான இவர்களில் 40,000 பேர் மாத்திரம் யுத்தத்துக்குப் போனதாகச் சொல்லியிருக்கிறதே, இது குற்றமல்லவென்று காண்பிக்கவும்.

2. தேவன் செய்த நன்மைகளுக்கு நன்றியறிதலாக யூதர்கள் வழங்கிவந்த முறைமைகளெவை? ஒவ்வொன்றுக்கும் திஷ்டாந்தஞ் சொல்க.

3. இஸ்ரவேலர் யோர்தானைத் துரிதமாய்க் கடந்துபோனதற்கு முகாந்தரங்களெவை?

4. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையைக்குறித்து என்ன படிக்கிறோம்?

5. இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தையும் யோர்தானையும் அதிசயமாய்க் கடந்துபோகச் செய்ததினால் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியதென்ன?

6. அற்புதமாவதென்ன? அதற்கிருக்கவேண்டிய குறிப்புகளெவை?

7. யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புவதற்கு உனக்கென்ன வந்தது? இதற்கு அது சொல்லவேண்டிய மறுமொழி என்ன?

8. உடன்படிக்கைப்பெட்டியைப் பற்றிய சரித்திரத்தை எழுதுக! அது இஸ்ரவேல் சபையின் நடுவிலிருக்குமளவும் அவர்களுக்கு மேன்மையும் அது இல்லாதபோது அவர்களுக்கு கஷ்டமும் நேரிட்டதென்பதைத் திருஷ்டாந்தத்தால் காண்பிக்க. அதினால் நமக்குப் படிப்பினையென்ன?

9. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்த காலமெது? அது ஏற்ற சமயந்தானென்று எப்படி அறியலாம்?

10. இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்த இடத்துக்குப் பேர் என்ன? புதியஏற்பாட்டில் அங்கே நடந்த விசேஷமென்ன?

---

## V. அதிகாரம்.

1. ஏமோரியரும் கானானியரும் தொகையிலும் வல்லமையிலும் தைரியத்திலும் மற்ற வகுப்பாருக்கு மிஞ்சினவர்களாயிருந்தபடியால்

எல்லா வகுப்பாருக்கும் பொதுவாக அவர்கள் பெயர் சொல்லப்படுகிறது. யோர்தானின் கீழ்கரையிலுள்ள எமோரியர் மோசேயின் காலத்திலேயே இஸ்ரவேலரால் ஜெயிக்கப்பட்டுப்போனதால் அவர்களினின்று வேறுக்கும்படி மேல்கரையிலிருந்த எமோரியரென்று கண்டிருக்கிறது.

"அவர்கள் இருதயங் கரைந்து" அவர்கள் தைரியமிழந்து, இஸ்ரவேலருக்கு எதிர்த்து நிற்கத் துணிவுகொள்ளவில்லை. இது தேவசெயல். இஸ்ரவேலர் விருத்தசேதனம், பஸ்கா என்னும் சாக்கிரமெந்துக்களை அமரிக்கையாய் அனுசரிக்கவும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் விருத்தசேதனமில்லாத ஜனங்களால் அசுசிப்பட்டுப்போனதால், அந்தக் கனமும் வருத்தமுமான வேலைக்கு ஜனங்கள் ஆயத்தப்படுத்தவும் ஏதுவாயிருக்கும்பொருட்டு இது தேவனால் நடந்தது.

2. "அக்காலத்திலே" இஸ்ரவேலர் கில்காலுக்கு நீசான் மாதம் 10உ வந்தார்கள். மறுநாள் காலையில் விருத்தசேதனம்பெற்றார்கள். 11உ காலைமுதல் 13உவரை காயங்களால் வருத்தமடைந்திருப்பார்கள். 14உ சுகமாகி அன்றிரவு பஸ்காவை ஆசரித்தார்கள்.

"இரண்டாம் விசை இஸ்ரவேலரை விருத்தசேதனம்பண்ணு." இதில் சொல்லப்பட்டிருக்கிற ஜனங்கள் முன்னொரு தடவை யோசுவாவினாலாவது, மற்ற யாராலாவது விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களென்பது கருத்தல்ல. ஏனெனில், அவர்கள் முன் விருத்தசேதனம் பெற்றவர்களல்லவென்று வா. 7-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் ஜனங்களைக் குறித்த மொத்தக் கருத்தாயிருக்கிறது. அவர்களிலொரு பங்கு முன்னமே விருத்தசேதனம் பெற்றிருந்தார்கள். ஆகையால் மறு பங்கு இப்போது விருத்தசேதனம்பெற்றதை இரண்டாம் விசை என்று முந்தின சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறது. முன்னமே விருத்தசேதனம்பெற்றவர்கள், (1) ஒருவேளை எகிப்தில் பெற்றிருப்பார்கள். எகிப்தியருக்குப் பயந்து, எகிப்திலே இந்த முறையைச் செய்யாமல் அநேகர் அசட்டையாய் விட்டிருப்பார்கள். மோசே இதைக்குறித்துத் தனக்கு நேரிட்ட சங்கடத்தை ஞாபகமாய் வைத்து, அவர்களை எச்சரித்திருனும், எகிப்தியர்மேல் வாதைகள் வந்தபோது இவர்களுக்கு நல்ல சமயம் இருந்ததாலும் அவர்களில் சிலர் உடனே விருத்தசேதனம்பெற்றிருப்பார்கள். (2) சீனாய்ப் பர்வதத்தண்டையில் அவர்கள் பஸ்காவை ஆசரிக்குமுன் விருத்தசேதனம்பண்ணியிருப்பார்கள். எண். 9. ஏனெனில் விருத்தசேதனம் இல்லாதவன் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. யாத். 22: 48. ஆகையால் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட முதலாம் வருஷத்தில் பிறந்தவர்களும், எகிப்திலிருந்து புறப்பட்ட குழந்தைகளில் தப்பித் தவறி விருத்தசேதனம் பெறாதிருந்தவர்களும் இப்பொழுது விருத்தசேதனம்பெற்றார்கள்.



ஆக்ஷேபனை 1. அப்படியானால் 5-வா-ல் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் விருத்தசேதனம்பெற்றார்களென்று சொல்லியிருக்கிறதே, அதற்குப் போக்கென்ன?

சமாதானம். இது நிசமாயிருக்கலாம். ஆகிலும் அவர்கள் எங்கே, எப்போது விருத்தசேதனம்பெற்றார்களென்று இதில் காட்டவில்லையே. மேலும் அவர்களில் ஒருவரும் எகிப்தில் வாதையுண்டான காலத்திலாவது சீனாய் மலையிலாவது விருத்தசேதனம்பெறவில்லையென்று மறுக்கவுமில்லையே. (2) "எல்லாரும்" என்ற வார்த்தை மிகுதியானவர்களைக் குறிக்கிற கருத்தாக அப்படி வழங்கப்படுகிறது.

ஆக்ஷேபனை. 2. 5-வா-ல் வனாந்தரத்தில் பிறந்த சகல ஜனங்களும் விருத்தசேதனம்பெறவில்லையென்று சொல்லியிருக்கிறதே அதற்கு நியாயமென்ன?

சமா.—(1) சகல ஜனங்களும் என்பது இதிலும் மிகுதியானவர்களென்ற கருத்தைக் கொள்ளுகிறதென்று அறியவேண்டும். (2) வழியில், அதாவது அவர்கள் பிரயாணஞ்செய்கையில் பிறந்தவர்கள் மாத்திரம் விருத்தசேதனம்பண்ணப்படவில்லையென்று 5-வா-ல் சொல்லியிருக்கிறதுபோல 7-லும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. ஆகையால் அவர்கள் விருத்தசேதனம்பெறாத முகாந்தரம் பிரயாணகாலத்தில் பிறந்ததுதானென்று யோசுவா நியாயஞ்சொல்லியிருக்கிறதுபோலிருக்கிறது. ஆனால் இஸ்ரவேலர் சீனாய் மலையண்டையில் பாளயமிறங்கியிருந்தபடியால், அதற்குமுன் பிறந்தவர்களை ஜனங்கள் எப்படியும் விருத்தசேதனம்பண்ணியிருப்பார்கள். அவர்கள் அசட்டையாயிருந்தாலும், மோசேயே அவர்களை ஏவியிருப்பார்.

ஆக்ஷேபனை. 3. வா. 6-ல் ஜனங்கள் 40-வருஷமாய் வனாந்தரத்தில் விருத்தசேதனம்செய்யாமலிருந்தார்களென்று சொல்லியிருக்கிறதே.

சமா.—(1) 40-வருஷமென்பதை ஏறக்குறைய 40-வருஷமென்று கருத்துக்கொள்ளவேண்டும். எண். 14: 33, 34. 32: 13. (2) ஆபிரகாமுக்கு நம்மால் ஏற்படுத்தப்பட்ட விருத்தசேதனம் அவன் சந்ததியாரால் அநுசரிக்கப்பட்டு வந்து கடைசியாக உங்களால் நின்றுபோயிற்று. நம்முடைய உடன்படிக்கைக்கடையாளமாகிய இந்த முத்திரையை நீங்கள் முழுவதும் இழந்துவிட்டீர்களே. ஆகையால் இந்த முறையை மறுபடியும் புதுப்பிக்கத்தக்கதாக ஆபிரகாமின் சந்ததியானது மறுபடியும் விருத்தசேதனம்பண்ணவேண்டுமென்று தேவன் சொன்னதாகவும் அருத்தம்பண்ணலாம்.

3. ஆசாரியராவது, லேவியராவது முன் விருத்தசேதனம்பெற்றவர்களாவது பஸ்கா சமீபித்தபடியால், அவசரமாய் விருத்தசேதனஞ்

செய்தார்கள். யோர்தானுக்கப்புறத்திலுள்ள இஸ்ரவேலரும் இச்சம
யத்தில் தான் விருத்தசேதனம்பெற்றிருக்கலாம்.

4. எண். 14: 29. 26: 6. 4. உபா. 2: 16. 20-வயதுக்கு மேற்பட்ட
வர்கள் கலகத்தினால் வனாந்தரத்தில் மாண்டுபோனார்களே. 6-வா.

5. ஆதி. 17: 14-ல் விருத்தசேதனத்தை அசட்டைசெய்கிறவன்
ஜனத்திலிருந்து அறுப்புண்டுபோவான் என்றிருப்பதால், அது பெரிய
குற்றமென்றறிந்து இஸ்ரவேலின் மூப்பராவது பெற்றோராவது விருத்
தசேதனம்பண்ணியிருப்பார்கள். வனாந்தரத்திலோ இஸ்ரவேலர் எப்
போதும் பிரயாணஞ்செய்யவேண்டியதிருந்ததாலும் பஸ்காவும் வரு
ஷந்தோறும் ஆசரிக்கப்படாமல் தவறிப்போனதாலும் (எண். 9: 10-13.)
அவர்கள் பிற்காலம்போல அந்நிய ஜனங்களோடே கலவாமல் தனித்த
ஜாதிகளாயிருந்தபடியாலும் விருத்தசேதனம்பெற அவசியமிருந்த
தில்லை.

6. "யாவரும்" மூலபாஷையில் புறச்சாதியாரெனக் கருத்துக்
கொள்ளுகிறது. இது இஸ்ரவேலருடைய பெருக்கும் அவர்களுடைய
சலாக்கியங்களுக்கும் அவர்கள் அபாத்திரரெனக் காட்டுகிறது.

"காண்பதில்லை" கொடுப்பதில்லை. சங். 4: 6. 60: 3. பிரசங்கி.
2: 24.

7. "யோசுவா அவர்கள் பிள்ளைகளை விருத்தசேதனம்பண்ணி
னான்."

(1) அவர்கள் பெற்றோர் கலகக்காரராயிருந்தபோது தேவன்
அவர்களுக்கு எதிராயிருந்ததுபோலல்ல, இப்போது அவர்களோடு
சமாதானமாயிருக்கிறாரென்று காட்டும் நோக்கமாகவும்.

(2) விருத்தசேதனத்துக்குத் தடையாயிருந்த இடைவிடாத பிர
யாணங்கள் இப்போது நீங்கினவென்று அறியும்படியாகவும்.

(3) சமீபித்து வருகிற பஸ்காவை ஆசரிக்கும்படி ஆயத்தப்படுத்
தவும்.

(4) கானான்தேசத்தில் வந்திருக்கிற இஸ்ரவேலைக் கானானியரிலி
ருந்து வேறுபடுத்தவும்.

(5) கானான்தேசத்தைக் கொடுப்போமென்ற வாக்குத்தத்தத்தை
நிச்சயப்படுத்தவும், தேவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும்,
ஆராதனைகளையும் தாங்கள் நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களென்
பதை உறுதிப்படுத்தவுமான உடன்படிக்கைக்கு அடையாளமாகவும்
விருத்தசேதனஞ்செய்தான். யாத். 12: 25. லேவி. 23: 10. எண். 15: 2.

8 வா. ஆதி. 34: 25-ல் கண்டபடி விருத்தசேதனம்பெற்றவர்க
ளுக்கு அதிக நோவும் வருத்தமுமிருக்கும். சத்துருக்களின் கயில்



இவர்களிப்படியிருந்தது விசுவாசப் பரீட்சைக்கே இந்தச் சமயத்தில்
சத்துருக்கள் ஏகமாய்த் திரண்டுவந்தாலும் தேவன் தங்களைக் காப்
பாரென்ற விசுவாசமிருந்தது.

9. விருத்தசேதனமில்லாமையே இஸ்ரவேலருக்குள் மிகவும் நிந்
தையாயிருந்தது. ஆதி. 34: 14. 1 சாமு. 14: 6. 17: 26. இது உலகத்தி
லுள்ள அநேக ஜாதியாருக்கு நிந்தையாயிருக்க இங்கே விசேஷித்த
வகையாய் எகிப்தின் நிந்தையென்று சொல்வானேன்? (1) அடுத்த
ஜாதியாரெல்லாரும் ஆபிரகாமுக்கு மறுமனையாட்டிகளின் பிள்ளைக
ளின் வம்சமானதால் அவர்களுக்குள் விருத்தசேதனப் பழக்கமிருக்க
லாம். இக்காலத்தில் எகிப்தியருக்குள் இந்தப் பழக்கமில்லை. யாத்.
2: 6. எகிப்தியர் இஸ்ரவேலரின் பிள்ளைகளை இந்த அடையாளத்தால்
அறிந்துகொள்வார்கள். (2) இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு
வந்தபடியால் மற்றவர்களால் எகிப்தியோரில் ஓர் வகுப்பாராக எண்
ணப்பட்டார்கள். எண். 22: 5. இதுவே இஸ்ரவேலருக்குப் பெரிய நிந்
தை. விருத்தசேதனத்தினால் இஸ்ரவேலர் வேறே ஜாதியாரென்று
காட்டப்பட்டார்கள். (3) அநேகர் விருத்தசேதனத்தை உலகத் தலை
களால் எகிப்திலே அசட்டைசெய்து இந்த நிந்தைக்குள்ளிருந்தார்கள்.
மற்ற அநேகர் இந்த இகழ்ச்சியான நிலைமையிலேயே வனாந்தரத்தில்
வெகுகாலமிருந்தார்கள். இப்போது அந்த நிந்தை புரட்டப்பட்டுப்
போயிற்று. (4) வனாந்தரத்திலிருந்த இந்த நிந்தை (யாத். 14: 3.) இஸ்
ரவேலர் கானானுக்கு வந்தபடியால் நீங்கிப்போயிற்று.

10 வா. இது இஸ்ரவேலர் ஆசரித்த மூன்றாம் பஸ்கா. முதலாம்
பஸ்கா எகிப்திலும், இரண்டாம் பஸ்கா சீனாயிலும், மூன்றாவது கா
னான்தேசத்திலும் ஆசரிக்கப்பட்டன. வனாந்தரத்தில் பண்டிகைகளும்
பலிகளும் பிரயாணத்தால் அசட்டைசெய்யப்பட்டன. ஆமோ. 5: 25.

11. பஸ்காவின் மறுநாள் அதாவது 16-ம் நாளில் இஸ்ரவேலர்
தங்கியிருந்த இடத்துக்குச் சமீபமான குடிகள் அவர்களுக்குப் பயந்து
தங்களுடைய களஞ்சியங்களையும் வீடுகளையும் விட்டுத் தூரமான இடங்
களுக்கும் அரணான கோட்டைகளுக்கும் ஓடிப்போனபடியால், அத்
தேசத்தின் முந்தின வருஷத்துத் தானியத்தாலாகிய புளிப்பில்லா அப்
பங்களையும் முதற் கட்டுச் செலுத்தியபின்பு அந்த வருஷத்தில் விளைந்த
சுட்ட கதிர்களையும் புசித்தார்கள்.

12. மன்னாப் பெய்யாமல் நின்றுபோகச் செய்தார். ஏனென்றால்
அவர்கள் அதை எப்போதும் அனுபவித்தால் சாதாரண சங்கதியாக
நினைக்கப்படுமே. அப்படிக்கில்லாமல் இஸ்ரவேலருக்கு அது விசேஷித்த
அற்புதமென்று காண்பிக்கும்படிக்கும் (2) தேவன் தமது கிருபை
வரங்களில் ஆராதனியாய்க் காணப்படாதபடிக்கும், நிறுத்திப்போட்
டார், இஸ்ரவேலருக்குப் பிழைப்புக்குரிய தானிய தவசங்கள் கிடைக்

கக் கூடிய இடத்தில் மன்னுப் பெய்யுமென்றால் அதை அலட்சியம் பண்ண ஏதுவிருக்குமே. 17ட நின்றுபோயிற்று.

14. யோசுவாவுக்குக் காணப்பட்டவர் இஸ்ரவேலனுமல்ல, கானானியனுமல்ல. கர்த்தருடைய சேனையின் அதிபதியே. (1) கர்த்தருடைய சேனைகளாகிய வானத்திலும் பூமியிலுமுள்ள சிருஷ்டிகளுக்கெல்லாம் அதிபதி. (2) 1 இராசா 22: 19. 2 நாளா. 18: 18. லூக். 2: 13-ல் சொல்லப்பட்ட வானசேனைகளாகிய தூதர்களுக்கதிபதி. (3) யாத். 12: 41. கர்த்தருடைய சேனையென்றழைக்கப்படுகிற இஸ்ரவேல் சபையின் அதிபதி. இந்தப் பெரிய காரியத்தில் உன்னையும் அவர்களையும் நடத்தி உதவிசெய்யும்படிக்கு வந்த பிரதான தளகர்த்தன் நானேயென்ற பொருளாம். தானியேல் 10: 21. 12: 1-ல் சொல்லப்பட்ட பிரபுவாகிய மிகாவேலேயல்லாமல் வேறல்ல. சிருஷ்டிக்கப்பட்ட தூதனுமல்ல. 1 கொரி. 10: 4-ல் இஸ்ரவேலரோடு கூடச் சென்ற தேவகுமாரனே. (1) தூதர் ஏற்றுக்கொள்ளக்கூடாத வணக்கத்தை ஏற்றுக்கொண்டதாலும் அறிவி. 22: 8, 9. (2) யாத். 3: 5-ன்படி அவருடைய பிரசன்னத்தால் அந்த இடம் பரிசுத்தமானதாலும் (3) யோசு. 6: 2-ல் எகோவாவாகிய கர்த்தரென்றழைக்கப்படுவதாலும் அவர் தேவகுமாரனே.

## கேள்விகள்.

1. இஸ்ருவேலர் கில்காலில் விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களே அதற்கு மூகாந்தரமென்ன ?

2. இஸ்ருவேலர் 2-ம் விசை விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களென்பதின் கருத்தென்ன ?

3. இஸ்ருவேலர் விருத்தசேதனம்பண்ணப்பட்டதால் எப்படி எகிப்தின் நிந்தை புரட்டப்பட்டுப்போயிற்று.

4. மன்னுவென்றாலென்ன ? அதைப்பற்றி தெரிந்ததை வரையவும். மன்னு எப்படி கிறிஸ்தவர்களுக்கு முன்னடையாளமானதாம் ?

5. யோசுவாவுக்குக் காணப்பட்டவர் தேவகுமாரனென்று ரூபியும். இந்த சமயத்தில் அவருடைய தரிசனையின் நோக்கமென்ன ? இத்தப்படி எவர் எவருக்கு காட்சியளித்து என்னென்ன விசேஷங்களை அறிவித்திருக்கிறார் ?

6. கில்கால், ஆர்லோத் என்ற இடங்களுக்கு அர்த்தமென்ன ? கில்காலில் நடந்த விசேஷங்களையெல்லாம் வரை.

7. இந்த இரண்டாம் விருத்தசேதனம் ஆவிக்குரிய மெய் இஸ்ருவேலருடைய விருத்தசேதனத்துக்கு எப்படி முன் குறிப்பு.

8. இஸ்ருவேலருடைய விசுவாசத்துக்கு இதில் பலத்த திருஷ்டாந்தமெழுதுங்கள்.



9. "பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்
படும்" என்ற சத்தியத்தை உறுதிப்படுத்துகிற திருஷ்டாந்தங்களை
எழுதும்.

10. "பாதரட்சைகளைக் கழற்றிப்போடு" என்னத்திற்கு அடை
யாளமாக இந்தக் கட்டளை பிறந்திருக்கலாம் ?

## VI. அதிகாரம்.

1. எதிர்க்கத் திராணியில்லாமல், எரிகோவின் இராசா, பயமுற்
றவனாய்க் கோட்டை வாசலை அடைத்திருந்தான். யோசு. 2: 5-ல் சொ
ல்லியபடி இரவில் மாத்திரமல்ல, எப்போதும் அடைபட்டிருந்தது.

3. சத்துருக்களின் அம்புகள் எட்டாத தூரத்தில், பட்டணத்தை
பிரதிதினமும் ஒவ்வொரு விசையாக ஆறுநாளும், சுற்றிவரக் கற்பிக்
கப்பட்டார்கள், இது இஸ்ரவேலருடைய பலம், யுக்தி, ஆயுதமுதலிய
வைகளாலல்ல, முன் குறிக்கப்பட்ட தேவநியமிப்பினாலும் உத்தரவா
லும் ஜெயமுண்டாயிற்றென்று காட்டவும், தேவன் எந்த அற்ப எத்த
னத்தாலும் தமக்குப் பிரியமானதைச் செய்ய வல்லவரென்று இஸ்ர
வேலருக்கு ரூபிக்கவும் நோக்கமாகச் செய்யப்பட்டது.

4. "கொம்பு எக்காளங்கள்." யூபிலி வருஷத்தில் கெம்பீரத்துக்
கடையாளமாக ஊதப்படவேண்டியவைகள். லேவி. 25: 9. எண். 10:
8. இவை பயங்கரமான யுத்த எக்காளங்களல்ல, ஜெயத்தைக் காட்
டும் சந்தோஷ எக்காளங்களாம். கானானில் பிரவேசித்ததே அவர்
களுக்கு யூபிலி என்கலாம்.

5. "நெடுந்தொனி" வாத்தியங்களை முடிக்கிறபோது செய்கிற
வழக்கம்.

"பட்டணத்தின் அலங்கம்." முழுவதுமாய் விழவில்லை. ஏனெ
னில் சத்துருக்கள் தப்பியோடுவதற்கிடமாகும். இஸ்ரவேலர் தாரானமாய்ப் பிரவேசிக்கப் போதுமானதவ்வளவு இடிந்தது. இராகாபிருந்த
அலங்கமும் விழவில்லை. வா. 22.

7. எரிகோப் பட்டணத்தாருக்கு உடனே சேதம் வராததால்
இஸ்ரவேலரைப் பரிகாசஞ்செய்திருப்பார்கள். இஸ்ரவேலர் தங்களுக்
கும் உடன்படிக்கைப்பெட்டிக்கும், அபாயம் வராதபடி காக்கவும்,
பட்டணத்தின்மேல் தேவகோபத்தை நிறைவேற்றவும் நோக்கமாய்
ஆயுதந்தரித்து அணியணியாய்ப் புறப்பட்டார்கள்.

9. "பின்தண்டு" தேவன் செய்யப்போகிற அதிசய கிருபை
யைப் பார்க்க விரும்பின ஆயுதமணியாத பேராம்.

10. "ஆர்ப்பரியாமல்" குறிக்கப்பட்ட நாள் வருமுன் ஆர்ப்பரித்தால் பயனற்றதாய்ப் போகும். அதனால் இஸ்ரவேலருக்கு இளக்கரிப்பு வருவதோடு சத்துருக்கள் நிந்திக்கவும் இடமாகும்.

12. உபா. 31: 25.

16. தேவனுடைய வாக்குத்தத்தங்களின்பேரில் விசுவாசமுடையவர்களென்பதைக் காட்டவும், தேவனுடைய பெரிதான இரக்கத்துக்கு நன்றிசெலுத்தவும், அவர்களை உற்சாகப்படுத்தவும், சத்துருக்கள் திகிலடையவுமே ஆர்ப்பரிக்கக் கட்டளைகொடுத்தார்.

17. "சாபத்தீடு" சர்வசங்காரத்துக்கென்று நியமிக்கப்பட்டது. லேவி. 27: 21, 29. உபா. 12-அதி. தேவனுடைய கட்டளையினால் இப்படிப் பேசினார். 1 இரா. 16: 34. நியாயப்பிரமாணத்தின்படி முதற்பலன்கள் கர்த்தரைச் சேர்ந்தவைகளானதாலும், வளம்பொருந்திய இப்பட்டணத்தின் கொள்ளையினால் யுத்தவீரர் செருக்கடைந்து தங்கள் வேலையில் அசமந்தராகாதபடிக்கும், மீந்திருக்கிற சத்துருக்கள் அஞ்சவும் நோக்கமாய் எரிகோவின் ஆஸ்தி கர்த்தருக்குச் சாபத்தீடென்று சொல்லப்பட்டது.

18. இஸ்ரவேலர் சாபத்தீடானதில் யாதொன்றை எடுத்து அதினால் தங்களைத் தண்டிக்கும்படி தேவனுக்குக் கோபமூட்டாமல் எச்சரிக்கையாயிருக்கக் கற்பிக்கிறார்.

19. பொன், வெள்ளியால் செய்யப்பட்ட சொரூபங்களை மாத்திரம் முழுவதும் அழித்துப்போடவேண்டும். யாத். 32: 20. உபா. 7: 25. இவைகளை அக்கினியில் போட கர்த்தருக்குப் பரிசுத்தமாம். எண். 31: 22, 23. இது ஒரு ஆசாரியனுக்கென்றல்ல, ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கு முழுவதுமாய்ச் சேரும்.

21. ஒவ்வொரு மனுஷ ஜீவனுக்கும் காரணரான தேவன் கானானியர் அருவருப்பான அக்கிரமங்கள் செய்து பயங்கர தண்டனைக்கே ஆளானவர்களாயிருந்தபடியால் சர்வசங்காரமாய் அவர்களை அழிக்க முன்னமே கற்பித்திருந்தார்.

22. இராகாபிருந்த அலங்கம் விழவில்லை. இது தேவனுடைய பெரிய தயவு.

23. இராகாபும் அவள் வீட்டாரும் புறச்சாதியின் நிலைமைக்குரிய அசுத்தங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, யூதமார்க்க உபதேசங்களைக் கற்று யூதச் சபையோடு சேர்ந்தார்கள்.

25. கானானியரை முற்றிலும் அழிக்கவேண்டுமென்ற பொதுச் சட்டத்துக்கு அவர்களில் யாராவது விக்கிரகாராதனையை வெறுத்து இஸ்ரவேலருக்கு அடங்கினவர்களானால் அவர்கள் காக்கப்படுவது விரோதமல்ல.



26. எரிகோவின்பேரிலுள்ள எரிச்சலினாலும் வெறுப்பினாலுமல்ல, தேவஉத்தரவினாலேயே யோசுவா சபித்தான். 1 இராசா 16: 34. விக்கிரகாராதனைசெய்த ஜனங்களின் பேரில் தேவன் விளங்கச்செய்த நீதிக்கும், இந்தப் பெரிய பலத்த பட்டணத்தை அழித்ததில் விளங்கச்செய்த சர்வவல்லபத்துக்கும் என்றும் நினைப்பூட்டும் அடையாளமாக இப்பட்டணத்தின் அழிவு நிலைத்திருக்கத் தேவன் சித்தங்கொண்டார். இந்தச் சாபம் கட்டினவனைச் சாருமேயல்லாது, கட்டினபின்பு குடியிருப்பவர்களைச் சாராது. 1 இராசா 2: 18. லூக். 19: 1—5. கட்டுகிறவன் கட்டத்துவக்கின நாள்முதல் முடிக்கிறவரை தன் பிள்ளைகளெல்லாரையுஞ் சாகக்கொடுப்பான். 1 இரா. 16: 34.

## கேள்விகள்.

1. எரிகோவின் அலங்கம் விழுந்தது அற்புதமென்று ரூபியுங்கள்.

2. எரிகோவைப் பிடிப்பதற்குச் செய்த முறையை தேவன் ஏற்படுத்தினதற்கு முகாந்தரமென்ன? இதெப்படி சுவிசேஷ பிரபலியத்துக்குக் குறிப்பு.

3. கர்த்தர் யோசுவாவோடே கூடவிருந்தார் என்பதற்கு குறிப்புகள்.

4. இராகாபும் அவள் வீட்டாரும் யூதசபையில் சேர்க்கப்பட்டவிதமெப்படி! இதினால் நாம் படிக்கிறதென்ன?

5. கானானியரை சர்வசங்காரம்செய்ய தேவனுடைய கட்டளையிருக்க, யார் யார் தப்புவிக்கப்பட்டார்கள்—ஏன்! இதற்கொத்தபடியான வேறு திருஷ்டாந்தரங்களுண்டா?

6. தேவன் கானானியரை சர்வசங்காரம்பண்ணினதும், அவர்கள் தேசத்தை இஸ்ரவேலருக்குக் கையளித்ததும் தேவனுடைய நீதிக்கும் இரக்கத்துக்கும் ஒத்துவரமாட்டாதே என்று சிலர் ஆக்ஷேபித்தால் என்ன சொல்லலாம்?

7. கானானியருடைய குற்றமில்லாத குழந்தைகளையும் அழிக்க வேண்டியதென்ன? அவைகளென்ன பொல்லாப்புச் செய்தது? இது தேவநீதிக்கும் இரக்கத்துக்கும் பின்னமுண்டாக்குமல்லவா?

8. எக்காளங்கள் எத்தனை தடவையாக ஊதப்பட்டது, ஏன்? வேதத்தில் 7-என்கிற இலக்கம் நிறைவைக் குறிக்கத்தக்கதான கருத்தாய் வருகிற சங்கதிகளை எழுதும்.

9. எரிகோப் பட்டினம் எப்படி சபிக்கப்பட்டது ஏன்? அதின் சாபம் எப்படி எப்போது நிறைவேறிற்று?

10. "சாபத்தீடானது" என்ற வார்த்தையின் அருத்தமென்ன?

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௨-ம் பிரிவு.

(கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி.)

(தொடர்ச்சி.)

**வினா.** நம்முடைய இரட்சகருடைய சரீரம் கல்லறையிலிருந்தபோது, அவருடைய ஆத்துமா எங்கே இருந்தது?

**விடை.** பரதீசிலிருந்தது. அங்கே நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் அவர்களுடைய சரீரங்களைவிட்டு பிரிந்தபின் போய்ச் சேர்ந்து, உயிர்த்தெழுதலின் நாள்வரைக்கும் அவ்விடத்திலே இருக்கும்.

இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய். லூக். 23: 43.

**வினா.** கிறிஸ்து என்றால் அர்த்தமென்ன?

**விடை.** அபிஷேகம்பண்ணப்பட்டவர்.

மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். யோவா. 1: 41.

**வினா.** ஏன் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்?

**விடை.** அவர் தம்முடைய ஜனங்களுக்கு தீர்க்கதரிசியும், ஆசாரியரும், இராஜாவுமாயிருக்கும்படி, பரிசுத்தஆவியினாலே அபிஷேகம் பண்ணப்பட்டபடியினாலேயே. இந்த உத்தியோகங்களில் ஒவ்வொன்றுக்கும் ஆட்கள் நியாயப்பிரமாண முறைமையின்படி அபிஷேகம்பண்ணப்பட்டார்கள். கிறிஸ்துவானவர் இம்முறைகளினாலே முன்னறிவிக்கப்பட்டும் முன்னடையாளம் காட்டப்பட்டும் இருந்தார்.

இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். அப். 10: 38.

இந்தச் சமயங்களில் யூதர்களாலே அபிஷேக எண்ணெய் பிரயோகிக்கப்பட்டது.



இது எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கவேண்டும். யாத். 30: 31.

1. தீர்க்கதரிசிகள் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு. 1 இரா. 19: 16.

கிறிஸ்து தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணப்பட்டு, தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தினார்.

அவர் தமது வசனத்தினாலும், தம்முடைய ஊழியக்காரர்களைக் கொண்டும், தம்முடைய ஆவியினாலும் போதிக்கிறார்.

மனிதர் மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளையும் அசட்டைபண்ணினதினாலே (மத். 21: 37.) தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார்.

சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். ஏசா. 61: 1. லூக். 4:18.

பரி. பவுல் போதித்தலை, தீர்க்கதரிசனஞ் சொல்லுதலாக அழைக்கிறார். 1 கொரி. 14: 1, 3, 4.

2. ஆசாரியர் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படி, அவர்களையும் அபிஷேகம்பண்ணுவாயாக. யாத். 40: 15.

அபிஷேகம்பெற்ற ஆசாரியன் மீ, லேவி. 4: 3.

கிறிஸ்துவானவர் ஆசாரியராக அபிஷேகம்பண்ணப்பட்டார். நாம் குற்றவாளிகள். கிறிஸ்து தம்மைத் தாமே பலியிட்டதினாலே, நமக்காகப் பிராயச்சித்தம் செய்தார். அவருடைய மத்தியஸ்தத்தினாலே மாத்திரம் நாம் தேவனுக்கு முன்பாகக் காணப்படக் கூடியவர்கள். அவர் மாத்திரம் ஏற்ற பலியைச் செலுத்தி, பிதாவின் கோபத்தை சாந்திபண்ணக் கூடும்.

நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர். சங். 110: 4.

கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். எபே. 5: 2.

இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டார் எபி. 7: 21.

அவர் நாடோறும் பலியிடவேண்டியதில்லை; ஏனெனில் தம்மைத் தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார். எபி: 7: 27.

ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செ

லுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. எபி. 8: 3.

3. இராசாக்கள் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

| | |
|---|---|
| சவுல். ... 1 சாமு. 15: 1. | ஆசகேல். 1 இரா. 19: 15. |
| தாவீது. 1 சாமு. 16: 12. | ஏகூ. ... 1 இரா. 19: 16. |

கிறிஸ்து இராஜாவாகச் சொல்லப்பட்டிருக்கிறார். நாம் சுபாவப்படி நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்களாலே சிறைப்படுத்தப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்து அவைகளினின்று நம்மை விடுதலையாக்கி, தம்முடைய கிருபையினால் நம்முடைய இருதயத்தில் ஆளுகைசெய்யும்படி நம்முடைய இராஜாவாக வந்திருக்கிறார். நாம் நம்முடைய சத்துராதிகளை ஜெயிக்கும்படிக்கும், பரிசுத்தராய் நடக்கும்படிக்கும் கிருபை அளிக்கிறார். அவருடைய இராச்சியம் உலகத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயும், நித்தியமுள்ளதாயுமிருக்கிறது.

நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய இராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன். சங். 2: 6.

தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராச்சியத்தையும் அவர் திடப்படுத்துவார். ஏசா. 9: 7.

இதோ உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார், மத். 21: 4.

இவன் யூதருடைய இராஜாவாகிய இயேசு. மத். 27: 37.

கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். லூக். 1: 32, 33.

இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர். வெளி. 19: 16.

அவருடைய ஆளுகைக்கு விரோதியாகாதே. அவருடைய அன்பை அவமதியாதே. தேவனுடைய கிறிஸ்துவை உன்னுடைய தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் ஏற்றுக்கொள். அவரண்டை வா; அவர் ஆசாரியராக தம்முடைய தெளிக்கப்பட்ட இரத்தத்தினாலே உன்னை பாவங்களற கழுவி, சுத்திகரிக்கட்டும். அவர் தீர்க்கதரிசியாக உன்னுடைய சமாதானத்துக்கடுத்தவைகளை உனக்குப் போதித்து, எல்லா திவ்விய அறிவினாலும் உன்னை உணர்த்துவிப்பாராக. அவர் இராஜாவாக உன்னுடைய இருதயத்தில் ஆளுகைசெய்யட்டும். அவரிடத்தில் உன்னுடைய செய்கைகளையும், வார்த்தைகளையுமட்டுமல்ல, உன்னுடைய ஒவ்வொரு நினைவுகளையும் கொண்டுவா.



## ௫-ம் பிரிவு.

### கிறிஸ்துவின் தேவதன்மையைப் பற்றி.

இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும், தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவராகவும் கவனித்தோம். இப்பொழுது அவர் தேவனுடைய ஒரே குமாரனென்றும், நம்முடைய கர்த்தர் என்றும் கவனிப்போம்.

வினா. இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே குமாரனாயிருக்கிறாரென்பதற்கு அத்தாட்சி என்ன?

விடை. 1. மனுஷருடைய சாட்சி.

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. மத். 16: 16.

அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. யோவா. 1: 14.

பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். யோவா. 1: 18.

நீர் தேவனுடைய குமாரன். யோவா. 1: 49.

யோவா. 11: 27. அப். 8: 37. 1 யோவா. 4: 9. எபி. 4: 14.

2. கிறிஸ்துதாமே சாட்சியிட்டிருக்கிறார்.

நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான். அதற்கு இயேசு நான் அவர்தான் என்றார். மாற். 14: 61, 62.

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. யோவா. 3: 18.

யோவா. 9: 35, 37. 10: 36.

3. பிதாவாகிய தேவனே சாட்சியிட்டிருக்கிறார்.

நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன். சங். 2: 7. அப். 13: 33. எபி. 1: 5. 5: 5.

இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மத். 3: 17. 17: 5. லூக். 1: 35.

இயேசுகிறிஸ்து நம்முடைய கர்த்தராகவும் இருக்கிறார்.

கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, சங். 110: 1. மத். 22: 44.

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். யோவா. 13: 13.

இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். பிலிப். 2: 11.

2 பேது. 3: 18. 1 தீமோ. 6: 15. வெளி. 17: 14. 19: 16.

குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான் என்பதை நினைத்துக்கொள். யோவா. 5: 23. உன்னுடைய உதடுகளினாலே அவரைக் கனம் பண்ணவும், அவர் கற்பிக்கிறவைகளை நீ செய்யாமலிருக்கையில் அவரை ஆண்டவரே, ஆண்டவரே என்று கூப்பிடவும் நினையாதே. லூக். 6: 46. நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர் என்று அறிக்கையிடு. இயேசுவானவர் தேவனாயிருக்கிறாரென்றும், அவர் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினாரென்றும் விசுவாசித்து, பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் அவரைப் பற்றும் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ளும்படி ஜெபம்பண்ணு. அப். 26: 18.

அவர்பேரில் வைக்கும் நம்முடைய விசுவாசம் பெலப்படும்படியாக, அவருடைய தேவதன்மைக்குரிய ரூபகாரங்களை ஆராய்வோமாக.

புதியஏற்பாட்டிலுள்ள அநேக இடங்களில் காணப்படுகிறபடி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கும் யூதருக்கும் பழையஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட இலட்சணங்களையுடைய மேசியாவே நீங்கள் கண்டவர் என்று தம்மைப்பற்றி அறிவித்தார். லூக். 24: 25—27, 44—46. யோவா. 5: 39, 46. அப்போஸ்தலர்களும் கிறிஸ்துநாதரின் தேவதன்மையை ரூபிக்கும்படி பழையஏற்பாட்டிலுள்ள வாக்கியங்களை அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

யோவா. 1: 45; அப். 3: 22, 24. 13: 27—30. 17: 2, 3. 26: 22. 28: 23. 1 பேது. 1: 10, 11.

தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள். அப். 10: 43.

வினா. எந்த வேதவாக்கியங்களில் கிறிஸ்து தேவனாகச் சொல்லப்



விடை. தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. சங். 45: 6

வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா. ஏசா. 9: 6.

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். ஏசா. 6: 3. யோவா. 12: 41.

இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத். 1: 23.

அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவா. 1: 1, 14.

யோவா. 5: 18. 10: 33. அப். 20: 28. ரோ. 9: 5. பிலி. 2: 6. கொலோ. 2: 9 1 தீமோ. 3: 16. 1 யோவா. 5: 20 யூதா: 25.

---

தேவனுக்கு மாத்திரமுரிய பல இலட்சணங்கள் உண்டு. வேதாகமத்தில் அந்த இலட்சணங்கள் யாருக்குச் சொல்லப்படுகிறதோ அவர் தேவனாயிருக்கிறாரென்பது பூரண நிச்சயமே.

அவர் தமது மகிமையை வேறொருவருக்கும் கொடார். ஏசா. 42: 8.

1. தேவன் நித்தியமுடையவராயிருக்கிறார்.

நான் முந்தினவரும், நான் பிந்தினவருந் தானே; என்னைத் தவிர தேவன் இல்லை. ஏசா. 44: 6.

கிறிஸ்துநாதரைப்பற்றியும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன். வெளி. 1: 17.

இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்படுவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. மீகா. 5: 2.

ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன். யோவா. 8: 58.

(தேவன் இந்த நாமத்தினாலேயே தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார். யாத். 3: 14.)

நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன். யோவா. 16: 28.

பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும். யோவா. 17: 5

எபி. 7: 3. 13: 8. மத். 22: 45. வெளி. 22: 16.

2 தேவன் எல்லா வஸ்துக்களையும் சிருஷ்டித்தவர்.

நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவ

ராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர். ஏசா. 44: 24.

நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டித்தேன்; என் கரங்கள் வானங்களை விரித்தன. ஏசா. 45: 12.

கிறிஸ்துநாதரும் அப்படியே சிருஷ்டிகர் என்பதைக் காணலாம்.

சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. யோவா. 1: 3, 10.

சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. கொலோ. 1: 16.

எபி. 1: 10. 2: 10. வெளி. 4: 11.

3. தேவன் எல்லா வஸ்துக்களையும் ஆதரித்துத் தாங்குகிறார்.

சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது. யோபு 12: 10.

நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். சங். 104: 29.

கிறிஸ்துநாதரைப்பற்றியும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார். எபி. 1: 3.

எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலோ. 1: 17.

4. தேவன் சர்வவியாபகர்.

கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. 2 நாளா. 16: 9.

கிறிஸ்துநாதரும் அப்படியே எங்கும் இருக்கிறாரென்று பார்க்கலாம்.

இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன். மத். 18: 20.

உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். மத். 28: 20.

யோவா. 3: 13. 1 கொரி. 1: 2. எபி. 2: 18. யோவா. 10: 28.

---



## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—சில நாட்களுக்குமுன் நிலக்கரிக் கேணி விபத்
துகள் பல நேரிட்டன. அவைகள் ஒன்றினால் 170-பேருக்கு உயிர்
நாசமும், விதவைகளும் அநாதருமான 500-சில்வானம் பேருக்கு ஜீவ
னார்த்தமில்லாத இக்கட்டும் நேர்ந்திருக்கிறது.—உவேல்ஸ் நாட்டு இள
வரசர் அவுஸ்திரேலியாவில் கூடப்போகிற மேல்போர்ன் வஸ்துநிசய
வேடிக்கை பார்க்கப்போகக் கருதியிருந்த யோசனை நிறுத்தலாயிற்று.

**ஜர்மானியா**—கொலோனை நகரத்தில் 600-வருஷங்களா
ய்க் கட்டிவந்த பெரிய ஆலயம் ஒன்று இப்போதுதான் முற்றுப்பெற்
று, செப்றெம்பர்மீ 15உ விசேஷித்த மேளாயாய் பிரதிஷ்டைசெய்
யப்பட்டது. ஆனால் கடந்த அநேக ஆண்டுகளாய் அதில் தேவாராதனை
நடந்து வந்தது.

**துர்க்கியா.**—மொந்தினீகிரோ, கிரேகியா பிரதேசங்களையிட்டு
பர்லின் மகா சபையில் தீர்மானித்த திட்டவட்டங்களுக்கு துர்க்கியா
வை பலவந்தமாய் அமையப்பண்ணும்பொருட்டு கடல் ராணுவத்தினால்
அச்சுறுத்தவேண்டுமென்று ஐரோப்பிய மகா துரைத்தனத்தார் ஐக்
கிய யோசனைக்குள்ளாயினர். இதற்காக அனுப்பப்பட்ட போர்க்கப்
பல்கள் ரகுசாவில் கூட்டம்போட்டு, அங்கிருந்து ஆதிரியாக்கடலின்
கீழ்கரைப் பற்றிப் போகிறதும் வருகிறதுமாய் இருக்கின்றன. மகா
துரைத்தனத்தாரின் தீர்மானங்களுக்கு இணங்குவதைவிட ராச்சிய
பாரத்தைக் கைவிடுவதே தமக்குச் சம்மதமென்று சுல்த்தான் ஒரு
விசை வெளியிட்டும், பிந்தி அவர் அதற்கு உடன்பட்டு வழிக்கு வந்தார்
என்று கடைசியாய் எட்டின சமாசாரத்தில் கண்டிருக்கிறது.

**இந்தியா.**—ஜெயபுரி ராஜா 47-வயசில் சந்தானமில்லாமல்
மரித்தார். அவர் தமது தேசத்தின் விருத்தியை நாடின விவேகமுள்ள
அதிபதியாம். தமக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டிய ஆளை அவரே
நியமித்திருந்தபடி அநுமதித்து பட்டஞ் சூட்டியிருக்கிறது.—தற்கால
சென்னை கவர்னராகிய பக்கிங்ஹாம் டியூக் பட்டவர்த்தனருக்குப்
பதில் நியமனம்பெற்று, இம்மாசத்தின் முடிவுக்குள்ளாக சென்னைக்கு
வருவார்.—தற்கால இந்திய ராஜபிரதிநிதியவர்களின் பத்தினியாரா
கிய ரிப்பன் பெருமாட்டி எர்ல் டி கிரேய் என்ற குமாரர் சகிதம் டிசம்
பர்மீ ஆரம்பத்தில் பொம்பாயில் சேர்வார்கள். ரிப்பன் பிரபு அவர்
களைச் சந்திக்குமாறு பொம்பாய்க்குப் போவார். செப்றெம்பர்மீ
நயினிதால் என்னும் இடத்தில் ஒரு பயங்கர விபத்து நேரிட்டது. அதற்
குச் சமீபமான மலைப்பக்கங்களிலிருந்து ஒரு பெரும்பாளம் இடிந்
திறங்கி, மைதானத்திலுள்ள வீடுகளையும் கடைகளையும் அமுக்கிக்கொ
ண்டதினால், சுமார் 200-பேர் உயிரோடே புதையுண்டு போயினர்.

நவம்பர்ஸ்ரீ நாள் 30-ஐப்பசிஸ்ரீ 18உ முதல், கார்த்திகைஸ்ரீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
| --- | --- | --- | --- |
| தி | 1 | ௧௮ | நீங்கள் உறுதிப்பட்டவர்களாயிருப்பீர்களாக. 1 கொ. 15: 58. |
| செ | 2 | ௧௯ | ஆவியே உயிர்ப்பிக்கிறது. யோவா. 6: 63. (ஏசா. 45: 22. |
| பு | 3 | ௨0 | என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். |
| வி | 4 | ௨௧ | இரட்சிப்பு கர்த்தருடையது. யோனா. 2. 9. |
| வெ | 5 | ௨௨ | கிருபையில் வளருங்கள். 2 பே. 3: 18. (எரே. 33: 3. |
| ச | 6 | ௨௩ | என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன். |
| ஞா | 7 | ௨௪ | கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார். |
| தி | 8 | ௨௫ | கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன். சங். 38: 15. |
| செ | 9 | ௨௬ | ஞானவரங்களை விரும்புங்கள். 1 கொ. 14: 1. (4: 23. |
| பு | 10 | ௨௭ | எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். நீதி. |
| வி | 11 | ௨௮ | நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறீர்கள். கொலோ. 3: |
| வெ | 12 | ௨௯ | பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். நீதி. 12: 22. |
| ச | 13 | ௩0 | தேவனுடைய ராச்சியத்தையே தேடுங்கள். லூக். 12: 31. |
| ஞா | 14 | ௧ | விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாயிருக்கிறது. |
| தி | 15 | ௨ | உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். தானி. 9: 17. |
| செ | 16 | ௩ | விசுவாசித்து நடக்கிறோம். 2 கொ. 5: 6. (23: 17. |
| பு | 17 | ௪ | உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ளவிடாதே. நீதி. |
| வி | 18 | ௫ | கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. 2 தீமோ. 2: 1. |
| வெ | 19 | ௬ | என் மீட்பர் உயிரோடிருக்கிறாரென்று நான் அறிந்திருக்கிறேன். |
| ச | 20 | ௭ | எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. 2 கொ. 3: 5. |
| ஞா | 21 | ௮ | மாம்சமெல்லாம் புல்லைப்போல இருக்கிறது. ஏசா. 40: 6. |
| தி | 22 | ௯ | உமது ஜனத்தை இரட்சியும். சங். 28: 9. (11: 30 |
| செ | 23 | ௧0 | என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. மத். |
| பு | 24 | ௧௧ | அவருடைய காருணியம் எத்தனை பெரியது. சகரி. 9: 17. |
| வி | 25 | ௧௨ | நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனுமிருப்பான். |
| வெ | 26 | ௧௩ | இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறே |
| ச | 27 | ௧௪ | காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள். எபே. 5: 16. (ன் |
| ஞா | 28 | ௧௫ | அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? மல்கி. 3: 2. |
| தி | 29 | ௧௬ | கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாருமாயிருக்கிறார். கொலோ. 3: 11. |
| செ | 30 | ௧௭ | கர்த்தருக்குக் காத்திரு. சங். 27: 14. |

## விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
2. அமாவாசை.
7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 24 ம் ஞாயிறு.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 25 ம் ஞாயிறு.
17. பௌர்ணமி.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 26 ம் ஞாயிறு.
28. அட்வெந்தென்னும் நாட்களில், 1-ம் ஞாயிறு.
30. பரி. அப். அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

௰௨. டிசம்பர்ஸ்ரீ. ௲௮௱௮௰௫.

## யோசுவாவின் புஸ்தகம்.

### VII. அதிகாரம்.

1. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் மாத்திரம் துரோகம்பண்ணியிருக்க, இங்கே எல்லாருஞ் செய்ததாக சினை ஆகுபெயராகச் சொல்லியிருக்கிறது. ஆதி. 8: 4. 19: 29. இப்படியே யூதாஸ் மாத்திரம் சொல்லியதை யோவா. 12: 4. எல்லாச் சீஷர்களும் சொன்னதாக மத். 26: 8-ல் சொல்லியிருக்கிறது.

"சப்தி." 1 நாளா. 2: 6-ல் சிமரியென்னப்படுகிறான்.

"சேராகு." இவன் யூதாவுக்கு தாமாரால் பிறந்தவன். ஆதி. 38: 30. யூதாவோடே எகிப்துக்குப்போனவன். அதுமுதல் இதுவரையும் அத்தேசம் 256-வருஷம் சென்றிருப்பதினால் அவனுடைய 3-முற்பிதாக்களும் தங்களுக்கு 60-வயதாயிருக்கையில் குழந்தை பெற்றவர்களென்று வைத்துக்கொண்டால், ஆகான் இப்போது வயதுசென்ற மனிதனாயிருக்கவேண்டியது.

2. வேவுகாரர் பட்டினத்துக்குள் அல்ல, அதற்குச் சமீபமான எல்லைக்குப்போய் பட்டினத்தின் ஸ்திதியையும், சனங்களின் நிலைமையையும் அறிந்துவரும்படி அனுப்பப்பட்டார்கள்.

பெத்தாவேன் பெத்தேலுக்கு அலாதியாயும், சமீபமாயுமிருந்த பட்டினமாம். பின்பு பெத்தேலே பெத்தாவேன் என்னப்படுகிறது. ஓசே. 4: 15. 10: 5. யோசு. 18: 12.

3. இஸ்ரவேலருடைய சாபத்தீடான காரியத்தில் செய்த குற்றத்துக்குத் தண்டிக்கப்படவும், அவர்கள் மனந்திரும்பி சீரடையவும் இப்படிப்பட்ட ஆலோசனை தேவசெயலால் நடந்தது.

4. தேவன் அவர்களைக் கைவிட்டாரென்பதற்கு இதொரு பலத்த திருஷ்டாந்தரம். தேவனையல்லாதபடிக்கு அவர்கள் எவ்வளவு பல

வீனமும் அற்பமுமான சிருஷ்டிகள் என்பதைக் காண்பிக்கவும், கானானியரையும் அவர்கள் தேசத்தையும் இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுக்க, தேவபலத்தால் மாத்திரந்தான் கூடுமென்பதைப் படிப்பிக்கவும் நோக்கமாக இப்படிச் சம்பவித்தது. உபா. 28: 25.

5. இஸ்ரவேலர் தங்கள் கேடகமாகிய தேவன் அண்டைக்கு மனந்திரும்பவும், கானானியர் தங்களுடைய அழிவுக்குக் கடினப்படவுமாக இப்படி நேரிட்டது. லேவி. 26: 36.

6. யோசுவா, நடந்த கஷ்டத்தையும், அதினால் இனி உண்டாகும் பயங்கரமான தீமைகளையும் உணர்ந்தவராய் துக்கப்பட்டு, யூதர் வழக்கப்படி தமது வஸ்திரங்களைக் கிழித்தார். ஆதி. 37: 34. 44: 13. அப்படியே இஸ்ரவேலின் பிரபுக்களும் தங்களைத் தாழ்த்தி உபவாசத்துக்கும், செபத்தியானத்துக்குமாக தங்கள் முகங்களைச் சாய்த்து புழுதியை தங்கள் மேற்போட்டார்கள். 1 சாமு. 4: 12. 2 சாமு. 1: 2. 13: 19. யோனா 3: 16. மீகா 1: 10.

7. இதினால் யோசுவா தேவனுக்குச் செய்யவேண்டிய கனம், கீழ்ப்படிதலுக்கு குறைவாகவும் தேவவல்லமையை நம்பாதவராகவும் செபித்தபடியால், தேவனுடைய பரிசுத்த மனிதரும், மற்றவர்களைப்போல பெலவீனமுள்ளவர்களென்று அறிகிறோம்.

9. தேவன் தமது சனங்களுக்குக் கொடுப்போமென்று சொன்ன நன்மையைக் கொடாமற்போனால் கானானியர் தேவனுடைய தயவு உண்மை, வல்லமை முதலிய இலட்சணங்களைப்பற்றித் தூஷித்து நிந்திப்பார்கள் என்ற கவலையாய்ச் செபிக்கிறார். யாத். 32: 12. எண். 14: 13. உபா. 33: 27. யோவே. 2: 17.

11. இஸ்ரவேலர் தாங்கள் தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, அவைகளைக் கைக்கொள்வோமென்று ஆணையிட்டபடி செய்யாமல்; யாத். 19: 8. 24: 7. சாபத்தீடான விஷயத்தில் அவருடைய உடன்படிக்கையை மீறினார்கள். யோசு. 6: 19-ல் சொல்லியபடி தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டிருந்த பரிசுத்த பொருள்களை களவுசெய்தார்கள். அப். 5: 1, 2.

12. "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்." சாபத்தீடான விஷயத்தில் ஒருவகையாய் எல்லாரும் கறைப்பட்டிருந்த தீட்டினின்று சுத்திகரிக்கப்படவும், எல்லாரும் தேவசந்நிதானத்தண்டை சென்று, சாபத்தீடான காரியத்தில் குற்றஞ்செய்தவன் கண்டுபிடிக்கப்பட்டு தன் குற்றத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடும்படி செய்விக்க தேவனை வேண்டிக்கொள்ளவும் வேண்டியதால், அவர்கள் பரிசுத்தம்பண்ணிக்கொள்வது அவசியமே. இந்தச் சமயத்தில் ஆகான் தன் குற்றத்தை அறிக்கையிடாமற்போனது மிகவும் துக்கமான காரியம்.



14. தேவஉத்தரவுப்படி சீட்டினால் குற்றவாளியைக் கண்டுபிடித்தார்கள். நீதி. 16: 33. இது உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக தேவசமுகத்தில் போடப்பட்டது. இவ்வித வழக்கம் பிற்காலத்திலும் நடந்திருக்கிறது. 1 சாமு. 14: 41, 42. யோனா 1: 7. அப். 1: 26.

15. சாபத்தீடான மனுஷர்களுக்கும் பொருள்களுக்கும் நடந்தபடி ஆகானுக்கும் நடக்கவேண்டுமே. எண். 15: 30, 35. உபா. 13: 16. நியாயப்பிரமாணத்தின்படி அவனும் அவன் பிள்ளைகளும் சொத்துக்களுடன் சுட்டெரிக்கப்பட்டார்கள்.

பாவமானது வேதத்தில் "மதிகேடு" என்னப்படுகிறது. ஆதி. 34: 7. நியா. 20: 6. பாவத்தை தங்களுக்கு ஞானமாகவும், நன்மையாகவும் மதிக்கிற பாவிகளின் தகாத எண்ணத்துக்கு எதிரிடையாக இப்படிச் சொல்லியிருக்கிறது.

17. "யூதாவின் வம்சங்கள்." (1) இது யூதாக்கோத்திரம் அல்லது யூதசனங்களாம். நியா. 13: 2. சகரி. 12: 3. அப். 3: 25. (2) வம்சங்களென்றால் அந்தக் கோத்திரத்தின் 5-வீட்டாரின் தலைவரைக் குறிக்கும். எண். 26: 20, 21.

19. யோசுவா, ஆகானை என் மகனே என்பதால், தகப்பன் மகனை நேசிக்கிறதுபோலவும், ஒரு பிரபு தன் பிரஜைகளுக்கு அன்பு பாராட்டுவதுபோலவும் வழங்குவதால் இந்தப் பயங்கர தண்டனை அவனையிட்ட பகையால் வந்ததல்ல.

"கர்த்தரை மகிமைப்படுத்து" ஆகான் கர்த்தருக்கு அதிகக் கனவீனத்தை உண்டாக்கினபடியால், தன் குற்றத்தையும் அதினாலுண்டாகிய வெட்கத்தையும் அவனே ஏற்றுக்கொண்டு, தன் பாவங்களை அறிக்கையிடுவதினால் தேவனுடைய சர்வஞானம், சருவவல்லபம், நீதி, இரக்கம் முதலிய இலட்சணங்களுக்கு மகிமைசெலுத்தச் சொல்லுகிறார்.

21. பாபிலோன் சால்வை பலவர்ணங்களுடன் சித்திரமாய்ச் செய்யப்பட்ட விலைபெற்றது. எசே. 23: 15. யோசேப்புஸ் இதை தங்கத்தாலிழைத்த இராஜவஸ்திரமென்கிறார்.

22. ஆகானுடைய அறிக்கையிடுதல் யோசுவாவுடைய பலவந்தத்தால் உண்டானதென்று சிலர் தப்பாய் எண்ணுதபடிக்கும், அது சத்தியமென யாவருக்கும் தெரியவரும்படிக்கும் ஆட்களை அனுப்பினான். இவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் வந்த சாபத்தை நிவிர்த்திசெய்யும்படிக்கும், ஆகானுடைய இனத்தார் முந்திப்போய் சாமான்களை எடுத்துக்கொள்ளாதபடிக்கும் ஓடினார்கள்.

24. ஆகானுடைய குமாரர், குமாரத்திகளைத் தண்டித்தது கொடுமையும் அநியாயமாயும் தோன்றுவதல்லாமல் உபா. 24: 16-ல் தேவ

னுல் விலக்கப்பட்டதாயுமிருக்கிறதே என்றால்; (1) அந்தப் பிரமாணம் தேவனுக்கல்ல மனிதருக்குக் கொடுக்கப்பட்டது. (2) அநேகமாயிரம் பேர் தேவனுக்கேராத குற்றத்தைச்செய்து பயங்கரமான தண்டனைக்குட்படாதபடிக்கு எச்சரிப்படைய (3) ஆகானுடைய பிள்ளைகள் அவனுடைய குற்றத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களாயுமிருந்தார்கள். ஆகான் யூதாவின் 5-ம் தலைமுறையில் தோன்றினவனானபடியால் இப்போது வயதுசென்றவனானதால் அவன் பிள்ளைகளும் அவன் செய்த குற்றத்தை அறிந்தும், அதை மறைத்தும் வைக்கத்தக்க வயதுள்ளவர்களாயிருக்கலாம். அப்படியே இந்தப் பாவம் அருவருப்பும் பயங்கரமுமானதென்று காட்டத்தக்கதாக மனுஷருக்குப் பிரயோசனமாகக் கொடுக்கப்பட்ட குற்றமில்லாத ஆடுமாடுகளும் அந்தத் தண்டனையே அடைந்தன.

25. அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியால் சுட்டெரித்தார்கள். தேவஉத்தரவுப்படி இருவகைத் தண்டனையையும் அடைந்தான். வா. 15. ஆகான் எப்படி இருவகையான மரணத்தையும் அனுபவிக்கக் கூடும். இப்படிப்பட்ட குற்றவாளிகள் அடையவேண்டிய தண்டனைப்படி முதலாவது கல்லெறியப்பட்டு லேவி. 24: 14. எண். 15: 35. அவன் செய்த பாவம் மிகவும் அருவருப்பானதென்று காட்ட அவனுடைய செத்த உடலும் சுட்டெரிக்கப்பட்டன.

15-ல் ஆகானை உயிரோடே சுட்டெரிக்கவேண்டுமென்பது கருத்தல்ல. உபா. 13: 16. சாபத்தீடான பொருள்களுக்கொத்தபடி செத்த உடல்களும், ஜீவனற்ற வஸ்துகளும் சுட்டெரிக்கப்பட்டன.

26. ஆகானுடைய பாவத்துக்கும் அதற்கு வந்த தண்டனைக்கும் ஞாபக அடையாளமாயிருக்கவும், மற்றவர்களுக்கு இதினால் எச்சரிப்புண்டாகவும், நிந்தைக்குரிய வடுவாயிருக்கவும் பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். யோசு. 8: 29. 2 சாமு. 18: 17.

ஆகோரின் பள்ளத்தாக்கென்பது கலக்கத்தின் பள்ளத்தாக்கென்றர்த்தம்.

## கேள்விகள்.

1. இஸ்ரவேலரில் ஒருவன் செய்த பாவத்துக்காக தேவன் எல்லார்மேலுங் கோபங்கொள்வானேன்?

2. ஆயி, பெத்தேல் பெத்தாவேன். இந்த இடங்களுக்கு அர்த்தமென்ன? ஏன்? அங்கே நடந்திருக்கிற விசேஷங்களென்ன?

3. யோசுவாவும் இஸ்ரவேலின் மூப்பரும் துக்கத்துக்கடையாளமாக என்னசெய்தார்கள்? அந்தப்படி நடப்பித்தவர்களார்? ஏன்?



4. "கர்த்தருக்கு மகிமையைச் செலுத்து" அதின் பொருளென்ன? இந்தப்படி புதியஏற்பாட்டில் வருகிற சங்கதியென்ன?

5. இடுக்கமான காலங்களில் நாம் செய்யவேண்டிய கடமையென்ன? அந்தப்படி நடப்பித்ததற்கு திருஷ்டாந்தம் சொல்லும்.

6. தேவன் கிருபையாய் உடனே செபத்தைக் கேட்கிறவரென்பதற்கு இந்த ஆகமத்திலும் மற்றும் ஆகமங்களிலுமிருந்து உதாரணமுரைக்கவும்.

7. இந்த அதிகாரத்தில் பாவத்தின் தன்மை, கொடுமை, பலன் இன்னதென்று ஆகானுடைய சரித்திரத்தால் ரூபியுங்கள்?

8. தேவன் ஆகானை உடனே பிடித்துக்கொடாததற்கு முகாந்தரமென்ன? அவனுக்கு வந்த தண்டனையும் நியாயமென்று காண்பியுங்கள்?

9. ஆசரிப்புக்கூடார ஆராதனையின் துவக்கத்திலும், கானானைச் சுதந்தரிக்க வந்த துவக்கத்திலும், சுவிசேஷ சபை பிரபலியமாகும் துவக்கத்திலும் நடந்திருக்கிற பயங்கரமான சங்கதிகளெவை? ஏன்?

10. ஆகானுக்கு எந்தவிடத்தில் தண்டனை நடந்தது? அதின் அர்த்தமென்ன? பிற்காலத்தில் அந்த இடம் எப்படி அழைக்கப்படுகிறது? ஏன்? ஆகானுக்கு நடந்த முடிவை நினைக்க என்ன அடையாளம் வைக்கப்பட்டது? இந்த அடையாளமே வேறென்னென்ன சங்கதிகளுக்கும் ஞாபகமாக வைக்கப்பட்டது?

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பக்திக்குரிய

## சத்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

## ஏழாம் தியானம்.

சனி.

விடாமுயற்சி.

"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயிருப்பான்." வெளிப். 21: 7.

முடிவுபரியந்தம் நிலைநிற்கிற, விடாமுயற்சியுள்ள சிறுவையின் சேவகனுக்கேயன்றி; உண்மையற்ற, நிலையற்ற, தடுமாற்றமான, கோ

ழைத்தவருமுள்ள, பயப்படுகிற, ஒருவருக்கும் வேதத்தில் ஒன்றும் வாக்குத்தத்தம்பண்ணப்படவில்லை.

"விடாமுயற்சி" என்கிற வார்த்தை புதியஏற்பாட்டில் ஒரே ஒரு விசை தான் வருகிறது. அதற்குச் சரியான கிரேக்கு வார்த்தையானது, ஒரே காரியத்தை நோக்கமாகக்கொண்டு, அதற்காக எவ்வகை வருத்தங்களையுஞ் சகித்து, கடைசியாக சித்திபெறும் மனுஷன் விஷயத்துக்கு பிரயோகிக்கப்படும் வார்த்தை. கிறிஸ்துவின் சீஷன் இப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுகிறவன் எவனோ அவன் கிறிஸ்து ஏசுவில் தேவனுடைய அழைப்பின் பந்தயத்துக்காக ஒரே லக்கை நோக்கி விரைந்து செல்லுகிறான். இந்த வார்த்தை புதியஏற்பாட்டில் ஒரே விசை வந்தாலும், அதிலிருந்து படித்துக்கொள்ளவேண்டிய பாடமும் அப்படிப்பட்டதல்ல. கிறிஸ்தவனுடைய கடமைகளில் இது மிகவும் வருத்தமானதாயிருக்கிறபடியால், இதுவே மிகவும் முக்கியமானதாயுமிருக்கிறது. மோட்சபிரயாணத்தில் சொல்லப்படுகிற மென்னெஞ்சனைப்போல, கிறிஸ்தவர்களில் அநேகர் தாங்கள் ஓடவேண்டிய ஓட்டத்தின் முதல் எட்டிலேயே, சில சங்கடங்களில் அகப்பட்டு, மார்க்கத்தின் வருத்தங்களைப்பற்றி பயமடைந்து திரும்பிப்போகிறார்கள். சீயோன் தரையிலல்ல. மலையின்மேலிருக்கிறது. அதற்குப் போகிற பாதை விசாலமும், செம்மையுமாயிராமல் செங்குத்தும் கரடுமுரடுமாயிருக்கிறது; அந்தப் பரம பட்டணத்தின் வாசலைச் சேர்பவர்கள் பின்னுக்குத் திரும்பிப் பாராமல் எப்போதும் முன்னானவைகளையே நாடிப்போகவேண்டும்.

இப்பொழுது வாரத்தின் கடைசிநாளாகிய இன்றையத்தினம் நாம் இந்த வாரமுழுவதிலுஞ் செய்தவைகளைப்பற்றி யோசித்துப் பார்ப்பது நல்லது. நாம் விடாமுயற்சியுள்ளவர்களாயிருந்தோமா? அல்லது சோம்பலுக்கும் கவலையீனத்துக்கும் இடங்கொடுத்தோமா? நம்முடைய பிரயாணத்தில் பின்னிட்டுப் பார்த்து துக்கப்படுவதும், அல்லது அதிலே நின்றுபோவதும், அல்லது திரும்பிப்போவதும் நல்லதல்ல; என்றாலும் அநுபோகம் அடையும்படியாக திரும்பிப் பார்த்துக் கவனிப்பது நன்மையும் அவசியமுமாயிருக்கிறது. இதை வாசிக்கிறவனே! கடந்த வாரமுழுவதிலும் நீ செய்தவைகளை யோசித்துப் பார்க்கையில் நீ உன்னிடத்தில் கவனிக்கிறதென்ன? நீ எல்லாவற்றையும் பொறுமையோடே சகித்தாயா? ஆ! அநேக காரியங்களில் நீ குறைவாயிருந்ததாக உனக்குக் காணப்படவில்லையா? நீ நேராக முன்னுக்குச் செல்லவேண்டியதிருக்க, நீ பின்னிட்டுத் திரும்பினாய் என்றும், நீ விழித்திருக்கவேண்டியதிருக்க தூங்கினாய் என்றும் உனக்குத் தெரிகிறதில்லையா? உன்னுடைய முயற்சியைத் தடுப்பது என்ன என்று நீ தானே சோதித்துப் பார். இன்னும் உன்னால் சிலுவையிலறையப்படாததும், நீ கண்டுபிடியாததுமான பாவமோ, நாம் எந்தப் பாவத்துக்காக மனஸ்தாபப்படவில்லையோ, அது இன்னும் மன்னிக்கப்படாத பாவம் என்பதை நினைத்துக்கொள்ளவேண்டும். முழுச் சரீரத்தையுங் கெடுப்பதைவிட வலது கையையாவது வலது கண்ணையாவது பிடுங்கி எறிந்துபோடுவது நல்லது. உன் பாவங்கள் உன் முதுகில் ஒட்டிக்கொண்டிருந்தால், நீ எவ்வளவாய் விரும்பினாலும், சீயோனைச் சேரமாட்டாய். நீ ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும் உன்னைக் கீழே விழத்தள்ள அது போதுமான பாரமுள்ளது. சிலுவையின் பாதத்தண்டை அவை எறியப்படுமளவும் நீ லக்குவடையப்போகிறதில்லை. உன் பாவத்தின் பாரத்தையும் அதன் மிகுதியையும் பார்த்துப் பயப்படா



தே; இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களிலுமிருந்து நம்மைச் சுத்திகரிக்கும். உன் எல்லாக் கவலைகளையும் கர்த்தரிடத்தில் ஒப்புவி. அவர் உனக்காகக் கவலைப்படுகிறார். உன் பெலவீனத்தில் அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்; அவருடைய பெலத்திலும் அன்பிலும் மாத்திரமே நீ நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

உன்னைத் தடுக்கிறது எது என்பதை நீ கண்டுபிடிக்கிறாய் என்பதைப்பற்றி நிச்சயமாயிரு; ஏனென்றால் எல்லாவற்றையும் மேற்கொள்ளுகிறவனுக்கே வாக்குத்தத்தங்கள் அருளப்பட்டிருக்கிறது. மேற்கொள்ளுகிறவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனி ஆகாரமாகும். ஆமென்.

தெய்வகிருபையைத் தேட
நீ போராடிக்கொண்டிரு
ஆவி பாரமற்று ஏற
நன்றாய் ஜாக்கிரதைப்படு.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

திருவரு ளாளர்க்கு ஜீவ வாசனை
தருவது புலைநெறி தழுவி யோர்க்குமன்
வெருவரு மரண வாசனை விளைப்பது
நிருமலன் தரு சுவிசேஷ நீர்மைகாண். 326

பாவ தாருவை யறப் படுக்குங் கோடரி
ஜீவ தாருவி லெழு தெய்வ மாக்கனி
தேவதுதரும் வியந் தேத்து செம்பொருள்
பூவுல குயவரு புனிதன் புத்துரை. 327

ஆன்மநோய் அகற்று சஞ்சீவி அன்பர்க்குத்
தேனிலும் இனிய தீஞ்சுவைய தெள்ளமிர்த்
ஊன்மனத் திருள்கெட ஒளிரும் ஒண்சுடர்
வானவர் கோமகன் மதுரவாய் மொழி. 328

பாவியென் றுணர்ந்து புண்பட்ட நெஞ்சர்க்குத்
தேவநீதியில் வருந் திகிலை மாற்றிடும்
தாவரும் நித்திய ஜீவனையுந் தந்திடும்
தீவினை அறவரு செம்மல் வாசகம். 329

துன்பெனுந் தீச்சுடச் சுழன்று சோர்வுறும்
அன்பருக் கவ்வனல் அவிக்கும் நித்திய பேர்
இன்ப வாரிதி விசுவாசிக் கின்னுயிர்
நம்பெரு மானிவண் நவின்ற வாசகம். 330

தீர்த்தனோ டாதியில் திகழ்ந்து தெய்விக
வார்த்தையாய்ப் புவிக்கொளி மருவ மானிட
மூர்த்தியாய் விளங்கிய முனைவன் தந்தநூற்
சீர்த்தியை யாவரோ தெரிக்கு நீர்மையார். 331

மற்றிதை மனக்கொள் என்றுணர்த்தி மாடொரு
சிற்றறை புகுந்தனன் தெரியக் காட்டினன்
புற்றுறை அரவெனப் புழுங்கும் ஆத்திரன்
செற்றமில் சாந்தனென் றிருவர் சீரினை. 332

சாந்தனென் றுரைபெறு தகைமை யோன் முகம்
சேர்ந்தொளிர் மரையெனத் திகழும் பான்மையும்
பூந்துணர் கரிந்தெனப் பொலிவிழந் தகம்
காந்தும் ஆத்திரன் முகம் கரிந்த பான்மையும். 333

கண்ணுற நோக்கினன் கருதி வேதியன்
உண்ணிகழ்வன முகம் உரைக்கு மென்னினும்
எண்ணுறுங் கலைவலோய் இவர் குணகுண
நிண்ணயம் புலப்பட நிகழ்த்து வாயென்றான். 334

வளம்படு கோனகர் மருவத் தீவினைக்
களம்படு முலகினைக் கடிந்து காவலன்
நளம்படு மலர்ப்பதம் நயந்த நண்பநின்
உளம்பட உரைப்பல் என்றுரைத்தல் மேயினன். 335

இருவரும் சோதர ரெனினும் ஈங்கிவர்
கருமமும் வினயமும் கருத்தும் வேறதாம்.
மருமலி வனசமும் வறிய ஆம்பலும்
ஒருவழிப் பிறப்பினும் ஒக்குமே கொலாம். 336

அத்தனு நின்றெமக் கருளும் ஆண்டவன்
சித்தமே யாகவென் றமையும் செவ்விய
உத்தமன் இவன் அவன் கனிட்டன் ஒள்ளிய
வித்தக வைதிகர்க் குவமை மேவியோன். 337

இவ்வியற் சுடுமுகன் இயல்பென் னென்றியேற்
செவ்வியர் ஒழுக்கினைச் சிதையக் கூறிமா
வெவ்வியல் தீவினை விளைக்கும் ஆத்திரன்
அவ்வியன் அரும்பொறைக் கசடனுமிவன். 338

நித்தனார் அருட்செயற் கமைந்து நின்றிடாப்
பித்தன் எத்துணைப் பொருள் பெறினும் பாழிலே
உய்த்திடு பேதை வன்மிடி வந்தொன்றுமேல்
மத்துறு தயிரென மறுகுஞ் சிந்தையான். 339



கல்வலாப் புறங்கடல் நாடு காண் செலீஇ
ஒல்வகைப் பொறையொடும் உஞற்றி ஒள்ளிய
பல்வகைப் பொருள்குவித் தருத்தும் பண்புடைச்
செல்வனைக் கண்டுகண் டெரியும் சிந்தையான். 340

தாழ்வுகண் டுவப்பதை யலது தம்மின
வாழ்வுகண் டுவக்கிலா தெரியும் வன்கணன்
பாழ்வழி றேம்புவான் அலது பாதலத்
தாழ்வினைக் ககன்றுயும் ஆற்றை ஓம்பிடான். 341

கான்முதிர் கடுவயின் றினிய கன்னலைக்
கூன்முது கிரவணம் உவர்க்குங் கொள்கைபோல்
நான்முறை தெரிந்தவர் நுவலும் நோன்மைசால்
ஆன்ம போதக மிவற் கருவருப்பரோ. 342

கைப்படு சுகமலாற் கரையில் பேரின்ப
மெய்ப்படு சுகநிலை மிகவும் செய்த்தென
ஐப்படும் ஈயின்மாய்ந் தழியும் லௌகிக
மைப்படு மனத்தனா மாணுமா னிவன். 343

ஆயுழி உளத்தழுக்கா றெனும் புலை
மேயுழி நற்குண விபவ மார்திருப்
போயுழி அறிவரிதாகப் போக்கிடும்
தீயுழிப் புகுத்திடும் என்பர் சீரியோர். 344

தலைப்படும் உணர்விலார் உலக சாலத்து
வலைப்படு மானென மறிந்து வஞ்சகப்
புலைப்படு புவன போகத்தைப் புந்தியற்ற
உலைப்படும் ஆமையில் உவப்பர் ஒள்ளியோய். 345

அன்பருக் கன்பராம் அகில லோகவேந்த்
இன்ப துன்பங்களை இயைந்த வாறுதம்
மன்பதைக் கூட்டுவர் மரபில் தாயென
நன்புதல்வரின் அமைந் தொழுகல் நன்கடன். 346

ஈண்டிதை மறந்திடா திதயத் தோர்தியென்ற்
ஆண்டுநின் றெழுந்திள அரசற் காக்கிய
மாண்டகு கடிமனை புகுந்து மைந்த நீ
காண்டகக் கவினிய காட்சி காணென்றான். 347

சித்திர மாளிகை அகத்துத் திண்சுவர்ப்
பத்தி அங்கனல் பிடித் தெரியும் பான்மையும்
அத்தகு கொழுங்கனல் அவிக்க ஆண்டொரு
குத்திரன் விரைந்து நீர் சொரியுங் கொள்கையும். 348

அகத்தொளிர் இருங்கனல் அவிந்திடா தொரு
மகத்துவன் கரந்தெதிர் மருங்கு நின்றெரி
முகத்தருள் எண்ணெயை யுகுத்து மூட்டலும்
ஜகத்தை யுள்ளுவர்த்தவன் சமையக் காண்குறு. 349

மாட்சிசால் அருமறை வகுத்த மன்னர்கோன்
ஆட்சியைத் தெருட்டிடும் அறிஞ்ஞ ஆயவிக்
காட்சியின் பொருளெது கழறுவாயெனு
நீட்சிசால் மதிவலான் நிகழ்த்து வானரோ. 350

வேறு.

நற்காவலன் திருவடித்துணை நயந்தோய்
மங்கா அழற்சிகை மகாபுனித ஆவி
இங்காதரித் தெம்இதயத் தினிதியற்றும்
பொங்காரருட் கிரியை போது மிதுகாண்டி. 351

ஆயகிரியைத் திறம் அனைத்தையும் அடர்ப்பான்
மாயஅலகைக் கிறைசெய் வன்றொழிலை மாறும்
மீயுற விளைந் திடையறாது புனல் வீசிக்
காயெரி அணைக்குமியல் காட்சி யிதுகாண்டி. 352

காந்தொருவர் எண்ணெய் சொரி காட்சி கருதுங்கால்
நிரந்தரம் அருட்குரிசில் சேர்ந்தலகை யுட்க
உரந்தரு மகாகிருபை யுள்ளுற வழங்கிப்
புரந்தருளு மாறிதுவெனப் புகறல் போதும். 353

சஞ்சல விதந்தரு சழக்குறு பிசாசம்
விஞ்சு பலமாயம் இதயத்து விளைவிக்கும்
நஞ்சனைய தீவினை நயக்க வமையேவும்
வஞ்சனை முயன்றுலவும் என்றும் நம்மருங்கில். 354

வேதாகமாதியை விரித்துணர வொட்டாத்
ஏதாகிலும் உலக வேலையிலிழுக்கும்
வாதாடி யாடிநம் மனக்களி மழுக்கும்
சூதா விடுக்கும் அதிதுஷ்கிருத சூழல். 355

ஈட்டுபல தீவினையை உள்ளுற எடுத்துக்
காட்டும் இறைவன் பெரிய கருணையை மறைக்கும்
வீட்டுலகம் இன்றென வெருட்டிடு சந்தேகக்
கூட்டினில் அடைத்துயிர் குடித்தினி துவக்கும். 356

சீமான் அருட்குரிசில் ஜேசு திருநாமப்
பூமான் நமக்குதவு புண்ணிய நலத்துக்
கேமாறி நித்திய இடுக்கணுற எத்திக்
காமாதுரக் குழி கவிழ்த்துற அமிழ்த்தும். 357



இம்மாநிலத் தவதரித்த குமரேசப்
பெம்மானையுங் குறுகி மும்முறை பிதற்றி
அம்மா தகைத்திட முயன்ற தெனல் ஆயில்
சும்மா விடுங்கொல் நரதுர்ப்பல அரும்மை. 358

மல்லாடி வன்கணைய வஞ்சமுறுமாயப்
பொல்லாத பேயினை முருக்குபு புறங்கண்ட்
டெல்லாம் நலம்பெற இரக்ஷை தரும் எல்லாம்
வல்லான் மகாகிருபை உள்ளுற மதித்தி. 359

(இன்னும் வரும்.)

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
வியாக்கியானம்.

## ௩-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௩-ம் பிரிவு.

கிறிஸ்துவின் தேவதன்மையைப் பற்றி.

(தொடர்ச்சி.)

5. தேவன் சர்வஞ்ஞர்.

கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். 1 சாமு. 16: 7.

தேவரீர் ஒருவரே மனுப்புத்திரரின் இருதயத்தை அறிந்தவர். 2 நாளா. 6: 31. எரே. 17: 9, 10.

இயேசுகிறிஸ்துவானவரைப்பற்றியும் அப்படியே சொல்லியிருக்கிறது.

நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர். வெளி. 2: 23.

இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து. மத். 9: 4. 12: 25. லூக். 6: 28. மாற். 2: 6, 8. 5: 30. யோவா. 2: 24. யோவா. 6: 64. 21: 17.

6. தேவன் மாத்திரம் வணங்கப்படத்தக்கவர்.

உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக. மத். 4 : 10.

இரண்டாம் கற்பனை. யாத். 20: 4—6.

இயேசு மாம்சிஷத்திலிருந்த நாட்களில் தம்முடைய சீஷர் தம்மை வணங்கும்படி இடங்கொடுத்தார். அவர் உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினபின் தம்முடைய அப்போஸ்தலராலே வணங்கப்பட்டார். அவர் இப்பொழுது பரமண்டலத்தில் பரிசுத்தவான்களின் மகிமையுள்ள ஆவிகளாலும், தேவதூதராலும் வணங்கப்படுகிறார்.

அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டார்கள். மத். 2: 11.

குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து ; ஆண்டவரே ! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். மத். 8: 2.

மத். 14: 33. 15: 25, 28. 28: 9.

தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக : என் ஆண்டவரே ! என் தேவனே ! என்றான். யோவா. 20: 28.

தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள. எபி. 1: 6.

இருபத்துநான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொன்னார்கள். வெளி. 5: 8, 13.

---

## விசுவாசப்பிரமாணம்.

### ச-ம் பிரிவு.

---

### கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலைப்பற்றி.

---

வினா. இயேசுகிறிஸ்துவைக்குறித்து விசுவாசப்பிரமாணம் இன்னம் நமக்குப் போதிக்கிறது என்ன ?

விடை. மூன்றாம்நாள் மரித்தோரிலிருந்து எழுந்தருளினார்.

இந்தச் சங்கதி நம்முடைய இரட்சகராலே முன்னறிவிக்கப்பட்டது. அதைப்பற்றிய குறிப்புகளையும் அடிக்கடி அவர் தாமே காட்டியிருக்கிறார். மத். 12: 40. 16: 21. 17: 23. 20: 19.
பிரதானஆசாரியர் எதிர்பார்த்திருந்த இந்தத் தீர்க்கதரிசன நிறைவேறுதல். (மத். 27: 63.) இரட்சகரைப் பின்பற்றினவர்களு



டைய நம்பிக்கைக்கு அனுகூலமாயிருக்கத்தக்கதாக இவைகள் மிகவும் தெளிவாயும், வெளியரங்கமாயும் அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே. லூக். 24: 25

அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டுமென்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். யோவா. 20: 9.

வினா. கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளமாயிருந்தவர்கள் யார் ?

விடை. 1. யோசேப்பு—இவன் எகிப்துதேசத்தை இராட்சிக்கும்படி, சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேசமுழுவதின்பேரிலும் அதிகாரியாக உயர்த்தப்பட்டதும். ஆதி. 41: 41—44.

2. ஈசாக்கு-இவன் பலியிடப்படும்படி கொண்டுவரப்பட்டதும். எபி. 11: 19.

3. யோனா-இவன் மூன்றுநாள் இரவும் பகலும் மீனின் வயிற்றில் இருந்ததுமே. மத். 12: 40.

நம்முடைய இரட்சகர் ஆய்த்தநாளாகிய பெரிய வெள்ளிக்கிழமை
சாயந்தரத்தில் ஏறக்குறைய மூன்று மணிக்கு மரணமடைந்
தார். அன்று சாய்ந்தரத்தில் அடக்கம்பண்ணப்பட்டார். (யூத
ருடைய ஓய்வுநாளாகிய) சனிக்கிழமை கல்லறையிலிருந்தார்.
மத். 28: 1. மாற். 16: 1, 2. லூக். 23: 56. சனிக்கிழமை இர
வில் பிரதானஆசாரியர் பிலாத்துவினிடத்தில் கேட்டு, மூன்
றாம்நாள் முடியும்வரைக்கும் இரட்சகருடைய சரீரத்தை காவ
பந்துசெய்ய சேவகரை வைத்தார்கள். மத். 27: 63—66. (நம்
முடைய ஓய்வுநாளாகிய) வாரத்து முதல்நாள் அதிகாலையி
லே அவர் உயிரோடெழுந்தார்.

யூதருடைய ஓய்வுநாள் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதை நினைவுகூருகிற நாளாயிருந்தது. கிறிஸ்தவர்களுடைய ஓய்வுநாள் சாத்தானுடைய நிற்பந்தமான அடிமைத்தனத்திலிருந்து ஆத்துமா மீட்கப்பட்டதை நினைவுகூருகிறநாளாயிருக்கிறது. இது கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படுகிறது. வெளி. 1: 10.

வினா. கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார் என்பதின் கருத்தென்ன ?

விடை. மரணத்தினாலே பிரிக்கப்பட்டிருந்த அவருடைய ஆத்துமாவும் சரீரமும் திரும்பவும் ஒன்றாய்ச் சேர்ந்து, தாம் மரணமடைந்தபோது இருந்த சரீரத்தோடேயே எழுந்தருளினார்.

வினா. அவருடைய உயிர்த்தெழுதலுக்கு அத்தாட்சிகளெவை ?

விடை. மனிதரும் தூதரும் அதைப்பற்றி சாட்சியிட்டார்கள்.

கல்லறையைக் காத்திருந்த சேவகரும் இதை அறிக்கையிட்டார்கள். மத். 28: 11.

மத். 28: 6, 9, 10, 17. யோவா. 20: 12, 14, 28. அப். 1: 8-9. 4: 33. ரோமர் 1: 5. 1 கொ. 15: 5—8. 2 தீமோ. 2: 8.

அவர் தமது சிஷரோடு சம்பாஷித்து, அவர்களோடு போசனபானம் செய்தார். அவர் உயிர்த்தெழுந்தபிற்பாடு நாற்பதுநாள் உலகத்தில் இருந்தார். அப். 1: 3.

இரட்சகர் மெய்யாய் உயிர்த்தெழுந்தார் என்பதற்குரிய சாட்சிகளாவன.

1. தேவதூதர் காணப்பட்டு சாட்சியிட்டார்கள்.

ரோமப் போர்ச்சேவகருக்கும். மத். 28: 3.

மற்ற மரியாளுக்கும் சலோமேக்கும். மாற். 16: 5.

யோவன்னாளுக்கும் அவளோடிருந்தவர்களுக்கும். லூக். 24: 4, 11.

மகதலேனா மரியாளுக்கும். யோவா. 20: 11, 12.

2. கிறிஸ்து ஸ்திரீகளுக்குக் காட்சியானார்.

மற்ற மரியாளுக்கும், சலோமேக்கும். மத். 28: 9.

மகதலேனா மரியாளுக்கும். யோவா. 20: 15.

3. கிறிஸ்து சிஷருக்கும் அப்போஸ்தலருக்கும் தரிசனமானார். அவர் உலகத்திலிருந்த நாற்பது நாளிலும் அநேகந் தடவை தரிசனமாயிருந்திருக்கவேண்டும். ஆனால் அவைகளில் சில தரிசனைகள் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன;

கலிலேயாவில் பதினொருவருக்கும். மத். 28: 16.

எம்மாவு கிராமத்துக்குப்போன இரண்டு சிஷருக்கும். மாற். 16: 12. லூக். 24: 13.

போசனம்பண்ணக்கூடியிருந்த பதினொருவருக்கும். மாற். 16: 14.

சீமோனுக்கும். லூக். 24: 34.

தோமாவுக்கும். யோவா. 20: 27.

திபேரியாக் கடலில் சிஷருக்கும். யோவா. 21: 1.

பவுல் அப்போஸ்தலனுக்கும். அப். 9: 5.

ஒருமிக்க ஐந்நூறு பேருக்கும். 1 கொரி. 15: 6.

எல்லாருக்கும் கடைசியில் (பவுல்) எனக்கும். தரிசனமானார். 1 கொரி. 15: 8.

வினா. இரட்சகருடைய உயிர்த்தெழுதலை நம்முடைய திருச்சபை எப்பொழுது கொண்டாடுகிறது ?

விடை. ஈஸ்தர் பண்டிகைநாளில் (உயிர்த்தெழுந்த திருநாளில்) கொண்டாடுகிறது.



வினா. கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலால் உண்டாகும் பிரயோசனங்களெவை ?

விடை. 1. நம்முடைய இரட்சகரின் தேவதன்மையை ரூபகாரப்படுத்தவும்.

தேவனுடைய சுதனென்று, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். ரோ. 1: 5.

---

## THE ANNUAL WEEK OF PRAYER.

*January* 2—9. 1881.

---

சுவிசேஷ ஐக்கிய சங்கத்தார், புதுவருஷத் துவக்கத்தில் அங்கங்குள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்று கூடி ஜெபம்பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிற

## வருஷாந்தர அறிக்கை.

1881ஞு ஜனுவரிமீ 2உ முதல் 9உ வரை.

---

பிரியமான கிறிஸ்தவ சகோதரரே!

நாங்கள் இந்த வருஷத்திலும், விசுவாசிகளுடைய பரிசுத்த ஐக்கியத்தை இருதயங்களில் நன்றாய் உணர்ந்தவர்களாய், கிருபாசனத்தண்டை சேர்ந்து, நம்முடைய கர்த்தருக்கு நன்றியறிதலான தோத்திரங்களையும், விண்ணப்பங்களையும் செலுத்தும்படி உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கிறிஸ்தவ சபையின் மேன்மைபொருந்திய ஐக்கியம் நம்முடைய அநேகவிதமான பலவீனங்களினால் இப்பொழுது மங்கலாகத் தோன்றினாலும், அதிசீக்கிரத்தில் அது சர்வ லோகத்தாருக்கு முன்பாக வெளியரங்கப்படும். இப்பேர்ப்பட்ட ஐக்கிய ஜெபக்கூட்டம் வருஷாவருஷம் நடந்தேறுதல் சந்தோஷமான காரியம். என்றாலும், நாம் இதை வழக்கமான சடங்குபோல எண்ணுதபடிக்கு விழிப்பாயிருக்கக்கடவோம். நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஆயிரக்கணக்கான ஜனங்கள், இந்த ஜெபவாரத்தை கிரமமாய் நடத்திவந்தாலும், இந்தச் செய்கையானது தன்னிலேயே, உயரத்திலிருந்து வரும் தேவஆசீர்வாதங்களை நமக்குக் கொடுக்கத் திராணியற்றதாயிருக்கிறது.

கிறிஸ்துவோடே ஆவிக்கடுத்த பிரகாரமாய் சஞ்சரிக்கிற ஒவ்வொரு மெய்விசுவாசியும் இப்படி ஜெபிக்கத் திராணியுள்ளவனாயிருக்கிறான். அவருடைய திவ்விய சமுகம் நம்மோடிருக்கிறதென்று பரீட்சையினால் நாம் எவ்வளவு அறிகிறோமோ, அவ்வளவாய் அவருடைய ஆவியானவரின் தயவைப் பெற்று, தேவனுடைய ஆசனத்துக்கு எட்டத்தக்க இன்பவாசனையுள்ள தூபவர்க்கத்தைச் செலுத்தக் கூடியவர்களாயிருப்போம்.

வெளிச்சத்தின் பிதாவானவர் இந்த உலகத்தின் பற்பல இடங்களிலும் வசிக்கிற திருச்சபையார் படுகிற பிரயாசங்களைப் பயன்படச் செய்திருக்கிறார். அதினால் நாம் அவருக்கு நன்றியறிதலுள்ள துதியைச் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். இது முன்னுள்ள ஜெய சங்கதிகள், அதிகத் திட்டமாய் இந்த உலகத்தின் நிற்பந்த நிலைமையையும், தேவகிருபையைக் காட்டிய சுவிசேஷத்தினாலேயேயன்றி வேறெந்த வகையிலும் அது நீங்காதென்பதையும் வெளிப்படுத்துகிறது. ஆதலால் இந்த வருஷத்தில் அதிகமான முயற்சிகளைப் பிரயோகித்து மிகுந்த வாஞ்சையுடனே தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிய சகோதரரே! இந்த வருஷத்தில் நடக்கப்போகிற ஐக்கிய ஜெபவாரம் மற்ற வருஷங்களைப் பார்க்கிலும் நமது தேவனும் ஆண்டவருமானவரின் பிரசன்னத்தினால் சம்பூரணமாய் ஆசீர்வதிக்கப்படுமென்று நாங்கள் கருதி உட்கருத்தாய் தேவனை நோக்கி மன்றாடுகிறோம். அவரே தம்முடைய பிள்ளைகளின் பங்குவீதமாயிருக்கிறார். அவரே சகல நன்மைகளையும் அல்லத்தட்டாமல் ஈகிறவராயிருக்கிறார்.

---

## ஜெபவாரத்தில் தினந்தோறும் புத்திசொல்லவும் ஜெபிக்கவும் வேண்டிய விஷயங்கள்.

ஜனுவரிமீ 2வ ஞாயிற்றுக்கிழமை.

பிரசங்கம். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். எபிரேயர் 13: 8.

3வ திங்கட்கிழமை.

தோத்திரங்கள்;—கடந்த வருஷத்தில் நமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களுக்காகத் தோத்திரம். ஜீவன், சுகம் முதலான நன்மைகளுக்காகவும்;—தனித்தனியாகவும், குடும்ப சகிதமாகவும், தேவனிடத்தில் பெற்றிருக்கிற இரக்கங்களுக்காகவும்;—தேவசிட்சை, அவருடைய மாறாத அன்பு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டுபண்ணப்



[illegible] பரிசுத்தாவியின் ஈவு, பட்சமீட்பின் நிச்சயம் இவைகளுக்காகவும்; [illegible] சகோதரருக்கு நன்மையுண்டா[illegible] கிறிஸ்தவர்கள் பிர [illegible] தேவகிருபை இவைகளுக் [illegible] யோகித்த எத்தனங்களின்பேரிலுண்டான [illegible] பிரசங்கிக்கப்படுதலுக்காகவும்; சுவிசேஷம் பற்பல பாஷைகளில் [illegible] ஸ்தோத்திரம்.

4வ செவ்வாய்க்கிழமை.

பாவ அறிக்கை. நம்மில் ஒவ்வொருவனும் தன் இருதயத்திலும் ஜீவனையும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்ற [illegible] உணர்ச்சியும்; தேவனுடைய சீஷர்களுக்குள்ளிருக்கிற பிரிவினை, ஒருவர் மற்றொருவருக்குப் பாராட்டவேண்டிய அன்பின் தாழ்ச்சி; தேசத்தாருடைய பாவங்கள், விசேஷமாய் மார்க்கவிஷயத்தில் சுயபுத்தியைச் சார்ந்து நிற்றல், தெய்வமில்லையென்று மறுத்தல், துன்மார்க்கம், வீண்பத்தி, சபைகளில் காணப்படுகிற உலகசிந்தை இவை நீங்கவேண்டுமென்றும் ஜெபம்.

5வ புதன்கிழமை.

தேவனுடைய சபைக்காக ஜெபம்;—பரிசுத்தாவியானவர் விசுவாசிகளெல்லாருடைய இருதயங்களையும் நிரப்பி, கிறிஸ்துவில் அவர்கள் நிலைத்திருந்து சகலவித நற்கிரியைகளிலும் பெருகவும்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவருடைய பிரசன்னத்துக்கு எதிர்பார்த்திருக்கவும்; அவருடைய [illegible] சனங்களுக்குள்ளிருக்கிற பிரிவினையை அகற்றி, தேவனை அறிகிற அறிவு, அன்பு, தாழ்மை, பக்திவைராக்கியம் இவை முதலானவைகளால் அவர்களை ஐசுவரியவான்களாக்கவேண்டுமென்றும்; [illegible] சுவிசேஷ பிரசங்கிகள் அநேகராயும், [illegible] மிஷனெரிமார்களையும் சீமைதேசத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் தெரிந்தெடுத்து அவர்களை அந்த உத்தியோகத்துக்குத் தகுதியுள்ளவர்களாக்கவும், கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவும்; வியாதி [illegible] துன்பப்படுத்தப்படுகிறவர்களா[illegible] இவர்களை ஆற்றித் தேற்றி விடுவிக்கவும் வேண்டுமென்றும் ஜெபம்.

6வ வியாழக்கிழமை.

இளைஞரையும் அவர்களைப் படிப்பிக்கிறவர்களையும் குறித்து ஜெபம். [illegible] தாய்தந்தைகளுக்காகவும், கல்விச்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், படிப்பிக்கிற வேதசாஸ்திரிமார், உபாத்திமாருக்காகவும், ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள்பேரில் விசேஷித்தபிரகாரமாய் தேவ அனுக்கிரகமுண்டாகவேண்டுமென்றும்; இளைஞர் தங்கள் இளமையில் தானே, சத்தியத்தைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவைப் பின்செல்லவும், உலகக் கல்வி, உலக சாஸ்திரம் தேவமகிமைக்கு உபயோகமாக பிர

திஷ்டைசெய்யப்படும்படியாகவும், கிறிஸ்துமார்க்கத்துக்குரிய புத்தகங்களாலுண்டாகிற அறிவு பரம்பி பதிதருடைய கொள்கைகளும், அவர்கள் புத்தகங்களும் நிராகரணமாகவேண்டுமென்றும் ஜெபம்.

7உ வெள்ளிக்கிழமை.

எல்லா ஜாதியாருக்காகவும் ஜெபம்;—இராஜாக்கள், அதிகாரிகள், சட்டமுண்டுபண்ணுகிறவர்கள், நியாயாதிபதிகள், தேசாதிபதிகள் இவர்களுக்காகவும்; நீதியான சட்டங்கள் உண்டுபண்ணப்படவேண்டுமென்றும்; சுவிசேஷத்தை சகலரும் ஏற்றுக்கொண்டு, அதை மற்றவர்களுக்கு தாராளமாய் அறிவிக்கவும்; குடிவெறி, குரூர நடக்கை, பிறனை ஒடுக்குதல், அல்லது அடிமைத்தனம் இவை நீங்கும்படியாகவும்; அபின்வியாபாரம் நிறுத்தப்படவும், பொதுவாக சகல சாதியாருக்குள்ளும் மரியாதையும் ஐக்கியமுமுண்டாகவும், யுத்தங்கள் ஓயவும்; போர்ச்சேவகர்கள், கப்பற்காரருக்காகவும்; சகல சனங்களுக்குள்ளும் கிறிஸ்துவானவராலுண்டாகும் குணமாகுதலும், இருதயச் சுத்திகரிப்பின் வல்லமையும் விளங்கவேண்டுமென்றும் ஜெபம்.

8உ சனிக்கிழமை.

கிறிஸ்தமான மிசியோன்களுக்காக ஜெபம்.

சுதேசத்திலும், புறத்தேசங்களிலுமுள்ள அஞ்ஞானிகள் நடுவில் மிசியோன்களை ஸ்தாபித்து நடத்திவருகிறவர்களுக்காகவும்; சுதேச கிறிஸ்தவர்களுக்காகவும்; கிறிஸ்துமார்க்கத்தில் நூதனமாய்ச் சேர விருப்பமாயிருக்கிறவர்களுக்காகவும்; வேதாகமங்களைப் பிரசித்தப்படுத்துகிற விஷயத்தில் தேவாசீர்வாதமுண்டாகவும்; தேவனுடைய பூர்வீக சனங்களாகிய இஸ்ரவேலருக்காகவும்; குடிவெறியை அகற்றவும், சாக்கிரதை, தெய்வபக்தி இவை பெருகவும்; அறிவீனர், வழிதப்பிப்போனவர்கள், ஏழைகள் நடுவில் பிரயாசப்படுகிறவர்களுக்காகவும்; சகல மாம்சத்தின்மேலும் தேவாவியானவர் ஊற்றப்பட்டு, பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் உணர்த்தவும்; பலவீனப்பட்டு கேவலமான ஸ்திதியிலிருக்கிற நூதன சபைகள் உயிர்ப்பிக்கப்படவும், எல்லா விசுவாசிகளும் தேவனுடைய மகிமைக்கென்றே பிழைக்கவும், அவர்களைப் பலப்படுத்தவேண்டுமென்றும் ஜெபம்.

9உ ஞாயிற்றுக்கிழமை.

பிரசங்கங்கள்; "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு." வெளிப்படுத்தல் 3: 11.



# சமாசாரத்திரட்டு.

**துர்க்கியா.**—கிரேகியாவின் பிரதேச எல்லைத் தகரார் விஷயத்தில் தற்காலத்தில் தாங்கள் தலையிடுவதில்லையென்று ஐரோப்பாவின் மகா துரைத்தனத்தார் தீர்மானித்திருக்கிறதாய் சமாசாரம். விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கிரேகியா தனித்து ஆவலாய்ப் பிரயத்தனிக்கிறதாம்.

**ருஷியா.**—காலமிழந்த ருஷிய சக்கரவர்த்தியானவர், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த பெருமாட்டி ஒருவளை, மறுவிவாகஞ்செய்துகொண்டார். இனி அவர் ராஜ்யபாரத்தை தாமே தாங்கிக்கொள்ளாமல், தமது குமாரன் வசம் ஒப்புவித்துப்போட்டு, சுகவாசியாய் காலக்ஷேபஞ் செய்யக் கருத்துக்கொண்டிருக்கிறாராம். ராஜாங்கத்தை யெதிர்க்கும் கொள்கையுடையவர்களாகிய நிகிலிஸ்தர் என்னப்பட்டவர்களில் 5-பேர் மரண தண்டனையடையவும், 11-பேர் சிறையிருப்பிலிருக்கவும் தீர்ப்புப்பெற்றார்கள்.

**இந்தியா.**—நேபாள தேசத்து மகாராஜா, இந்திய ராஜபிரதிநிதியாகிய கவர்னர்ஜெனரல் அவர்களை இந்த மாசம் கல்கத்தாவில் கண்டு தரிசிக்கவும், அதின்பின் வடஇந்தியாவிலுள்ள பிரதான பட்டிணங்களைப் பார்வையிடவும் விருப்பங்கொண்டிருக்கிறார். பாலிய கைக்வார் அரசனுக்காக விஸ்தாரமும் மிகச் சிறப்பும்பொருந்தியதுமான அரண்மனையொன்று பரோதாவில் கட்டப்படுகிறது. மைசூர் ராஜ்யநிர்வாக விஷயங்கள் அடுத்த ஜனுவரிமாசத் தொடக்கத்தில் மைசூர் மகாராஜா வசம் விட்டுவிடப்படும். சென்னைக் கவர்னராகிய பக்கிங்ஹாம் டியூக்பிரபு அவர்கள் போனமாசம் உதகமண்டலத்திலிருந்து புறப்பட்டு கொச்சி, திருவாங்கோர் இந்த சமஸ்தானங்களைப் பார்வையிட்டு, திருநெல்வேலி வழிபாய் வந்து, தென்னிந்திய ரெயில்வே மார்க்கமாய்ச் சென்னை பட்டினத்துக்குப் பயணமானார்கள்.

**ஆப்கானிஸ்தான்.**—காந்தகாரிலும், அதின் அயலிடங்களிலும் எல்லாம் அமைதியாயும் திர்ப்திகரமாயுமிருக்கிறது. நூதன அமீர், அலிகுலாகான் என்பவரின் குமாரத்தியை விவாகஞ்செய்திருக்கிறாராம். கபூலில் பகைவர் கையால் மடிந்த ஸ்ரீ லூயிஸ் கவாக்னெரியின் பட்டயத்தை கைதியொருவனிடத்திலிருந்து அமீர் கைப்பற்றியிருக்கிறதாகவும், கவர்னர்ஜெனரலவர்களை அவர் தர்பாரில் தரிசிக்கும்போது அவர்களிடம் அதை ஒப்புவிக்கக் கருதியிருப்பதாகவும் செய்தி.

டிசம்பர்மீ நாள் 31-கார்த்திகைமீ 18உ முதல், மார்கழிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | க௮ | ஆண்டவர் இன்னநாழிகையில் வருவாரென்று அறியாதிருக்கிறீர் [illegible] |
| வி | 2 | க௯ | மரணபரியந்தம் நம்மை நடத்துவார். சங். 48:14. (கள். |
| வெ | 3 | உ0 | கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது. செப். 1:14. |
| ச | 4 | உக | உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு |
| ஞா | 5 | உஉ | பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். எசே. 18: 4. (கூரு. |
| தி | 6 | உ௩ | நான் கர்த்தருக்குள் மகிழுவேன். சங். 104: 34. (2 கொ. 9: 8. |
| செ | 7 | உ௪ | உங்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுப்பேன். எசே. 11:19. |
| பு | 8 | உ௫ | சகலவித கிருபையையும் பெருகச்செய்ய [illegible] |
| வி | 9 | உ௬ | என் ஆத்துமாவினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும். சங். |
| வெ | 10 | உ௭ | நான் அவரை தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும். |
| ச | 11 | உ௮ | நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். யோ. 14: 6. |
| ஞா | 12 | உ௯ | எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் தா |
| தி | 13 | ௩0 | அவரை உத்தம இருதயத்தோடு சேவி. 1 நாளா. 28: 9. (ரும். |
| செ | 14 | க | ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள். கலா. 5: 16. |
| பு | 15 | உ | ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல்செய்கிறார். ரோ. 8: 26. |
| வி | 16 | ௩ | அக்கிரமங்களுக்கு அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரிப்பேன். |
| வெ | 17 | ௪ | எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும். லூ. 17: 5. |
| ச | 18 | ௫ | பாவிகள் உனக்கு நயங்காட்டினால் நீ சம்மதியாதே. [illegible]: 10. |
| ஞா | 19 | ௬ | மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும். நீதி. 15: 1. |
| தி | 20 | ௭ | உம்முடைய இராச்சியம் வருவதாக. லூக். 11: 2. |
| செ | 21 | ௮ | வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள். யோவா. 5: 39. |
| பு | 22 | ௯ | அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவா |
| வி | 23 | க0 | உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும். (ர்கள். |
| வெ | 24 | கக | அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? மல். 3: 2. |
| ச | 25 | கஉ | அவருக்குள் ஜீவன் இருந்தது. யோவா. 1: 4. |
| ஞா | 26 | க௩ | அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம். |
| தி | 27 | க௪ | நீங்கள் பரிசுத்தராயிருங்கள். 1. பே. 1: 16. |
| செ | 28 | க௫ | என்னில் நிலைத்திருங்கள். யோவா. 15: 4. |
| பு | 29 | க௬ | நீதிமானோ தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன். நீதி. 14: 32. |
| வி | 30 | க௭ | உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது, புகையைப்போலிருக்கிறதே. |
| வெ | 31 | க௮ | உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. சங். 102: 27. |

## விசேஷ நாட்கள்.

2. அமாவாசை.
5. அட்வெந்தென்னும் நாட்களில் 2.ம் ஞாயிறு.
12. அட்வெந்தென்னும் நாட்களில் 3.ம் ஞாயிறு.
16. பௌர்ணமி.
19. அட்வெந்தென்னும் நாட்களில் 4.ம் ஞாயிறு.
21. பரி. அப். தோமாவின் திருநாள்.
25. கிறிஸ்துவின் ஜநநதிருநாள்.
26. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும், 1.ம் ஞாயிறு.
பரி. ஸ்தேவான் ரத்தசாட்சித் திருநாள்.
27. பரி. அப். யோவான் சுவி. திருநாள்.
28. குற்றமில்லாப் பாலகர் திருநாள்.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |